சிரித்திரன்

மலர் . 20 . இதழ் . 5

01.09.1989

16.09.1989 மலர் 20 இதழ் 6.

JL
211m N.10TA.
N89.20.
127074.


தமிழரசு



5-9-1872

18-11-19



17-9-1953



# தமிழரசு


திருவள்ளுவர்ஆண்டு 2020

சுக்ல - ஆவணி-16

மலர்:20 இதழ்:5

1-9-1989



மாணவிமாரு...

நாட்டுக்குழைத்த நல்...
வோம்

விடுதலை வீரர்கள்

புரட்சிமலரே இந்நா...

தெலுங்குகங்கை தி...
நடைபெறுகின்றன

அரசு ஊழியர்-ஆ...

கோடிக்கு ஊதிய உ...

பாசன மேம்பாடு-நீர்...
குழுவின் பணிகள்

அன்னை சத்யா ...
கண்ணோட்டம்

மிகப் பிற்படுத்தப்ப...
மாணவியருக்கு இல...

தமிழ்நாடு அரசுப் ப...
பணிவேட்பாளர்களுக்...

வர்மக் கலை

தொழில் நுட்பக் க...
பணியாளர்களுக்கு ...

டாக்டர் முத்துலட்சுமி...

திண்டுக்கல் காயிதே...
அனுமதித்துள்ள பண...

மதுரையில் முதல்வர்

பசும்பொன் தேவர் ...

பட்டமும் செய்தியும்

வளரும் வேளாண்மை...




# மக்கள் கருத்துக்கு மரியாதை தரவேண்டும்



ஆணைக்காப்பக நூலகம்
127079
சென்னை-600 008

சுதந்திரம்
நமது பிறப்புரிமை என முழங்கி
தியாக வேள்வி நடாத்தி
இந்த மண்ணை மீட்ட நாள்
ஆகஸ்டு 15.

எழுச்சி மிக்க இந்த ஆகஸ்டு 15
நாற்பத்தி மூன்று தடவை இந்தியாவில்
கொண்டாடப்பட்டும் வறுமையைப்
பிறப்புரிமையாகக் கொண்ட
கோடானு கோடி மக்களின்
வாழ்வில் விளக்கேற்றப்படவில்லை!

அதிகாரங்கள் பல மத்தியில் குவிந்து
கிடப்பது போதாதென்று மக்களுடன்
நெருங்கியிருந்து அவர்தம்
தேவைகளை உணர்ந்து நிறைவு
செய்யும் வாய்ப்பு பெற்ற
மாநில அரசுகளிடமுள்ள
ஓரளவு உரிமைகளையும்
பறித்துக் கொண்டேயிருக்கிறது
டெல்லி!

சுயாட்சி மட்டும் அல்ல,
மாநிலங்களுக்கு எஞ்சிய
அதிகாரங்களும் வழங்கப்பட
வேண்டுமென அன்றொரு நாள்
குரல் கொடுத்தார்
ஆசியாவின் ஜோதி
பண்டித ஜவகர்லால் நேரு!

இன்று மாநிலங்களுக்கு
ஏதாவது அதிகாரம்
எஞ்சுமோ-மிஞ்சுமோ
எனக் கெஞ்சிடும் நிலை!

## முதல்வர் கலைஞர்

சுதந்திரம் இந்தியாவுக்கு எனில்,
அது மத்திய அரசுக்கு மட்டும்
என்று அர்த்தம் அல்ல!
மாநில அரசுக்கும்
மக்களுக்கும்
அந்தச் சுதந்திரத்தின் பயன்
கிடையாது என்று பொருள் அல்ல!

இதனை இந்தச் சுதந்திர நாளில்
புரிந்து கொண்டு, இந்தியாவின்
ஒருமைப்பாடு-ஒற்றுமை-
இறையாண்மை எனும் எழிலடுக்கு
மாளிகையைத் தாங்கும் தூண்களாம்
மாநில அரசுகளை மதிக்கக் கற்றுக்
கொள்ள வேண்டும்
மத்தியில் இருப்போர்!

மக்கள் கருத்துக்கு
மரியாதை தரவேண்டும்!
ஒடப்பராயிருக்கும் ஏழையப்பர்களை
உதாசீனப்படுத்தும் உன்மத்தப்
போக்கு உடனடியாக
மாற்றப்பட வேண்டும்!

இல்லையாயின்
"விடுதலையும் கெடுதலையும்
ஒன்றே ஆகும்"
என்ற பாவேந்தர் பாரதிதாசனின்
வாக்கு பலித்துவிடும்!

சாதிபேதமற்ற, மதவாதப் பூசலற்ற,
சமத்துவ, சமதர்மச் சமுதாயமே
குறிக்கோள் எனக் கொண்டு
இந்தச் சுதந்திர நாளில்
சபதம் ஏற்று அதனைச்
செயல்படுத்த முனைந்திடுவோம்.

-14-8-89 அன்று மாண்புமிகு
தமிழக முதல்வர்
கலைஞர் அவர்கள்
வெளியிட்ட
சுதந்திரதினச் செய்தி.





# நாட்டுக்குழைத்த நல்லோர் வழியில் நடை போடுவோம்!

### சுதந்திரத் திருநாளில் மாண்புமிகு முதல்வர் உரை.

இந்தியப் பெருநாடு விடுதலை பெற்ற இந்தத் திருநாளில் என் அன்பு வாழ்த்துக்களைத் தமிழ் நாட்டு மக்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன். வீர சுதந்திரம் வேண்டி நின்று விடுதலைப் போரில் வீழந்துபட்ட மான மறவர்களுக்கும் தியாகச் செம்மல்களுக்கும் தலை தாழ்ந்த வணக்கத்தைச் செலுத்துகிறேன்.

மண் மீட்க எழுந்த போராட்டத்தின் முடிவில் வெற்றிக் களிப்புடன் விண் முட்டப் பறந்து பட்டொளி வீசிடும் இந்திய தேசியக் கொடியை மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட மாநில முதலமைச்சர்கள்தான் ஆகஸ்டு 15 விடுதலை நாளில் தலைநகரில் ஏற்றி வைக்க வேண்டுமென்று வாதாடி 1974-ஆம் ஆண்டு அந்த உரிமையைப் பெற்றது இந்த அரசுதான். 1974-1975 இந்த இரண்டு ஆண்டு ஆகஸ்டு-15களுக்குப் பிறகு 14 வருடம் கழித்து மீண்டும் இந்தக் கொடியைக் கோட்டைக் கொத்தளத்தில் ஏற்றி வைக்கும் வாய்ப்பை எனக்களித்த என்னருமைத் தமிழ் மக்களுக்கு இதயமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

கொடியேற்றும் பெருமை மட்டும் போதாது! தமிழ்க்குடி மக்களின் வாழ்வை உயர்த்திடும் கடமையும் மிகப் பெரிது என உறுதி எடுத்துக் கொண்டு அண்ணா வழியில் அயராது உழைத்திட இந்த அரசு சுதந்திரத் திருநாளில் சூளுரை மேற்கொள்கிறது.

இந்த மாநில மக்களின் இன்றியமையாத் தேவைகளான உணவு, உடை, உறையுள் - இவற்றை நிறைவு செய்வதில் நாம் முழு வெற்றி பெற்றாக வேண்டும்.

தேர்தல் நேரத்தில் அளித்த வாக்குறுதிகளை இந்த மாநில அரசின் அதிகாரத்திற்கு ஏற்ற வகையில் பெரும்பாலும் நிறைவேற்றிக் கொண்டிருக்கிறோம்.

நேரு நூற்றாண்டு விழா கொண்டாடும் இந்த நேரத்தில் நேரு அவர்களின் நெஞ்சத்தில் ஆழமாகப் பதிந்திருந்த முழுமையான மாநில சுயாட்சிக் கொள்கையை வென்றெடுக்கவும், எஞ்சிய அதிகாரங்கள் கூட மாநில அரசுகளுக்கே வழங்கப்படல் வேண்டுமென்று அந்த ஆசிய ஜோதியாம் ஜனநாயகவாதி கூறிய வார்த்தை செயல் வடிவம் பெறவும் இந்த நாளில் குரல் கொடுப்போம்! தொடர்ந்து குரல் கொடுத்துக் கொண்டே இருப்போம்!

இன்னும் அதிகாரங்கள் தேவை என்பது ஏதோ அந்தஸ்துக்காக அல்ல! மக்களுடன் நெருக்கமாக இருப்பவை மாநில அரசுகள்தான் என்பதும்-அவைகளால்தான் மக்களின் தேவைகளை உணர்ந்து செயலாற்ற முடியும் என்பதும்-மாநிலங்கள் வலிமை பெற்றிருந்தால்தான் மத்திய அரசு மிக வலிமை பெற்று விளங்க முடியும் என்பதும் இந்த அரசு நடத்தும் ஆளுங்கட்சியான தி.மு.கழகத்தின் அழுத்தமான கருத்து!

இருக்கின்ற உரிமைகளை இழக்கின்ற நிலை மாநில அரசுகளுக்கு இப்போது! உறவுக்குக் கை கொடுப்போம்-உரிமைக்குக் குரல் கொடுப்போம் எனும் நமது முழக்கம் எப்போதும் தேவைப்படுகிறது!

அந்தக் கொள்கை பிறழாமல்-குறிக்கோள் மாறாமல்-நாட்டின் ஒற்றுமை, ஒருமைப்பாடு, இறையாண்மை காத்து, தமிழர் கொற்றம் சிறக்கப் பணியாற்றுவோம்!

நாட்டுக்குழைத்த நல்லோர் வழியில் நடை போடுவோம்!

உத்தமர் காந்தி அடிகள்-உண்மையே கடவுள் என்றார்! அறிஞர் அண்ணா-ஏழையின் சிரிப்பில் இறைவனைக் காண்போம் என்றார்! கைமாறு கருதாமல் கடமையைச் செய் என்றார் தந்தை பெரியார்! உழைப்பே உயர்வு தருமென்றார் பெருந்தலைவர் காமராஜர்!


அவர்தம் எண்ணமெல்லாம் தமிழர் வாழ்வின் வண்ணமாகப் பொலிவுற, இந்தச் சுதந்திர நாளில் தொண்டாற்ற தூய நற்சபதம் ஏற்றிடுவோம்!

-இந்தியாவின் 43-வது சுதந்திரதின விழா நாளான 15-8-89 அன்று காலை 8 மணிக்கு, சென்னையில், கோட்டை கொத்தளத்தின் மேலுள்ள கொடி மரத்தில், மாண்புமிகு தமிழக முதல்வர் கலைஞர் அவர்கள், தேசியக் கொடியை ஏற்றி வைத்து ஆற்றிய உரை.

# விடுதலை வீரர்கள் சிந்திய இரத்தத்தில் பூத்த புரட்சி மலரே இந்நாட்டின் சுதந்திரம்

மாண்புமிகு முதல்வர் கலைஞர்

நாடு விடுதலைபெற்ற நாளை-விடுதலைக் கான புரட்சி வித்தூன்றப் பெற்ற நாளை-உலகில் பல நாடுகள் உவகை பூத்திடக் கொண்டாடு கின்றன.



வண்ண வண்ண உடை உடுத்தி, அந்நாளைத் திருநாளாய்க் கொண்டாடுவர் பல்வேறு நாட்டினர்.

அந்நாட்டினர் பெற்ற விடுதலை ஒளியால், அவர்தம் விழியிலும் ஒளி கொட்டிடும்; விண்ணிலும் மத்தாப்புகள் ஜொலிக்கும்; வீதிகளில் தோரணங்கள் ஊஞ்சலாடும்.

புரட்சி நாட்களையோ-விடுதலை விழாக் களையோ-சுதந்திர தினங்களையோ அவர்கள் பூரிப்போடு கொண்டாடுகின்ற அளவுக்கு வளமும் வசதியும் பெற்றிருக்கிறார்கள் என்பதையும், உற்சாகம் பூண்டுள்ளார்கள் என்பதையும், நாம் மறுத்திடவும் இயலாது-மறந்திடலும் ஆகாது.

"விடுதலை பெறுவது என்பது, ஆதிக்கத்தை அகற்றிக் கணக்குத் தீர்த்த நாள்-விடுதலை நாளை ஆண்டுதோறும் கொண்டாடுவது என்பது விடுதலைக்குப் பிறகு நாம் புரிந்த சாதனைகளைக் கணக்குப் பார்க்கும் நாள்"

-என மறைந்த மாமேதை அறிஞர் அண்ணா அவர்கள் கூறியதை நினைவில் நிறுத்திச் செயல்படுவது இந்த நன்னாளின் நோக்கமென நாம் கொண்டிட வேண்டும்.

**சுதந்திரச் சங்கநாதம்:**

உத்தமர் காந்தி உழைத்ததும் உயிர் விட்டதும் எதற்காக? தியாக சீலர் நேரு பாடுபட்டது எதற்காக? எங்கோ மறைந்தார் எங்கள் நேதாஜி என இன்னும் இந்திய மக்கள் கண்ணீர் பெருக்குவது எதற்காக? செக்கிழுத்தார் சிதம்பரனார்-குருதி கொட்டி மடிந்தான் குமரன்-இப்படி விடுதலை வீரர்களின் பட்டியல் நீண்டு கொண்டே போகுமே; நினைக்க நினைக்க எழுச்சி பிறக்குமே; அவர்கள் எல்லாம் சுதந்திரச் சங்கநாதம் செய்தது எதற்காக?

அடிமை இருள் நீங்குவதற்காக மட்டுமா? இருள் நீங்கி இந்திய மக்களின் வாழ்வில் ஒளி விளக்கு ஏற்ற வேண்டும் என்பதற்காகவும்தான்!

புரட்சிக் கனலால் புதையுண்ட நாடுகளின் புதிய வடிவங்கள் கண்ணுக்குத் தெரிகின்றன; களிப்பூட்டும் வகையில்!.

போரின் கோர தாண்டவத்தால் அழிந்து விட்ட நாடுகளில் ஏற்றமும் எழிலும் எவ்வளவு விரைவில் பூத்துக் குலுங்குகின்றன என்று வியக்கிறோம்;





சுதந்திர நாளன்று மாலையில், மேதகு தமிழக ஆளுநர் டாக்டர் திரு. பி.சி. அலெக்சாண்டர் அவர்கள், மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கும், மற்றும் அமைச்சர் பெருமக்களுக்கும் பிரமுகர்களுக்கும் ராஜ்பவனில் விருந்தளித்தார்

**ஏக்கப் பெருமூச்சு எதனால்?**

ஆனால் இங்கோ, அடிமைநிலை ஒழிந்து ஆண்டுகள் பலவாயினும், அகிலத்தில் தலை தூக்கிச் செழுமை மிகுந்த புன்னகையைக் காட்ட முடியாமல் ஏக்கப் பெருமூச்சு விடுகிறோமே எதனால்?

சிந்திக்க வேண்டாமா?

சிந்தித்துச் செயல்படவேண்டாமா?

எண்ணற்ற விடுதலை வீரர்கள் சிந்திய இரத்தத்தில் பூத்த புரட்சி மலர்தான் இந்த நாட்டின் சுதந்திரம்.

அந்த மலரின் மணம்-மாளிகைகளின் பலகணி வழியாகத் தென்றலின் தோள் மீது ஏறி வசதி படைத்தோருக்கு மட்டுமே கிடைக்கும் என்ற நிலையை மாற்றி-ஏழை வீட்டுச் சாளரங்களிலும் நுழைந்திடும் வண்ணம் செய்திடல் வேண்டும்.

சுதந்திரம் எல்லர் மக்களுக்கும் தான்!

ஒருவர் வாழ-ஒருவர் வீழ அல்ல!

சிற்றூரும் வரப்பெடுத்த வயலும் ஆறு தேக்கிய நல்வாய்க்காலும் நெற்சேர உழுது உழுது பயன் விளைக்கும் நிறை உழைப்புத் தோள்களுக்குப் பயன்படாத சுதந்திரம்-

பொற்றுகளை, கடல் முத்தை, மணிக் குலத்தைப் போய் எடுக்க மூச்சு அடக்கியோர்க்குப் பயன்படாத சுதந்திரம்-

பாலைவனத்து நிலவாகத் தான் கருதப்படும்!

அதனைச் சோலைவனத்துச் சுந்தர நிலவாக்க இந்த நாளில் அனைவரும் உறுதி எடுப்போம்.

**கிழக்கு வானின் உதயக்கதிர்போல் ...**

எளியோர் நாங்கள் மீண்டும் தமிழ் நிலம் ஆள வந்துள்ளோம். பொறுப்பேற்று ஆறு மாதங்கள் நிறைவுற்றுள்ள நேரத்தில்-இடையிலுற்ற இன்னல்கள் ஏராளம்! வாட்டிடும் வறட்சியில் இருந்து தமிழ் மக்களைக் காத்திட-தயங்காமல் வகுத்திட்டோம் திட்டங்கள்!

கருவூலத்தில் நிதி இல்லை எனினும்-கழனிக்குப் பாயாமல் விழலுக்குப் பாய்ந்து கொண்டு இருந்த அரசின் வருவாயை மடைகோலித் தடுத்து, மக்களுக்குப் பயன்படும் வண்ணம் அரசின் சார்பில் அரிய செயல்கள் புரிகின்றோம்.

அனைத்துப் பிரிவு மக்களும் மகிழ்வுறும் வண்ணம்-சொன்னதைச் செய்கின்றோம்; செய்வதைச் சொல்கின்றோம்.

தேர்தலுக்கு முன்னால் அளித்த வாக்குறுதிகள் தேய்பிறை ஆகாமல், கிழக்கு வானின் உதயக்



ஊனமுற்ற சிறுவர் சிறுமியர்க்குச் சுதந்திர நாளன்று தலைமைச் செயலகத்தில் உதவிகள் வழங்கப்பட்டன.



சென்னை - கோட்டை கொத்தளத்தில் சுதந்திர நாளன்று (15.8.89) மாண்புமிகு முதல்வர் அவர்கள் கொடியேற்றுதல்.

கதிர் போல ஒளியுமிழக் காணும் மக்கள் வாழ்த்தி வரவேற்கின்றனர். அதனைச் சோர்வு நீக்கும் மருந்தாகக் கருதி, சொன்னதைச் செய்ய தூளு ரைத்து ஆட்சி நடாத்துகிறோம்.

**தாய்க்குலத்துக்கு வழங்கியுள்ள உரிமைகளும், உதவிகளும்:**

தாயின் மணிக்கொடியைப் பறக்க விடும் இந் நாளில், தாய்க்குலத்துக்கு வழங்கியுள்ள உரிமை களும், உதவிகளும் வருமாறு-

ஆண்களைப் போலப் பெண்களுக்கும் சொத் துக்களில் சம உரிமை; அதற்கோர் சட்டம்;

அரசு நிறுவனங்களிலும்-அரசுச்சார்பு நிறு வனங்களிலும்-உள்ளாட்சித் துறைப்பணி இடங் களிலும் வேலைவாய்ப்பில் பெண்களுக்கு முப்பது சதவிகிதம; இப்படியோர் ஆணை;

தொடக்கப் பள்ளிகளில் முதல் இரண்டு வகுப்புகளுக்கு ஆசிரியர்களாகப் பெண்களே இனிமேல் நியமனம்;

பெருந்தலைவர் காமராஜர் கருத்துப்படி ஐந்தாம் வகுப்பு வரையிலும் பெண்களையே ஆசிரியர்களாக நியமனம் செய்யக் கொள்கை முடிவு;

எட்டாம் வகுப்பு வரை படித்த ஏழைப் பெண் களுக்குத் திருமணத்திற்கு ஐந்தாயிரம் ரூபாய் நிதி உதவி; இதற்கு மூவலூர்இராமாமிர்தம் அம்மை யார் நினைவுத் திட்டம் என்று பெயர்.

கருவுற்ற ஏழைப் பெண்களுக்கு இருநூறு ரூபாய் பேறு கால உதவி; இதற்கு டாக்டர் முத்து லெட்சுமி ரெட்டி நினைவுத் திட்டம் என்று பெயர்;

எல்லா வகுப்புக்களையும் சேர்ந்த ஏழை, நடுத்தரப் பெண்களுக்குக் கல்லூரியிலே பட்டப் படிப்பு வரையில் இலவசம்; இதற்கு ஈ.வெ.ரா. நாகம்மையார் நினைவுத் திட்டம் என்று பெயர்;



தேவையற்ற வாரியங்கள் கலைக்கப்பட்டன; நமுள்ள வாரியங்கள் அனைத்துக்கும் அதி 'ரிகளே தலைவர்களாக நியமிக்கப்பட்டனர்;

உள்ளாட்சி மன்றங்களின் பதவிக் காலம் ந்தாண்டுகளாக நீட்டிக்கப்பட்டது; அவற்றின் திகாரங்களும் திருப்பித் தரப்பட்டன;

கூட்டுறவு நிறுவனங்களுக்குப் பல ஆண்டு ாகத் தேர்தல் நடைபெறாமல் இருந்து விரை ல் நடைபெறத் தேதி குறிக்கப்பட்டுள்ளது;

சிறு விவசாயிகளின் கடன்களை ரத்து செய் ம் பொறுப்பேற்று 106 கோடி ரூபாய் சுமையை ந்த அரசு ஏற்றுக் கொண்டது;

நடைமுறைக்கு வராமல் நீதிமன்றங்களில் டைப்பட்டுக் கிடந்த வடசென்னை அனல் மின் சாரத் திட்டம் தொடங்கப்பட்டது;

ஓட்டுநரே உரிமையாளராக-ஆவதற்கு ஆட்டோ ரிக்ஷா, கார் வாங்கிட கடன் உதவிகள், மானி யம், வட்டிச் சலுகை வழங்கப்படுகின்றன.

விவசாயத் தொழிலாளர்கள்-பீடித் தொழிலாளர்கள்-நெசவாளர்கள் ஆகியோருக்குக் குறைந்த பட்சக் கூலி நிர்ணயம் செய்யப்பட்டது;

**ஏழைக் குடும்பங்களுக்கு இலவச அரிசி:**

83 இலட்சம் ஏழைக் குடும்பங்களுக்கு ஆண்டுக்கு ஐந்து முறை ஐந்து கிலோ இலவச அரிசி;

அதுமட்டுமல்ல; ஏழைக் குடும்பத்திற்கு இல வசமாக ஒரு வேட்டி, ஒரு சேலை;

சத்துணவுத் திட்டம் சீராக்கப்பட்டு 85 இலட் சம் குழந்தைகளுக்கு இரண்டு வாரங்களுக்கு ஒரு முறை முட்டையும் வழங்கப்படுகிறது;

முதியோர் ஓய்வூதியத் திட்டம் ரூபாய் 35-லிருந்து 50 ரூபாயாக உயர்த்தப்பட்டு, ஓய்வூதியம் வழங்க எண்ணிக்கைவரம்பும்அகற்றப்பட்டது;

குடும்பத் தலைவர்களை இழந்த ஏழையெளிய இல்லத்தாருக்கு இரண்டாயிரம் ரூபாய் நிதி உதவி;

விபத்தில் இறக்கும் தொழிலாளர் குடும்பங் களுக்குப் பத்தாயிரம் ரூபாய் நிதி உதவி;

பரம்பரைக் கிராம அதிகாரிகளின் பதவி ஒழிப்பால் ஏற்பட்ட சீர்கேடுகளைக் களைய நிர்வாகச் சீரமைப்புக் குழு;

ஆலயங்களில் நிர்வாகச் சீரமைப்புக்கு மற் றொரு குழு;

தொழில் வளர்ச்சி மேம்பாட்டிற்காக ஒரு குழு; தொடர் நடவடிக்கைகள்;

மாநில வளர்ச்சிக்குச் சிந்தனைக் களஞ்சிய மாக மாமேதைகள் கொண்ட மாநிலத் திட்டக் குழு;

மருத்துவமனைகள், மருத்துவக் கல்வி மேம் பாட்டிற்காக ஓங்குபுகழ் வல்லுநர்கள் கொண்ட பிறிதோர் குழு;

பாசன மேம்பாட்டிற்கெனப் பெரும் நிபு ணர்கள் அடங்கிய நிலைக்குழு ஒன்று அமைக்கப் பட்டது;

காவல் துறையின் சீரமைப்புக்காக, போலீஸ் கமிஷன்;

அனுமதியின்றி அரசு நிலத்தில் கட்டப்பட்ட ஸ்ரீராமச்சந்திரா மருத்துவமனையினை அரசே ஏற்றுக் கொண்டு, உயர்திறன்மிக்க தமிழ்நாடு அரசு மருத்துவ அறிவியல் ஆராய்ச்சி நிறுவனம் "தாமரை" எனும் பெயரால் உருவாக்கப்பட்டது;

குத்தகை பாக்கி வழக்கில் சிக்கிய நான்கு இலட்சம் விவசாயிகளைக் காப்பாற்ற உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

1980ஆம்ஆண்டுவேலைநிறுத்தத்தில் ஈடுபட்டு பதவி நீக்கம் செய்யப்பட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர் நிறுவனத்தின் 489 ஊழியர் களுக்கு மீண்டும் வேலை வாய்ப்பு அளிக்கப் பட்டது;

**மிகப் பிற்படுத்தப்பட்டோருக்குச் சலுகைகள்!**

மிகப் பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கும் சீர் மரபினருக்கும் கல்வி, வேலைவாய்ப்புகளுக்கு இருபது சதவீதம் தனி ஒதுக்கீடு அளிக்கப்பட்டது;

மிகப் பிற்படுத்தப்பட்டோர், சீர் மரபினர்களுக் காக சமூக, கல்வி, பொருளாதார முன்னேற் றத்தை விரைவுபடுத்த தனித்துறை அமைக்கப் பட்டது;

திருச்சி மாவட்டத்தில் ஒரு வேளாண்மைக் கல்லூரி தொடங்கப்படுகிறது. இந்தியாவிலேயே முதன்முறையாகக்' கால்நடை மருத்துவப் பல் கலைக் கழகம் செப்டம்பர் 15-ல் ஆரம்பமாகிறது.

ஆதி திராவிடர், பழங்குடியினர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர், சீர் மரபினர் ஆகியோருக் குக் கல்லூரி இளங்கலைப்பட்டப்படிப்புஇலவசம் ஆக்கப்பட்டது.

எவரெவரோ அனுபவித்த அரசின் சொத் துக்கள் மீண்டும் அரசுக்கே சொந்தமாக்கப்படும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு அரசுக்கே உரி மையாக்கப்பட்டு வருகின்றன;

**இந்தியாவிலேயே முதன்முதலாக ...**

இந்தியாவிலேயே முதன்முதலாக ஆதி திரா விடர்களுக்கு இலவச வீடு கட்டித் தரும் திட்டம் 1974-இல் தொடங்கப்பட்டு இப்போது மீண்டும் இந்த ஆண்டு அவர்களுக்குச் சுமார் நாற்பதாயிரத் திற்கு மேற்பட்ட வீடுகள் கட்ட நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

தங்களது கோரிக்கைகளுக்காக வேலை நிறுத் தத்தில் ஈடுபட்ட அரசு ஊழியர்கள், ஆசிரியர் களுடைய வேலை நிறுத்த நாட்களை விடுமுறை யாகப் பாவித்து அவர்களுக்கு நிவாரணம் வழங் கப்பட்டது;

மத்திய அரசு அலுவலர்களுக்குச் சமமான ஊதியத்தை மாநில அரசு அலுவலர்களுக்கும்,

"கடலுக்காக அல்ல; கடற்கரையில் இருக்கின்ற மக்களுக்காக அலை காற்றடிக்கிறது. விளக்கு ஏற்றினால், தன் எதிரிலே இருக்கிற இருட்டைப் போக்க ஒளி பயன்படுமே தவிர - அதன் அடியில் இருக்கின்ற நிழலைப் போக்க முடியாது! அது போல, நம்மிடத்திலே இருக்கின்ற திறமை நமக்காக அல்ல; நாட்டு மக்களுக்காக! அந்த வகையில் நாம் ஒவ்வொருவரும் பணியாற்றுவோம்!

-அறிஞர் அண்ணா"



ஆசிரியர்களுக்கும் வழங்கிட ஆண்டு ஒன்றுக்கு 427 கோடி ரூபாய் அதிக செலவை ஏற்றுக் கொண்டது இந்த அரசு.

பணியில் இருக்கும்போது இறந்து விடும் அலுவலாளர்களுக்கு நாற்பதாயிரம் ரூபாய் குடும்பப் பாதுகாப்பு நிதி வழங்கப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது;

கோரிக்கைகளுக்காகப் போராடி, பணி நீக்கம் செய்யப்பட்ட காவல் துறை அலுவலாளர்களை மீண்டும் வேலைக்கு அமர்த்தப்பட்டது;

தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தில் மூட்டை சுமக்கிற ஐந்தாயிரம் தொழிலாளர்களின் பணிகளை நிரந்தரமாக்கியது;

சத்துணவுக்கூடத்துப் பகுதி நேர-தற்காலிகப் பணியாளர்களைப் பகுதி நேர-நிரந்தரப் பணி யாளர்களாக ஆக்கியது;

தெலுங்கு கங்கைத் திட்டத்தைத் தீவிரப்படுத்தி, சென்னைக்குக் குடிநீர் விரைவில் கொண்டுவர ஆந்திர முதலமைச்சருடன் பேசி நல்ல முடிவு எடுக்கப்பட்டது;

குடிநீர்ப் பிரச்சினையைச் சமாளிப்பதற்குச் சபதம் மேற்கொண்டு விரிவான திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன;

வருகின்ற ஆண்டுகளில் இரண்டு மாதங் களுக்கு ஒருமுறை தமிழகத்திலே ஒரு தொழில் தொடங்குகிற அளவிற்கு அரசு முயற்சிகளை மேற் கொண்டுள்ளது;

மூடிய மில்களைத் திறக்கும் முயற்சியில் முனைப்பாகச் செயல்பட்டு வருகிறது;

நியாயமான முறையில் வருமானத்தைப் பெருக்கி-நேர்மையான முறையில் நிர்வாகத்தை நடத்தி-விரிவாகவும், விரைவாகவும்-ஏழையெளி யோர், கிராமப்புறத்து மக்கள், நகர்ப்புறத்து மக்கள், சாதாரண, சாமான்ய, நடுத்தர வர்க்கத் தினர் துளி அளவுத் துன்பத்திற்கும் ஆளாகாமல் இந்த ஆட்சியின் பணி தொடருமென நேரு நூற்றாண்டு விழாவில் நடைபெறும் இந்த விடு தலைத் திருநாளில் உறுதி வழங்குகிறேன்.

வறுமையை வீழ்த்தி, ஏற்றத் தாழ்வற்ற சமு தாயத்தை உருவாக்க, அரசு எடுக்கின்ற முயற்சிகள்

எவ்வளவு தூய்மையானவைகளாக இருப்பினும் அதனைக் கெடுத்துத் தகர்க்கும் வகையில் கள்ளச் சந்தையும், கறுப்புப் பணமும் குறுக்கே நிற்கிற காட்சியைக் காணுகிறோம்!

**முயல் குட்டியும் பன்றியும்!**

முயல் குட்டியை முள்ளம் பன்றி அணைத்து மகிழ்வதிலே ஏற்படுகிற சங்கடத்தைப் போலத் தான், நமது சமதர்ம இலட்சியங்களைக் கறுப்புப் பணக்காரரர்களும், கள்ளச் சந்தைக்காரர்களும் தழுவிக் கொண்டிருக்கின்றார்கள். அந்தத் தழுவலிலே இருந்து சமத்துவமும், சமதர்மமும் தப்பிட வழி காண்போம்.

'அரசாங்கத்தை-சட்டத்தை ஏமாற்றுகிறேன் பார்' என்பது வீரம் அல்ல; அது மக்களுக்குச் செய்யப்படும் மாபெரும் துரோகம் ஆகும்.

இவைகளை எல்லாம் உணர்ந்து செயலாற்ற வேண்டும். உணர மறுப்பவர்களைத் திருத்த வேண்டும்;

திருந்த மறுப்பவர்கள் தயவுதாட்சண்யமின்றித் தண்டிக்கப்பட வேண்டும்; இல்லையேல் சுதந்திரத்தின் பயனை எல்லோரும் பெற்று இன்பம் எய்திட இயலாது.

**தியாகிகளுக்குச் சலுகைகள்**

இந்த நாளில் விடுதலைக்குப் போராடிய வீர தியாகிகளுக்கு வணக்கம் செலுத்துவதோடு அவர்களுக்காகச் சில அறிவிப்புக்களையும் செய்கிறேன்.

தற்போது தமிழ்நாட்டில் 5,763 விடுதலை வீரர்களுக்கு ஒய்வூதியமாக மாதம் 250 ரூபாய் வழங்கப்படுகின்றது. இனிமேல் அவர்களுக்கு ஒய்வூதியம் 350 ரூபாயாக உயர்த்தப்படும் என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

இதனால் ஆண்டு ஒன்றுக்கு அரசின் செலவு சுமார் இரண்டரைக் கோடி ரூபாயாகும்.

கல்வித்துறையிலும் இதர துறைகளிலும் அந்தத் தியாகிகளுக்கு வழங்கக்கூடிய சலுகைகளைப் பெறுவதற்கு ஆண்டு வருமானத்தைத் தெரிவிக்கும் போது இந்த ஒய்வூதியத்தைக் கணக்கில் எடுத்துக் கொள்ள வேண்டாமென்று கோரிக்கை எழுப்பப்பட்டுள்ளது.

அவர்தம் கோரிக்கையை ஏற்றுக் கொண்டு, இனிமேல் அரசு வழங்கக்கூடிய அனைத்துச் சலுகைகளும்-விடுதலை வீரர் ஒய்வூதியமும்-ஆண்டு வருமானக் கணக்கிடுவதில் சேர்த்துக் கொள்ளப் பட மாட்டாது என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

பல தியாகங்களை ஏற்றுக் கொண்டு, விடுதலைப் போரில் முழு மூச்சுடன் பங்கேற்ற தியாகிகளின் நாட்டுப் பற்றை மதிக்கும் வகையில் அவர்கள் மறைந்திடும்போது அவர்தம் ஈமச் சடங்குகளை நிறைவேற்ற அந்தக் குடும்பங்களுக்கு ஆயிரம் ரூபாய் அரசின் சார்பில் வழங்கப்படும்.

கடந்த காலத்தில் அரசுப் பொறுப்பில் நான் இருந்தபோது நாமக்கல் கவிஞர் இராமலிங்கனார், பரலி.சு. நெல்லையப்பர், வாஞ்சிநாதன் குடும்பத்தினர், மற்றும் பல தியாகச் செம்மல்களுக்கு அரசின் சார்பில் உதவிகள் பல வழங்கப்பட்டு உள்ளன.

**உண்மைத் தொண்டர்களை நேசிக்கும் அரசு!**


இந்த ஆண்டு காமராஜர் பிறந்த நாள் விழாவில், நான் அறிவித்தவாறு பெருந்தலைவரின் பிரியத்திற்குரிய விசுவாசமிக்க தொண்டனாக அவ்ரது இல்லத்தில் இருந்து பணியாற்றிய வைரவன் என்ற நண்பரின் நலிந்த வாழ்வு நிமிர்ந்திட அவருக்கும் அவரது குடும்பத்தாருக்கும் லாயிடஸ் காலனியில் வீடு ஒன்று வழங்கப் படும். அதற்கான ஆணை பிறப்பிக்கப்பட்டு விட்டது.

அஃதன்னியில், காமராஜருடைய நினைவகத்தில் "வழிகாட்டி" யாகப் பணியாற்றிட வைரவன் அவர்கள் நியமிக்கப்படுகிறார்கள். அவருக்கு மாத ஊதியமாக மொத்தம் ரூ.1,105 கிடைக்கும்.

உண்மைத் தொண்டர்கள் எங்கிருந்தாலும் அவர்களை நேசிக்கும் அரசு இந்த அரசு என்பதை எடுத்துக் கூறி-

சுதந்திர நாள் வாழ்த்துக்களைத்தமிழக மக்கள் அனைவருக்கும் தெரிவித்துக் கொள்கிறேன்.

-மாண்புமிகு முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள், 15-8-89 அன்று, இந்திய விடுதலைத் திருநாளையொட்டி வானொலி மற்றும் தொலைக்காட்சியில் ஆற்றிய உரை.




"வறுமைக்கும் வாட்டத்திற்கும் காரணம் என்ன? விதி!... ஒருவன் வாழவும், ஒருவன் வாடவுமான நிலை இருப்பானேன்? அது தலையெழுத்து!... உயர்சாதிக்காரன்- தாழ்ந்த சாதிக்காரன் என்ற கேடு உலவிடுவானேன்? அதுவா? அது போன ஜென்மத்துப் பலன்! இப்படிப் பட்ட ஆணவம் நிறைந்த பதில்கள், அறியாத மக்களின் உடலிலே - உள்ளத்திலே சவுக்கடிகளாக விழுந்து கொண்டிருந்தன. அதைத் தடுத்து நிறுத்தியது தான் பகுத்தறிவு."

-முதல்வர் கலைஞர்



# தெலுங்கு-கங்கை
# திட்டப்பணிகள் விரைவாக
# நடைபெறுகின்றன



தெலுங்கு கங்கைத் திட்டம் குறித்து ஜூன் மாதம் 18-ஆம் தேதி தமிழக முதல்வரும், ஆந்திர முதல்வரும் சந்தித்துப் பேசிய பிறகு, பணிகள் எந்த அளவுக்குத் துரிதமாக்கப்பட்டுள்ளன என்பதைப் பார்த்து வரவேண்டும் என்றும், இந்த வேலைகளை விரைவாக மேற்கொள்வது குறித்து விரிவாகப் பேச வேண்டும் என்றும் தமிழக முதல்வர் கலைஞர் அவர்கள் என்னையும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் திரு. பொன்முடி அவர்களையும், பொதுப்பணித் துறைச் செயலாளர் திரு. சங்கரசுப்பையன் அவர்களையும், அந்தப்பணியின் தலைமைப் பொறியாளர் திரு. சேதுரத்தினம் அவர்களையும் மற்றும் அதிகாரிகளையும் பணித்தார்கள்.

அதன் அடிப்படையில் எங்கள் குழு 19-7-89 அன்று சென்னையிலிருந்து சோமசீலா அணைக்கட்டுப் பகுதிக்குச் சென்று அன்று முழுவதும் சோமசீலா அணைக்கட்டுப் பகுதியையும், அங்குட பணிகள் எவ்விதம் நடைபெறுகிறது என்பதையும் பார்வையிட்டோம். அங்கிருந்துதான் சென்னைக்குத் தண்ணீர் வரவிருக்கிறது. 19-7-89 இரவு அங்குள்ள அதிகாரிகளோடு இந்தப் பணிகள் குறித்து கலந்து பேசினோம்.

20-7-89 அன்று சோமசீலாவைவிட்டு கண்டலேறு நீர்த்தேக்கப் பகுதிக்குச் சென்று, வேறு அணையின் வேலைகள் குறித்து அதிகாரிகளோடு விவாதம் நடத்தி விட்டு, அன்று மாலை புறப்பட்டு காளஹத்தி வந்து சேர்ந்தோம். 21-ந் தேதி காலை புறப்பட்டு கால்வாய் வெட்டப்பட்டிருக்கிற பகுதிகளைப் பார்வையிட்டுக்கொண்டு சத்தியவேடு வழியாக ஊத்துக்கோட்டைப் பகுதியில் நடைபெறுகிற வேலைகளைப் பார்வையிட்ட பிறகு சென்னை திரும்பினோம்.

தெலுங்கு கங்கைத் திட்ட வேலைகளைப் பொறுத்த வரையில் ஆந்திர அரசு துரிதமாக, விரைவாகப் பணியாற்றுவதைக் கண்டு நாங்கள் மகிழ்ச்சியடைந்தோம். இதில் ஆந்திர அரசு எவ்வளவு வேகமாக இருக்கிறது என்பதற்கு ஒரே ஒரு உதாரணம். இரு மாநில முதலமைச்சர்களும் கூடிப் பேசிய நாள் 18-6-89, வேலைகளைத் துரிதப்படுத்தும்படி ஆந்திர முதல்வர் ஆந்திர அலுவலர்களுக்கு உத்தரவு வழங்கிய நாள் 20.6.89, கடந்த ஒரு மாதத்தில் மட்டும் டெண்டர் கோரப்பட்டுள்ள பணிகளின் மொத்த மதிப்பீடு ரூ.95 கோடி. இந்த ஆண்டு ஆந்திர வரவு செலவுத் திட்டத்தில் இதற்கான ஒதுக்கீடு ரூ. 40 கோடி. தமிழ்நாடு வழங்கியுள்ள தொகை ரூ. 30/-கோடி. இந்த ஆண்டு முடிக்கத் திட்டமிடப்பட்டுள்ள பணிகளின் மொத்த மதிப்பு ரூ. 100/- கோடி. வருகிற மார்ச்சு மாதத்திற்கு முன்பு மேலும் ரூ. 30 கோடி ஆந்திர அரசுக்கு அளிக்கவிருக்கிறோம். இந்தப்பணிகள் ஆங்காங்கு தொய்வின்றி இருப்பதற்காக 33 கி.மீ. தூரத்திற்கு ஒரு செயற்பொறியாளர் என்று நியமனம் செய்யப்பட்டுள்ளது.

மத்திய காடு வளம் மற்றும் சுற்றுப்புறச் சூழல் துறையிடமிருந்து அனுமதி கிடைத்து விட்டதால் பணிகள் தொடங்கப்படாமல் இருக்கிற காடுகள் உள்ள பகுதிகளிலும் வேலைகளைத் துவக்க டெண்டர்கள் கோரப் பட்டுள்ளன.

கண்டலேறு நீர்த்தேக்கப் பகுதியில் நடைபெற்றுள்ள பணிகளின் விவரம்.

**மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் பேட்டி!**

காட்டுப் பகுதி தவிர வேலை முடிவுற்ற பகுதி 5.5. கி.மீ.

வேலை நடைபெற்றுக் கொண்டிருக்கிற பகுதி, 3.0. கி.மீ.

டெண்டர் கோரப்பட்டுள்ள பகுதி 1.5. கி.மீ.

வரும் நவம்பர் மாதத்திற்குள் எல்லா டெண்டர்களும் விடப்பட்டு அனைத்து இடங்களிலும் வேலைகள் நடக்கும். இந்த வேகத்தில் வேலைகள் நடைபெற்றால் குறித்த காலத்தில், 1993 மார்ச் மாதத்தில் தண்ணீர் நிச்சயம் சென்னை மாநகரத்திற்குக் கிடைக்கும்.


கிருஷ்ணா நதி நீரைச் சென்னைக்குக் கொண்டுவர மேற்கொண்டுள்ள வேலைகளில் இதுவரை சுமார் 45 சதவிகிதம் பூர்த்தியடைந்துவிட்டது.

ஆகஸ்டு 3-வது வாரத்தில் ஸ்ரீசைலத்திலிருந்து சோமசீலா வரையிலுள்ள பகுதிகளில் நடக்கும் வேலைகளைச் சென்று பார்வையிடவிருக்கிறேன்.

கிருஷ்ணா நதி நீர் சென்னைக்கு வரவிருப்பதால் பூண்டி, செம்பரம்பாக்கம், ரெட்ஹில்ஸ் ஏரிகள் 2 அடி அளவிற்கு உயர்த்தப்படவிருக்கின்றன. இந்த 3 ஏரிகளையும் உயர்த்துவதால் கூடுதலாகச் சுமார் 1.8 டி.எம்.சி. தண்ணீரைச் சேமிக்கலாம். இம்மூன்று ஏரிகளில் தற்போதைய கொள் அளவு 6 டி. எம்.சி. ஆகும்.

-(செய்தியாளர் பேட்டியின்போது மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் திரு. துரைமுருகன் அவர்கள்)

# அரசு ஊழியர் ஆசிரியர்களுக்கு ரூ.7 கோடிக்கு ஊதிய உயர்வு



அரசு அலுவலர்களுடைய குறைகளை மேலும் மேலும் அதிகாரிகளோடு கலந்து ஆலோசித்து, அமைச்சர்களோடு கலந்து யோசித்து எடுத்த சில முடிவுகளை இங்கே அறிவிப்பாக நான் தர விரும்புகின்றேன்.

ஊதியக் குழுவின் பரிந்துரையின் அடிப்படையில் அரசு அலுவலர்களுக்கு அளிக்கப்பட்டுள்ள-புதிய ஊதிய விகிதங்கள் மற்றும் ஊதியப் பலன் சம்பந்தமாக ஒரு சில கோரிக்கைகள் அரசுக்கு வந்துள்ளன.

இது குறித்து பல்வேறு அலுவலர் சங்கங்களுடன் நிதித்துறைச் செயலாளரால் பேச்சு வார்த்தைகளும் நடத்தப்பட்டுள்ளன.

அதிலே முக்கியமான கோரிக்கைகள்:

1. புதிய விகிதங்களில் உள்ள முரண்பாடுகள்(Anomolies) 2. ஏற்கெனவே இருந்த தேர்வு மற்றும் சிறப்பு நிலைகளுக்குப் புதிய விகிதங்கள் வழங்குதல். 3. ஆண்டு ஊதிய உயர்வில் உள்ள குறைபாடுகளைக் களைதல். 4. தேக்க நிலையைத் தவிர்த்தல்.

ஊதியக் குழுவின் பரிந்துரையின் மீது அரசு ஆணை பிறப்பித்தபின் 3,000-க்கு மேற்பட்ட அலுவலகப்பிரிவினர் தமிழக அரசில் இருந்தாலும் 31.7.89 வரை சுமார் 246 மனுக்கள் மட்டுமே கிடைக்கப்பட்டு உள்ளன. மனுக்களும் ஆராயப்பட்டு மேல் நடவடிக்கை சம்பந்தமாக முடிவுகள் எடுக்கப்பட்டுள்ளன.

ஊதியக் குழு பொதுவாகப் பின்பற்றிய முறைகளைத் தெளிவுபடுத்தவேண்டும். மத்திய அரசு பொறுப்பேற்று நடத்தக்கூடிய பணிகளின் தன்மைக்கும்-மாநில அரசு செயல்படுத்த வேண்டிய பணிகளின் தன்மைகளுக்கும் பல வேறுபாடுகள் இருக்கின்றன. அதேபோல பொறுப்புகளிலும் வித்தியாசங்கள் உள்ளன.

எனவே, மத்திய அரசுக்கு இணையாக ஊதியம் வழங்கும்போது பொதுப் பிரிவினர்களைப் பொறுத்தவரை ஊதிய விகிதங்கள் முழுமையாகப் பின்பற்றப்பட்டுள்ளன.

இதர பிரிவினர்களைப் பொறுத்தவரை சமநிலையை ஆராய்ந்து முடிவுகள் எடுக்கப்பட்டுள்ளன. இப்பிரிவினர்களுக்கு ஐந்தாவது ஊதியக் குழு மத்திய அரசின் ஊதிய விகிதங்களை ஏற்கெனவே அமல் செய்துள்ள மாநிலங்களான மகாராஷ்டிரம், குஜராத் போன்ற மாநிலங்களின் அடிப்படையில் பரிந்துரை செய்துள்ளதைபேற்று அரசு ஆணைகளைப் பிறப்பித்துள்ளது.

எனினும் ஏற்கெனவே ஒரே விகிதத்தில் பெற்று வந்தவர்கள் இப்போது புதிய ஊதிய விகிதத்திலும் அதேநிலையில் இருக்க வேண்டுமென்று கோரித்தான் அதிகமான மனுக்கள் வந்துள்ளன.

5-வது ஊதியக்குழு இதனைப் பொறுத்தவரை மிகத் தெளிவாக விளக்கியுள்ளது. மத்திய அரசின் ஊதிய விகிதங்களைச் செயல்படுத்தும்பொழுது ஏற்கெனவே மாநில அரசில் நடைமுறையில் இருந்த நிலைகளை அப்படியே கடைப்பிடிக்க இயலாது என்று ஊதியக்குழு திட்டவட்டமாகத் தெரிவித்துள்ளது. புதிய சம்பள விகிதங்களை மாற்றி அமைக்கும் பொழுது இப்படிப்பட்ட ஒரு சில பிரச்சினைகள் வரநேரிடும். குறைபாடுகள் அல்லது முரண்பாடுகள் என்று தெரிவிக்கப்பட்டுள்ள பெரும்பாலான கோரிக்கைகள் இந்த வகையில் தான் உள்ளன. எனினும், அவைகளில் முக்கியமான சிலவற்றின் மீது எடுக்கப்பட்ட முடிவுகள்:—

உதவிப் பொறியாளர்கள் (அசிஸ்டெண்ட் இஞ்சினீயர்ஸ்)

உதவிப் பொறியாளர்கள், தரப்பட்டுள்ள ஊதிய விகிதம் குறித்து அதிருப்தி அடைந்து பல்வேறு கோரிக்கைகளை அரசுக்குத் தந்திருக்கிறார்கள், அவர்களுக்கு ரூ. 1640-2900 என்ற ஊதிய விகிதம் ஏற்கெனவே வழங்கப்பட்டுள்ளது.

அவர்களுடைய கோரிக்கையின் அடிப்படையிலும்-பொறியியல் கல்லூரியில் படித்துப் பட்டம் பெற்றுப் பணியிலே சேர்ந்துள்ளவர்களை ஊக்கப்படுத்த வேண்டுமென்ற அடிப்படையிலும்-ஏற்கெனவே அவர்களுக்கு அளிக்கப்பட்ட ஊதிய விகிதமான ரூ.1,640-2,900 என்ற அளவினை ரூ. 2000-3500 என்ற விகிதத்தில் மாற்றி அமைக்கப்படுகின்றது என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

இதனால் 3,200 உதவிப் பொறியாளர்கள் பயன்பெறுவார்கள்.

வனத்துறையிலே பணியாற்றும் ரேஞ்சர்களுக்கு மத்திய அரசுக்கு இணையான ஊதிய விகிதமான ரூ. 1640-2900 என்ற ஊதிய விகிதம் இப்போது நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

இவர்களுடைய பணி காவல்துறையிலே உள்ள (இன்ஸ்பெக்டர்) ஆய்வாளர்களைப் போல அமைந்துள்ளதால் - இவர்களின் ஊதியத்தையும் காவல்துறை ஆய்வாளர்களோடு ஒப்பிட்டு-இவர்களின் ஊதிய விகிதம் ரூ. 2,000-3,200 என்ற அளவிற்கு உயர்த்தப்படுகின்றது.

புதிய விகிதங்களில் ரூ.1640-2900 என்ற விகிதத்தில் உள்ளவர்கள் பலர் அவர்களுடைய பணியின் தன்மையின் அடிப்படையில் சற்று உயர்வான விகிதம் அளிக்க வேண்டுமென்று கேட்டிருக்கின்றார்கள். ஊதியக் குழுவின் பரிந்துரையின் அடிப்படையில் தான் இந்த விகிதம் தரப்பட்டுள்ளது. எனினும் நடுநிலையில் உள்ள இவர்களுக்கு மேலுள்ள நிலை ரூ.2,000-3,200 என்றும் - கீழ் உள்ள நிலை ரூ.1,600 என்றும் இருப்பதால் இவர்களுக்குப் புதிய விகிதமான ரூ.1,820-3,200 என்று உருவாக்கப்பட்டு வழங்கப்படும்.

89 பிரிவுகளைச் சேர்ந்த 16,800 அலுவலர்கள் இதன்மூலம் பயன்பெறுவார்கள். அவர்களில் முக்கியமாக வேளாண்மை அலுவலர்கள் 1,551 பேர், முதுகலை பட்டதாரி ஆசிரியர்கள் 13,300 பேர், மீன்வள ஆய்வாளர்கள், வேலைவாய்ப்புத் துறையைச் சேர்ந்த பயிற்சி அலுவலர்கள், மோட்டார் வாகன ஆய்வாளர்கள் - நிலை 1, புள்ளி இயல் அலுவலர்கள், ஜெயிலர்கள் போன்றவர்கள் அடங்குவார்கள்.

இளநிலை உதவியாளர்கள் மற்றும் தட்டச்சர்கள் பணியின் தன்மையை மனதிற்கொண்டு - அவர்களுக்கு மத்திய அரசுக்கு இணையான ஊதிய விகிதமான ரூ.950-1,500 என்பதை ரூ.975-1,660 என்ற விகிதத்தில் உயர்த்தித் தரப்பட்டது.

ஏற்கனவே இந்த இளநிலை உதவியாளர்களுக்குச் சமமாக ஊதிய விகிதம் பெற்றுப் பணியாற்றி வந்தவர்களின் குறைகளைப் போக்க நில அளவையாளர்கள், தொலைபேசி இயக்குபவர், பிராட்மா இயக்குபவர், அட்லர் இயக்குபவர், கிராம நிர்வாக அதிகாரி, செயல் அலுவலர் நிலை 4, ஊரக நல அதிகாரி நிலை 2, காசாளர், மெஷினிஸ்ட், காம்ப்டிஸ்ட், வரைவாளர்கள், நகர்ப்புற திட்டத்துறை வரைவாளர்கள், பட்டு வளர்ச்சித்துறை ஆய்வாளர்கள், டெலக்ஸ் இயந்திரம் இயக்குபவர், துறைமுகப் பாதுகாவலர், தொலைபேசி எழுத்தர், ஊர்தி ஓட்டுநர்கள் போன்றவர்களுக்கு இனி ரூ.975-1,600 என்ற அளவிற்கு ஊதிய விகிதம் உயர்த்தப்படும். இதனால் சுமார் 28,000 அலுவலர்கள் பயன்பெறுவார்கள்.

## முதல்வர் கலைஞர்

தலைமைக் காவலர்களுடைய பழைய ஊதிய விகிதம் ரூ.705-1,630. அவர்களுக்கு மத்திய அரசின் ஊதிய விகிதமான ரூ.975-1,600 வழங்கப்பட்டுள்ளது. காவல் துறை துணை ஆய்வாளர்களுக்கு ரூ.1,600-2,660 என்ற விகிதம் ஏற்கனவே அளிக்கப்பட்டுள்ளது. தலைமைக்காவலர்களுடன் பழைய ஊதிய விகிதத்தில் ஒரே நிலையில் இருந்த பலருக்கு ரூ.975-1,660 என்ற ஊதிய விகிதத்தை விட அதிகமாக வழங்கப்பட்டுள்ளதைக் கருத்தில் கொண்டு இனி தலைமைக் காவலர்களுக்கு ரூ.1,200-2,040 என்ற ஊதிய விகிதம் வழங்கப்படும். இதனால் 7,141 தலைமைக் காவலர்கள் பயன் பெறுவார்கள்.

அடித்தளத்தில் முக்கியமான சில பணிகளை ஆற்றக்கூடிய அரசு அலுவலர்கள் குறிப்பாகப் பொதுப்பணித்துறையின் நீர்ப்பாசனப் பிரிவிலே உள்ள லஸ்கர், கால்நடை உதவியாளர்கள், வேளாண்மை விரிவாக்க அலுவலர்கள் நிலை - 2 போன்றவர்களுக்கு வழங்கப்பட்ட ஊதிய விகிதமான ரூ.750-940 என்பதை, இனிமேல் ரூ.775-1,025 என்ற அளவிற்கு உயர்த்தி வழங்கப்படும். இந்த அறிவிப்பின் மூலம் இப்பணிகளில் பணியாற்றும் 6,789 அரசு அலுவலர்கள் பயனடைவார்கள்.

முதுநிலையிலுள்ள அலுவலர்களுக்கு அதாவது தேர்வு மற்றும் சிறப்பு நிலையில் உள்ளவர்களுக்குப் புதிய விகிதங்களில் சாதாரண விகிதத்தைவிட ஒருநிலை உயர்வான விகிதம் வழங்கப்படுமென்று ஆணையிடப்பட்டுள்ளது. இதனை மறு பரிசீலனை செய்து புதிய விகிதங்களில் ஏற்கனவே இருந்த தேர்வு மற்றும் சிறப்பு நிலைக்கேற்றவாறு புதிய விகிதங்கள் அளிக்க வேண்டுமென்ற கோரிக்கை வந்துள்ளன.



மத்திய அரசு பின்பற்றக்கூடிய விகிதங்களில், தேர்வு மற்றும் சிறப்பு நிலை இல்லாத ஒரு சூழ்நிலையில், நாம் இவைகளை ஏற்படுத்த இயலாத நிலையில் உள்ளோம்.

எனினும் முதுநிலையிலுள்ள அரசு அலுவலர்களை உற்சாகப்படுத்த வேண்டுமென்ற எண்ணத்துடன் முன்பு இருந்த தேர்வு மற்றும் சிறப்பு நிலைகளைக் கருத்தில் கொண்டு ஏற்கனவே அறிவித்துள்ள புதிய விகிதங்கள் மேலும் மேம்படுத்தப்படும் என்ற உறுதியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மத்திய அரசு பின்பற்றக்கூடிய தேக்க நிலை ஊதிய உயர்வு முறையை முழுமையாக மாநில அரசும் பின்பற்றும் என்று ஏற்கனவே அறிவிக்கப்பட்டுள்ளது. இந்த முறை இரண்டு ஆண்டுகளுக்கு ஒரு முறை ஊதிய உயர்வு என்று மொத்தம் மூன்று உயர்வுகள் மட்டுமே அளிக்கப்படுகின்றது. ஏற்கனவே மாநில அரசு பின்பற்றிய முறையில் தேக்க நிலையில் ஊதிய உயர்வுகளுக்கு ரூ.3,500/- என்று ஒரு உச்ச வரம்பு நிர்ணயிக்கப்பட்டிருந்தது. இப்படிப்பட்ட ஒரு உச்ச வரம்பு மறுபடியும் உருவாக்க வேண்டுமென்று, மூன்று உயர்வுகள் மட்டும் என்ற உச்ச வரம்பைத் தளர்த்தி, ரூ.5,450 வரை இரண்டு ஆண்டுகளுக்கு ஒருமுறை ஊதிய உயர்வு பெற்றுக் கொள்ளலாம் என்று முடிவெடுக்கப்பட்டுள்ளது.

ஆண்டு ஊதிய உயர்வு (இன்கிரிமெண்ட்) குறைந்துள்ளது என்று ஒரு குறைபாடு தெரிவிக்கப்பட்டுள்ளது. இதனை மிகவும் கவனமாகப் பரிசீலித்ததில் மத்திய அரசுக்கு இணையாக ஊதிய விகிதங்கள் மற்றும் ஆண்டு ஊதிய உயர்வுகளைப் பின்பற்றியதால் ஏற்படக்கூடிய இடைக்கால பிரச்சினையாக இது தென்படுகிறது. 17 பழைய ஊதிய விகிதங்களை 23 புதிய விகிதங்களாக மாற்றி அமைக்கும் பொழுது சில ஊதிய விகிதங்களில்தான் இந்தப் பிரச்சினை எழும்பியுள்ளது. அதில் பெரும்பாலானவை ஓரிரு ஆண்டுகளில் ஒழுங்குபட்டுவிடும்.

தேர்வு மற்றும் சிறப்பு நிலையில் உள்ளவர்களுக்குத் தற்போது ஊதிய விகிதங்கள் மேலும் உயர்த்தப்பட்டுள்ளதால் இந்தக் குறைபாடு களையப்பட்டு விடும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. அலுவலக உதவியாளர்களுக்கு மத்திய அரசுக்கு இணையாக

ஊதிய விகிதம் அமைக்கும்பொழுது அவர்களுக்கு ஆண்டு ஊதிய உயர்வு ரூ.12, ரூ.14 என்று வழங்கப்பட்டுள்ளது. ஏற்கனவே அவர்கள் ஆண்டு ஊதிய உயர்வாக ரூ.10 அல்லது ரூ.15 என்ற அளவிற்குப் பெற்று வந்தார்கள்.

அலுவலக உதவியாளர்களுக்கு ஒரு சிறப்புச் சலுகை அளிக்க வேண்டும் என்ற அடிப்படையில் மத்திய அரசின் ஊதிய விகிதங்களில் உள்ள ஆண்டு ஊதிய உயர்வான ரூ.12, ரூ.14 என்பதை இனிமேல் ரூ.12 ரூ.15 என்று மாற்றி அமைக்கப்படும்.. இதனால் 1.46 இலட்சம் பணியாளர்கள் பயன்பெறுவார்கள்.

அடுத்து தலைமை ஆசிரியர்களுக்கு உள்ள பிரச்சினை. இந்த ஊதியக்குழு பரிந்துரையை வரவேற்றவர்களில் மிகப் பெரும் பான்மையோர் ஆசிரியர் சமுதாயத்தினர் என்பதை நீங்கள் யாரும் மறக்க முடியாது. இருந்தாலும் தலைமை ஆசிரியர்களுக்குச் சில குறைகள் இருந்தன. அதையும் மனதிலே வைத்து ஐந்தாவது ஊதியக்குழு, உயர்நிலைப் பள்ளித்தலைமை ஆசிரியர்களுக்கு மத்திய அரசுக்கு இணையாக ஊதிய விகிதம் வழங்கும்போது மாநிலத்திலுள்ள நிர்வாக நிலையையும் நிர்வாக அமைப்பையும் கருத்தில் கொள்ள வேண்டுமென்று பரிந்துரைத்துள்ளது.

அந்த அடிப்படையில்தான் புதிய விகிதங்கள் நிர்ணயிக்கப்பட்டுள்ளன. மத்திய அரசின் பொறுப்புகளை நாம் காணும்போது பள்ளிக் கல்வித்துறையில் மாநில அரசுக்கு மத்திய அரசைவிட அதிகமான பொறுப்புகள் உள்ளன.

எனவே, மாநில அரசின் நிர்வாகச் சூழ்நிலையை மனதில் கொள்ள வேண்டிய அவசியம் இருக்கின்றது. தலைமை ஆசிரியர்கள் ஆர்வத்துடனும் முழுமூச்சுடனும் புதிய சமுதாயத்தை உருவாக்குவதில் அதிக அக்கறை காட்ட வேண்டும்.

மேல் நிலைப்பள்ளி தலைமை ஆசிரியர்களுக்கு இப்போது தரப்படுவது ரூ.2,000-3,000. இப்போது இதனை மாற்றி அறிவிக்கப்படுவது 2,200-4,000 ரூபாய் வரை. உயர்நிலைப்பள்ளி தலைமை ஆசிரியர்களுக்கு இப்போதுள்ள ஊதியம் 1,640 முதல் 2,900 வரை. இன்று உயர்த்தி அறிவிக்கப்படுவது ரூ.2,000-3,200 ஆகும்.

அடுத்து, நடுநிலைப்பள்ளி தலைமை ஆசிரியர்களுக்கு இப்போதுள்ள ஊதிய விகிதம் ரூ.1,600-2,600. இன்று இது உயர்த்தப்பட்டு அறிவிக்கப்படுவது 1,640-2,900 வரையாகும். முதுகலைப்பட்டதாரி உடற்பயிற்சி ஆசிரியர்களுக்கு இப்போதிருப்பது 1,600-2,600 ரூபாயாகும். இன்று உயர்த்தி அறிவிக்கப்படுவது ரூ.1,820-3,200 வரையாகும்.

இன்று அறிவிக்கப்பட்டுள்ள இந்த ஊதிய உயர்வு மாறுதல் காரணமாக இந்த அரசுக்கு மேலும் ஏழு கோடி ரூபாய் செலவாகும். ஏற்கனவே 400 கோடி ரூபாய். பிறகு இருபது கோடி. இன்று ஏழு கோடி ரூபாய். ஆக 427 கோடி ரூபாய் அதிகச் செலவை ஏற்றுக்கொண்டு, இந்த அறிவிப்புகளை இந்த அரசு செய்திருக்கின்றது.

## உழைப்போம் உயர்வோம்!



உடலால் உழைப்பது தாழ்வானது என்ற எண்ணம் நம் நாட்டில் இருந்து வருகிறது. கீழ்நிலையில் உள்ளவர்கள் தாம் உடலால் உழைக்க வேண்டும். மேல்நிலை மக்கள் அறிவால் சம்பாதிக்கலாம் என்ற கருத்து மூடத்தனமாகும்; நாட்டிற்குக் கேடு விளைவிப்பது. இந்தக் கருத்து மக்களிடம் இருக்கும்வரை நாடு முன்னேற முடியாது.

— பண்டித நேரு

மிக முக்கியமாக இங்கே மீனாட்சி சுந்தரம் வைத்த கோரிக்கை ஆசிரியர் மன்றத்திற்கு அங்கீகாரம் தேவை என்பதாகும். நான் உங்களுக்குச் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். அங்கீகாரம் தேவைதான். அதை உணர்ந்த நானும், கல்வி அமைச்சரும் நேற்றைய தினம் 4.8.89-இல் அரசு ஆணை எண்.991-இன் கீழ் தமிழ்நாடு தொடக்கப்பள்ளி ஆசிரியர் மன்றத்திற்கு அங்கீகாரம் வழங்கி ஆணை பிறப்பித்திருக்கிறோம் என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

1981-ஆம் ஆண்டு நடைபெற்ற போராட்டத்தில் பாதிக்கப்பட்ட 1,385 ஆசிரியர் மன்ற உறுப்பினர்களுக்குத் தற்போதுள்ள நிதி நெருக்கடியில் ஊதியம் கூட வழங்கத் தேவையில்லை. அந்நாட்களை ஈட்டிய. விடுப்பாகத் தந்துவிடுங்கள். அவ்விடுப்பை விடுப்பாக மட்டுமே பயன்படுத்தலாம். பணமாக மாற்ற அனுமதியில்லை என்றுகூட நிபந்தனை விதிக்கலாம் என்று கோரிக்கை இங்கே தரப்பட்டுள்ளது.

இந்த கோரிக்கை ஏற்றுக்கொள்ளப்பட்டு அந்தப் போராட்ட நாட்களை அவர்களுக்கு உரிய விடுப்பாக (Leave to which eligible) வழங்கப்படும் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

வடஆர்க்காடு மாவட்டம், செய்யாறு கல்வி மாவட்ட ஆசிரியர் மன்றத் தலைவர் பி.கே. விஜயராகவன் தலைமை ஆசிரியராகப் பணியாற்றி வந்தார். 85-ஆம் ஆண்டு நடைபெற்ற செய்யாறு தொகுதி இடைத் தேர்தலின்போது இவர்மீதும், மற்றும் ஐந்துபேர் மீதும் பொய் வழக்கு கடந்த கால ஆட்சியில் போடப்பட்டு - அவர்கள் இன்னமும் வழக்கு மன்றத்திற்கு அலை[illegible] கழிக்கப்பட்டு வருவதாகவும் அந்த வழ[illegible] வாபஸ் பெற வேண்டுமென்றும் [illegible] கோரிக்கை வைக்கப்பட்டுள்ளது.

அந்தக் கோரிக்கையினை ஏற்று அ[illegible] வழக்கு திரும்பப் பெறப்படும் என்ப[illegible] தெரிவித்துக் கொள்கிறேன்.

அரசு அலுவலர்களாக ஆக்கப்பட[illegible] நகராட்சி பள்ளிகளிலே பணிபுரியும் ஆசி[illegible]யர்களுக்கு ஏனைய துறை அலுவலர்களுக்[illegible] கிடைப்பது போல - மாத இறுதி நாளிலே ஊதியம் கிடைக்கத்தக்க வகையிலே இந்த மாநாட்டிலே உத்திரவாதம் அளித்திட வேண்டுமென்று ஒரு கோரிக்கை.

இந்தக் கோரிக்கையும் ஏற்கப்பட்டு [illegible] நகராட்சிப் பள்ளிகளிலே பணிபுரியும் ஆசிரியர்களுக்கும் மாத இறுதி நாளிலே ஊதியம் கிடைக்கத் தக்க வகையிலே ஏற்பாடுகள் செய்யப்படும்.

அதைப்போல ஊராட்சி ஒன்றிய[illegible] பள்ளிகளிலே பணிபுரியும் அனைத்[illegible] ஆசிரியர்களுக்கும் மாத இறுதி நாளிலே ஊதியம் கிடைத்திட உத்திரவாதம் அளித்[illegible] வேண்டுமென்பது மற்றொரு கோரிக்கை.

இந்தக் கோரிக்கையும் ஏற்கப்படுகின்ற[illegible] ஊராட்சி ஒன்றியப் பள்ளிகளிலே ப[illegible] புரியும் அனைத்து ஆசிரியர்களுக்கும் ம[illegible] இறுதி நாளிலே இனிமேல் ஊதியம் கி[illegible] கும் வகையிலே ஆணை பிறப்பிக்கப்படு[illegible]

*(5.8.89 அன்று சென்னை வள்ளுவர் கோட்டத்தில் நடைபெற்ற தொடக்க[illegible] ஆசிரியர் மன்ற [illegible] மாநாட்டில் கலந்து [illegible] மாண்புமிகு முதல்வர் [illegible] அவர்கள் ஆற்றிய உரை[illegible]*




# விவசாய சகோதரர்களே! உங்கள் வாழ்க்கையின் பளுவைத் தாங்குகின்றன உங்கள் காளைமாடுகள்

விவசாய குடிமக்களுக்கு காளை மாடுகள் எவ்வளவு முக்கியத்துவம் வாய்ந்தவை என்பது ஒவ்வொரு விவசாயிக்கும் நன்றாகத் தெரியும். விதை விதைப்பது, வயல் உழுவது, பாசனம் செய்ய நீர் இறைப்பது, போர் அடித்து நெல் குவிப்பது — அதாவது விவசாயிகளின் எல்லா முக்கிய வேலைகளையும் காளை மாடுகளே செய்கின்றன.

ஆனால் காளை மாடுகளுக்கு வியாதி வந்து விட்டாலோ, அவை விபத்தினால் பயனில்லாமல் போய்விட்டாலோ, அல்லது இறந்து விட்டாலோ விவசாயியின் வாழ்க்கையே பாழாய்ப் போய்விடும்.

இந்த மாதிரி கஷ்ட காலத்தில் விவசாயிகளுக்கு உதவி செய்கிறது நியூ இந்தியாவின் மாட்டு இன்சூரன்ஸ்.

மாட்டு இன்சூரன்ஸ் ப்ரீமியம்: மாட்டு விலையிலே ஒவ்வொரு 100 ரூபாய் மீது ஆண்டுக்கு கூடிப்போனா 3 ரூபாய்தான். மாட்டு இன்சூரன்ஸ் கிராம அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் வந்தால் ப்ரீமியம் இன்னும் குறைவாகவே இருக்கும் — அதாவது ஆண்டுக்கு ரூபாய் 2.25 மட்டுமே!

நியூ இந்தியாவின் 1000க்கும் அதிகமான அலுவலகங்கள் நாடு பூராவும் பரவியுள்ளன.

மேலும் விவரங்களுக்கு உங்கள் அருகாமையிலுள்ள அலுவலகத்தில் விசாரியுங்கள் அல்லது ஏஜெண்டை சந்தியுங்கள். உங்களுக்கு சேவை செய்யவே எட்டாத தூரத்தில் உள்ள கிராமங்களில் கூட நியூ இந்தியாவின் கிராம பிரதிநிதிகள் காத்திருக்கிறார்கள்.



மாட்டு இன்சூரன்ஸுக்கு
நியூ இந்தியா அஷ்யூரன்ஸ்
கஷ்ட காலத்தில் உங்களுக்கு ஆதரவு
RK SWAMY/NIA/4292 TM-A

# பாசன மேம்பாடு
# நீர்வள நிலை ஆணைக் குழுவின் பணிகள்

ஆர். திருமலை
ஆணைக் குழுவின் தலைவர்

இன்று ஆடிப்பெருக்கு. புதுப்புனல் பாய்ந்து ஆறு கிண்ணகம் எடுக்கும் நாளாக தமிழர் மரபு இதைக் கொண்டாடுகிறது. இன்று பாசன - நீர்வள நிலை ஆணைக் குழுவை நாடறிய துவக்கி, நம் முதல் அமைச்சர் அவர்கள் ஆற்றும் அரும் உரை பொருத்தமுடைத்து.

நம் முதல்வர் அவர்கள் இவ்வாணைக் குழுவுக்குச் சூட்டிய பெயர் இது. பெயரிடுவதில் அவர்கள் பெயர் போனவர்கள். நீர்வள - பாசன நிலையில் அவ்வப்பொழுது ஏற்படும் மாறுதல்களை, சிக்கல்களை உணர்ந்து, ஆய்ந்து, உடனடியாக தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டும் என்பது அவர்கள் அவா. நீர்நிலையோ, பாசன நிலையோ, ஒரு நிலையில் நிற்காதது. வாழ்க்கைவளம், மக்கள் தொகை, பொருளாதார அமைப்பு இவை எல்லாம் மாற மாற, பாசன - நீர்வள நிலையும் பாதிக்கப்படும். இம் மாறுதல்களுக்கு ஏற்ப தேவையான நீர்வளம் கூடுவதற்கில்லை. ஆய்வும், எண்ணித் துணிந்த கருமமும்தான் இந்தப் பற்றாக் குறையை ஈடுசெய்ய உதவும். கால வகையினால் நீங்கலா அலகிலா மாற்றங்களைக் கண்காணிக்க - நிலையான ஓர் ஆணைக் குழு இன்றியமையாதது. அவ்வப்பொழுது நிறுவிய அமைப்புக்கள் விட்டு விட்டுச் செயல்பட்டு, தற்காலிக மாற்றங்களைத்தான் அளிக்க இயலும். எனவே தான் முதல் அமைச்சர் அவர்கள் இதை 'நிலை ஆணைக் குழுவாக' நிறுவி, இந்த இருநோக்கங்களையும் நிறைவேற்றியுள்ளார்.

இந்த ஆணைக்குழு, முதல் அமைச்சர் அவர்கள் சட்ட மன்றப் பேரவையில் அறிவித்த பின்னர், சென்ற இரண்டு திங்கள்களில் அதன் ஆக்கப் பணிகளை ஏற்கனவே மேற்கொண்டு செயலாற்றி வருகிறது. எட்டாவது திட்டத்திற்கான அணுகுமுறை அறிக்கை, திட்டப்பணிகள், அவற்றில் எவை எவை விரைவுப்பணிகள், இவை எல்லாம் ஆராய்ந்து, அதன் அறிக்கைகளைத் திட்டக் குழுவுக்கு வழங்கி உதவியுள்ளது. இன்னும் 11 பெரும் பணிகளைக்குறித்துக் கலந்து பேசி, பாசன முறைகள், நீர்-நுகர்ச்சி, நீர்-உண்ணும் பயிர்கள் இவற்றைக் கட்டுப்படுத்தும் முறைகள், கால்வாய்கள், குளங்கள், பெரும்பாசனத் திட்டங்கள் இவற்றை மேம்படுத்த, சீரமைக்க ஆய்வு-விவரங்கள் ஆகியவற்றைச் சேகரித்துச் செயலாக்க முனைந்து உள்ளது. எனவே, முதலமைச்சர் இன்று. துவக்கி ஆற்றும் உரை குழுவுக்கு, உரிய காலத்தில், பெரிதும் உதவும். முதலமைச்சர் அவர்கள் இந்தத் துறைப்பணிகளில் துறை போகியவர்கள். அறிந்து, தெரிந்து, தெளிந்து நமக்கு முன்னோக்கிச் செல்லும் வழியை வகுப்பதில் ஆர்வமும், திறனும் படைத்தவர்கள். இது மிகையோ, புகழ்ச்சியோ இல்லை. நான் தெரிந்து சொல்லும் வாய்மை.

பொதுப்பணித்துறை அமைச்சர் திரு துரைமுருகன் அவர்களும் சென்ற ஒரு சில வாரங்களில் நான் அவர்களுடன் உரையாடிய போதெல்லாம், பாசனத் திட்டங்களுடைய இயல்பையும், விவரங்களையும் அறிய ஆர்வம் காட்டினார்கள். எனவே அரசின் பணியில் இவ்வாணைக் குழு தன் முழு உழைப்பையும், திறனையும் பிணைத்துப் பயனுள்ள ஆக்க வேலைகளில் ஈடுபட வாய்ப்பு அமைந்துள்ளது.

மனித சமுதாயத்தின், விவசாய மேம்பாடு, பொருளாதார முன்னேற்றம் நிறைவுபெறும் வரையில் இந்த ஆணைக்குழுவின் பணியும் முழுமை பெறாது. ஆனால் இவ்வேலையை, பணிப்பணியாக, நிலைநிலையாகத் தான் செய்ய இயலும். இவ்வாணைக்குழுவின் செயற்கோட்பாட்டை மூன்று நிலைகளாக நான் வகுத்துள்ளேன்.

ஒவ்வொரு பாசனத் திட்டத்திலும், புரவுகளிலும், நடைமுறையில் மலிந்து காணும் குறைபாடுகள், நம் இலக்குப் பயனை அடையாவகையில் குறுக்கிடும் இடையூறுகள் - இவற்றை ஆராய்ந்து, உடனடியாக மாற்றுப் பணிகளை மேற்கொண்டு, திட்டப் பயனைப் பெருக்குதல். இந்த அணுகுமுறையில், கீழ்பவானி, தாமிரவருணி, கோதையாறு மற்றும் உள்ள 30 திட்டங்களையும், தேவைக்கேற்ற வரிசையில் மேற்கொண்டு குறுகிய காலவரையறையில் இந்த மேம்பாடுகளை நிறைவுபெறச் செய்வது.



நம்நாடு சீர்பட வேண்டுமானால், நாம் உலக மன்றத்தினரால் கேலி பேசப்படாதிருக்க வேண்டுமானால், விடுதலையின் மூலம் நாம் உருவான பலனைக் காணவேண்டுமானால், நம் நாட்களிலே சாதிப் பிரச்னைக்கு ஒரு முடிவு கண்டாக வேண்டும்.

இடைக்காலத் திட்டங்கள் - பழம் பாசன முறைகளைச் சீரமைப்பது. நீர்ப்பயனை, பாசன விளைவை உந்திப் பெருக்குவது. புரவுக் காரர்களையும், காணிக்கையாளர்களையும் ஈடுபடுத்தி, அவர்களுடைய முழுக் கவனத்தையும், உழைப்பையும், சென்னீர் வெட்டி குலை(கரை)வெட்டு, குலைக்காவல், அமஞ்சி, குளவெட்டு, நீர்வழங்கி பங்கீடு செய்தல் இவற்றில் ஈர்த்து அவர்களே இப் பணிகளை தங்களதாக ஆக்கிக்கொள்ளுவது. நீர்பாசன சட்டம், நிலைநீர் அழிவு, கழிவு, உவர்நீர் புகுதல், இவற்றைத் தடுப்பதற்கான வழிகள், நீர் நுகர்தல் முதலியவற்றை ஆராய்ந்து சட்ட வரைவுகள் தயாரித்தல், மானாவாரி குளங்கள், கால்புரவுகள், குளங்கள் செப்பனிடுதல் ஆகியவற்றையும் திண்மையாக ஆராய்ந்து செயல் திட்டங்கள் வகுக்கப்படும்.


கரிகால் வளவன்

"காடு கொன்று நாடாக்கி குளம் தொட்டு
வளம் பெருக்கினான்"

ஆனால் இன்று நாம்

"காடு கண்டு நாடாக்கி குளம் குழித்து
வளம் பெருக்க வேண்டும்"

நடைநிலையில், ஒவ்வொரு ஆற்றுப் போக்கு, புரவுகள், முழுமையும் கருத்தில் கொண்டு, போக்குநீர், வரத்து நீர், நிலநீர், வடிகால் நீர், கழிவு இவற்றில் உள்ள எல்லா அளவைகளையும் கணக்கிட்டு, பயனைப் பெருக்கி, பாசன வசதியைக் கூட்டி, ஒரு சொட்டு நீருக்கு எத்துணை அளவு எந்தப் பயிர் செய்தால் விளைச்சலும், நாட்டுக்கும் விவசாயிக்கும் கூடுதலான வருவாயும்



பெறலாம் என்பதைக் கூர்ந்து ஆராய்ந்து முழுமையான செயல்முறைகளை ஆணைக் குழு வகுக்கும்; நீரைச் சிக்கனப்படுத்தவும், நிலநீர், தரைநீர், வான் நீர் இவற்றை ஒருங்கிணைத்துப் பயன் அடையும் முறைகளை வகுக்கவும் முனையும். இந்தப் பணியில் வேளாண்மைத்துறை, பாசனத் துறை, ஏனைய துறைகளும் ஒருங்கே இணைந்து செயல்படவேண்டும். எனவே என் நண்பர் வேளாண்மை மேதை திரு எம்.எஸ். சுவாமிநாதன் அவர்கள் இந்த விழாவுக்குச் சிறப்புரை ஆற்றியது சாலவும் பொருத்தமானது. அவர்களுடைய தொடர்ந்த ஆலோசனைகளும், ஒத்துழைப்பும் நமக்குக் கிட்டும்; அது ஒரு பெரும்பேறு.

எல்லாவற்றையும் விட, தமிழ்நாட்டின் உயிர்நாடி காவேரி. காவிரிநாடு கழனிநாடு. ஆனால் அது இப்பொழுது நிலை-மாற்றம் கண்டு, பெரும் பிரச்னை ஆகியுள்ளது. இதனைத் தீர்க்கவும், அன்டை மாநிலத்தில் தேவை மிகுதியான நீரைப் பெற்று நாட்டின் பயனைக் கூட்ட வேண்டிய முறைகளையும் ஆராயும்.

வெகுநாட்களாகப் புறக்கணிக்கப்பட்ட ஒரு பெரும் தேவையை முதலிலிருந்தே இக்குழு ஆராயத் தொடங்கிவிட்டது. அதாவது மாநகர, நகரப்புறத்திற்குத் தேவையான குடிநீர், கழிவுநீர்த் திட்டங்கள். இப்புறக் கணிப்பை நாம் விரைந்து ஈடுசெய்தல் வேண்டும்.

பாசன மேம்பாடு, சீரமைப்பு, குடிநீர் - கழிவுநீர் திட்டங்கள் இவை எல்லாவற்றிற்கும் நன்கு ஆராய்ந்து, செயல்படுத்தக்கூடிய முழுத் திட்டங்களாக வரைவுகள் தயாரித்து, வங்கி நிதி உதவிபெறக்கூடிய வகையில் (Bankable Projects) விரைந்து, ஒரு திட்டத் தொகை (Shelf of Projects) அல்லது தொகுப்பு ஒரு குறிப்பிட்ட காலவரையில் அவ்வப்பொழுது தயாராக ஆக, அரசுக்கு இவ்வாணைக்குழு வழங்கும் என்று உறுதி கூறுகிறேன்.

நம்முடைய முதல்வர்க்கு இரண்டு குறிக்கோள்கள் எப்பொழுதுமே உண்டு - ஒன்று, ஆய்வில் விரைவு, மற்றொன்று துணிந்தபின் செய்கையில் திறன்.

இந்த இடத்தில் "தன்மை ஒருமைப் பெயரை" நான் புகுத்தினால் என்னை மன்னிக்க வேண்டும். அரசுப் பணியை விட்டுவிலகி நான் வெகுதூரம் சென்றவன். இன்னும் பலகாத தூரம் செல்லவும் துணிந்தவன். ஏனெனில் என் ஆராய்ச்சி உழைப்பு "கொள்ள மாளா கோதிலா இன்ப வெள்ளம் பயக்கும்; "மயர்வற மதி நலம்" அளிக்கும்". எனக்கு முன்னோடியாக இருந்த மேதைகள், எல்.டி. சுவாமிக்கண்ணு, ராபர்ட்-சீபல், போன்றவர்கள். சுவாமிக்கண்ணுவை ஊராட்சி மேற்பார்வையாளராகவோ, வருவாய் வாரியச் செயலாளராகவோ இப்பொழுது நினைப்பாரில்லை. அவர்களது 7 தொகுதிகள் கொண்ட (Indian Ephemeris) தான் அவரது புலமைக்கு நிலை புகழ்ச்சான்று. அவர்கள் வழி வந்தவனாக இருப்பதே என் ஆசை.

இருப்பினும் இப்பணியை மேற்கொள்ள நம் முதல்வர் அவர்களது அழைப்பினை என்னால் மறுக்க இயலாது. அவர்களது திறனுக்கும், திறனைப் போற்றும் திறனுக்கும் நான் செலுத்த வேண்டிய சீர். எனவே தான், நான் இந்த முறைமையை "காசு கொள்ளா பொதுப்பணியாக" மேற்கொள்ள இசைந்தேன்.

இரண்டாவதாக, என் இறுதியாண்டுப் பணியில் நாட்டில் முடங்கித் துவண்ட பொருளாதாரநிலையை, தொழில் உற்பத்தியை இயக்கி முடுக்கிவிட வாய்ப்பு ஏற்பட்டது. அதேபோல, பாசன முறைகளிலும், நீர்நிலைகளிலும் நம்மாநிலத்தில் "பண்டு பூத்த அண்டம் பழையது என புதுக்குவானும் போன்று உள" வாய்ப்பு என்னைக் கவர்ந்தது. இந்த பணி வலுவான இதயத்தையும் தளரச் செய்யும். ஆனால் முடியாத பணியை மேற்கொள்வதுதான் மனிதனின் செயற்திறனுக்கு ஒரு சவால்; அதன் வெற்றி தான் நாம் பெறும் பறை; பரிசு.

சங்கத்தமிழ் மாலை முழுவதும் தப்பாமே இங்கு இப்பரிசு உரைத்தவர் நம் முதல் அமைச்சர் அவர்கள். செயல் அகங்களில் - இங்கும், அங்கும், எங்கும் - அகச் செயல் மேலிட்டு, புறச் செயல் சோர்ந்து காணப்படுவதாக புகார் காதுக்கு எட்டுகிறது. செயல்முறைகளில் தடைப்பட்டுக் கிடக்கக் கூடிய நிலைகளும் ஏற்பட்டுள்ளன. இறுதிப் பயனில் 'மயக்கம்' சோர்வு ஏற்பட வாய்ப்பு இருப்பதான குறை: "இந்நின்ற நீர்மை இனியாம் உறாமை உயிரளிப்பான்" பொருட்டு அந்நாள் முதல்வர் பேரறிஞர் அண்ணா அவர்களும், நம் முதலமைச்சர் அவர்களும் இதற்கு மாற்று அளித்துள்ளார்கள். கடமையைப்பேணி, கண்ணியத்தைப் போற்றி, கட்டுப்பாட்டைக் கடைப்பிடித்தால், இந்த மயர்வும், சோர்வும் மறையும். இது மூப்பின் அங்கலாய்ப்பு இல்லை; முதிர்ச்சியின் கண்டு முதல்; கடைக்கூட்டு.

இந்த ஆணைக்குழுவில் தேர்ச்சியும், பயிற்சியும், தொழில் நுட்பமும் பொருந்திப் பெற்ற பொறியியல் வல்லுனர்கள் உள்ளனர். ஆணைக்குழு அடிப்படையான நிலையான திட்டங்களை வகுக்கும். இதற்கு அனைவரின் ஒத்துழைப்பும் தேவை.

*(சென்னையில் 2.8.1989 அன்று நடைபெற்ற தமிழ்நாடு மாநில பாசன மேம்பாடு நீர்வள நிலை ஆணைக்குழுவின் தொடக்க விழாவில் ஆற்றிய உரையிலிருந்து)*

# தருமபுரி அன்னை சத்யா போக்குவரத்துக் கழகம் -ஒரு கண்ணோட்டம்



தருமபுரி நகரில் அன்னை சத்யா போக்குவரத்துக் கழகம், அண்ணா போக்குவரத்துக் கழகத்தில் இருந்து பிரிந்து, 1-4-87 முதல் செயல்பட்டு வருகிறது.

இக்கழகம் ஆரம்பித்த பொழுது 351 பேருந்துகளுடன், 8 கிளைகளுடன், செயல்பட்டது. தற்பொழுது மாவட்ட முழுமைக்கும் 445 பேருந்துகளையும், 11 கிளைகளையும் கொண்டு சிறப்புடன் செயல்பட்டு வருகிறது. இது 193 நகரப் பேருந்துகளையும், 213 புறநகர்ப் பேருந்துகளையும், 40 மாற்றுப் பேருந்துகளையும் கொண்டுள்ளது. இக்கழகத்தில் பேருந்து கூடு கட்டும் பணிமனை இரண்டும், உதிரிப் பாகங்கள் புதுப்பிக்கும் பிரிவு ஒன்றும், உருளிப்பட்டை புதுப்பிக்கும் பிரிவு ஒன்றும் செயல்பட்டு வருகின்றன. புதிய வழித்தடத்தில் விடப்பட்ட பேருந்துகள் 85, புதிதாகக் கூடு கட்டி விடப்பட்ட பேருந்துகள் 225.

இக்கழகம ஆரம்பித்த பின் புதியதாக 122 கிராமங்கள் பேருந்து வசதி பெற்றுள்ளன. இதனால் 1,00,000 கிராம மக்கள் பயன் அடைந்துள்ளனர்.

இக்கழகத்தின் மூலம் ஓட்டுநர் பயிற்சிப் பள்ளி ஒன்று துவக்கப்பட்டு ஆண்டு ஒன்றுக்கு 32 ஓட்டுநர்கள் உருவாக்கப்படுகிறார்கள். மேலும், இப்பயிற்சிப் பள்ளியில் ஓட்டுநர்களுக்குப் புத்தாக்கப் பயிற்சி அளிக்கப்படுவதால், எரி பொருள் சேமிக்கப்படுகிறது.. இந்தக் கழகம் ஆரம்பித்த காலத்தில் மொத்தம் 2,453 தொழிலாளர் பணிபுரிந்தனர். தற்பொழுது 3,170 தொழிலாளர்கள் பணிபுரிந்து வருகிறார்கள்.

தருமபுரி நகரில் அமைந்துள்ள வள்ளலார் அறிவாலயத் திடலில் 29-7-89 அன்று மாவட்ட ஆட்சித் தலைவர் இரா. இரத்தினசாமி அவர்கள் தலைமையில் நடைபெற்ற விழாவில், ரூ. 52.8 இலட்சம் மதிப்பில் கட்டப்பட உள்ள அன்னை சத்யா போக்குவரத்துக் கழகத்தின் தலைமை அலுவலகத்திற்கான கட்டடத்தின் அடிக்கல்லையும், ரூ. 63.4 இலட்சம் மதிப்பில் கட்டப்பட உள்ள மத்திய பணிமனை வளாகக் கட்டடத்திற்கான அடிக்கல்லையும் மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் திரு. மு. கண்ணப்பன் அவர்கள் நாட்டினார். ஆரூர் பணிமனையில் ரூ. 2 இலட்சம் மதிப் பீட்டில் கட்டப்பட்ட உணவகத்திற்கான புதிய கட்டடத்தையும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் திறந்து வைத்தார்.

ஆறு புது வழித்தடங்களில் பேருந்துகளை யும், 3151 தொழிலாளர்கள் பயன் அடை யும் வகையில் தொழிலாளர்கள் கூட்டுற வீட்டு வசதிச் சங்கம் மற்றும் தொழிலாளர் சிக்கன மற்றும் நாணயச் சங்கங்களையும் மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் திறந்து வைத்தார். பணியின்போது இறந் நான்கு தொழிலாளர்களின் துணைவி யருக்குக் குடும்ப நல நிதியிலிருந்து ரூ. 2( ஆயிரம் வீதம், இறந்த தொழிலாளர்களின் வாரிசுதாரர்கள் 3 பேர்களுக்கு அன்னை சத்யா போக்குவரத்துக் கழகத்தில் வேலை வாய்ப்பிற்கான உத்தரவுகளும் மாண்புமி போக்குவரத்துத் துறை அமைச்சரால் வழ கப்பட்டன.

இக்கழகத்தின் மூலம் வெளி வரும் முத இதழை மாண்புமிகு அமைச்சர் அவர்க வெளியிட மாவட்ட ஆட்சித் தலைவர் திரு இரா.இரத்தினசாமி, இ.ஆ.ப., பெற்று கொண்டார். பள்ளி இறுதித் தேர்வி சென்ற கல்வி ஆண்டில் (88-89) 7 சதவீதம் மற்றும் அதற்கு மேலும் மதி பெண்கள் பெற்ற, பணியாளர்களின் குழ தைகளுக்குப் பரிசுகள் வழங்கி இக்கழக தில் ரூ. 3 இலட்சம் மதிப்பில் அமைக்க பட்டுள்ள புதிய கம்ப்யூட்டரையும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தொடங் வைத்தார்.

3151 தொழிலாளர்கள் பலன் அடையு வகையில், சமூக நலப் பாதுகாப்புத் திட்ட தையும் மாண்புமிகு போக்குவரத்துத்து அமைச்சர் தொடங்கி வைத்தார்.

-ஆ. கோபாலன்
உதவி மக்கள் தொடர்பு அலுவல
தருமபுரி மாவட்ட

## நிலவுப் பயணத்தின் 20-ஆம் ஆண்டு விழா



நிலவில் மனிதன் காலடி எடுதது. வைத்ததன் 20-வது ஆண்டு நிறைவுவிழா 1989-ஆம் ஆண்டு ஜூலை மாதம் 20-ந் தேதியன்று அமெரிக்காவிலும், உலகின் இதரப் பகுதிகளிலும் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது.

1969 ஜூலை 20-ந் தேதி, 'அப்போலோ-11' விண்கலத்தில் சென்ற அமெரிக்க வீரர்கள் நீல் ஆம்ஸ்ட்ராங், எட்வின் ஆல்ட்ரின் ஆகிய இருவரும் நிலவில் இறங்கினர். அமெரிக்கத் தேசியக் கொடியை அங்கே நாட்டினர். நிலவில் மனிதன் இறங்கியதை எதிர்காலத்துக்கு அறிவிக்கும் வகையில் பட்டயம் ஒன்றையும் அவர்கள் அங்கே நிறுவினர். ''மனித குலத்தின் அமைதிக்காக நாங்கள் இங்கே வந்தோம்'' என்னும் வாசகம் அதிலே பொறிக்கப் பட்டிருந்தது.

# மிகப் பிற்படுத்தப்பட்ட, சீர்மரபினர் இன மாணவ மாணவியருக்குப் பட்டப்படிப்பு வரை இலவசக் கல்வி

## வருமான வரம்பு அறவே ரத்து

இதுவரை பெற்றோர்களின் ஆண்டு வருமானம் ரூ.1500க்கும் மிகாமல் உள்ள மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர் மரபினர் மாணவர்களுக்குக் கல்லூரிப் பட்டப் படிப்புகளுக்கு முழுக் கட்டணச் சலுகை வழங்கப்பட்டது. மேற்படி மாணவர்களின் சமூக, கல்வி மற்றும் பொருளாதார நிலைமையை நன்கு ஆய்ந்து அவர்களுக்குப் படிப்பில் ஆர்வம் ஊட்டுவதற்கு முதல்முறையாக வருமான வரம்பினை அறவே நீக்கி, இவ்வினங்களைச் சார்ந்த எல்லா மாணவர்களும் முழுக் கட்டணச் சலுகை பெறுவதற்கு அரசு தற்போது உத்தரவு பிறப்பித்து உள்ளது.

இதனால் பயன் அடையப்போகும் மாணவர்களின் எண்ணிக்கை சுமார் 50,000. இதில் மிகவும் பிற்படுத்தப்பட்டோர் எண்ணிக்கை சுமார் 40,000. சீர் மரபினர் எண்ணிக்கை சுமார் 10,000. இதனால் அரசுக்கு ஆண்டு ஒன்றுக்கு ஆகும் செலவு ரூ.160 இலட்சம். இதில் மிகவும் பிற்படுத்தப்பட்டோர் வகுப்பினருக்கு ரூ.128 இலட்சமும், சீர்மரபினருக்கு ரூ.32 இலட்சமும் செலவிட ஒதுக்கப்பட்டுள்ளது.

இதுவரை பெற்றோர்களின் ஆண்டு வருமானம் ரூ. 5,000க்கு மிகாமல் உள்ள மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர் மரபினர் மாணவர்களுக்குத் தனிக் கட்டணம் மற்றும் தேர்வுக் கட்டணம் ஆகியவை உதவித் தொகையுடன் வழங்கப்பட்டு வந்தது. மேற்படி வருமான வரம்பு கடந்த மே மாதம் முதல் ரூ. 12,000க்கு உயர்த்தப்பட்டது. மேற்படி வருமான வரம்பு முதன்முறையாகத் தற்போது அறவே நீக்கப்பட்டு மிகவும் பிற்படுத்தப்பட்டோர், சீர் மரபினர் மாணவர்கள் அனைவரும் பயன்பெறும் வகையில் தமிழக அரசு தற்போது உத்தரவு பிறப்பித்து உள்ளது.

இதுவரை ஆய்வுக் கட்டணம், நூலகக் கட்டணம் போன்ற கட்டாயக் கட்டணங்களை மேற்படி மாணவர்களே செலுத்தி வந்தனர். தற்போது மேற்படி கட்டணங்களை வருமான வரம்பின்றி மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் மாணவர்களுக்கு வழங்க முதன் முறையாகத் தமிழக அரசு ஆணை பிறப்பித்துள்ளது. இதனால் பயன் அடையும் மிகவும் பிற்படுத்தப்பட்ட மாணவர்களின் எண்ணிக்கை 40,000; சீர் மரபினர் மாணவர்களின் எண்ணிக்கை 10,000.

ஆக மொத்தத்தில் தனிக் கட்டணம், தேர்வுக் கட்டணம் மற்றும் கட்டாயக் கட்டணச் சலுகைகள் வழங்குவதற்கு ஆண்டு ஒன்றுக்கு ஆகும் செலவு ரூ. 137.11 இலட்சம். அதில் மிகவும் பிற்படுத்தப்பட்டோருக்கு ஆகும் செலவு ரூ.107.40 இலட்சம். சீர்மரபினருக்கு ஆகும் செலவு ரூ.29.71 இலட்சம்.

பெற்றோர்களின் ஆண்டு வருமானம் ரூ. 5,000க்கு மிகாமல் பிளஸ் 1 மற்றும் பிளஸ் 2 பயிலும் மாணவர்களுக்கு மட்டும் தனிக் கட்டணம் மற்றும் தேர்வுக் கட்டணம் இதுவரை வழங்கப்பட்டு வந்தது. கடந்த மே மாதம் வருமான வரம்பு ரூ. 12,000 ஆக உயர்த்தப்பட்டது. தற்போது வருமான வரம்பு அறவே நீக்கப்பட்டு மிகவும் பிற்படுத்தப்பட்ட மற்றும் சீர் மரபினர் மாணவர்கள் அனைவருக்கும் தனிக் கட்டணம் மற்றும் தேர்வுக் கட்டணம் வழங்குவதற்கு ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது. இதனால் பயன்பெறும் மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பு மாணவர்கள் எண்ணிக்கை சுமார் 69,000; சீர் மரபினர் மாணவர்கள் எண்ணிக்கை 3,400.

அரசுக்கு இதனால் ஆகும் செலவு ஆண்டு ஒன்றுக்கு ரூ. 65.49 இலட்சம். ஆக மொத்தம் மேற்படி இலவசக் கல்வித் திட்டத்திற்குத் தமிழக அரசால் 1989-90-ஆம் ஆண்டுக்குக் கூடுதலாக ஒதுக்கப்பட்ட தொகை ரூ. 362.60 இலட்சம்.

# இது சரியா?



எல்லா இடங்களிலும் தமிழ் ஏற்றம் பெறுகிறது என்பது நமக்கு ஒளிமயமான எதிர்காலம் உண்டு என்பதையே காட்டுகிறது. வணிகப் பெருமக்களை நான் ஒன்று கேட்டுக் கொள்கிறேன் - உங்கள் வணிக நிலையங்களில் ஆங்கிலத்தில் பெயர்ப்பலகை இருக்கலாம்; அதை எடுத்துவிடுங்கள் என்று நான் சொல்லவில்லை; ஆங்கிலத்திற்குப் பக்கத்திலோ, மேலேயோ தமிழிலும் பெயரை எழுதி வையுங்கள்.

உலகையே தன் வீடாக முதன் முதல் நினைத்தவன் தமிழன் தான். அப்படிப்பட்ட தமிழனின் தமிழ் மொழிப்பற்றைக் குறுகிய மனப்பான்மை என்று யாரும் கணக்கிட்டு விடமுடியாது. தமிழ் மொழி மீது பற்றுக் கொண்டிருப்பது தேசீயத்துக்கு ஊறு ஏற்படுத்தும், ஒருமைப்பாட்டைக் கெடுக்கும் என்று சிலர் நினைப்பது பொருளற்றது.

மற்ற நாடுகளிலே அறிவாளர்கள் ஒன்று சொன்னால், அதை ஏற்றுக் கொள்ள ஒருவரோடொருவர் போட்டிபோடுவார்கள். ஆனால் இங்கோ, ஒருவரை அறிவாளி என்று சொன்னால், ''என்ன அறிவு, பெரிய அறிவு?'' என்று தன் அறிவைக் காட்டுபவர்கள் இருக்கிறார்கள் இது சரியா?

"குடல் புழுக்களை ஒழிக்க எல்லா வழிகளையும் பார்த்துட்டேன். கடைசீயிலே எங்க கால்நடை மருத்துவர் கொடுத்த பான்மின்த்* தான் பலிச்சுது...பால் நஷ்டம் தராமலே!"




தன்னிகரற்ற

**பான்மின்த்***

குடற் புழுக்களை அழிக்கிறது, பாலைக் காப்பாற்றுகிறது.

"பாழும் குடல் புழுக்களால் — அம்மம்ம, நான் பட்ட பாடு : பலவீனம், பசியிராது, கறந்த பாலும் குறைவு. பிறகு, எங்க கால்நடை மருத்துவர் தந்த பான்மின்த் தான் பலிச்சது —அதுவும் ஒரே ஒரு டோஸ்லே!"

**பால் இழப்பே இல்லை.**

"அருமையான சேதி — எங்க மாதிரி எல்லாக் கறவைகளுக்கும் சினைப் பிராணிகளுக்கும் கூட பத்திரமான மருந்து பான்மின்த். மற்ற மருந்துகளைப் போல் இல்லாமல், பான்மின்த் உபயோகித்த பிராணிகளின் பால் மனிதருக்குக் கெடுதலே இல்லை — நூற்றுக்கு 100 பத்திரமானது."

**சினைக் காலத்தில் எந்த சமயத்திலும் தீங்கற்றது.**

"என் தங்கச்சி — பிள்ளைத் தாய்ச்சி — அவளுக்கு ஒத்துக்குமான்னு கவலைப்பட்டேன். ஆனால் பான்மின்த் சினைக்காலம் முழுக்க எந்த கெடுதலும் செய்யலை; ஏன் பலவீனக் காலங்களிலே கூட பாதிக்கலை. பக்க விளைவுகளே கிடையாது. குணமானதும் ஆ! ஆறுதலான சுகம்!"

**வசதி மிக்கதும் கூட.**

சாப்பிட வெகு இலகு பான்மின்த். கண்டி விழுங்க ஒரு போலஸ் (பெரிய மாத்திரை) — எங்கமாதிரி பெரிய பசு எருமைகளுக்கு இரண்டு. உடம்பு சுகமாயிடுது! ஆடு, கன்று மாதிரி சின்னப் பிராணிகளுக்கு சின்ன மாத்திரையா வருது. சாப்பிடத் தயாரான கரைசலாகவும் கிடைக்குது. வேறென்ன வேணும் நம்மவர்களுக்கு!"

பால் இழப்பே இராது
பான்மின்த்

**கால்நடை மருத்துவரிடம் பெறுவீர் : சிறந்த மருந்து**

**பான்மின்த்***

குடற் புழுக்களைக் கொல்லும், ஆரோக்கியத்தை வெல்லும்!

pfizer

பம்பாய் 400


# தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையம் பணிவேட்பாளர்களுக்கான விதிமுறைகள்

(குறிப்பு.-இந்த விதிமுறைகளில் காணப்படும் ஆண்பாற் சொற்கள், சூழ்நிலையில் அவ்வாறு தேவைப்பட்டால்பெண்பாலரையும் குறிப்பதாகக் கொள்ளப்படுதல் வேண்டும்.)

இந்திய அரசின் அல்லது இந்தியாவிலுள்ள ஒரு மாநில அரசின் பணியிலுள்ளவர்கள் அல்லது உள்ளாட்சி மன்றங்கள் அல்லது பல்கலைக் கழகங்கள் அல்லது இந்திய அரசின் அல்லது இந்தியாவிலுள்ள ஒரு மாநில அரசின் அதிகாரத்தின் கீழ் அமைக்கப் பட்டிருக்கும் ஓரளவு அரசுச் சார்புள்ள நிறுவனங்களில் வேலையில் முறையான பணியிலாவது அல்லது தற்காலிகப் பணியிலாவது உள்ளவர்கள் அவர்களது விண்ணப்பங்களை அவர்கள் வகித்து வரும் பதவிகளுக்கு நியமனங்கள் செய்வதற்குத் தகுதி பெற்ற அதிகாரியின் மூலம் அனுப்பத் தேவையில்லை. ஆனால் விண்ணப்பதாரர்கள் அவர்களை நியமனம் செய்வதற்குத் தகுதி பெற்றவர்களுக்கு தங்களது விண்ணப்பம் குறித்து எழுத்து மூலம் அறிவித்து தங்களது விண்ணப்பத்திலும் ஓர் உறுதிமொழி இது குறித்து அளிக்க வேண்டும். மேலும் விண்ணப்பத்தை ஏற்கத் தடையில்லை என்ற சான்றிதழையும் தகுதி பெற்ற அதிகாரியிடமிருந்து பெற்று எழுத்துத் தேர்விற்கு (Main examination) அனுமதிக்கப்படும்போது அனுப்ப வேண்டும்.

2. ஒவ்வொரு விண்ணப்பமும், விண்ணப்பதாரரின் சொந்தக் கையெழுத்தில் மையினால் எழுதப்பட்டிருத்தல் வேண்டும்.

**3. விண்ணப்பதாரர்-**

(அ) (1) இந்தியக் குடிமகனாக இருத்தல் வேண்டும்; அல்லது

(2) நேபாளம் அல்லது பூடான் அரசின் பிரஜையாக இருத்தல் வேண்டும்; அல்லது

(3) இந்தியாவில் நிரந்தரமாகக் குடியமரும் எண்ணத்துடன் 1962 ஜனவரி, 1-ஆம் தேதிக்கு முன்பு திபெத்திலிருந்து இந்தியாவிற்கு வந்துவிட்ட அகதியாக இருத்தல் வேண்டும்; அல்லது

(4) இந்தியாவைப் பூர்வீகமாகக் கொண்டு பாகிஸ்தான், பர்மா, ஸ்ரீலங்கா, வியட்நாம் மற்றும் கென்யா, உகாண்டா, தான்சானியாக் குடியரசு (முன்னாள் தங்கனிகா மற்றும் சான்சிபார்), ஜாம்பியா, மாலவி, சயர் ஈதோபியாவைக் கொண்ட கிழக்கு ஆப்பிரிக்கா நாடுகள் ஏதாவதொன்றிலிருந்தும் இந்தியாவில் நிரந்தரமாகக் குடியமரும் நோக்குடன் இடம் பெயர்ந்து வந்தவராக இருத்தல் வேண்டும்.

மேற்கூறிய மூன்றாம் அல்லது நான்காம் வகைகளைச் சேர்ந்த பணிவேட்பாளர் அல்லது நேபாளத்தின் அல்லது பூட்டான் அரசின் பிரஜை ஒருவர் தமிழ்நாடு அரசால் கொடுக்கப்படும் தகுதிச் சான்றிதழைப் பெறவேண்டும்.

தகுதிச் சான்றிதழ் பெறவேண்டிய பணிவேட்பாளர் ஒரு தேர்வுக்கு அல்லது நேர்முகத் தேர்வுக்கு (Interview) அனுமதிக்கப்படுவார். மற்றும் தேவையான சான்றிதழ் தமிழ்நாடு அரசாங்கத்தால் அவருக்குக் கொடுக்கப்படுவதற்கு உட்பட்டு அவர் தற்காலிகமாக நியமிக்கப்படுவார்.

(ஆ) நியமிக்கப்படுவதற்கு அவருடைய ஒழுக்கமும், முன் வரலாறும் (Antecedents) அவரைத் தகுதிப்படுத்துவனவாக இருத்தல் வேண்டும்; மற்றும்

(இ) ஒன்றுக்கு மேற்பட்ட மனைவியர் உடையவராக இருத்தல் கூடாது. விண்ணப்பதாரர் பெண்பாலராக இருந்தால் உயிரோடு வேறு ஒரு மனைவி உடையவர் எவரையும் திருமணம் செய்திருக்கக்கூடாது.

(ஈ) நேர்முகத் தேர்வுக்குத் தேர்வாணையத்தின் அறிவிக்கை விளம்பரம் செய்யப்படும் நாளன்று அவர் இந்திய நாட்டின் மத்திய அரசுப் பணியிலோ அல்லது மாநில அரசுப் பணியிலோ இருக்கக்கூடாது.

குறிப்பு.-இப்பகுதியின் காரியத்திற்காக, கீழ்க்கண்டவர்கள் அவர் மத்திய அல்லது மாநில அரசுப் பணியில் இருப்பவராய்க் கருதப்பட மாட்டார்:-

(i) மத்திய அரசுப் பணியில் அல்லது மாநில அரசுப் பணியில் முதலில் சேர்ந்த தேதியிலிருந்து ஐந்து ஆண்டுகள் முடிந்திருக்கக் கூடாது;

அல்லது

(ii) அவர் ஆதிதிராவிடர் வகுப்பை அல்லது பழங்குடியினர் வகுப்பை அல்லது பிற்பட்ட வகுப்பைச் சேர்ந்திருக்க வேண்டும்.

(உ) விண்ணப்பதாரர் திடமான உடல் நலமும், சுறுசுறுப்பு உடையவராகவும் அவரைப் பணிக்குத் தகுதியில்லாதவராகச் செய்யும் உடற்குறைபாடு அல்லது வலுக்குறைவு ஏதும் இல்லாதவர் என்றும் அவரைப் பணியில் நியமனம் செய்யும் அதிகாரி ஐயமறத் தெளிய வேண்டும்.

4. ஆதிதிராவிடர் (Scheduled Caste) அல்லது பழங்குடியினர் (Scheduled Tribes) அல்லது பிற்பட்ட

வகுப்பை (Backward Classes சேர்ந்த ஒரு விண்ணப்பதாரர் அல்லது எல்லா சாதியையும் சேர்ந்த ஆதரவற்ற விதவைகள் குறைந்த அளவு பொதுக்கல்வித் தகுதியைக் காட்டிலும் மேற்பட்ட பொதுக் கல்வித் தகுதியைப் பெற்றவராயிருந்து, நியமிக்கப்படுவதற்கு மற்றபடி தகுதியுடைவராக இருந்தால் நியமிக்கப்படுவதற்காக வயது வரம்பு ஏதேனும் நிர்ணயிக்கப்பட்டிருந்தால் அந்த வயது வரம்பு அவருக்குப் பொருந்தாது.

குறிப்பு.- பல்கலைக் கழகத்தில் இண்டர்மிடியட் தேர்வில் (Inter-mediate) அல்லது புதுமுகத் தேர்வில் (Pre-university [Examination) அல்லது மேல்நிலைப் பள்ளித் தேர்வில் இரண்டு பகுதிகளில் அல்லது ஒரு பகுதியில் மட்டும் தேறியுள்ள விண்ணப்பதாரர், குறைந்த அளவு பொதுக் கல்வித் தகுதியைக் காட்டிலும் மேற்பட்ட கல்வித் தகுதி பெற்றிருப்பதாகக் கருதப்படமாட்டார்.

4. அ.-ஒரு பதவிக்கு நேரடி நியமனத்திற்காக நிர்ணயிக்கப்பட்ட கல்வித் தகுதி குறைந்த அளவு பொதுக் கல்வித் தகுதியைக் காட்டிலும் மேற்பட்டதாக இல்லாதிருந்தால், குறைந்த அளவு பொதுக் கல்வித் தகுதியைக்காட்டிலும் மேற்பட்ட பொதுக்கல்வி தகுதி பெறாத ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினருக்கான அல்லது எல்லா சாதியையும் சேர்ந்த ஆதரவற்ற விதவைகளுக்கான வயது வரம்பு அப்பதவிக்கு நிர்ணயிக்கப்பட்ட வயது வரம்பைக் காட்டிலும் ஐந்து ஆண்டுகள் கூடுதலாக்கப்படும்.

குறிப்பு.-பத்தி 4 மற்றும் 4(அ)வின் நோக்கத்திற்காக ஆதரவற்ற விதவை எனப்படுபவர் தானாக வாழ எவ்வகை வருவாயும் இல்லாத அல்லது பட்டினியிலிருந்து தன்னைக் காப்பாற்ற தன்னைச் சார்ந்தோர் இல்லாத விதவை ஆகும்.

5. விண்ணப்பதாரர் பெற்றுள்ள தகுதிகள், நியமனத்திற்காக நிர்ணயிக்கப்பட்டுள்ளவையாகவே இல்லாவிட்டாலும் அவற்றிற்குச் சமமாக அவை இருப்பதாக அவர் உரிமை கோரினால், அவரது கோரிக்கைக்கான காரணங்களைத் தெரிவித்து அவரது கல்வித் தகுதிகளின் முழு விவரங்களையும் கொடுக்க வேண்டும்.

6. மற்ற தகுதிகள் சமமாக இருக்குமானால் என்.சி.சி.யில் பெற்ற பயிற்சியும் அனுபவமும் மற்றும் பாதுகாப்பு படையில் (defence forces) ஆற்றிய பணியும் கூடுதல் தகுதியாகக் கருதப்படும்.

7. தமிழில் தகுதி.-ஒவ்வொரு விண்ணப்பதாரரும், விண்ணப்ப நாளன்று, போதுமான தமிழ் அறிவு பெற்றிருக்க வேண்டும்.

விளக்கம்.-கீழ்க்காணும் தகுதியைப் பெற்றிருந்தால் ஒருவர் போதிய தமிழறிவு பெற்றவராய்க் கருதப்படுவார்.-

(i) ஒரு பதவிக்கு நிர்ணயிக்கப்பட்ட கல்வித் தகுதி. குறைந்த அளவு பொதுக் கல்வித் தகுதியும் இதற்கு மேலும் இருந்தால், பள்ளி இறுதி பொதுத் தேர்வில், தமிழை ஒரு மொழியாக எடுத்து, தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும். அல்லது உயர்நிலைப் பள்ளிப்படிப்பில் தமிழைப் பயிற்று மொழியாகக் கொண்டு, பள்ளியிறுதி பொதுத் தேர்வைத் தமிழில் எழுதி தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும். அல்லது தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தினால் நடத்தப் பெறும் இரண்டாம் வகுப்பு மொழித் தேர்வில் தமிழில் தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும்.

(ii) ஒரு பதவிக்கு நிர்ணயிக்கப்பட்ட கல்வித்தகுதி, எட்டாம் வகுப்பும் அதற்கு மேலும், ஆனால் பள்ளியிறுதித் தேர்வு படிப்புச் சான்றிதழுக்குக் கீழாக இருந்தால் அவ்வகுப்புகளில் தமிழைப் பயிற்று மொழியாகக் கொண்டிருக்க வேண்டும் அல்லது நியமன அதிகாரிகளால் நடத்தப்படும் வகுப்பு தரத்தில் தமிழ் மொழித் தேர்வில் தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும்.

(iii) குறிப்பு.-போதுமான தமிழறிவு இல்லாதோரும் விண்ணப்பிக்கலாம். தேர்வு பெற்றால் தகுதிகாண் பருவத்திற்குள்ளோ அல்லது நியமிக்கப்பட்ட தேதியிலிருந்து நான்காண்டுகளுக்கு உள்ளோ இரண்டாம் வகுப்பு மொழித் தேர்வில் (முழுத்தேர்வு)தமிழில் தேர்ச்சி பெற வேண்டும். அவ்வாறு தேர்ச்சி பெறாவிட்டால் பணியிலிருந்து நீக்கப் படுவார்கள்.

8. குறைந்த அளவு பொதுக் கல்வித் தகுதி என்று எங்கெங்கு குறிப்பிடப்பட்டுள்ளதோ அங்கெல்லாம் கீழே குறிப்பிடப்பட்டுள்ள தகுதிகள் என்று பொருள் படும்.

குறைந்த அளவு பொதுக் கல்வித் தகுதி

(1) இம்மாநிலத்தில் உள்ள பல்கலைக் கழகங்களில் கல்லூரி முறை படிப்புகளுக்கு அனுமதிக்கத் தகுதியுடைய இடைநிலைப் பள்ளி இறுதித்தேர்வில் தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும்.

அல்லது

(2) இம்மாநிலத்தில் இடைநிலை பள்ளி இறுதித் தேர்வில் தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும்.

விளக்கம் 1.-ஒரு நபர் பதினொரு ஆண்டு இடைநிலை பள்ளி இறுதித் தேர்வு எழுதியிருந்து ஒவ்வொரு பாடத்திலும் 35 விழுக்காடு மதிப்பெண்கள் ஒரு தடவையிலோ அல்லது பகுதி முறையிலோ பெற்றிருந்தாலும் இடைநிலைப் பள்ளி இறுதித் தேர்வில் தேறிவிட்டவராகக் கருதப்படுவார்.

விளக்கம் 2.-ஒரு நபர் 11 ஆண்டு இடைநிலைப் பள்ளி இறுதித் தேர்வில் ஒன்று அல்லது மேற்பட்ட பாடங்களில் 35 விழுக்காடு மதிப்பெண்கள் பெறத் தவறி பின்பு 10 ஆண்டு இடைநிலைப் பள்ளி இறுதித் தேர்வு எழுதித் தோல்வியுற்ற அந்த பாடம் அல்லது பாடங்களில் 35 விழுக்காடு மதிப்பெண்கள் பெற்றிருந்தாலும் இடைநிலைப் பள்ளி இறுதித் தேர்வில் தேர்ச்சி பெற்றவராகக் கருதப்படுவார்.

விளக்கம் 3.-ஒரு நபர் 11 ஆண்டு இடைநில பள்ளி இறுதித் தேர்வில் விருப்பப்பாடம் எடுத்து படித்து, அந்த விருப்பப் பாடத்தில் தோல்வியடைந்திருந்து விருப்பப் பாடத்தைத் தவிர மற்றெல்லா பாடங்களிலும் 35 விழுக்காடு மதிப்பெண்கள் பெற்றிருந்தாலும் இடைநிலைப்பள்ளிஇறுதித் தேர்வில் வெற்றி பெற்றவராகக் கருதப்படுவார்.

8. (அ) ஒரு பதவியில் நியமனத்திற்கு நிர்ணயிக்கப்பட்ட தகுதியில், குறிப்பிட்ட கல்வித் தகுதி/தொழிற் கல்வித் தகுதியுடன் செயல்முறை அனுபவம் அல்லது வேறு அனுபவம் ஏதாவது நிர்ணயிக்கப்பட்டிருந்தால் அவ்வனுபவம் வேறு மாதிரியாகக் குறிப் பிட்டிருந்தாலொழிய, நிர்ணயிக்கப்பட்ட கல்வித் தகுதி தொழில் கல்வித் தகுதியைப் பெற்றபின் அடைந்திருக் கவேண்டும்.

9. ஆதிதிராவிடர்கள், பழங்குடியினர், பிற்பட்ட வகுப்பினர் மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர்/சீர் மரபினர் மற்றும் குற்றப்பட்டியலிலிருந்து நீக்கப்பட்ட வகுப்பினர் ஆகியோரின் பட்டியல்கள் இணைப்பில் கொடுக்கப்பட்டுள்ளன.

குறிப்புகள்.-(i) தமிழ் நாட்டைச் சேர்ந்தவர்களாயிருந்து மேலும் 11-ஆம் இணைப்பில் காட்டப்பட்டுள்ள பட்டியல்களில் குறிப்பிடப் பட்டுள்ள சாதிகளில் ஒன்றைச் சேர்ந்தவர்களாக இருந்தால் மட்டுமே ஆதிதிராவிடர் வகுப்பினர் அல்லது பழங்குடி வகுப்பினர் அல்லது பிற்பட்ட வகுப்பினர் என்று கருதப்படுவர். பிற மாநிலங்களைச் சேர்ந்தவர்கள், அப்பட்டியலில் குறிப்பிடப்பட்டுள்ள சாதிகளில் ஒன்றைச் சேர்ந்தவர்களாக இருந்த போதிலும் ஆதிதிராவிடர் வகுப்பை அல்லது பழங்குடியினர் வகுப்பை அல்லது பிற்பட்ட வகுப்பைச் சேர்ந்தவர்களாகக் கருதப்படமாட்டார்கள்.

(ii) பிற்பட்ட வகுப்பினர் பட்டியலில் சேர்க்கப்பட்டுள்ள யாதொரு இந்து சமூகத்திலிருந்தும் மதம் மாறியவர்களாக இருக்கின்ற கிருத்துவ சமூகங்களைச் சேர்ந்த மற்றவர்களும் பிற்பட்ட வகுப்பினர்களாக 24-2-86 முதல் கருதப்படுவார்கள்.

10. விண்ணப்பக் கட்டணம், சென்னை-600 002 தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையச் செய லாளருக்குச் செலுத்தத்தக்க குறுக்குக் கோடிட்ட இந்திய அஞ்சல் ஆணைகள் மூலம் (Crossed Indian Postal Order) அல்லது இந்திய அரசு வங்கியின் (State Bank of India) ஏதாவதொரு கிளையில் தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வு ஆணைய செயலாளருக்கு சென்னை ஆயிரம் விளக்கு இந்திய அரசு வங்கி கிளையில் செலுத்தத்தக்க கேட்புக் காசோலை (Demand Draft) Code No:0800) செலுத்தப்பட வேண் டும். செலுத்தப் பட்ட கட்டணம் சாதாரணமாக திருப்பித் தரப்பட மாட்டாது.

ஆதிதிராவிடர்கள் மற்றும் பழங்குடியினர் வகுப் பைச் சேர்ந்தவர்கள். அல்லது ஏதாவதொரு பல்கலைக் கழகத்தில் பட்டம் பெற்ற பிற்பட்ட வகுப்பைச் சேர்ந்தவர்கள், யுத்த சேவை செய்தோர், இந்திய தேசிய இராணுவத்தைச் (I.N.A.) சேர்ந்தோர் 1964-ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் 1-ஆம் நாளன்று அல்லது அதற்குப் பின்னர் ஸ்ரீலங்காவிலிருந்து தாயகம் திரும்பியோர் 1963-ஆம் ஆண்டு ஜூன் திங்கள் 1-ஆம் நாளன்று அல்லது அதற்குப் பின்னர் பர்மாவிலிருந்து தாயகம் திரும்பியோர் இந்தியாவில் நிரந்தரமாகக் குடியேறும் எண்ணத்துடன் 1975-க்குப் பிறகு வியட்நாமிலிருந்து தாயகம் திரும்பியவர்கள், ஸ்ரீலங்காவிலிருந்து தாயகம் திரும்பி இருப்போர், முன்னாள் இராணுவத்தினர் ஆகியோர் விண்ணப்பக் கட்டணம் செலுத்துவதிலிருந்து விலக்களிக்கப்பட்டுள்ளனர். ஆனால் இக்கட்டணச் சலுகை பிற்பட்ட வகுப்பினரைப் பொறுத்த அளவில் மூன்று முறையும் முன்னாள் இராணுவத்தினருக்கு இரண்டு முறையும் மட்டுமே என்று வரையறுக்கப்பட்டுள்ளது. 1961-ஆம் ஆண்டு சனவரி திங்கள் 1-ஆம் நாளுக்குப் பிறகு மூன்று முறை கட்டணச் சலுகை பெற்றுவிட்ட பிற்பட்ட வகுப்பினரும், 1973-ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் 19-ஆம் நாளுக்குப் பிறகு இரண்டு முறை கட்டணச் சலுகை பெற்றுவிட்ட முன்னாள் இராணுவத்தினரும் அதற்குப் பிறகு விண்ணப்பிக்கும்போது விண்ணப்பக் கட்டணம் செலுத்த வேண்டும். உடல் ஊனமுற்றோர்கள் அவர்களுடைய குடும்ப மாத வருமானம் ரூ. 350-க்கும் அதிகமில்லாமலிருந்தால், விண்ணப்பக் கட்டணம் செலுத்துவதிருந்து விலக்களிக்கப்படுவர். அதுபோன்ற விண்ணப்பதாரர்கள், அவர்களுக்கு என்ன உடல் ஊனம் என்பதைக் குறிப்பிட்டு மருத்துவ அதிகாரியால் வழங்கப்பட்ட சான்றிதழை அனுப்ப வேண்டும். மேலும் விண்ணப்பதாரருடைய உடல் ஊனம் அவருடைய பணிகளைத் திறம்படச் செய்வதில் அவருக்குத் தடையாக இருக்காது என்று கருதுவதாகவும் அந்தச் சான்றிதழில் மருத்துவ அதிகாரி குறிப்பிட்டிருக்க வேண்டும். அத்துடன் விண்ணப்பதாரருடைய குடும்பத்தின் மாத வருமானம் ரூ. 350-க்கும் அதிகமில்லையென்பதற்கு ஆதாரமாக வட்டாட்சியர் அல்லது தனி நிலை துணை வட்டாட்சியர் அல்லது தலைமையிடத் துணை வட்டாட்சியர் தரத்திற்கும் குறையாத வருவாய்த் துறை அதிகாரி அல்லது ஊராட்சி ஒன்றிய ஆணையரிடமிருந்து பெறப்பட்ட வருமானச் சான்றிதழையும் அனுப்ப வேண்டும்.

குறிப்புகள்.-(i) விண்ணப்பம் அனுப்பிய பிறகு நேர்முகத் தேர்வு உட்பட போட்டித் தேர்வுக்கு வரத் தவறினால் அளிக்கப்பட்டுள்ள கட்டணச் சலுகையிலிருந்து அந்த விண்ணப்பம் விலக்களிக்கப்பட மாட்டாது.

(ii) அளிக்கப்பட்டுள்ள மூன்று இரண்டு முறைக் கட்டணச் சலுகை ஒவ்வொரு பதவிக்கும் இல்லை. மொத்தமாக ஏதாவது மூன்று/இரண்டு முறைக் கட்டணச் சலுகை ஒவ்வொரு பதவிக்கும் இல்லை மொத்தமாக ஏதாவது மூன்று/இரண்டு விண்ணப்பங்களுக்கு மட்டுமே பொருந்தும். எந்தவொரு விண்ணப்பமும் நிராகரிக்கப்பட்டாலும், அனுமதிக்கப் பட்டாலும், திரும்பப் பெறப்பட்டாலும் அதில் கோரப்படும் கட்டணச் சலுகை அளிக்கப்பட்டுள்ள கட்டணச் சலுகை எண்ணிக்கைகளுக்காகக் கணக்கில் எடுத்துக் கொள்ளப்படும்.

(iii) ஏற்கெனவே பெற்ற கட்டணச் சலுகையை மறைத்து பொய்யாகக் கட்டணச் சலுகைக் கோரும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படுவதுடன் அத்தகைய விண்ணப்பதாரர்கள் தேர்வாணையத்தில் இனி நடத்தப்படும் தேர்வுகளில் கலந்து கொள்வதிலிருந்து தள்ளி வைக்கப்படுவர்.

(iv) விண்ணப்பக் கட்டணமாக அனுப்பப்படும் அஞ்சல் ஆணைகள் விண்ணப்பத்தில் ஒட்டப்படவோ அல்லது வேறு வகையில் பாதிக்கப்படவோ கூடாது.

(v) தேர்வாணையத்தில் குறிப்பிட்ட பதவிக்கான அறிவிக்கை விளம்பர நாளுக்கு முன்னதாகப் பெறப்பட்ட அஞ்சல் ஆணைகள் ஏற்கப்படமாட்டா.

(vi) மதிப்பை உயர்த்தும் பொருட்டு அஞ்சல் வில்லைகள் ஒட்டப் பட்ட அஞ்சல் ஆணைகள் ஏற்கப்படமாட்டா.

(vii) பிற்பட்ட வகுப்பினர் புகுமுக வகுப்பில் தேர்வு பெற்றவராயிருப்பினும் அல்லது பட்டப்படிப்பில் முதல் அல்லது இரண்டாம் ஆண்டு முடிவில் நடைபெறும் தேர்வுகளில் வெற்றி பெற்றிருந்தாலும் அல்லது பட்டத் தேர்வில் ஒரு சில பாகங்களில் மட்டுமே தேர்வு பெற்றிருந்தாலும் வரையறுக்கப்பட்ட கட்டணத்தைச் செலுத்துவதிலிருந்து விலக்கு அளிக்கப்படமாட்டார்கள்.

(viii) யுத்த சேவை என்பது 1939-46-இல் நடந்த இரண்டாம் உலக யுத்தத்தில் செய்த சேவையைத்தான் குறிக்கும்.

11. ஒவ்வொரு விண்ணப்பமும் பின்வரும் ஆவணங்களின் சான்றளிக்கப்பட்ட நகல்களுடன் சேர்த்து அனுப்பப்படுதல் வேண்டும்:

(அ) பிறந்த தேதிக்கான சான்று, அதாவது-

(i) உயர்நிலைப்பள்ளியை விட்டுச் சென்றதற்கான சான்றிதழ் (S.S.L.C.) அல்லது

(ii) பல்கலைக்கழகத்தின் அல்லது கல்லூரியின் அல்லது பள்ளியின் ஆவணங்களில் கண்டுள்ளவற்றிற்கு இணங்க பல்கலைக்கழகம் அல்லது கல்லூரி அல்லது பள்ளி அதிகாரியிடமிருந்து பெறப்பட்ட பிறந்த தேதியைக் காட்டுகிற ஒரு சான்றிதழ், ஞானஸ்நான (Baptism) சான்றிதழ் அல்லது பிறப்புப் பதிவேட்டின் எடு குறிப்பு ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது; அல்லது

(iii) மாநில அரசின் கீழ் முறையான பணியில் உள்ள விண்ணப்பதாரர்களால் அவர்களுடைய பணிப் பதிவேட்டிலிருந்து அவர்களுடைய பிறந்த தேதிக்கு ஆதாரமாக எடுக்கப்பட்ட எடுகுறிப்பு.

(ஆ) ஒழுக்கம் மற்றும் நடத்தைப் பற்றிய சான்றிதழ்கள் குறைந்த பட்சம் இரண்டு-

அவை (1) விண்ணப்பதாரர் கடைசியாகப் படித்த அல்லது படித்துக் கொண்டிருக்கிற ஒரு தனிப் பயிற்சிக் (Tutorial) கல்லூரி அல்லது பள்ளி அல்லது தட்டச்சு மற்றும் அல்லது சுருக்கெழுத்துப் பயிற்சி நிலையம் அல்லாத கல்வி நிலையத்தின் தலைவரிடமிருந்து ஒன்று.

(2) செய்தித் தாள்களில் நியமன விளம்பரம் செய்யப்பட்ட மாதத்தில் முதல் தேதிக்கு முன்னதாக இல்லாததும் விண்ணப்பதாரரை நேர்முகமாகத் தெரிந்துள்ள பொறுப்பான ஒருவரிடமிருந்து பெறப் பட்டதுமான இன்னொன்று.

பின்னைய சான்றிதழ் விண்ணப்பதாரரைப் பற்றிய நேர்முகமான அறிவையும் அனுபவத்தையும் அடிப் படையாக் கொண்டு வழங்கப்பட்டதாக இருத்தல் வேண்டும். ஓர் உறவினரிடமிருந்து பெறப்பட்டதாக இருத்தல் கூடாது.

குறிப்புகள்.-(i) விண்ணப்பதாரர் கடைசியாகப் படித்த அல்லது படித்துக் கொண்டிருக்கிற கல்வி நிலையத்தில் படித்த கால அளவு ஒரு கல்வியாண்டிற்குக் குறைவாக இருந்தால், ஒரு கல்வியாண்டிற்குக் குறையாமல் அவர் கடைசியாகப் படித்த கல்வி நிலையத் தலைவரிடமிருந்து மற்றொரு சான்றிதழைப் பெற்று அவர் தாக்கல் செய்யவும் வேண்டும்.

(ii) ஒரே நபரிடமிருந்து இரண்டு சான்றிதழ்கள் பெறுதல் கூடாது.

(இ) நியமனத்திற்காக நிர்ணயிக்கப்பட்டுள்ள தகுதிகளுக்குத் தமிழில் பெற்றிருக்க வேண்டிய தகுதி உட்பட சான்றாக இருக்கும் ஆவணங்கள்.

குறிப்பு.-பட்டத்தின் (degree) அல்லது பட்டத்தின் தற்காலிகமாகச் சான்றிதழின் (Provisional certificate) நகல்கள் மட்டுமே கல்வித் தகுதிகளுக்குரிய சான்றாக ஏற்றுக் கொள்ளப்படும். மதிப்பெண்கள் பட்டியல் அல்லது நிலைச் சான்றிதழ் ஆகியவற்றின் நகல்கள் போதுமான ஆதாரமாக ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது.

எனினும் பட்டச் சான்றிதழ் தொலைந்து போயிருந்தாலோ அல்லது உடனடியாகக் கிடைக்கவில்லையென்றாலோ அதற்கான காரணங்களைக் குறிப்பிட்டால் பட்டமளிப்பு விழாவிற்கு அனுமதிக்கப்பட்டவர்கள் பதிவேட்டிலிருந்து எடுக்கப்பட்ட எடு குறிப்பின் நகல்கள் கல்வித் தகுதிக்குரியசான்றாக ஏற்றுக் கொள்ளப்படும்.

குறிப்பு 2: ''தமிழ்நாடு மருத்துவ மன்றம், தமிழ்நாடு ஹோமியோபதி மன்றம் அல்லது தமிழ்நாடு கால்நடை மருத்துவ மன்றம் போன்றவற்றில் பதிவு செய்திருப்பது, எந்தப் பணிகளில் பணியாற்றுவதற்கு அவசியம் என்று விதிமுறைகள் உள்ளனவோ அந்தப் பணிகளுக்கான அரசுப் பணியிடங்களுக்கு மனுக்கள் அனுப்பும் தேதிக்கு முன்னரே அவ்வாறு பதிவு செய்யப்பட்டு பதிவுச் சான்றிதழின் உண்மை நகலினை மேற்கண்டவாறு பதிவு செய்தமைக்கான ஆதாரமாக மற்ற சான்றிதழ்களோடு அனுப்ப வேண்டும்.''.

(ஈ) போதிய தமிழறிவு பெற்றிருப்பதாகக் கூறும் விண்ணப்பதாரர், அவருடைய தாய்மொழி தமிழாக இருந்தாலும் இல்லாவிட்டலும் அவர் பள்ளியிறுதி பொதுத் தேர்வில் தமிழை ஒரு மொழியாக எடுத்திருந்தாலோ அல்லது மொழி அல்லாத மற்ற எல்லாப் பாடங்களையும் தமிழில் படித்திருந்தாலோ, அல்லது இரண்டாம் வகுப்பு மொழித் தேர்வில் (முழுத்தேர்வு) தமிழில் தேர்ச்சி பெற்றிருந்தாலோ அதன் சான்றிதழை அனுப்பவேண்டும்.

(உ) பிற்பட்ட வகுப்பைச் சேர்ந்தவர் என்று உரிமை கோருகிற ஒரு விண்ணப்பதாரரைப் பொறுத்த வரையில் குறிப்பிட்ட படிவத்தில் சுட்டிக் காட்டப்பட்டு உள்ளவாறு வட்டாட்சியர் நிலைக்குக் குறையாத ஒரு வருவாய்த்துறை அலுவலரிடமிருந்து அல்லது தனி நிலை (Independent) அல்லது தலைமையிடத்துத் துணை வட்டாட்சியரிடமிருந்து அல்லது ஊராட்சி ஒன்றிய ஆணையரிடமிருந்து பெறப்பட்ட ஒரு சான்றிதழை அனுப்ப வேண்டும். இணைப்பில் கொடுக்கப் பட்டுள்ள சாதியின் வரிசை எண்ணைச் சான்றிதழில் குறிப்பிட வேண்டும்.

'' ஆதி திராவிடர் அல்லது பழங்குடியினர் வகுப்பைச் சேர்ந்தவர் என்று உரிமை கோருகிற ஒரு விண்ணப்பதாரரைப் பொறுத்த வரையில் மத்திய அரசின் உள் துறை அமைச்சகத்தால் குறிப்பிடப் பட்டுள்ள படிவத்தில் உட்சாதியை (Sub-Caste) குறிப்பிட்டுள்ளவாறு வட்டாட்சியர் நிலைக்குக் குறையாத ஒரு வருவாய்த்துறை அலுவலரிடமிருந்தோ அல்லது ஊராட்சி ஒன்றிய ஆணையரிடமிருந்தோ பெறப்பட்ட ஒரு சான்றிதழை அனுப்ப வேண்டும்''

குறிப்புகள்.—(I) ஆதி திராவிடர் வகுப்பைச் சேர்ந்த ஒருவர் புத்த மதத்திற்கு மாறிய பிறகு ஆதி திராவிடர் வகுப்பைச் சேர்ந்தவருக்கு (இந்துகளுக்கு) அனுமதிக்கப்படுகிற சலுகைகளுக்கு உரிமையுடையவர் ஆகமாட்டார்.

(II) ஆதி திராவிடர் வகுப்பைச் சேர்ந்த ஒருவர் கிறிஸ்துவ மதத்திற்கு மாறிய பிறகு ஆதி திராவிடர் வகுப்பைச் சேர்ந்தவராகக் கருதப்படாமல் பிற்பட்ட வகுப்பினராக மட்டுமே கருதப்படுவார்.

(III) நேரில் கேட்டறிந்த பிறகும் முறையாக ஆய்வு செய்த பிறகும் தகுதி வாய்ந்த அதிகாரிகளால் சாதிச் சான்றிதழ் வழங்கப்பட்டிருக்க வேண்டும். பிற்பட்ட வகுப்பைச் சேர்ந்தவர் என்று உரிமை கோருகிற ஒரு விண்ணப்பதாரர் குறிப்பிடப்பட்டுள்ள படிவத்திலும் ஆதி திராவிடர் மற்றும் பழங்குடி வகுப்பைச் சேர்ந்தவர் என்று உரிமை கோருகிற விண்ணப்பதாரர் மத்திய அரசின் உள் துறை அமைச்சகத்தால் குறிப்பிடப்பட்டுள்ள படிவத்திலும் சாதிச் சான்றிதழ் பெற்றிருக்க வேண்டும். ஏனைய படிவங்களில் பெறப்பட்ட சாதிச் சான்றிதழ்களோ அல்லது வேறு எந்த அதிகாரியாலும் வழங்கப்படும் சான்றிதழ்களோ அல்லது உயர்நிலைப் பள்ளியை விட்டு சென்றதற்கான சான்றிதழ் அல்லது மாற்றம் சான்றிதழ் அல்லது, இட பள்ளி/கல்லூரி ஆவணங்களில் கண்டுள்ள, பதிவுகளின் அடிப்படையில் மட்டுமே வழங்கப்படும் சான்றிதழ்களோ, ஏற்றுக் கொள்ளப்படமாட்டா.

சாதியைக் காட்டும் சான்றிதழின் சான்றொப்பமிடப்பட்ட நகல் விண்ணப்பத்துடன் அனுப்பப்படவில்லையென்றால் அல்லது பணி வேட்பாளர்களால் தகுதி வாய்ந்த அதிகாரியிடமிருந்து பெறப்பட்டு தாக்கல் செய்யப்பட்ட சான்றிதழில் குறிக்கப்பட்டுள்ள சாதி, இந்த விதி முறைகளின் இணைப்பில் கொடுக்கப்பட்டுள்ள ஆதி திராவிடர், பழங்குடியினர் அல்லது பிற்பட்ட பழங்குடியினர் அல்லது பிற்பட்ட வகுப்பினரின் பட்டியலில் சேர்க்கப்படவில்லை என்றால் பணி வேட்பாளர்கள் ஆதி திராவிடர், பழங்குடியினர் அல்லது பிற்பட்ட வகுப்பைச் சேர்ந்தவர்களாகக் கருதப்பட மாட்டார்கள் என்று அவர்கள் எச்சரிக்கைச் செய்யப்படுகிறார்கள். இந்தச் சூழ்நிலையில் அவர்கள் ''ஏனையோர்கள்'' (Others) என்ற தலைப்பின் கீழ் மட்டுமே கருதப்படுவார்கள் (Others) மற்றும் ''ஏனையோர்கள்'' என்ற தலைப்பின் கீழ் அவர்கள் கருதப்படுவதற்குத் தகுதியற்றவர்கள் என்றால், அவர்களுடைய விண்ணப்பங்கள் தள்ளுபடி செய்யப்படும்.

(IV) விண்ணப்பத்தைத் தாக்கல் செய்த பிறகு, ஒரு விண்ணப்பதாரர், ஆதிதிராவிடர், பழங்குடியினர் அல்லது பிற்பட்ட வகுப்பைச் சேர்ந்தவர் என்றோ அல்லது ஓர் உயர்ந்த அல்லது கூடுதல் கல்வித் தகுதியைப் பெற்றவர் என்றோ அவரால் எழுப்பப்படும் உரிமை கோரிக்கை எதுவும் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது.

(V) பணி வேட்பாளர்கள் மேலே குறிப்பிட்டுள்ள ஆவணங்களின் சான்றளிக்கப்பட்ட நகல்களை மட்டும் அனுப்புவது போதுமானதாகும். பணி வேட்பாளர்கள் தம்மாலேயே சரியானவை என்று சான்றளிக்கப் பட்ட ஆவணங்களின் நகல்கள் ஏற்றுக் கொள்ளப்படும். பணி வேட்பாளர் ஒன்றுக்கு மேற்பட்ட பதவிகளுக்குத் தனித்தனியாக விண்ணப்பம் அனுப்பினால், ஒவ்வொரு விண்ணப்பத்தோடும் ஆவணங்களின் சான்றளிக்கப்பட்ட நகல்கள் இணைக்கப்பட வேண்டும். அவ்வாறு செய்யத் தவறினால் விண்ணப்பம் தள்ளுபடி செய்யப் படுவதற்கு ஏதுவாகும்.

விண்ணப்பதாரரால் அனுப்பப்படும் ஒரு ஆவணத்தின் சான்றளிக் கப்பட்ட நகல் பொய் என்றோ அல்லது சரியானதாக இல்லை என்றோ தெரிய வந்தால் அவரது விண்ணப்பம் தள்ளுபடி செய்யப் படுவதுடன் மேலும் தகுந்த நடவடிக்கைக்கும் அவர் உள்ளாவார். ஆவணங்களின் நகல்கள் முழு கையொப்பமிடப்பட்டு சான்றொப்பமிடப்பட்டிருக்க வேண்டும். வெறும் முதல் எழுத்துக்களிடப்பட்டு (initials) சான்றொப்பமிடப் பட்டிருக்கும் ஆவணங்களின் நகல்கள் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது.

(vi) தேர்வாணையத்தின் முன்பு முந்திய சந்தர்ப்பம் ஒன்றில் பணிவேட்பாளராக இருந்த ஒரு விண்ணப்பதாரர், கோரப்படும் ஆவணங்களை, அவை முந்திய சந்தர்ப்பத்தில் தாக்கல் செய்யப்பட்டு அவருக்குத் திருப்பி அனுப்பப்பட்டவையாக இருந்தபோதிலும் அவற்றை மறுபடியும் ஒவ்வொரு விண்ணப்பத்துடனும் தாக்கல் செய்ய வேண்டும்.

(vii) சான்றிதழ்களின் சான்றளிக்கப்பட்ட நகல்கள் பணிவேட்பாளர்களுக்கு திருப்பி அனுப்பப்படமாட்டா. எந்தப் பதவிகளுக்கு நேர்முகத் தேர்வுகள் (interviews) நடத்தப்படுகின்றனவோ, அந்தப் பதவிகளைப் பொறுத்த வரையில், நேர்முகத் தேர்வுகள் நடைபெறும் நேரத்திலும் மற்றும் அவ்வாறு அல்லாத பிற சந்தர்ப்பங்களிலும் கேட்கும்போது பணி வேட்பாளர்கள் மூல ஆவணங்களைத் தாக்கல் செய்யத் தயாராக இருக்க வேண்டும்.

(viii) செயல் முறை அனுபவம் (Practical experience) ஏதேனும் இருக்க வேண்டும் என்று வரையறுக்கப்பட்டிருந்தால் அதைப் பற்றிய சான்றிதழ்கள் அறிவிக்கப்பட்டுள்ள தகுதிகளுக்கு இணங்க இருக்க வேண்டும்.

''கொண்டா ரெட்டிகள் வகுப்பைச் சேர்ந்தவர் என்று உரிமை கோருகிற ஒரு விண்ணப்பதாரரைப் பொறுத்தவரையில் இச்சான்றிதழ் கோட்டவருவாய் அலுவலர் அல்லது மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது) விடமிருந்து தான் பெறப்பட வேண்டும்'',

''எனினும் 9.5.1988-ற்குப் பிறகு வழங்கப்பட்ட சாதிச் சான்றிதழ், 2.5.1988 நாளிட்ட வருவாய்த்துறை அரசாணை எண் 781-இல் குறிப்பிடப்பட்டுள்ள படிவத்தில் கீழே குறிப்பிடப்பட்டுள்ள அதிகாரிகளால் வழங்கப்பட்டிருக்க வேண்டும்.''

| சாதியின் பெயர் (1) | | சாதிச்சான்றிதழ் வழங்க தகுதியுடைய அலுவலர் (2) |
|---|---|---|
| மலைவேடன், மலைப்பண்டாரம், மலைக்குறவன், கொண்டா ரெட்டி | ... | கோட்ட வருவாய் அலுவலர்கள் |
| ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் | ... | வட்டாட்சியர்கள் |
| மற்ற சாதியினர் | ... | வட்டாட்சியர் நிலைக்குக் குறையாத ஒரு வருவாய்த்துறை அலுவலர் அல்லது தலைமையிடத்து துணை வட்டாட்சியர்கள் அல்லது சாதிச்சான்றிதழ் வழங்குவதற்காக நியமிக்கப்பட்ட சிறப்பு துணை வட்டாட்சியர்கள். |

(ஊ) விண்ணப்பங்களில் கொடுக்கப்படும் தகவல்களின் அடிப்படையில் மட்டுமே விண்ணப்பதாரர்களால் உரிமை கொண்டாடப்படும் வயது, சமூகப் பிரிவு, பொதுக்கல்வி மற்றும் தொழில் நுட்பக் கல்வித் தகுதிகள் ஏற்கப்படுகின்றன. எனவே மேற்சொன்ன தகவல்களைத் தேர்வாணையம் ஐயமறத் தெளிந்து கொள்ளும்வரை விண்ணப்பங்கள் தற்காலிகமாக மட்டுமே ஏற்கப்படும். நேர்முகத் தேர்விற்கு அனுமதிக் கப்படுவதால் மட்டுமோ அல்லது தேர்ந்தெடுக்கப்பட்டோர் பட்டியலில் தற்காலிகமாகப் பெயர் சேர்க்கப் படுவதால் மட்டுமோ விண்ணப்பதாரர் பதவியில் நியமனம் பெற உரிமையளிக்கப்பட்டவராக மாட்டார். ஆகவே எல்லா நிலைகளிலும் விண்ணப்பங்கள் தற்காலிகமாகத்தான் கருதப்படும். எந்நிலையிலும், தெரிந்தெடுக்கப்பட்ட பின்னர் கூட விண்ணப்பத்தை நிராகரிக்கத் தேர்வாணையம் உரிமையை வைத்துக் கொள்கிறது.

12. நிழற்படத்தின் நகல்கள்.—விண்ணப்பதாரர் அண்மையில் எடுக்கப்பட்ட அவருடைய நிழற்படத்தின் ஒரே மாதிரியான நகல்களைத் தனித்தன்மை பதவிகளுக்காயின் இரண்டு நகல்களும் தனித்தன்மை இல்லாத பதவிகளுக்காயின் மூன்று நகல்களும் கையொப்பமிட்டு அனுப்ப வேண்டும். விண்ணப்பத்தின் முதல் பக்கத்தில் அதற்காக ஒதுக்கப்பட்டுள்ள இடத்தில் ஒரு நகலை ஒட்ட வேண்டும். மற்றொன்றை விண்ணப்பத்துடன் அனுப்பப்பட்டுள்ள ஆளறி சான்றிதழ்களில் ஒட்டி விண்ணப்பத்துடன் திருப்பி அனுப்ப வேண்டும். தனித்தன்மையில்லாத பதவிகளுக்காயின் நிழற்படத்தின் மூன்றாம் நகலைத் தனி உறையில் வைத்து விண்ணப்பத்துடன் அனுப்ப வேண்டும். நிழற்படத்தின் நகல்களை மேற்கூறியபடி அனுப்பத் தவறினால் விண்ணப்பம் உடனடியாக நிராகரிக்கப்பட இலக்காகிறது.

குறிப்பு.—நிழற் படங்கள் விண்ணப்ப நாளிற்கு முன் ஒரு மாதத்திற்குள்ளாக எடுக்கப்பட்டதாக இருக்க வேண்டும்.

கீழ்க்காணும் நிழற்படங்கள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டா:-

1. இவ்வலுவலக முத்திரை அல்லது வேறு அலுவலக முத்திரை பதிக்கப்பட்ட நிழற்படங்கள்.

2. கிழிந்து வீணான நிழற்படங்கள்.

3. வேறு விண்ணப்பத்திற்காக ஏற்கனவே பயன்படுத்தப்பட்ட நிழற்படங்கள்.

4. வெவ்வேறு சமயங்களில் எடுக்கப்பட்ட நிழற்படங்களின் பிரதிகள்.

5. நிழற்படி பிளாக்குகள் அல்லது அச்சுப் பிரதிகளிலிருந்து எடுக்கப்பட்ட நிழற்படங்கள்.

6. நிழற்படத்தின் நிழற்படி நகல்கள் (Photostat Xerox copy) விண்ணப்பத்துடன் அனுப்பப்பட்ட நிழற்படங்கள் திருப்பி அனுப்பப் படமாட்டா.

13. விதிக்கப்பட்ட கட்டணம் செலுத்துவதிலிருந்து விண்ணப்பதாரர் விலக்கு அளிக்கப்பட்டிருந்தாலன்றி ஒவ்வொரு விண்ணப்பத்துடனும் அதற்குரிய கட்டணத் திற்காக குறுக்கு கோடிட்ட (Crossed Indian Postal Order) இந்திய அஞ்சல் ஆணைகள் அல்லது கேட்புக் காசோலை (Demand draft) களையும் சேர்த்து அனுப்ப வேண்டும்.

14. (அ) 1964 நவம்பர் முதல் நாள் அல்லது அதற்குப் பிறகு ஸ்ரீலங்காவிலிருந்து தாய்நாட்டுக்குத் திருப்பி அனுப்பப்பட்டவர்கள் மற்றும் 1963 ஜூன் முதல் நாள் அல்லது அதற்குப் பிறகு பர்மாவிலிருந்து தாய் நாட்டுக்குத் திருப்பி அனுப்பப்பட்டவர்கள் இந்தியாவில் நிரந்தரமாகக் குடியேறும் எண்ணத்துடன் 1975 முதல் நாள் அல்லது அதற்குப் பிறகு வியட்நாமிலிருந்து தாயகம் திரும்பியவர்கள், ஸ்ரீலங்காவிலிருந்து தாயகம் திரும்ப இருப்போர், 1964 ஜனவரி முதல் நாள் அல்லது அதற்குப் பிறகு பங்களாதேஷ் என்று தற்போது அழைக்கப்படும் பிரதேசத்திலிருந்து குடியிழந்து (Displaced) இந்தியாவிற்கு இடம் பெயர்ந்து (Migrated) வந்துள்ளவர்கள் கிழக்கு ஆப்பிரிக்கா நாடுகளான கென்யா, உகாண்டா மற்றும் தான்சானியாவிலிருந்து இடம் பெயர்ந்து வந்துள்ளவர்கள் மற்றும் படைக்கலைப்பினால் முப்படைகளிலிருந்து (தரைப்படை, கடற்படை, விமானப்படை) விடுவிக்கப்பட்டவர்களில் ஆதி திராவிடர்கள், பழங்குடியினர் அல்லது பிற்பட்ட வகுப்பினர் ஆகியவைகளைச் சார்ந்தவராயிருந்தால் தெரிந்தெடுக்கப்படும் ஆண்டின் ஜூலை முதல் நாளில் ஐம்பத்து மூன்று வயதிற்குக் குறைந்தும், மற்றவர்களானால் நாற்பத்தெட்டு வயதிற்குக் குறைந்தும் இருப்பார்களானால் அவர்களும், ''பணிவேட்பாளர்களுக்கான தகவல் குறிப்பில்'' அறிவிக்கப்பட்டுள்ள வயது வரம்பு உட்பட, அதில் நிர்ணயிக்கப்பட்டுள்ள தகுதிகள் யாவும் முழுவதுமாகப் பெற்றிராவிட்டாலும், விண்ணப்பிக்கலாம். அவர்களுடைய விண்ணப்பங்கள் அவரவருக்குள்ள தகுதியின் அடிப்படையில் பரிசீலிக்கப்பட்டு, மேலும் வயது வரம்பு, உட்பட்ட தகுதிகள் எதையேனும் தளர்த்த வேண்டுமா என்பது, அவர் தெரிந்தெடுக்கப்படுவாரானால், கருதிப் பார்க்கப்படும்.

குறிப்புகள்.— படைக் கலைப்பினால் விடுவிக்கப்பட்டவர்கள் (Demobilised persons) அல்லது முன்னாள் இராணுவத்தினர் (Ex-service men) என்பது, இந்திய யூனியனின் (Indian Union) ஆயுதப் படைகளில் (இந்திய தரைப்படை, இந்திய விமானப்படை, இந்திய கடற்படை, இந்திய துணைப் படைகள், (Auxiliary Forces of India) மற்றும் மத்திய அரசின் சிறார் படைப் பிரிவுகளில் (Boys Companies) எந்தப் பதவியிலும் போர் புரிந்தவராக இருந்தாலும் சரி (Combatant) அல்லது போர் புரியாதவராக இருந்தாலும் சரி (Non-combatant) தொடர்ச்சியாக ஆறு மாதத்திற்குக் குறைவில்லாத ஒரு கால அளவுக்குப் பணி செய்துள்ளவர்கள்; மற்றும்

(I) தவறான நடத்தையில் அல்லது திறமையின்மை காரணமாகப் பதவியிலிருந்து விலக்கப்பட்டவர்கள் அல்லது ருதள்ளப்பட்டவர்கள் தவிர மற்றபடி இராணுவத்திலிருந்து விடுவிக்கப்பட்டவர்கள் அல்லது அவ்வாறு விடுவிப்பதை முடிவு செய்யும் முன்னர் சேமப்படைக்கு (Reserve) மாற்றப்பட்டுள்ளவர் அல்லது

(II) மேற்சொன்னவாறு விடுவிக்கப்படுவதற்காக அல்லது சேமப் படைக்கு மாற்றப்படுவதற்கான உரிமையைப் பெறுவதற்குத் தேவைப் படுகிற பணிக்கால அளவை முடிப்பதற்காக ஆறு மாதத்திற்கு மேலாகப் பணி செய்ய வேண்டியவரல்லாதவர் என்று பொருள்படும்.

(ஆ) தமிழ்நாடு மாநிலத்தில் மக்கள் தொகை கணக்கெடுப்பு நிறுவனத்தில் (Census Organisation) குறைந்த அளவு ஆறு மாதங்கள் தற்காலிகப்பணி செய்திருந்து ஏற்கெனவே விடுவிக்கப்பட்டுள்ள அல்லது ஆட்குறைப்பு செய்யப்பட்டுள்ள தற்காலிகமான அதிகப்படி பணியாளர்கள் அவர்களுடைய வயதைக் கணக்கிடும் போது அவர்கள் வயதிலிருந்து அதிக பட்சம் மூன்று ஆண்டுக் கால அளவைக் குறைத்துக் கொள்ளுவதற்கு அனுமதிக்கப்படுவார்கள். இந்தச் சலுகையை தேர்வாணையத்தால் நடத்தப்படும் போட்டித் தேர்வுகளில் ஏதேனும் ஒன்றுக்கு மட்டுமே பயன்படுத்திக்கொள்ளலாம். மத்திய அல்லது மாநில அரசில் அத்தகையோர் முறையான பணியிலிருப்பின் அவர்களுக்கு இச்சலுகை பொருந்தாது.

(இ) 1963 ஜனவரி முதல் நாள் அல்லது அதற்குப் பிறகு முழுநேர அடிப்படையில் தேசிய மாணவர் படையில் (National Cadet Corps) சார்நிலை அலுவலர் பயிற்றுநர்கள் (Under Officer Instructor) அல்லது சார்ஜண்ட் மேஜர் பயிற்றுநர்களாக வேலையில் அமர்த்தப்பட்டிருந்து தேசிய மாணவர்படையின் முன்னாள் பயிற்றுநர்கள், வயதுத் தகுதியைத் தவிர நிர்ணயிக்கப்பட்ட பிற தகுதிகள் அனைத்தையும் பெற்றிருந்தால் விண்ணப்பிக்கலாம். அவர் தேசிய மாணவர் படையில் சார்நிலை அலுவலர் பயிற்றுநர்களாக அல்லது சார்ஜண்ட் மேஜர் பயிற்றுநர்களாக எவ்வளவு காலம் பணிபுரிந்துள்ளார்களோ அக்கால அளவை அவர்களுடைய வயதிலிருந்து கழித்துக் கொள்ள அனுமதிக்கப்படுவர். இத்தகைய பணி வேட்பாளர்கள் தெரிந்தெடுக்கப்பட்டால், அவர்களுக்காக வயது சம்பந்தப்பட்ட விதி அரசால் தளர்த்தப்படும்.

(ஈ) தகுதி பெறாத பகுதிநேர இந்தி மொழிப் புலவர்களும் மற்றும் பிறமொழிப் புலவர்களும் மற்ற பதவிகளில் நியமிக்கப்படுவதற்குத் தெரிந்தெடுக்கப் படும் ஆண்டின் ஜூலை, முதல் நாளில் நாற்பது வயதிற்குக் குறைந்தவர்களாக இருந்து, வயதுத் தகுதி தவிர நிர்ணயிக்கப்பட்ட பிற தகுதிகள் அனைத்தையும் அவர்கள் பெற்றிருந்தால், அவர்களும் விண்ணப்பிக்கலாம். இத்தகைய பணி வேட்பாளர்கள் தெரிந்தெடுக்கப்பட்டால் அவர்களுக்காக வயது சம்பந்தப்பட்ட விதி அரசால் தளர்த்தப்படும்.

இத்தகைய பணி வேட்பாளர்கள் தகுதி பெறாத பகுதி நேர இந்தி அல்லது பிறமொழிப் புலவர்கள் என்றும் அவர்கள் இருமொழித் திட்டம் கொண்டு வரப்பட்டதன் விளைவாகப் பணியிலிருந்து நீக்கப் பட்ட வர்கள் என்றும் காட்டுவதற்கு அரசாங்க 'அ' (A) மற்றும் 'ஆ' (B) பிரிவு பள்ளிகளிலிருந்து ஆட்குறைப்புச் செய்யப்பட்ட புலவர்களைப் பொறுத்த வரையில் தலைமைக் கல்வி அலுவலரிடமிருந்தும் அல்லது அரசின் மானிய உதவி பெறும் பள்ளிகளிலிருந்தும் மற்றும் உள்ளாட்சி மன்றங்களைச் சேர்ந்த பள்ளிகளிலிருந்தும் ஆட்குறைப்புச் செய்யப்பட்ட புலவர்களைப் பொறுத்தவரையில் மாவட்டக் கல்வி அலுவலரிடமிருந்து-மகளிர் பள்ளிகள் ஆய்வாளரிடமிருந்து "ஒரு சான்றிதழை" பணி வேட்பாளருக்கான விதி முறைகளைச் சேர்ந்த 11-ஆம் பத்தியில் குறிப்பிடப் பட்டுள்ள ஆவணங்களுடன் தாக்கல் செய்ய வேண்டும்.

(உ) 1971-ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் முதல் நாள் அன்று நுகர் பொருள் வழங்கு துறையில் (Civil Supplies Department) குறைந்த அளவு இரண்டு ஆண்டுகள் பணிபுரிந்து ஆட்குறைப்புக்காளான பணியாளர்கள், அவர்களுடைய வயதைக் கணக்கிடும் போது அந்தத் துறையில் அவர்கள் ஆற்றிய பணியின் கால அளவையும் நுகர் பொருள் வழங்கு துறையிலிருந்து விடுவிக்கப்பட்ட பிறகு அரசின் வேறு துறை எதிலும் ஆற்றிய பணியின் கால அளவையும் (அது தொடர்ச்சியாக இருந்தாலும் சரி இல்லாவிட்டாலும் சரி) அவற்றுடன் மேலும் ஒரு மூன்று ஆண்டுக்கால அளவையும் சேர்த்து அவர்களுடைய வயதிலிருந்து கழித்துக்கொள்ள அனுமதிக்கப்படுவார்கள்.

(ஊ) பிராந்திய இராணுவப் படையில் நிரந்தரப் பணியாளராகப் பணி செய்திருந்தாலோ அல்லது பிராந்திய இராணுவப் படை விதி 33-இன்படி பணியில் சேர்த்துக் கொள்ளப்பட்டு 6 மாதங்களுக்குக் குறையாமல் தொடர்ந்து பணியிலிருந்தாலோ அவர்கள் பிராந்திய இராணுவப் படையில் பணி புரிந்த காலத்தை அவர்களுடைய வயதிலிருந்து குறைத்துக் கொள்ள அனுமதிக்கப்படும். அவ்வாறு குறைத்த பின்னர் அவர்களுடைய வயது, அந்தப் பதவிக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ள உச்ச வயது வரம்பைவிட மூன்று ஆண்டுகளுக்கு மிகாமல் இருந்தால், அவர்கள் அந்தப் பதவிக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ள வயதைப் பொறுத்தவரை தகுதியுடையவராகக் கருதப்படுவர். இதற்காக அவர்கள் பிராந்தியப் படையில் பணிபுரிந்த பணி இடைமுறிவுக் காலங்கள் உட்பட மொத்த பணிக் காலமும் கணக்கில் எடுத்துக் கொள்ளப்படும்.

(எ) தொழில் நுட்பக் கல்வித் தகுதியுடையவர்களை வேலையின்மையிலிருந்து விடுவிப்பதற்காக விசேட பழகுவோர் பயிற்சித் திட்டத்தின்கீழ் பயிற்சி பெற்றவர்களைப் பொறுத்தவரை அவர்களுடைய அந்த பயிற்சிக் காலம் உயர்ந்த அளவு வயது வரம்பிலிருந்து குறைத்துக் கொள்ளப்படும்.

'சி' மற்றும் 'டி' பிரிவுகளின்கீழ் வரும் பதவிகளுக்கான தேர்வுகளைப் பொறுத்தவரையில் விண்ணப்பதாரரின் உச்ச வயதைக் கணக்கிடும் போது 1961-ஆம் ஆண்டின் பழகுவோர் பயிற்சித் திட்டத்தில் வரையறுக்கப்பட்டுள்ளபடி மாநில அரசு அல்லது அரசு சார்ந்த நிலையங்களில் பழகுவோர் பயிற்சித் திட்டத்தின்கீழ் பெற்ற பயிற்சிக் காலத்தையும் கழித்து கணக்கிடப்படும்.

(ஏ) "உடல் ஊனமுற்றோர், நிர்ணயிக்கப்பட்ட வயது வரம்பிற்கு மேல் பத்தாண்டுகள் வரை வயதுச் சலுகை பெறத் தகுதியுடையவரவார்கள். ஆனால், அவர்கள் மற்றபடி தேர்ந்தெடுக்கப்பட்ட பதவிக்குத் தகுதியானவர்களாயிருப்பதுடன் தேர்ந்தெடுக்கப்பட்ட பதவியில் கடமைகளை செவ்வனே முடிப்பதற்கு இவர்களது உடல் ஊனம் தடையாக இருக்காதென்று மருத்துவ அதிகாரிகளால் சான்றளிக்கப்பட வேண்டும்".

(ஐ) காலியிடங்கள் உள்ள ஒரு பதவிக்கு அனுபவம் ஏதேனும் கேட்கப்பட்டிருந்து பதவியில் உள்ள காலியிடங்கள் ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினருக்கு இன ஒதுக்கீடு செய்யப்பட்டிருப்பின் மேற்படி அனுபவம் இல்லாத ஆதி திராவிடர் மற்றும் பழங்குடி விண்ணப்பதாரர்களும் அவர்கள் தேர்ந்தெடுக்கப் பட்டால் சம்பந்தப்பட்ட விதி அரசினால் அவர்களுக்குச் சாதகமாக தளர்த்தப்படலாம் என்று நிபந்தனைக்குட்பட்டு விண்ணப்பிக்கலாம். அது போன்ற அனுபவம் இல்லாத விண்ணப்பதாரர்களின் விண்ணப்பங்கள் ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர்க்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட காலியிடங்களை நிரப்புவதற்கு முழுமையான தகுதிகள் பெற்ற ஆதி திராவிடர் மற்றும் பழங்குடி வகுப்பு விண்ணப்பதாரர்கள் கிடைக்காவிட்டால் மட்டுமே கருதப்படும்.

(ஒ) 'சி' மற்றும் 'டி' பிரிவுகளின் கீழ்வரும் பதவிகளுக்கு (அதாவது பதவியின் சம்பள விகிதத்தில் ஆரம்பச் சம்பளம் ரூ.1,045-க்கும் குறைவாகக் கொண்டவை) விண்ணப்பிக்கும் விண்ணப்பதாரர்கள் விடுவிக்கப்பட்ட பிணைத் தொழிலாளியாக அல்லது அப்படிப்பட்டவர்களின் புதல்வர் அல்லது திருமணமாகாத புதல்வியர்களாக இருப்பின் வயது வரம்பில் சலுகைகள் பெறத் தகுதி உடையவராவர். அவர்கள் பணி நியமனம் செய்யப்படும் வருடத்தில் ஜூலை மாதம் முதல் தேதி அன்று 40 வயது பூர்த்தியடையாதவராக இருந்தால் மேலே குறிப்பிடப்பட்ட 'சி' மற்றும் 'டி' பிரிவுகளின் கீழ்வரும் பதவிகளுக்கு விண்ணப்பிக்கலாம்.

குறிப்பு.—விடுவிக்கப்பட்ட பிணைத் தொழிலாளி என்று கோருகிற விண்ணப்பதாரரோ அல்லது அவர்களின் புதல்வர் அல்லது மணமாகாத புதல்வியர் 1976 பிணைத் தொழிலாளர் முறை (ஒழித்தல்) சட்டத்தின் வழிவகைப்படி விடுவிக்கப்பட்ட பிணைத் தொழிலாளிகள் என்பதற்கான சான்றிதழைக் கீழ்க்கண்ட படிவத்தில் சாதிச் சான்றிதழ் வழங்கக் கூடிய தகுதி வாய்ந்த அதிகாரியிடமிருந்து பெற்று அனுப்ப வேண்டும்.

சான்றிதழ்.

.................................................... மாவட்டம்

.................................................... வட்டம்

.................................... கிராமத்தில் வசித்துவரும்

திரு. .................................... என்பவருடைய

.................................... மகன்/மகள்/திருமண

மாகாத மகள் திரு./செல்வி ....................................

1976 பிணைத் தொழிலாளர் முறை (ஒழித்தல்)

சட்ட வழிவகைப்படி ....................................

அன்று விடுவிக்கப்பட்ட பிணைத் தொழிலாளி/இவருடைய பெற்றோர் விடுவிக்கப்பட்ட பிணைத் தொழிலாளி என்று சான்று அளிக்கிறேன்.

(ஓ) தெரிவு செய்யப்படும் ஆண்டின் ஜூலைத் திங்கள் முதல் நாளன்று 40 வயது முழுமையாகாதிருக்கும் தமிழ்நாடு அரசின் தற்காலிகப் பணியிலிருந்து விடுவிக்கப்பட்டவர்களும், அப்பணியில் தொடர்ந்து நீடிப்பவர்களும், தம் விண்ணப்ப நாள் வரையில் தற்காலிகமாகப் பணியாற்றிய பணிக்காலத்தை (தொடர்ச்சியாகவோ அல்லது தொடர்பின்றியோ) தம்முடைய வயதிலிருந்து கழித்துக் கணக்கிட்டுக் கொள்ள அனுமதிக்கப்படுவர்.

குறிப்பு.— மாநில அரசில் பணியாற்றி, ஆட்குறைப்புக் காரணமாகவோ அல்லது ஒழுங்கு நடவடிக்கை நீங்கலாக வேறு யாதொரு காரணத்திற்காகவோ பணியிலிருந்து விடுவிக்கப்பட்டவர்கள் மட்டுமே "பணி விடுப்பு செய்யப்பட்ட மாநில அரசு அலுவலர்களாகக் கருதப் படுவர்".

15.(அ) படைக் கலைப்பினால் தரைப்படை, கடற் படை அல்லது விமானப்படையிலிருந்து விடுவிக்கப் பட்டவர் என்று உரிமை கோருகிற விண்ணப்பதாரர் நியமனம் செய்யப்படுவதற்காகத் தேர்வு நடத்தப்படும் ஆண்டின் ஜூலை முதல் நாள் அன்று ஆதிதிராவிடர், பழங்குடியினர் மற்றும் பின்தங்கிய வகுப்பினரைச் சேர்ந்தவரானால் ஐம்பத்து மூன்று வயதுக்குக் குறைந்தவராகவும், மற்றவர்களுக்கு நாற்பத்தெட்டு வயதுக்குக் குறைந்தவராகவும் இருந்தால் அவர் ஒன்பதாவது பத்தியில் குறிப்பிடப்பட்டுள்ள ஆவணங்களுடன் அவரது கோரிக்கைக்கு ஆதாரமாக அவரது பணி விடுப்புச் சான்றிதழிலிருந்து (Discharge Certificate) தகுந்த முறையில் எடுக்கப்பட்டு உறுதியொப்பமிட்ட எடுகுறிப்பைப் பின்வரும் படிவத்தில் தாக்கல் செய்ய வேண்டும்.

(1) பணிவேட்பாளரின் பெயர்.
(2) வகித்த பதவி.
(3) படையில் சேர்ந்த தேதி.
(4) விடுவிக்கப்பட்ட தேதி.
(5) விடுவிக்கப்பட்டதற்கான காரணங்கள்.
(6) இராணுவத்தில் வேலை பார்த்தபோது நடத்தையும் ஒழுக்கமும்.

127079 சென்னை-600 008

(ஆ) தமிழ்நாடு மாநிலத்திலுள்ள மக்கள் தொகைக் கணக்கெடுப்பு நிறுவனத்தில் (Census Organisation) இருந்து ஏற்கெனவே விடுவிக்கப்பட்டுள்ளவரான அல்லது ஆட்குறைப்புக்கு ஆளாகும் நிலையில் இருப்பவரான அதிகப்படியான தற்காலிகப் பணியாளராக உரிமை கோருகிற விண்ணப்பதாரர் ஒருவர் மக்கள் தொகைக் கணிப்புக் கண்காணிப்பாளரிடமிருந்து (Superintendent of Census Organisation) பின்வரும் படிவத்தில் சான்றினைத் தாக்கல் செய்ய வேண்டும்.—

(1) பணி வேட்பாளரின் பெயர்

(2) மக்கள் தொகை கணக்கெடுப்பு நிறுவனத்தில் தற்காலிகமாகப் பணியாற்றிய பதவியின் விவரிப்பு

(3) வேலையின் விவரங்கள் தேதிகளுடன்.

(4) பணிவேட்பாளரின் பணியும் நடத்தையும் மனநிறைவு அளிப்பதாக இருந்தனவா?

(இ) 1964-ஆம் ஆண்டு ஜனவரி திங்கள் முதல் நாள் அல்லது அதற்குப் பிறகு பங்களாதேஷ் என்று இப்போது வழங்கப்படுகிற பிரதேசத்திலிருந்து குடியிருந்து தாம் இந்தியாவிற்கு இடம் பெயர்ந்தவர் என்று உரிமை கோருகிற விண்ணப்பதாரர், அந்தப் படிக்கான ஒரு சான்றிதழைத் தண்டகாரணிய திட்டத்தின் இடைத்தங்கல் மையங்களின் முகாம் தளவாயிடமிருந்தோ (Camp Commandant of the Transist Centres) அல்லது பல்வேறு மாநிலங்களிலுள்ள உதவி வழங்கு முகாம்களின் (Relief Camp) முகாம் தளவாயிடமிருந்தோ அல்லது பணிவேட்பாளர் தற்போதைக்கு வசிக்கிற வட்டாரங்களின் மாவட்ட மாஜிஸ்டிரேட்டிடமிருந்தோ (District Magistrate) பெற்றுத் தாக்கல் செய்ய வேண்டும்.

(ஈ) ஸ்ரீலங்கா அல்லது பர்மா அல்லது வியட்நாமிலிருந்து தாய்நாட்டுக்குத் திருப்பி அனுப்பப்பட்டவர் அல்லது ஸ்ரீலங்காவிலிருந்து தாயகம் திரும்ப இருப்போர் என்று உரிமை கோருகிற விண்ணப்ப

தாரர் ஒருவர் அதற்கான ஒரு சான்றிதழை வட்டாட்சியர் அல்லது ஊராட்சி ஒன்றிய ஆணையர் அல்லது நிலவரத்திற்கேற்ப ஸ்ரீலங்கா, பர்மா அல்லது வியட்நாமில் உள்ள உயர் ஆணையர் (High Commissioner) இடமிருந்து பெற்றுத் தாக்கல் செய்ய வேண்டும். பயண அனுமதிச் சீட்டு (Pass Port) போதுமான சான்றாக ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது. தாய்நாட்டுக்குத் திருப்பி அனுப்பப்பட்ட சரியான தேதிச் சான்றிதழில் காட்டப்பட்டிருத்தல் வேண்டும்.

(உ) பிராந்திய தரைப்படை அலுவலர் எனக் கோரும் விண்ணப்பதாரர் பிராந்திய தரைப்படையில் உள்ள ஒரு தகுதியுள்ள அலுவலரிடமிருந்து கீழ்க்காணும் இராணுவச் சான்றிதழைப் பெற்று அனுப்ப வேண்டும்:-

(i) விண்ணப்பதாரரின் பெயர்.

(ii) பிராந்திய இராணுவப் படையில் வகித்த பதவி

(iii) பிராந்திய இராணுவப் படைப் பிரிவில் நிரந்தரப் பணியாளராகப் பணியாற்றியுள்ளாரா? அல்லது பிராந்திய இராணுவ விதிகள் 33-இன் கீழ் பணியில் சேர்த்துக்கொள்ளப்பட்டாரா?

(iv) பிராந்திய இராணுவப் படையில் பணிபுரிந்த காலம்.முதல்/வரை

(v) பிராந்திய இராணுவப் படையில் இருக்கும் போது நடத்தை மற்றும் ஒழுக்கம்.

(vi) பணிக்காலத்தில் ஏதாவது தண்டனைகள் அளிக்கப்பட்டுள்ளதா? ஆம் எனில், விவரங்கள் தரவும்.

(ஊ) செய்தி மற்றும் மக்கள் தொடர்புத் துறையைச் சேர்ந்தவரெனக் கோரும் விண்ணப்பதாரர் வயதுச் சலுகை பெற விரும்பினால் செய்தி மற்றும் மக்கள் தொடர்புத் துறை இயக்குநரிடமிருந்து அரசு ஆணை பல்வகை எண் 1856, உள்துறை (செய்தி மற்றும் மக்கள் தொடர்பு நிர்வாகம்-1), நாள் 29.7.76-இன் படி பணிநீக்கம் செய்யப்பட்டவரென்றும் அவரது பதிவுருக்களில் அவரது நேர்மைக்குப் புறம்பாக எதுவும் குறிப்பிடப்படவில்லை என்றும் ஒரு சான்றிதழ் பெற்று விண்ணப்பத்துடன் இணைத்தனுப்ப வேண்டும். சான்றிதழில் மேலும் கீழ்க்கண்ட விவரங்கள் தரப்பட்டிருக்க வேண்டும்.—

1. பணிவேட்பாளர் பெயர்.
2. செய்தி மற்றும் மக்கள் தொடர்புத் துறையில் வகித்த பதவியின் பெயர்.
3. பணிக்காலம் ... முதல்/வரை
4. முறைப்படுத்தப்பட்டதா? அல்லது தற்காலிகமானதா?
5. பணிக்காலத்தில் பணி வேட்பாளர் தண்டனையோ அல்லது குறையுரையோ பெற்றாரா?
6. விண்ணப்ப நாளன்று பணி வேட்பாளர் மாநில அரசுப் பணியில் முறையான பதவியேதும் வகிக்கிறாரா?

16. விண்ணப்பம் ஒவ்வொன்றும் (அத்துடன் ஆவணங்கள் அனைத்தையும் பாதுகாப்பாக இணைத்து) கீழ்க்கண்டவாறு உறையின் மேல் எழுதி முகவரியிட்டு ஒப்புகைப் பதிவு அஞ்சலில் அனுப்பப்படுதல் வேண்டும்.

.................. நியமிக்கப்படுவதற்கான விண்ணப்பம்.

(பதவியின் பெயரைக் குறிப்பிடுக).

பெறுநர்:
செயலாளர்,
தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையம்,
அரசினர் தோட்டம்,
அண்ணா சாலை,
சென்னை-600 002.

விண்ணப்பப் படிவத்துடன் ஒரு ஒப்புகை அட்டை (Acknowledgement card) சேர்த்து பணி வேட்பாளருக்கு அனுப்பப்படுகிறது. விண்ணப்பம் அனுப்பும் போது பணிவேட்பாளர் ஒவ்வொருவரும் விண்ணப்பம் செய்யும் பதவியின் பெயரை அந்த ஒப்புகை அட்டையில் எழுத வேண்டும். மேலும் ஒப்புகை அட்டையில் அவரது முகவரியை எழுதி, போதுமான அஞ்சல் வில்லையை ஒட்டி அனுப்ப வேண்டும். இந்த அஞ்சல் அட்டையில்தான் விண்ணப்பம் பெற்றுக் கொண்டதற்கு ஒப்புகை (Acknowledgement) அனுப்பப்படும். ஒப்புகை அட்டையில் விண்ணப்பத்திற்கான வரிசை எண் கொடுக்கப்படும். இதன் தொடர்பாக இந்த அலுவலகத்திற்கு அனுப்பும் கடிதப் போக்குவரத்து அனைத்திலும் பணி வேட்பாளர் இந்த எண்ணைக் குறிப்பிட வேண்டும்.

17. நிர்ணயிக்கப்பட்ட தேதியிலோ அல்லது அதற்கு முன்போ விண்ணப்பங்கள் செயலாளரிடம் வந்து சேர வேண்டும். அந்தத் தேதிக்குப் பின்பு வரும் விண்ணப்பங்கள், கையொப்பம் இடப்படாத விண்ணப்பங்கள் உரிய படிவத்தில் இல்லாத விண்ணப்பங்கள், சரியாகவோ அல்லது முழுமையாகவோ நிரப்பப்படாத விண்ணப்பங்கள், நிர்ணயிக்கப்பட்ட சான்றிதழ்களுடனும் மற்றும் ஆவணங்களுடனும் குறிப்பிட்டப்பட்ட நாளன்று அல்லது அதற்கு முன்பு பெறப்படாத விண்ணப்பங்கள் மற்றும் இந்த விதிமுறைகளிலும் மற்றும் தேர்வாணையத்தின் அறிவிக்கை-விளம்பரத்திலும் கண்டுள்ள நிபந்தனைகள் சரிவர நிறைவேற்றப்படாது அனுப்பப்படும் விண்ணப்பங்கள் குறைபாடு உடையனவாகக் கருதப்பட்டு உடனடியாகத் தள்ளப்பட்டு விடும்.

விண்ணப்பப் படிவத்தைச் சரியாகவும் முழுமையாகவும் நிரப்புவதும் ஆணையத்தின் அறிவிக்கை-விளம்பரம் மற்றும் பணி வேட்பாளர்களுக்கான விதிமுறைகளிலும் கோரப்பட்டுள்ள எல்லா ஆவணங்களுடன் விண்ணப்பத்தை அனுப்புவதும் தேர்வின் ஒரு பகுதியாக அமையும். இது சம்பந்தமான தவறு ஏற்படுமானால், விண்ணப்பம் உடனடியாகத் தள்ளுபடி செய்யப்படுவதற்கு ஏதுவாகும்.

18. நியமனத்திற்குப் போட்டியிடத் தகுதியுடையவர்கள் எனத் தேர்வாணையத்தால் கருதப்படுபவர்கள் சென்னை அல்லது இம்மாநிலத்தின் வேறு மையத்தில் ஆணையத்தால் நேர்காணலுக்கு வருமாறு அழைக்கப்பட்டால் அவர்கள் தங்கள் சொந்தச் செலவில் வருவதற்கு ஆயத்தமாக இருத்தல் வேண்டும்.



19. எந்தப் பணியிடத்துக்கு ஆளெடுப்பதற்கான போட்டித் தேர்வு, நேர்காணல் முறையில் மட்டுமே உள்ள நிலையில் (interview only) அப்போட்டித் தேர்வுக்கு விண்ணப்பம் செய்தவர்களின் எண்ணிக்கை அமைந்துள்ள காலி இடங்களின் எண்ணிக்கையைக் கருத்தில் கொள்ளும் போது மிகவும் அதிகமாக இருந்தால் தகுதிபெற்றவர்களின் உயர் தகுதிகள், திறமைகள் ஆகியவற்றைக் கருத்தில் கொண்டு நியமனங்கள் ஒதுக்கீடு விதிகளின் பொருத்தத்திற்கிணங்க குழுவுக்குப் பொருத்தமாகத் தோன்றும் அளவுக்கு வாய்மொழி (நேர்காணல்) தேர்வுக்கு உட்படுவோர் எண்ணிக்கையைத் தேர்வாணையம் வரையறை செய்யலாம். அல்லது அவசியமென்று தேர்வாணையம் தீர்மானிக்குமானால் தகுதி பெற்ற விண்ணப்பதாரர்களை அவர்களது தரத்திற்கேற்ப எழுத்து மூலமான தேர்வுக்கு உட்படுத்தும். அதன் முடிவில் நேர்காணலுக்குத் தகுதியான நபர்களைக் குழு நிர்ணயம் செய்யும்.

20. விண்ணப்பதாரர் ஒருவரைப் பணிக்குத் தேர்வாணையம் தெரிந்தெடுப்பதாலேயே அது அப்பதவியில் அவரை நியமிக்கப்படுவதற்கு உத்தரவாதமளிப்பதாகாது.

21. நேரடி நியமிப்பின் மூலம் மற்றொரு பணிக்கு நியமிக்கப்படுவதற்குத் தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தால் தெரிந்தெடுக்கப்பட்ட விண்ணப்பதாரர் ஒருவர் ஏற்கெனவே அரசுப்பணி (மாநில அல்லது மத்திய) எதனிலும் பணியாற்றுபவராக இருப்பின் முந்தைய பணியின் அடிப்படையில், அடிப்படைச் சம்பளம் பயணப்படி முதலிய எந்தச் சலுகைகளுக்கும் உரிமையற்றவராவார். தமிழ்நாடு அரசு அல்லாத பிற அரசுப் பணியில் உள்ள ஒருவர் தெரிந்தெடுக்கப்பட்டு நியமனம் பெறுவாரானால் அந்த அரசின் கீழமைந்த முந்தைய பணியின் அடிப்படையில் விடுப்பு மற்றும் இடமாற்றக்கால ஊதியம் முதலியவற்றிற்குத் தமிழ்நாடு அரசின் கீழ் சலுகைகளுக்கு உரிமையற்றவராவார்.

22. (அ) தேர்வாணையத்தால் விளம்பரப்படுத்தப்பட்ட காலியிடங்களின் எண்ணிக்கை தோராயமானதாகும். தேர்வு நடப்பதற்கு முன்போ அல்லது தேர்வு நடக்கும் போதோ இருக்கும் காலியிடங்களின் நிலைமைக்கேற்ப அது எந்தச் சமயத்திலும் மாற்றம் செய்யப்படலாம்.

(ஆ) ஆதி திராவிடர், பழங்குடியினர் மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் சீர் மரபினர் மற்றும் பின்தங்கிய வகுப்பினருக்கு மற்றும் பெண் விண்ணப்பதாரர்களுக்கு இன ஒதுக்கீடுகள் விதி பொருந்துகின்ற இடத்திலெல்லாம் ஒதுக்கீடு செய்யப்பட்ட பதவிகளின் எண்ணிக்கை வரை எந்த அளவு தகுதியுள்ள பணிவேட்பாளர்கள் கிடைக்கிறார்களோ அந்த அளவு தேர்வு செய்யப்படும்.

ஆதி திராவிடர், பழங்குடியினர் மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் சீர் மரபினர் மற்றும் பிற்பட்ட வகுப்பைச் சேர்ந்த பணிவேட்பாளர்களும் பகிரங்கப் போட்டியின் மூலம் நிரப்பப்படும் காலியிடங்களுக்கும் தகுதியின் அடிப்படையில் தேர்வு பெறுவதற்குத் தகுதியுடையவர்களாவர். அவ்வாறு பகிரங்கப் போட்டி மூலம் நிரப்பப்படும் காலியிடத்திற்குத் தகுதியின் அடிப்படையில் ஆதிதிராவிடர், பழங்குடியினர் அல்லது மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் சீர் மரபினர் அல்லது பிற்பட்ட வகுப்பைச் சேர்ந்த விண்ணப்பதாரர் தேர்வு செய்யப்பட்டால் அவர்களுக்காக ஏற்கெனவே ஒதுக்கீடு செய்யப்பட்ட காலியிடங்கள் எந்த வகையிலும் பாதிக்கப்பட மாட்டாது.

23. பணிக்கான விளம்பரம் செய்யப்பட்ட காலத்தில் குறிப்பிடப்பட்ட சம்பளத்திற்கு மாறான சம்பள விகிதம் நியமனம் பெறுங்காலத்தில் இருக்குமானால் அவர் நியமன கால சம்பளவீதமே பெறுவார். பதவிக்கான சம்பளம் அவ்வப்போது செய்யப்படும் மாறுதலுக்குட்பட்டதாகும்.

24. ஒரு பதவிக்குத் தேர்வு செய்யப்பட்டு பணியில் அமர்த்தப்பட்ட பணிவேட்பாளர்கள் அரசினால் அவ்வப்போது வெளியிடப்படும் விதிகளில் வரையறுக்கப்பட்டுள்ள தகுதிகாண் பருவம் மற்றும் பயிற்சிகளை முடிப்பதுடன் குறிப்பிட்டுள்ள தேர்வுகளிலும் தேர்ச்சி பெற வேண்டும். அந்தத் தேர்வுகளில் தேர்ச்சி பெறத் தவறினால் அரசு வரையறுக்கும் தண்டனைகளுக்கு உட்பட நேரிடும்.

25. விதிக்கப்பட்ட தகுதிகாண் பருவத்திற்கு முன் எக்காலத்திலும் பணிக்கென நியமிக்கப்பட்ட பணி வேட்பாளரின் தகுதிகாண் பருவகாலம் இறுதி செய்யப்பட்டுப் பணியிலிருந்தும் அவர் நீக்கப்படலாம். பணிக்கான தகுதிகாண் பருவ காலத்திற்குள், தகுதிகாண் பருவத்தினருக்கென ஏதேனும் தேர்வு விதிக்கப்பட்டிருந்து அத்தேர்வில் தகுதிகாண் பருவத்தினர் தேர்ச்சியடையவில்லை என்றாலும் அல்லது மேற்குறிப்பிட்ட தகுதிகாண் பருவ முடிவில் அவர் பணிக்குப் பொருத்தமற்றவர் என்று கருதப்பட்டாலும், பணியிலிருந்து அவர் விலக்கப்படலாம்.

26. தேர்வாணையத்தின் தலைவரிடமோ அல்லது ஓர் உறுப்பினரிடமோ அவரது ஆதரவைப் பெற அல்லது நேர்முகமாக அல்லது கடிதத்தின் மூலம் செல்வாக்கைச் செலுத்த விண்ணப்பதாரர் எவரேனும் முயற்சிப்பாரானால், அவர் தகுதியற்றவராக்கப்படுவார். யாரேனும் ஓர் உறவினர், நண்பர், காப்பாளர். அலுவலர் அல்லது வேறொருவர், தேர்வாணையத்தின் தலைவரிடமோ அல்லது ஓர் உறுப்பினரிடமோ விண்ணப்பதாரரின் சார்பாகச் செல்வாக்கைச் செலுத்த முயற்சிப்பாரானாலும் விண்ணப்பதாரர் தகுதியற்றவராக ஆக்கப்படுவார்.

27. தேர்வாணையத்திற்குத் தெரிவிக்கப்படக் கருதும் தகவல் எதுவும் எழுத்து மூலம் செயலாளர் முகவரிக்கே எழுதப்பட வேண்டும். மறு தகவல் ஏதும் தேவைப்பட்டால் போதிய அஞ்சல் வில்லையுடன் கூடிய தகவல் அனுப்பப்பட வேண்டிய முகவரியிட்ட உறையும் அதனுடன் அனுப்ப வேண்டும். எனினும் தேர்ந்தெடுக்கப்படாமைக்கான காரணங்களைக் கேட்டும், வயது வரம்பு மற்றும் பிற தகுதிகளுக்கு விலக்கு அளிக்கக் கோரியும் வரும் கடிதங்கள் கவனிக்கப்படமாட்டா.

28. பணி வேட்பாளர்களிடமிருந்து மட்டுமே வரும் முறையீடுகளைத் தேர்வாணையம் பெற்றுக் கொள்ளும். ஒரு வழக்கறிஞர் அல்லது பிரதிநிதி பெயர்களில் வரும் கடிதங்கள் கவனிக்கப்படமாட்டா.

29. நடத்தை மற்றும் பண்பு பற்றிய சான்றிதழ் உள்ளிட்ட எந்தச் சான்றிதழ்களிலும் காணப்படும் திருத்தங்கள் அல்லது மோசடியாக மாறுதல் செய்தல் கடுந்தவறாகக் கருதப்படும். அதற்குக் காரணமாக உள்ள விண்ணப்பதாரர்கள், தேர்வாணையம் நடத்தும் தேர்வுகளில் கலந்து கொள்ளும் உரிமை பறிக்கப் படலாம். மேலும் இதன் விளைவாக அரசுப் பணியிலேயே சேர்வதற்கான உரிமையை இழக்க நேரலாம் என்றும் விண்ணப்பதாரர்கள் எச்சரிக்கை செய்யப்படுகிறார்கள். பணிவேட்பாளர்கள் அவர்களுடைய கல்வித் தகுதிகள் அல்லது பல்வேறுபட்ட பாடங்களில் பெற்ற தேர்ச்சி அல்லது அவர்கள் வெவ்வேறு நிலைகளில் பெற்ற அனுபவம் அல்லது அவர்களுடைய சமயம் அல்லது சாதி முதலியனவை பற்றித் தவறான தகவல்கள் அவர்களுடைய விண்ணப்பத்தில் கொடுத்திருந்தால், தேர்வாணையம் முடிவு செய்வதைப் பொறுத்து தேர்வாணையம் நடத்தும் தேர்வுகளில் கலந்து கொள்ளும் உரிமை நிரந்தரமாகவோ அல்லது தேர்வாணையத்தினால் முடிவு செய்யப்பட்ட ஒரு குறிப்பிட்ட காலத்திற்கோ ரத்து செய்யப்படலாம். மேலும் முன்பு தேர்வாணையத்திற்கு விண்ணப்பம் செய்தது அல்லது இலவச அனுமதி சலுகையில் தேர்வு எழுதியது அல்லது அரசு, உள்ளாட்சி மன்றங்கள் அல்லது அரசுத் துறைக் கழகங்கள் முதலியவற்றில் பணி புரிந்தது முதலியவை ,அல்லது குற்றங்களுக்கான தண்டனை பெற்றது, மைய அல்லது மாநிலத் தேர்வாணையத்தால் தேர்வு எழுதும் உரிமை ரத்து செய்யப்பட்டது அல்லது தகுதியற்றதாக அறிவிக்கப்பட்டது அல்லது அரசியல் இயக்கங்களில் ஈடுபட்டது அல்லது மாநில சட்டசபை, நாடாளுமன்றம் அல்லது உள்ளாட்சி மன்றங்களுக்கு வேட்பாளராகப் போட்டியிட்டது போன்ற உண்மைகளை மறைத்திருந்தாலும் அதே தண்டனை அளிக்கப்படும்.

30. மேலும், தேர்வு எழுதும் அறையில் மற்ற விண்ணப்பதாரர்களுடைய விடைத் தாள்களிலிருந்து பார்த்து எழுதுதல் அல்லது மற்ற விண்ணப்பதாரர்கள் தன்னுடைய விடைத்தாள்களிலிருந்து பார்த்து எழுத அனுமதித்தல் அல்லது புத்தகங்களில்லாமல் எழுத வேண்டிய தேர்வுகளுக்கு அச்சிடப்பட்ட அல்லது தட்டச்சு செய்யப்பட்ட அல்லது கையினால் எழுதப் பட்ட புத்தகங்கள் அல்லது குறிப்புகளிலிருந்து பார்த்து எழுதுதல் அல்லது அனுமதிக்கப்பட்ட புத்தகங்களிலிருந்து பார்த்து எழுத வேண்டிய தேர்வுகளுக்கு அனுமதிக்கப்படாத புத்தகங்கள் அல்லது குறிப்புகளிலிருந்து பார்த்து எழுதுதல் மற்றும் தாராளமாக மதிப்பீடு செய்யும்படியும் மிகவும் பரிவுகாட்டும்படியும் விடைத்தாள்களில் தேர்வாளர்களுக்கு முறையீடுகள் எழுதுதல், வினாவிற்குத் தொடர்பில்லாதவைகளை அவர்களுடைய விடைத்தாள்களில் எழுதுதல் அல்லது தேர்வாணையத்தின் மீது தவறான அல்லது அவதூறான குற்றச் சாட்டுகளை முறையீடாகவோ தேர்வாணையத்திற்கு அல்லது வேறு எந்த அதிகாரிக்கும் எழுதுவது போன்றவற்றில் ஈடுபடும் பணிவேட்பாளர்கள் தேர்வாணையம் முடிவெடுத்து நிர்ணயிக்கக் கூடிய கால அளவிற்குத் தேர்வு எழுதுவதினின்றும் தள்ளி வைக்கப்படுவார்கள்.

31. எழுத்துத் தேர்வில் தோல்வி பெற்றதற்கு அல்லது எழுத்துத் தேர்வு அல்லது நேர்முகத் தேர்வின் முடிவில் தேர்ச்சி பெறாததற்கு விவரங்கள் கேட்டோ அல்லது அவர்களுடைய விடைத்தாள்களை மறுமுறை திருத்தும்படி கேட்டோ விண்ணப்பதாரர்களிடமிருந்து வரும் கோரிக்கைகள் கவனிக்கப்படமாட்டா. எனினும் தேவையான நியாயமான காரணங்கள் இருப்பின் தேர்வாணையம் அதன் கருத்தில் மறுமுறை திருத்தம் செய்ய வேண்டியது அவசியம் எனக்கருதினால் அந்த விடைத்தாள்களை மறுமுறை திருத்தம் செய்வதற்குரிய உரிமையைத் தேர்வாணையம் வைத்துக் கொள்கிறது.

32. எழுத்துத் தேர்விற்கான விதிமுறைகள்:

குறிக்கோள் மாதிரி வினா (Objective type of papers) தாள்களில் (பார்வையற்ற வேட்பாளரைத் தவிர) பணி வேட்பாளர்தான் விடைகளைக் குறிக்க வேண்டும். எந்தச் சந்தர்ப்பத்திலும் அவர், அவருக்குப் பதிலாக வேறொருவரின் உதவியோடு குறிப்பிடுவதற்கு அனுமதிக்கப்படமாட்டார்.

வழக்காறில் உள்ள வினா (Conventional type papers) பார்வையற்ற வேட்பாளரைத் தவிர, பணிவேட்பாளர் தன் கையாலேயே மையில் எழுத வேண்டும். எந்த சந்தர்ப்பத்திலும் அவர் ஒரு உதவியாளரின் (Scribe) உதவியோடு தேர்வு எழுதுவதற்கு அனுமதிக்கப்படமாட்டார்.

33. பார்வையற்ற பணிவேட்பாளருக்கு உதவியாளர் உதவி செய்வதற்கான அறிவுரைகள்.

ஒரு பார்வையற்ற பணிவேட்பாளர் கீழ்க்கண்ட நிபந்தனைகளுக்கு உட்பட்டு உதவியாளருடன் (Scribe) தேர்வு எழுத அனுமதிக்கப்படுகிறார்.—

1. தேர்வாணையத்தின் அறிவிக்கைகளின்படி ஒரு பார்வையற்ற பணி வேட்பாளர், பணிக்காக விண்ணப்பிக்கும்போது அரசாங்க மருத்துவ அதிகாரியிடம், "இவர் முழுமையிலும் பார்வையற்றவர். இவரால் சுயமாகத் தேர்வு எழுத முடியாது" என்று அறிவிக்கும் ஒரு சான்றிதழ் பெற்று தேர்வாணையத்திற்கு அளிக்க வேண்டும்.

2. விண்ணப்பத்தின் தலைப்பில் பெரிய எழுத்துக்களில் இது பார்வையற்றவரின் விண்ணப்பம் எனக் குறிக்க வேண்டும்.

3. பார்வையற்றவர்களுக்கான தேர்வுகள் சென்னை நகரத்தில் மட்டுமே நடைபெறும்.

4. உதவியாளர்களை (Scribe) தேர்வாணையமே நியமித்து அவர்களுக்கு ஊதியம் தேர்வாணையத்தாலேயே வழங்கப்படும்.

5. பார்வையற்ற பணிவேட்பாளர்கள் தலைமை கண்காணிப்பாளரின் நேரடி மேற்பார்வையின் கீழ் தனியான அறையிலேயே தேர்வு எழுத அனுமதிக்கப்படுவர். அவர்கள் தேர்வு எழுதுவதற்கு அரைமணி கூடுதல் நேரம் வழங்கப்படும்.

6. பார்வையற்ற பணிவேட்பாளர்கள் தன் வாய் மொழியாக கூறியதைத்தான் உதவியாளர் விடைத்தாட்களில் எழுதியுள்ளார் என்பதை உறுதி செய்ய, உதவியாளர் தன்னால் இதுவரை விடைத் தாள்களில் எழுதப்பட்டுள்ளதை பார்வையற்ற பணிவேட்பாளருக்கு தேர்வு முடிந்ததும் படித்துக் காட்ட வேண்டும். தேர்வாணையத்தின் பார்வைக்காகப் பார்வையற்ற வேட்பாளர் இதற்கான சான்றிதழை எழுத்து மூலமாகத் தேர்வாணையத்திற்கு வழங்கவேண்டும்.

7. பார்வையற்ற பணிவேட்பாளர் வாய்மொழியாகக் கூறும் அனைத்தும் ஒலிப்பதிவு நாடாவில் பதிவு செய்யப்படும்.

அறிவுரைகள் (1) மற்றும் (2)ன்படி இல்லாத எந்த ஒரு விண்ணப்பமும் தள்ளுபடி செய்யப்படும்.

## இணைப்பு

### (அ) ஆதிதிராவிடர்கள் பட்டியல்

1. ஆதி ஆந்திரர்
2. ஆதி திராவிடர்
3. ஆதி கர்நாடகர்
4. அஜிலா
5. அருந்ததியார்
6. அய்யனவர் (கன்னியாகுமரி மாவட்டத்திலும், திருநெல்வேலி மாவட்டம் செங்கோட்டை வட்டத்திலும்)
7. பைரா
8. பகூடா
9. பண்டி
10. பெல்லாரா
11. பரதர் (கன்னியாகுமரி மாவட்டத்திலும், திருநெல்வேலி மாவட்டம் செங்கோட்டை வட்டத்திலும்)



12. சக்கிலியன்
13. சாலாவாடி
14. சாமர் முச்சி
15. சண்டாளா
16. செருமான்
17. தேவேந்திர குலத்தான்
18. டோம், தொம்பரா, பைதி, பானோ
19. தொம்பன
20. கொடகலி
21. கொட்டா
22. கோசாங்கி
23. ஹொலையா
24. ஜக்கலி
25. ஜம்புவுலு
26. கடையன்
27. கக்காளன் (கன்னியாகுமரி மாவட்டத்திலும், திருநெல்வேலி மாவட்டம் செங்கோட்டை வட்டத்திலும்)
28. கல்லாடி
29. கணக்கன் பாடண்ணா (நீலகிரி மாவட்டத்தில)
30. கரிம்பாலன்
31. கவரா (கன்னியாகுமரி மாவட்டத்திலும், திருநெல்வேலி மாவட்டம் செங்கோட்டை வட்டத்திலும்)
32. கோலியன்
33. கூசா
34. கூத்தன், கூடன் (கன்னியாகுமரி மாவட்டத்திலும், திருநெல்வேலி மாவட்டம் செங்கோட்டை வட்டத்திலும்)
35. குடும்பன்
36. குறவன், சித்தனார்
37. மாடரி
38. மாதிகா
39. மைலா
40. மாலா
41. மன்னன் (கன்னியாகுமரி மாவட்டத்திலும், திருநெல்வேலி மாவட்டம் செங்கோட்டை வட்டத்திலும்)
42. மாவிலான்
43. மோகர்
44. முண்டலா
45. நலகேயவா
46. நாயாதி
47. பாதண்ணன் (கன்னியாகுமரி மாவட்டத்திலும், திருநெல்வேலி மாவட்டம் செங்கோட்டை வட்டத்திலும்)
48. பகடை
49. பள்ளன்
50. பள்ளுவன்
51. பம்பாடா
52. பாணன் (கன்னியாகுமரி மாவட்டத்திலும், திருநெல்வேலி மாவட்டம் செங்கோட்டை வட்டத்திலும்)
53. பஞ்சமா
54. பன்னாடி
55. பன்னியாண்டி
56. பறையன், பரயன், சாம்பவார்
57. பரவன் (கன்னியாகுமரி மாவட்டத்திலும், திருநெல்வேலி மாவட்டம் செங்கோட்டை வட்டத்திலும்)
58. பதியன் (கன்னியாகுமரி மாவட்டத்திலும், திருநெல்வேலி மாவட்டம் செங்கோட்டை வட்டத்திலும்)
59. புலையன், சேரமார்
60. புதிரைவண்ணான்
61. ராணேயர்
62. சாமகாரா
63. சாம்பான்
64. சபரி
65. செம்மான்
66. தாண்டன் (கன்னியாகுமரி மாவட்டத்திலும், திருநெல்வேலி மாவட்டம் செங்கோட்டை வட்டத்திலும்)
67. தோட்டி
68. திருவள்ளுவர்
69. வல்லோன்
70. வள்ளுவன்
71. வண்ணான் (கன்னியாகுமரி மாவட்டத்திலும், திருநெல்வேலி மாவட்டம் செங்கோட்டை வட்டத்திலும்)
72. வாத்திரியன்
73. வேலன்
74. வேடன் (கன்னியாகுமரி மாவட்டத்திலும், திருநெல்வேலி மாவட்டம் செங்கோட்டை வட்டத்திலும்)
75. வெட்டியான்
76. வேட்டுவன் (கன்னியாகுமரி மாவட்டத்திலும், திருநெல்வேலி மாவட்டம் செங்கோட்டை வட்டத்திலும்)

### (ஆ) பழங்குடி வகுப்பினர் பட்டியல்

1. ஆதியன்
2. ஆரநாடான்
3. எரவள்ளன்
4. இருளர்
5. காடர்
6. கம்மாரா (கன்னியாகுமரி மாவட்டத்திலும், திருநெல்வேலி மாவட்டம் செங்கோட்டை வட்டமும் நீங்கலாக)
7. காணிக்காரன், காணிக்கார் (கன்னியாகுமரி மாவட்டத்திலும், திருநெல்வேலி மாவட்டம் செங்கோட்டை வட்டத்திலும்)
8. காணியான், கணியன்
9. காட்டுநாயகன்
10. கொச்சவேலன்
11. கொண்டகாப்புகள்
12. கொண்டா ரெட்டிகள்
13. கொராகா
14. கோட்டா (கன்னியாகுமரி மாவட்டத்திலும், திருநெல்வேலி மாவட்டம் செங்கோட்டை வட்டம் நீங்கலாக)
15. குடியா, மேலக்குடி
16. குறிச்சன்
17. குறும்பர்கள் (நீலகிரி மாவட்டத்தில)
18. குறுமன்கள்
19. மகா மலசார்
20. மலை அரையன்
21. மலைப்பண்டாரம்
22. மலைவேடன்
23. மலக்குறவன்
24. மலசார்
25. மலயாளி (தர்மபுரி, வடஆற்காடு, புதுக்கோட்டை, சேலம் தென் ஆற்காடு, திருச்சிராப்பள்ளி மாவட்டங்களில்)
26. மலயக்கண்டி
27. மன்னன்
28. முடுகர், முடுவன்
29. முத்துவன்
30. பள்ளேயன்
31. பள்ளியன்
32. பள்ளியர்
33. பாணியன்
34. சோலகா
35. தோடர் (கன்னியாகுமரி மாவட்டத்திலும், திருநெல்வேலி மாவட்டம் செங்கோட்டை வட்டமும் நீங்கலாக)
36. உரளி

### (இ) பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் பட்டியல்

1. தொழு அல்லது துளுவ வேளாளர் உட்பட அகமுடையார்
2. அகரம் வெள்ளான் செட்டியார்
3. ஆழ்வார், அழவர் மற்றும் அளவர் (கன்னியாகுமரி மாவட்டத்திலும், திருநெல்வேலி மாவட்டம் செங்கோட்டை வட்டத்திலும்)
4. கோவை (திருச்சிராப்பள்ளி மற்றும் புதுக்கோட்டை மாவட்டங்களைத் தவிர)
5. அன்சார்
6. அரயர், நுலயர் (கன்னியாகுமரி மாவட்டத்திலும், திருநெல்வேலி மாவட்டம் செங்கோட்டை வட்டத்திலும்)
7. அர்ச்சகர வேளாளர்
8. ஆர்யவதி (கன்னியாகுமரி மாவட்டத்திலும், திருநெல்வேலி மாவட்டம் செங்கோட்டை வட்டத்திலும்)
9. ஆயிர வைசியர்
10. படகர்
11. பில்லவர்
12. பொண்டில்
13. போயர் (திருச்சிராப்பள்ளி, புதுக்கோட்டை, நீலகிரி, சேலம் மற்றும் தர்மபுரி மாவட்டங்கள் தவிர)
    பெத்தபோயர் (திருச்சிராப்பள்ளி மற்றும் புதுக்கோட்டை மாவட்டங்கள் தவிர)
    ஒட்டர்கள் (தஞ்சாவூர், திருச்சிராப்பள்ளி, புதுக்கோட்டை மற்றும் மதுரை காயிதே மில்லத் மாவட்டங்கள் தவிர)
    கல் ஒட்டர்கள் (செங்கை-அண்ணா, இராமநாதபுரம், பசும்பொன் தேவர் திருமகன், காமராஜர், மதுரை, காயிதே மில்லத், புதுக்கோட்டை, திருச்சிராப்பள்ளி, திருநெல்வேலி கட்டபொம்மன், சிதம்பரனார் மற்றும் சேலம் மாவட்டங்கள் தவிர)

நெல்லூர் பேட்டை ஒட்டர்கள் (வட ஆர்க்காடு மாவட்டம் தவிர)

தூமாரி ஒட்டர்கள் (சேலம் மாவட்டம் தவிர)

14. சக்காலா (பசும்பொன் தேவர் திருமகன், காமராஜர், இராமநாதபுரம், தஞ்சாவூர், புதுக்கோட்டை, திருச்சிராப்பள்ளி, மதுரை, காயிதே மில்லத் மற்றும் நீலகிரி மாவட்டங்கள் தவிர)
15. சயலக்காரர் (கன்னியாகுமரி மாவட்டத்திலும், திருநெல்வேலி மாவட்டம் செங்கோட்டை வட்டத்திலும்)
16. செட்டு அல்லது செட்டி (கோட்டார் செட்டி, ஏலூர் செட்டி, பாத்திர செட்டி, வளையல் செட்டி, புதுக்கடை செட்டி உள்பட) (கன்னியாகுமரி மாவட்டத்திலும், திருநெல்வேலி மாவட்டம் செங்கோட்டை வட்டத்திலும்)
17. சௌத்திரி
18. ஆதி திராவிட வகுப்பிலிருந்து மதம் மாறியவர்கள் (கல்வி நிறுவனங்கள் மற்றும் அரசுப் பணியில் இட ஒதுக்கீட்டு நோக்கத்திற்காக எந்தத் தலைமுறையில் மதம் மாறியிருப் பினும்)
19. சி.எஸ்.ஐ. முன்னாள் எஸ்.ஐ.யு.சி. (கன்னியாகுமரி மாவட்டத்திலும், திருநெல்வேலி மாவட்டம் செங்கோட்டை வட்டத்திலும்)
20. தொங்க தாசரிகள் (செங்கை அண்ணா, திருச்சிராப்பள்ளி, புதுக்கோட்டை, சென்னை மற்றும் சேலம் மாவட்டங்கள் தவிர)
21. தக்கானி முஸ்லீம்
22. தேவாங்கா, சேடர்
23. டோம் (புதுக்கோட்டை மற்றும் திருச்சிராப்பள்ளி மாவட்டங்கள் தவிர)
தொம்மார்கள் (தஞ்சாவூர், புதுக்கோட்டை மற்றும் வட ஆர்க்காடு மாவட்டங்கள் தவிர)
24. துதி குலா
25. ஏனாதி
26. ஏழவதி (கன்னியாகுமரி மாவட்டத்திலும், திருநெல்வேலி மாவட்டம் செங்கோட்டை வட்டத்திலும்)
27. எழுத்தச்சர் (கன்னியாகுமரி மாவட்டத்திலும், திருநெல்வேலி மாவட்டம் செங்கோட்டை வட்டத்திலும்)
28. எழுவா (கன்னியாகுமரி மாவட்டத்திலும், திருநெல்வேலி மாவட்டம் செங்கோட்டை வட்டத்திலும்)
29. கங்கவார்
30. கவரா, கவரை மற்றும் வடுகா (வடுவர்), (கம்மா, காப்பு, பலிஜா மற்றும் ரெட்டி தவிர)
31. கௌண்டர்
32. கௌடா (கம்மாளர், கலாலி மற்றும் அனுப்ப கௌண்டர் உள்பட)
33. ஹெக்டே
34. இடிகா
35. இல்லத்துப் பிள்ளைமார், இல்லு வா, எழுவர், மற்றும் இல்லத்தார்
36. ஜெட்டி
37. ஜோகி (செங்கை-அண்ணா, மதுரை, காயிதே மில்லத், தென்னார்க்காடு மற்றும் வட ஆர்க்காடு மாவட்டங்கள் தவிர)
38. கப்போரா
39. கைக்கோளர், செங்குந்தர்
40. காலாடி (பசும்பொன் தேவர் திருமகன், காமராஜர், இராமநாதபுரம், மதுரை, காயிதே மில்லத், தஞ்சாவூர், புதுக்கோட்டை மற்றும் திருச்சிராப்பள்ளி மாவட்டங்கள் தவிர)
41. கலரி குருப், கலர் பணிக்கர் உள்பட (கன்னியாகுமரி மாவட்டத்திலும், திருநெல்வேலி கட்ட பொம்மன் மாவட்டத்தின் செங்கோட்டை வட்டத்திலும்)
42. கலிங்கி
43. கள்ளர் (ஈசநாட்டுக் கள்ளர், கந்தர்வ கோட்டை (தஞ்சாவூர் மற்றும் புதுக்கோட்டை மாவட்டங்கள் தவிர) கள்ளர்கள் உட்பட கூட்டப்பால் கள்ளர்கள் (திருச்சிராப்பள்ளி மற்றும் புதுக்கோட்டை மாவட்டங்கள் தவிர) பிறமலை கள்ளர்கள் (பசும்பொன் தேவர் திருமகன், காமராஜர், இராமநாதபுரம், மதுரை, காயிதே மில்லத், புதுக்கோட்டை மற்றும் தஞ்சாவூர் மாவட்டங்கள் தவிர) பெரிய சூரியர் கள்ளர்கள் (திருச்சிராப்பள்ளி மற்றும் புதுக்கோட்டை மாவட்டங்கள் தவிர)
44. கள்ளர் குல தொண்டமான்
45. கால்வே கௌண்டர்
46. கம்பர்
47. கம்மாளர் அல்லது விஸ்வகர்மா, விஸ்வகர்மளா (தட்டார், பொற்கொல்லர், தச்சர், கல்தச்சர், கன்னார், விஸ்வ பிராம்மண கருமார், கொல்லர் உட்பட)
48. கனி, கணிக, கனியர், பணிக்கர்
49. கனியால வேளாளர்
50. கன்னட சைனிதர், கன்னடியர் (மாநில முழுவதும்) மற்று தாள பலன்ஜிகா (கோயம்புத்தூர், பெரியார் மற்றும் நீலகிரி மாவட்டங்களில்)
51. கன்னடிய நாயுடு
52. கற்பூர செட்டியார்
53. கருணிகர் (சீர்கருணிகர், ஸ்ரீகருணிகர், சரட்டு கருணிகர், கைகட்டிகருணிகர், மாத்துவழிக் கணக்கர், சோழி கணக்கர், கன்னம்பு கருணிகர்)
54. காசிக்கார செட்டியார்
55. கடேசர் பட்டம் கூட்டி
56. கவுத்தியர்
57. கேரள முதலி
58. கார்ஜி
59. கத்ரி
60. கொங்கு வைஷ்ணவா
61. கொங்கு வேளாளர்கள் (வேளாள கௌண்டர், நாட்டுக் கௌண்டர், நரம்புக் கட்டி கௌண்டர், திருமுடி வெள்ளாளர், தொண்டு வெள்ளாளர், பால கௌண்டர், பூசாரி கௌண்டர், அனுப்ப வேளாள கௌண்டர், குரும்பக் கௌண்டர், படைத்தலைக் கௌண்டர், செந் தலைக் கௌண்டர், பவளங்கட்டி வெள்ளாள கௌண்டர், பால வெள்ளாள கௌண்டர், சங்கு வெள்ளாள கௌண் டர் மற்றும் ரத்தினகிரி கௌண்டர் உட்பட)
62. கோப்பல வேலமா
63. கோட்டேயர்
64. கிருஷ்ணவாகா (கன்னியாகுமரி மாவட்டத்திலும் மற்றும் திருநெல்வேலி கட்டபொம்மன் மாவட்டத்திலுள்ள செங் கோட்டை வட்டத்திலும்)
65. குடிகார வேளாளர்
66. குடும்பி (கன்னியாகுமரி மாவட்டத்திலும் மற்றும் திருநெல வேலி கட்டபொம்மன் மாவட்டத்திலுள்ள செங்கோட்டை வட்டத்திலும்)
67. குக வேளாளர்
68. குஞ்சிடிகர்
69. லப்பை (ராவுத்தர் மற்றும் மரைக்காயர் உட்பட அவர்தம் பேசும் மொழி, தமிழ், அல்லது உருதுவாக இருப்பினும்)
70. லம்பாடி
71. இலத்தீன் கத்தோலிக்கர்கள் (கன்னியாகுமரி மாவட்டத் திலும், திருநெல்வேலி கட்டபொம்மன் மாவட்டம் செங் கோட்டை வட்டத்திலும்)
72. லிங்காயத் (ஜங்கமா)
73. மராட்டியர் (பிராமணரல்லாதவர் நாம்தேவ் மராட்டியர் உட்பட)
74. மலையர்
75. மாலி
76. மோனியகார்
77. மாப்பிள்ளா
78. மறவர் (தஞ்சாவூர், புதுக்கோட்டை, இராமநாதபுரம், பசும்பொன் தேவர் திருமகன், காமராஜர், திருநெல்வேலி கட்டபொம்மன், சிதம்பரனார் மாவட்டங்கள் தவிர) கருமறவர் அப்பநாடு தொண்டயம் கோட்டை மறவர் உட்பட (பசும்பொன் தேவர் திருமகன், காமராஜர், இராமநாதபுரம், மதுரை, மற்றும் காயிதே மில்லத் மாவட்டங்கள் தவிர) மற்றும் செம்பநாடு மறவர் (பசும்பொன் தேவர் திருமகன், காமராஜர் மற்றும் இராமநாதபுரம் மாவட்டங்கள் தவிர)
79. மூன்று மண்டை என்பத்து நாலு ஊர் சோழிய வேளாளர்
80. மூப்பன்
81. முக்குவர் அல்லது முகயர் (கிருஸ்துவ மதத்திற்கு மதம் மாறியவர் உட்பட)
82. முத்து ராஜா, முத்து ராச்சா, முத்திரியர், முத்திரையர் மற்றும் முத்தரையர்
83. நாடார், சாணார் மற்றும் கிராமணி (கிறிஸ்துவ நாடார், கிறிஸ்துவ சாணார், மற்றும் கிறிஸ்தவ கிராமணி உட்பட)
84. நகரம்
85. நாயக்கர் (கன்னியாகுமரி மாவட்டத்திலும், திருநெல்வேலி மாவட்டம் செங்கோட்டை வட்டத்திலும்)
86. நன்குடிவேளார்
87. நாஞ்சில் முதலி (கன்னியாகுமரி மாவட்டத்திலும், திருநெல வேலி கட்டபொம்மன் மாவட்டம் செங்கோட்டை வட்டத்தி லும்)
88. ஓடர் (கன்னியாகுமரி மாவட்டத்திலும், திருநெல்வேலி கட்டபொம்மன் மாவட்டம் செங்கோட்டை வட்டத்திலும்)
89. ஊதியா
90. ஊற்று வளநாட்டு வேளாளர்
91. ஒ.பி.எஸ் வேளாளர்
92. உவச்சர்
93. பய்யூர் கோட்ட வேளாளர்
94. பாமுலு
95. பாணர் (கன்னியாகுமரி மாவட்டத்திலும், திருநெல்வேலி கட்டபொம்மன் மாவட்டத்தின் செங்கோட்டை வட்டம்



தவிர. அங்கு இவ்வகுப்பினர் ஆதிதிராவிடர்களாக அழைக்கப்படு கின்றனர்)
96. பாளி சைவன் (வீரகொடி வேளாளர் உட்பட)
97. பன்னையார் (கன்னியாகுமரி மாவட்டத்தில் கத்திக்காரர் உட்பட)
98. பன்னிரண்டாம் செட்டியார் அல்லது உத்தமசெட்டியார்
99. கிறிஸ்டியன் பரவர்
100. பார்க்கவகுலம் (சுருதிமார், நத்தமார், மலையமார், மூப்பனார், நைனார் உட்பட)
101. பெரிக்கி (பெரிக்கே பலிஜா உட்பட)
102. பெரும்சொன்னர் (கன்னியாகுமரி மாவட்டத்திலும், திருநெல்வேலி கட்டபொம்மன் மாவட்டம் செங்கோட்டை வட்டத்திலும்)
103. பொடிகார வேளாளர்
104. பூலுவ கவுண்டர்
105. பொராயா
106. புலவர் (கோயம்புத்தூர் மற்றும் பெரியார் மாவட்டங்களில்)
107. புல்லுவர் அல்லது பூலுவர்
108. பூசலா
109. ரெட்டி (கஞ்சம்)
110. சாது செட்டி (தெலுங்கு செட்டி, 24 மனை தெலுங்கு செட்டி உட்பட)
111. சக்கரவார் அல்லது கவதி (கன்னியாகுமரி மாவட்டத்திலும், திருநெல்வேலி மாவட்டம் செங்கோட்டை வட்டத்திலும்)
112. சாலிவாகனர்
113. சாலியர், பத்மசாலியர், பட்டுசாலியர், பட்டாரையர், ஆதவியார்
114. சவலக்காரர்
115. சேனைத் தலைவர் சேனைக் குடியர் மற்றும் இல்லை வாணியர்
116. சேக்
117. சௌராஷ்டிரா (பட்டு நூல்காரர்)
118. சோழிய வெள்ளாளர் (சோழவெள்ளாளர், வெற்றிலைக் காரர், கொடிக்கால்காரர், மற்றும் கீரைக்காரர் உட்பட)
119. ஸ்ரீசயர்
120. சுந்தரம் செட்டி
121. சையத்
122. தொகடவீர க்ஷத்திரியா
123. தோல்கொல்லர் (கன்னியாகுமரி மாவட்டத்திலும், திருநெல்வேலி கட்டபொம்மன் மாவட்டம் செங்கோட்டை வட்டத்திலும்)
124. துளுவ நாயக்கர் மற்றும் வெற்றிலைக்காரர் நாயக்கர்
125. தொரையார்
126. கோரியர்
127. உக்கிரகுல க்ஷத்திரிய நாயக்கர்
128. உப்பாரா, உப்பிலியா மற்றும் சகாரா
129. ஊராளிக்கவுண்டர் (திருச்சிராப்பள்ளி மற்றும் புதுக் கோட்டை மாவட்டங்கள் தவிர, மற்றும் ஒருடைய கவுண்டர் அல்லது ஊருடைய கவுண்டர் (மதுரை, காயிதே மில்லத், கோயம்புத்தூர், பெரியார், திருச்சிராப்பள்ளி, புதுக் கோட்டை மற்றும் சேலம் மாவட்டங்களில்)
130. வாரிக்காரநாயக்கர்
131. வல்லம்பர்
132. வால்மீகி
133. வாணியர், வாணியச்செட்டியார் (கண்டலா, டெலிகுலா, மற்றும் செக்காளர் உட்பட)
134. வேடுவர் மற்றும் வேடர் (கன்னியாகுமரி) மாவட்டம் மற்றும் திருநெல்வேலி கட்டபொம்மன் மாவட்டத்தின் செங் கோட்டை வட்டம் தவிர அங்கு இவ்வகுப்பினர் ஆதி திராவிடர் வகுப்பினராக அழைக்கப்படுகின்றனர்.
135. வீரசைவர் (கன்னியாகுமரி மாவட்டத்திலும் திருநெல்வேலி கட்டபொம்மன் மாவட்டத்தின் செங்கோட்டை வட்டத் திலும்)
136. வேளார்
137. வெள்ளாஞ்செட்டியார்
138. வெலுதொடத்துநாயர் (கன்னியாகுமரி மற்றும் திருநெல வேலி கட்டபொம்மன் மாவட்டத்தின் செங்கோட்டை வட்டத்திலும்)
139. ஒக்களிகர் (வக்கலிகர், ஒக்கலிக்கர், கப்பிலியர், கப்பிலியார் ஒக்கலிய கௌடா, ஒக்கலியா, கௌடா ஒக்கலிய் கௌண்டர், ஒக்கலிய கௌடா உட்பட).
140. வயநாடு செட்டி (நீலகிரி மாவட்டத்தில்)
141. யாதவர் (இடையர், வடுக ஆயர் எனப்படும் தெலுங்கு மொழி பேசும், இடையர் அல்லது வடுக இடையர் அல்லது கொல்லா, அல்லது ஆஸ்தாந்தரா கொல்லா உட்பட)
142. யவனா
143. ஏருகுலா
144. இந்து பிற்பட்ட வகுப்பிலிருந்து மதம் மாறிய கிறிஸ்தவர்கள்

## மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர்/சீர் மரபினர்

145. அம்பலக்காரர்
146. ஆண்டிப் பண்டாரம்
147. பெஸ்தா, சிவியர்
148. பட்ராஜு (சத்ரிய ராஜுக்கள் தவிர)
149. போயர், ஒட்டர்
150. தாசரி
151. தொம்மாரா
152. எரவள்ளர் (கன்னியாகுமரி மாவட்டத்திலும் திருநெல்வேலி கட்டபொம்மன் மாவட்டத்தின் செங்கோட்டை வட்டத்திலும் தவிர-அங்கு இவ்வகுப்பனர் ஆதி திராவிட பழங்குடியினர் என்று அழைக்கப்படுகின்றனர்).
153. இசை வேளாளர்
154. ஜாம்புவானோடை
155. ஜங்கம்
156. ஜோகி
157. கொங்கு செட்டியார் (கோயம்புத்தூர் மாவட்டம் மற்றும் பெரியார் மாவட்டம் மட்டும்)
158. கொரச்சா
159. குலாலா (குயவர் மற்றும் கும்பரர் உட்பட)
160. குன்னுவர்மன்னாடி
161. குறும்பர்
162. குறுகினிச் செட்டி
163. மருத்துவர், நாவிதர், மங்கலா, வேலங்கட்டலவர், வேல கட்டல நாயர் மற்றும் புரனோபகாரி
164. மொண்ட கொல்லா
165. மவுண்டாடான் செட்டி
166. மகேந்திரா, மேதரா
167. முட்டலகம் பட்டி
168. நரிக் குறவர்
169. நோக்கர்
170. வன்னிய குல க்ஷத்திரியா (வன்னியா, வன்னியர், வன்னிய கௌண்டர், கௌண்டர் அல்லது கண்டர், படையாச்சி, பள்ளி மற்றும் அக்னி குல க்ஷத்திரியர் உள்பட).
171. பரவர் (கன்னியாகுமரி மாவட்டம் மற்றும் திருநெல்வேலி கட்டபொம்மன் மாவட்டத்தில் செங்கோட்டை வட்டம் தவிர- அங்கு இவ்வகுப்பினர் ஆதி திராவிடர்களாக அழைக்கப்படு கின்றனர்)
172. மீனவர் (பர்வதராஜ் குலம், பட்டனவர், செம்படவர், கிறித்தவ மதம் மாறியவர்கள் உட்பட)
173. புன்னனர்) வேட்டுவக் கௌண்டர்.
174. சாத்தாத ஸ்ரீவைஷ்ணவா (சாத்தானி, சாட்டாடி மற்றும் சாத்தாதா ஸ்ரீவைஷ்ணவா உட்பட)
175. சோழிய செட்டி
176 தெலுங்கு பட்டி செட்டி
177. தொட்டிய நாய்க்கர் (ராஜகம்பளம், கொல்லவர், சில்லவர், தொக்கலவர், மற்றும் தொழுவ நாய்க்கர் உட்பட)
178. தொண்டமான்
179. வலையர் (செட்டி நாடு வலையர் உட்பட)
180. வள்ளார் (சலவைத் தொழிலாளர்) அகாசா, மடிவலார், ஏகாளி, ரஜகுலா, வேலுநாடார் மற்றும் ரஜாகா (கன்னியா குமரி மாவட்டம் மற்றும் திருநெல்வேலி மாவட்டத்தில் செங்கோட்டை வட்டம் தவிர அங்கு இவ்வகுப்பினர் ஆதி திராவிட வகுப்பினராக அழைக்கப்படுகின்றான்.
181. வேட்டைக்காரர்
182. வேட்டுவக் கௌண்டர்
183. யோகீஸ்வரர்
184. ஆத்தூர் கீழ்நாடு கொறவர்கள் (சேலம், தென்னார்க்காடு, இராமநாதபுரம் காமராஜர் மற்றும் பசும்பொன் தேவர் திருமகன் மாவட்டங்களில்)
185. ஆத்தூர் மேல்நாடு கொறவர்கள் (சேலம் மாவட்டத்தில்)
186. அப்பநாடு கொண்டயம் கோட்டை மறவர்கள் (பசும்பொன் தேவர் திருமகன் காமராஜர், இராமநாதபுரம் மற்றும் மதுரை காயிதேமில்லத் மாவட்டங்கள்)
187. அம்பலக்காரர் (தஞ்சாவூர் திருச்சிராப்பள்ளி மற்றும் புதுக்கோட்டை மாவட்டங்களில்)
188. அம்பலக்காரர் (சூரியனூர் மற்றும் திருச்சிராப்பள்ளி மாவட்டம் மற்றும் தர்மபுரி மாவட்டங்களில்)
189. போயர் (திருச்சிராப்பள்ளி, புதுக்கோட்டை, நீலகிரி, சேலம் மற்றும் தருமபுரி மாவட்டங்களில்)
190. பட்டு துர்கா
191. சி.கே. கொறவர்கள் (தென்னார்க்காடு மாவட்டம்)
192. சக்காலா-(பசும்பொன் தேவர் திருமகன், காமராஜர், ராமநாதபுரம், தஞ்சாவூர், புதுக்கோட்டை திருச்சிராப்பள்ளி, மதுரை, காயிதேமில்லத் மற்றும் நீலகிரி மாவட்டங்களில்)
193. சங்காயம் புடி கொறவர்கள் (வடஆர்க்காடு மாவட்டம்)
194. செட்டிநாடு வலையர்கள் (பசும்பொன் தேவர் திருமகன், காமராஜர் மற்றும் ராமநாதபுரம், மாவட்டங்களில்)
195. டோம்-புதுக்கோட்டை மற்றும் திருச்சிராப்பள்ளி மாவட்டம்
196. தொப்ப கொறவர்கள் (சேலம் மாவட்டம்)

197. தொம்மாரா-(தஞ்சாவூர், புதுக்கோட்டை மற்றும் வட ஆர்க்காடு மாவட்டம்)
198. தொங்க போயர்
199. தொங்கு ஊர் கொரச்சா
200. தேவகுடி தலையாரி
201. தொப்பை கொரச்சா-திருச்சிராப்பள்ளி மற்றும் புதுக்கோட்டை மாவட்டங்கள்.
202. தாபி கொறவர்கள்-தஞ்சாவூர், திருச்சிராப்பள்ளி புதுக்கோட்டை மற்றும் வட ஆர்க்காடு மாவட்டங்களில்)
203. தொங்க தாசரி-செங்கை அண்ணா, திருச்சிராப்பள்ளி, புதுக்கோட்டை, சென்னை மற்றும் சேலம் மாவட்டங்களில்
204. கோரவ; தொட்ட போலா
205. குடு தாசரி
206. கந்தர்வ கோட்டை கொறவர்கள்(தஞ்சாவூர் திருச்சிராப்பள்ளி, புதுக்கோட்டை மற்றும் தென்னார்க்காடு மாவட்டங்களில்)
207. கந்தர்வக்கோட்டை கள்ளர்கள்(தஞ்சாவூர் மற்றும் புதுக்கோட்டை மாவட்டங்களில்)
208. இஞ்சி கொறவர்கள்(தஞ்சாவூர், திருச்சிராப்பள்ளி மற்றும் புதுக்கோட்டை மாவட்டங்களில்)
209. ஜோகி(செங்கை அண்ணா, சென்னை, தென்னார்க்காடு மற்றும் வட ஆர்க்காடு மாவட்டங்களில்)
210. ஜாம்புவானோடை
211. காலாடிஸ்(பசும்பொன் தேவர்திருமகன், காமராஜர், இராமநாதபுரம், மதுரை, காயிதேமில்லத், தஞ்சாவூர், புதுக்கோட்டை மற்றும் திருச்சிராப்பள்ளி மாவட்டங்களில்)
212. கல் ஒட்டர்கள்(செங்கை அண்ணா, இராமநாதபுரம், பசும்பொன் தேவர்திருமகன், காமராஜர், மதுரை, காயிதேமில்லத், புதுக்கோட்டை திருச்சிராப்பள்ளி, திருநெல்வேலி கட்டபொம்மன், சிதம்பரனார், மற்றும் சேலம் மாவட்டங்களில்)
213. கொறவர்கள்(செங்கை அண்ணா, ராமநாதபுரம், பசும்பொன் தேவர்திருமகன், காமராஜர், புதுக்கோட்டை, தஞ்சாவூர், திருச்சிராப்பள்ளி, திருநெல்வேலி கட்டபொம்மன், சிதம்பரனார், சென்னை, மதுரை, காயிதேமில்லத் மற்றும் நிலகிரி மாவட்டங்களில்)
214. கவிஞ்சி தாபி கொறவர்கள்(தஞ்சாவூர் மற்றும் புதுக்கோட்டை மாவட்டங்களில்)
215. கூட்டப்பால் கள்ளர்கள்(திருச்சிராப்பள்ளி மற்றும் புதுக்கோட்டை மாவட்டங்களில்)
216. காலா கொறவர்கள்(தஞ்சாவூர் திருச்சிராப்பள்ளி மற்றும் புதுக்கோட்டை மாவட்டங்களில்)
217. கலவத்தில்லா போயர்கள்
218. கேப்மாரிகள்(செங்கை அண்ணா, புதுக்கோட்டை மற்றும் திருச்சிராப்பள்ளி மாவட்டங்களில்)
219. மறவர்கள்(தஞ்சாவூர், புதுக்கோட்டை, ராமநாதபுரம் பசும்பொன் தேவர்திருமகன், காமராஜர் மற்றும் திருநெல்வேலி கட்டபொம்மன், சிதம்பரனார், மாவட்டங்களில்)
220. மொண்ட கொறவர்கள்
221. மொண்ட கொல்லோ(சேலம் மாவட்டத்தில)
222. முட்டலகம் பட்டி(திருச்சிராப்பள்ளி மற்றும் புதுக்கோட்டை மாவட்டங்களில்)
223. நோக்கர்கள்(திருச்சிராப்பள்ளி மற்றும் புதுக்கோட்டை மாவட்டங்களில்)
224. நெல்லூர் பேட்டை ஒட்டர்கள்(வட ஆர்க்காடு மாவட்டத்தில
225. ஒட்டர்கள்-தஞ்சாவூர், திருச்சிராப்பள்ளி, புதுக்கோட்டை மற்றும் மதுரை காயிதேமில்லத் மாவட்டங்களில்)
226. பெத்த போயர்கள்(திருச்சிராப்பள்ளி மற்றும் புதுக்கோட்டை மாவட்டங்களில்)
227. பொன்னை கொறவர்கள்(வட ஆர்க்காடு மாவட்டத்தில்)
228. பிறமலைக் கள்ளர்கள்(பசும்பொன் தேவர் திருமகன், காமராஜர், ராமநாதபுரம், மதுரை, காயிதேமில்லத், புதுக்கோட்டை மற்றும் தஞ்சாவூர் மாவட்டங்களில்)
229. பெரிய சூரியர் கள்ளர்கள்(திருச்சிராப்பள்ளி மற்றும் தஞ்சாவூர் மாவட்டங்களில்)
230. படையாச்சி(தென்னார்க்காடு மாவட்டத்தில் வெள்ளையன் குப்பம் மற்றும் திரச்சிராப்பள்ளி மாவட்டத்தில் தென்னூர் மட்டும்)
231 புல்லாக் வேட்டுவக் கவுண்டர் (திருச்சிராப்பள்ளி மற்றும் புதுக்கோட்டை மாவட்டங்களில்)
232. சேர்வை(திருச்சிராப்பள்ளி மற்றும் புதுக்கோட்டை மாவட்டங்களில்)
233. சேலம் மேல்நாடு கொறவர்கள்(மதுரை, காயிதேமில்லத், கோயம்புத்தூர், பெரியார் புதுக்கோட்டை, திருச்சிராப்பள்ளி சேலம் மற்றும் வட ஆர்க்காடு மாவட்டங்களில்)
234. சேலம் உப்பு குறவர்கள்(சேலம் மாவட்டம்)
235. சக்கரை தமடை கொறவர்கள்(வட ஆர்க்காடு மாவட்டம்)
236. சாறங்க பள்ளி கொறவர்கள்
237. குரம்மாரி ஒட்டர்கள்(சேலம் மாவட்டம்)
238. சேம்ப நாடு மறவர்கள்(பசும்பொன் தேவர் திருமகன், காமராஜர் மற்றும் ராமநாதபுரம் மாவட்டங்களில்)
239. தல்லி கொறவர்கள்(சேலம் மாவட்டத்தில்)
240. தெலுங்கபட்டி செட்டியார்(திருச்சிராப்பள்ளி மற்றும் புதுக்கோட்டை மாவட்டங்களில்)
241. தொட்டிய நாய்க்கர்(பசும்பொன் தேவர் திருமகன், காமராஜர், ராமநாதபுரம், செங்கை அண்ணா, தஞ்சாவூர், திருச்சிராப்பள்ளி, புதுக்கோட்டை, திருநெல்வேலி கட்டபொம்மன், சிதம்பரனார், சேலம், வட ஆர்க்காடு, கோயம்புத்தூர் மற்றும் பெரியார் மாவட்டங்களில்)
242. தோக மலை குறவர்கள் அல்லது கேப்மாரிகள்(திருச்சிராப்பள்ளி மற்றும் புதுக்கோட்டை மாவட்டங்களில்)
243. உப்பு கொறவர்கள் அல்லது செட்டிப் பள்ளி கொறவர்கள்-(தஞ்சாவூர் புதுக்கோட்டை, மதுரை காயிதேமில்லத் மற்றும் வட ஆர்க்காடு மாவட்டங்களில்)
244. ஊராலி கவுண்டர்கள்(திருச்சிராப்பள்ளி மற்றும் புதுக்கோட்டை மாவட்டங்களில்)
245. வயல்பாடு அல்லது நாவல் பேட்டா கொரச்சா
246. வடுவர்பட்டி கொறவர்கள்(மதுரை காயிதேமில்லத், ராமநாதபுரம், பசும்பொன் தேவர் திருமகன், காமராஜர், திருநெல்வேலி கட்டபொம்மன், சிதம்பரனார், திருச்சிராப்பள்ளி மற்றும் புதுக்கோட்டை மாவட்டங்களில்)
247. வலையர்கள்(மதுரை காயிதேமில்லத், திருச்சிராப்பள்ளி, புதுக்கோட்டை, மற்றும் கோயம்புத்தூர் மாவட்டங்களில்)
248. வேட்டைக்காரர்(தஞ்சாவூர் மற்றும் புதுக்கோட்டை மாவட்டங்களில்)
249. வெட்ட கொறவர்கள்(சேலம் மாவட்டத்தில்)
250. வராகனேரி கொறவர்கள்(திருச்சிராப்பள்ளி மற்றும் புதுக்கோட்டை மாவட்டங்களில்)
251. வேட்டுவ கவுண்டர்(திருச்சிராப்பள்ளி மற்றும் புதுக்கோட்டை மாவட்டங்களில்.)'

—தேர்வுகள் கட்டுப்பாட்டு அலுவலர்
தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம்,
அரசினர் தோட்டம், சென்னை - 600 002.

## பார்த்தோம் படித்தோம்:

**1.8.89** இதழில் 'தாமரை' பற்றிய படம், செய்தி போன்றவற்றைப் பார்த்து, படித்து கண் குளிர்ந்தேன்.

—த. தாஹா முகம்மது,
கொள்ளுமேடு (தெ.ஆ.மா.)

(இதே போல பாராட்டி எழுதியிருப்பவர்கள்: வி. முருகேசன், பொரசல்பட்டி (சேலம் மாவட்டம்); பி.டி. இராமன், பெண்ணைவலம் (தெ.ஆ.மா.); ப. முருகேச பாண்டியன், கரப்பாடி (கோவை மாவட்டம்); அ. இராஜப்பன், கருமத்தம்பட்டி, (கோவை மாவட்டம்); பரம. வீரபாண்டியன், மு. பரூர் - புதூர்;)

வெண்பாப் போட்டியில் வெளிவரும் வெண்பாக்கள் யாவும் இனிமை.

—மு. ஆத்மநாதன்,
நீர் முளை (தஞ்சை மாவட்டம்)

1.8.89 அட்டைப் படங்களும், விளக்கமும் அருமை

—எஸ். பிரபாகரன்,
மேல்பாலானந்தல்

இந்த மாதத் (1.8.89) தமிழரசு, பட்டை தீட்டிய வைரமாய் மின்னியது.

—சு. கோபி,
சென்னை

தமிழரசில் பொது அறிவுச் செய்திகள் வெளியாவது பாராட்டுக்குரியதாகும்.

—வேகம். ஷம்மி குமார்,
வேலூர்-2

'இந்த நாட்டுப் பெண்ணினம் என்றும் கடமைப்பட்டிருக்கிறது', கட்டுரை அருமை. எழுதிய வெ. உமாராணிக்கு எனது பாராட்டுக்கள்.

—மு. கிருட்டிணசாமி,
கோவை-6

'கண்ணும் கடமையும்,' கட்டுரை மிகச் சிறப் பாக இருந்தது.

—வினிதா,
திண்டுக்கல்-10

'தமிழ் வளர்த்த பெரியார் - ஔவை துரைசாமி' பற்றிய கட்டுரை இலக்கிய நயத்துடன் இருந்தது.

—துரை. வேணுகோபால்,
பரங்கிப் பேட்டை



# வர்மக் கலை

**அறிஞர் அண்ணா அரசினர் மருத்துவமனையில் சித்தா, ஆயுர்வேதா, யுனானி மற்றும் ஹோமியோபதி மருத்துவ முறைகள் உள்ளன. இவற்றுடன் சித்தா முறையோடு இணைந்துள்ள வர்ம முறையைப் பெற்ற பெருமையும் இம் மருத்துவமனைக்கு உண்டு.**

**அதிகம் பேருக்குத் தெரிந்திருக்காத வர்மம், இப்போது அதிகமான பேர்களைக் கவர்ந்திழுக்க ஆரம்பித்து விட்டது. வர்மப் பகுதிக்குத் தலைவராக விளங்கும் டாக்டர் எஸ். ராஜாமணி அவர்கள் இதனுடைய சிறப்புத் தன்மை பற்றி இக்கட்டுரையில் விவரிக்கிறார்.**



—டாக்டர் எஸ். ராஜாமணி

வர்மம் சித்த முறையுடன் இணைந்து உள்ள ஒரு மிக முக்கியமான பகுதியாகும் இது கிறிஸ்து பிறப்பதற்கு மூன்று நூற்றாண்டுகளுக்கு முன்பே கையாளப்பட்டு வந்திருக்கிறது. பதினென் சித்தர்களால் உருவாக்கப்பட்ட இம்முறையை மேலும் சிறப்புறச் செய்தவர் அவர்களுள் ஒருவரான அகத்தியர் என்று கூறப்படுகிறது.

### வர்மம் என்பது என்ன?

உடம்பு முழுவதும் ஆதிக்கம் செய்யும் நரம்புகளின் சந்தியே வர்மத் தானம் எனப்படும். சித்த மருத்துவம் நோயைப் போக்கும் முறையைப் போதிக்கிறது. ஆனால் வர்மம் நோயைப் போக்குவதுடன் மீண்டும் வராமல் தடுக்கவும் உதவுவதாயுள்ளது.

ஜப்பான், ஆஸ்திரேலியா, அமெரிக்கா, இங்கிலாந்து, ஜெர்மனி போன்ற நாடுகளில் உடலுக்குள் ஊடுருவும் ஊசிகளைச் செலுத்தும் அக்குபங்சர் முறையும், முக்கியப் பகுதிகளை அழுத்துவதால் நோயைப் போக்கும் அக்குப்பிரஷர் என்ற முறையும் கையாளப்பட்டு வருகின்றது. வர்மம் சித்த முறையிலிருந்து தோன்றிய அக்குப்பிரஷர் ஆகும்.

வர்மக்கலை குரு-சீடர் முறையில் மட்டுமே பயிற்றுவிக்கப்படும் ஒரு ரகசியமான முறையாகும். மாணவன் எப்போதும் குருவின் அருகிலேயே இருந்து வரவேண்டும். அவன் தன்னை வர்மம் கற்பதற்கே அர்ப்பணித்துக் கொண்டவனாகவும் மது, மாது போன்ற எந்தக் கெட்ட பழக்கங்களையும் கொள்ளாத மாசு மருவற்ற நன்னடத்தை கொண்டவனாயும் இருக்க வேண்டும். குரு தன் மாணவனிடத்தில் முழு நம்பிக்கையும் கொண்டால் பல ஆண்டுகளுக்குப் பின் சத்தியம் வாங்கிக் கொண்டு ஒவ்வொரு வர்மத் தானமாகச் செயல் முறைப் பயிற்சிகளோடு விளக்க ஆரம்பிப்பார். ஒரு சிறு தவறு கூட நோயாளிக்கு மரணத்தை விளைவித்து விடும். ஆகவேதான் இத்தகைய முன்னெச்சரிக்கைகள் அனுசரிக்கப்படுகின்றன.

### வர்ம முறையின் மூலம் எந்தெந்த நோய்களைக் குணப்படுத்த முடியும்?

சாதாரண ஜலதோஷம், தலைவலியிலிருந்து உயிர் குடிக்கும் புற்று நோய்வரை எல்லா நோய்களும் . நரம்புகளின் சீரழிவினாலேயே உண்டாகின்றன. நரம்புகளைச் சரிவரச் சீர்படுத்துவதன் மூலம் எந்த நோயையும் முழுமையாகக் குணப்படுத்தி விடலாம். ஆனால், சரியான நேரத்தில் சிகிச்சை ஆரம்பிக்கப்பட்டிருக்க வேண்டும். எல்லாவித மருத்துவ முறைகளையும் கையாண்டு இராது, சீக்கிரமாகச் சிகிச்சை ஆரம்பித்தால் விரைவாகக் குணமாகும். உள்காயம், வெளிக்காயம், இரத்தப் போக்கு, எலும்பு முறிவு போன்றவற்றைக் குணப்படுத்துவதிலும் வர்மம் சிறந்து விளங்குகிறது. கண் புரை மற்றும் காது, மூக்கு, தொண்டைக் கோளாறுகளையும் வராமல் தடுக்கலாம்.

வர்மம் எங்கள் பரம்பரைச் சொத்து. என்னுடைய முன்னோர்கள் கடந்த ஐந்து நூற்றாண்டுகளாக இம்முறையைக் கையாண்டு வந்திருக்கின்றனர். சிகிச்சை முறைகளை - மற்ற விவரங்களைத் தெரிந்துகொள்ள எங்களுக்கு உதவியாக இருப்பவை நாங்கள் பாதுகாத்துவரும் ஓலைச்சுவடிகளே. நான் 16 குருமார்களிடம் பயிற்சி பெற்றிருக்கிறேன். நான் பயின்ற கன்னியாகுமரி மாவட்டத்தில், அவர்கள் ஆசான் அல்லது வர்மானி என்று அழைக்கப்படுகிறார்கள். ஆங்கில மருத்துவ முறையில் 'ஸ்பெஷலிஸ்ட்' இருப்பது போல், என்னுடைய ஒவ்வொரு ஆசானும் ஒவ்வொரு துறையில் வல்லுநராவார்; என்னுடன் கிட்டத்தட்ட 150 பேர் பயிற்சி பெற்று வந்தனர்; எல்லாரும்போய் இறுதியில் நான் மட்டுமே எஞ்சி நிற்கிறேன்.

பல ஆராய்ச்சிகள் செய்தும் புத்தகங்கள் பல எழுதியும் விஞ்ஞானப்பூர்வமாக வர்ம மருத்துவ முறையின் சிறப்பினை நிலைநிறுத்தி வருகிறேன். ஆகவே தமிழக அரசு என்னை ஒரு ரீடராகவும், வர்ம வல்லுநராகவும் அறிவித்திருக்கிறது.

எனக்கு ஐயம் ஏற்படுமானால், என் இடத்தில் சங்க காலத் தமிழில் எழுதப்பட்ட

10,000 ஓலைச் சுவடிகள் உள்ளன; ஓலைச் சுவடிகளைப் படித்தறிந்து கொள்வதிலும் எனக்குப் பயிற்சி உண்டு. வர்மம் எனும் ஒப்பற்ற கருவூலத்தின் பயனைத் தமிழ் மக்கள் யாவரும் அடைய வேண்டும் என்று எண்ணி, நான் இந்த ஓலைகளை நடைமுறைத் தமிழில் மொழி பெயர்த்து வருகிறேன். ஒவ்வொரு ஓலையும் மொழி பெயர்க்க ஏறக்குறைய 10 நாட்கள் ஆகின்றன.

வர்மத் துறைக்கு வரும் நோயாளிகளில் பெரும்பாலோர் மற்ற துறைகளுக்கெல்லாம் போய்விட்டு இறுதியாகத்தான் வருகின்றனர். அவர்களுக்கு வியக்கத் தக்க நிவாரணம் உடனே கிடைக்கிறது. இந்த முறையிலான சிகிச்சை நிறையப் பேருக்குத் தெரியாததால் இந்த மருத்துவமனையில் அதிகக் கூட்டமில்லை. ஆனால் முன்பை விட இப்போது அதிகம் பேர் வர்மச் சிகிச்சைக்கு வர ஆரம்பித்து இருக்கிறார்கள். ஒரு நோயாளிக்குச் சிகிச்சை அளிக்கு முன், சில முக்கியச் சோதனைகள் மூலம் ஏற்கனவே நரம்புகளுக்கு ஏற்பட்டுள்ள சேதாரத்தைக் கணித்துக் கொள்கிறேன். குணமாகக் கூடிய சாத்தியக் கூறு ஏதாவது இருந்தால் தான் சிகிச்சையைத் தொடங்குவேன்.



பெரும்பாலும் மூலிகைகளாலான மருந்துகளையே நோயாளிகளுக்குத் தருகிறோம். எங்கள் மருத்துவமனைக்கு எதிரிலேயே ஒரு மூலிகைப் பண்ணையை இந்திய மருத்துவம் மற்றும் ஹோமியோபதி இயக்ககம் பராமரித்து வருகிறது. இங்கு கிட்டத்தட்ட 125 மூலிகைகளை அவற்றின் குணங்களை அறியவும், மருந்துகள் செய்யவும் வளர்த்து வருகின்றனர். சித்தர்களில் ஒருவரான போகர் 473 முக்கியமான மூலிகைகளின் மருத்துவப் பண்புகள், அவற்றின் தோற்றம், அவை வளருமிடம் இவற்றைப் பற்றிக் குறிப்பிடுகிறார். அவை எல்லாவற்றையும் பற்றி நாம் இன்னும் சரிவர அறியவில்லை.

## வர்ம முறையை எவ்வாறு பரப்புவது?

ஓலைச் சுவடிகளையெல்லாம் நடைமுறைத் தமிழில் மொழிபெயர்த்த பின், ஆங்கிலத்திலும் மொழிபெயர்க்க இருக்கிறேன். அதன்பின் ஆராய்ச்சியாளர்கள் இம்முறையின் பெருமைகளையும் சிறப்பியல்புகளையும் தாமாகவே ஆய்ந்து அறிந்து கொள்ளலாம்.

கேரளாவில் இம்முறை பின்பற்றப்படுகிறது. பல கட்டங்களில் ஒரு கோழி அல்லது ஆட்டுக் குட்டியின் வர்மத் தானத்தைத் தட்டிச் செயலிழக்க வைத்தும், வேறொரு வர்மத் தானத்தை இயக்கி அதனை மறுபடி பழைய நிலைக்குக் கொண்டு வந்தும் இம்முறையின் சிறப்பியல்புகளை வெளிக்காட்டி உள்ளேன். மனிதர் ஒருவர் தைரியமாக முன்வந்ததால் அவரைக் கொண்டே வர்மம் பற்றிச் செயல் முறையாக விளக்கியுள்ளேன் நோயால் அவதியுறும் மக்கள் சமுதாயம், முக்கியமானதொரு சிகிச்சை முறையின் பயன்களைக் கட்டாயம் அடைய வேண்டும் என்ற என் தணியாத ஆவலினால்தான், வர்ம முறையைப் பரப்ப இவ்வளவு முயற்சிகளை நான் மேற்கொள்கிறேன்.

மனித உடலில் நூற்றி எட்டு வர்மத் தானங்கள் உள்ளன. மிருகங்களில், கோழிக்கு ஆறு வர்மத் தானங்களும், குதிரைக்கு 40ம், யானைக்கு 70ம் உள்ளன. ஆனால் இந்த வர்மத்தானங்கள் அமையப் பெற்றுள்ள இடங்கள் எல்லா உயிரினங்களுக்கும் ஒரே மாதிரிதான்; பயிற்சி பெறும்போது எங்களுக்கு மிருகங்களை வைத்தே கற்றுத் தரப்பட்டது.

## ஆரோக்கியமான குழந்தை பிறக்க என்ன செய்யவேண்டும்?

பிறவியிலேயே ஏற்படும் ஊனத்தைத் தடுக்க பாதத்திலும் பெருவிரலிலும் உள்ள சில வர்மத் தானங்களை இயக்க வேண்டும். ஒரு நாளைக்கு 10 நிமிடம் பயிற்சி தந்தால் உடலும் உள்ளமும் ஊனமில்லாத குழந்தை பிறக்கும்.

விளையாட்டு வீரர்களுக்கு, குறிப்பாக பளு தூக்குவோர், குத்துச் சண்டை வீரர்கள், விளையாட்டு வீரர்கள் ஆகியோர் இதயக் கோளாறினால் அவதியுறுவது பற்றிக் கேள்விப்பட்டிருப்பீர்கள். சில குறிப்பிட்ட வர்மத் தானங்களை முறைப்படி தேய்த்துச் சரிப்படுத்தினால் இந்தக் கோளாறு வராது. வயது ஏற, ஏற, மறைந்துள்ள சில குறைபாடுகள் மோசமான தொல்லைகளாக உருவெடுக்க ஆரம்பித்து விடும். அடிக்கடி முறைப்படி வர்ம அழுத்தம் தருவதன் மூலம் அத்தகைய தொல்லைகளே இல்லாமல் செய்து விடலாம்.

## இரத்தக் கொதிப்புக்கு என்ன வழி?

நான் முன்பு சொன்னபடி நரம்புகளே நம் உடம்பு முழுவதையும் ஆட்சி செய்கின்றன. ஆகவே, குறிப்பிட்ட சில நரம்புகளை முறைப்படி இயக்குவதன் மூலம் இரத்தக் கொதிப்பைச் சரி செய்து நீண்ட ஆரோக்கிய வாழ்வைப் பெறலாம். பைபாஸ் ஆப்பரேஷன் ஆரம்பத்திலேயே கண்டுபிடித்துவிட்டால், ஆப்பரேஷனைத் தவிர்த்து விடலாம். இரத்தக் குழாய்கள் ஊனமாகவும், கடினமாகவும் ஆகிவிட்டால் ஆப்பரேஷன் செய்வதே சரி.

இரத்தப் புற்று நோயை மருந்தினால் மட்டுமே குணப்படுத்த இயலும். ஓலைச் சுவடிகளில் சில சிகிச்சை முறைகள் சொல்லப்பட்டு இருக்கலாம். நன்றாக ஆய்ந்து கண்டுபிடிக்க வேண்டிய ஒன்று இது. தனி மனிதனால் இதைச் செய்ய முடியாது. அறிஞர்கள் அடங்கிய குழு ஒன்று முயன்றால் முடியலாம்.

## ஒரு அபூர்வமான நோய்க்குச் சிகிச்சை

ஓரினச் சேர்க்கையில் ஈடுபட்ட ஒருவரது ஆண்குறி உள்பக்கமாக இழுத்துக் கொண்டது. ஆப்பரேஷன் மூலம் கூட அதனை வெளிக் கொணர முடியவில்லை. இறுதி முயற்சியாக எங்கள் மருத்துவமனைக்குக் கொண்டு வந்தனர். இடுப்புக்கு அருகில் உள்ள ஒரு வர்மத் தானத்தை இயக்கினேன். பத்து நிமிடங்களுக்குள் அவர் சாதாரண நிலையை அடைந்தது மட்டுமன்றி, ஓரினச் சேர்க்கையை வெறுக்கும் மனோபாவமும் அவருக்கு வந்தது. இந்தக் கேஸ் மருத்துவமனைப் பதிவேட்டில் பதிவு செய்யப்பட்டிருக்கிறது.

## வர்ம முறையினால் குணப்படுத்தக்கூடிய மற்ற நோய்கள்

சிசேரியன் ஆப்பரேஷனுக்குப் பின் ஏற்படும் தொங்கிய அடிவயிறு, அடித்தள்ளுதல் ஆகியவற்றைச் சுலபமாகச் சரி செய்யலாம். உடற்பயிற்சிகளோ ஆப்ரேஷனோ தேவையில்லை. வெளி மூலத்தைச் சில வர்மத் தானங்களைச் சரி செய்தும், சில பயிற்சிகளை மேற்கொண்டும் சரி செய்து விடலாம். வலிப்பு நோய்க்கு, வர்மம் தவிர வேறு எந்த முறையும் குணம் தர இயலாது. ஒரு குறிப்பிட்ட பகுதியை 7 முதல் 10 நொடிகள் வரை தினம் மூன்று வேளை அழுத்தி வர, படிப்படியாகக் குணமாகும். ஓர் இளம் பெண் ஒரே நாளில் பல முறை வலிப்பு வந்து அவதிப்பட்டாள். தூங்க வைக்கும் மருந்துகள் தவிர அவளுக்கு வேறு சிகிச்சை தரப்படவில்லை. இறுதியில் என்னிடம் வந்து சிகிச்சை பெற்ற பின் அந்நோய் குணமாகி விட்டது. இப்போது அப்பெண்ணுக்குத் திருமணமாகி குழந்தைகளும் இருக்கின்றன.

அக்குப்பிரஷர் சம்பந்தமான வெளிநாட்டுப் புத்தகங்கள் நம் நாட்டிலும் கிடைக்கின்றன. ஜப்பானியர்கள் ஆங்கிலத்தில் வெளியிட்டிருக்கிறார்கள். பழைய ஓலைச் சுவடிகளோடு ஒத்திட்டுப் பார்க்கும்போது, இரண்டும் ஒரே மாதிரியாகக் காணப்படுகின்றன! ஆகவே, அக்குப்பிரஷர், அக்குபங்சர் ஆகியவை தென்னிந்தியாவிலிருந்து தான் தோன்றியிருக்க வேண்டும் என்பது நிச்சயமாகிறது. ஆனால், நமது சிகிச்சை முறை, அவர்களுடையதைவிடச் சிறந்து விளங்குகிறது என்பது குறிப்பிடத்தக்கது. ஓலைச் சுவடிகளை ஆங்கிலத்தில் மொழி பெயர்த்து விட்டால், இந்தியாதான் இத்துறையில் முன்னணியில் நிற்கிறது என்று நிரூபிக்க முடியும்.

அண்மையில் பிரதமரின் ஆலோசகர் சிலர் எங்கள் மருத்துவமனைக்கு வந்திருந்து, எங்கள் செயல்முறைப் பயிற்சியைப் பார்த்து வியந்தனர். இந்த முறையை ஊக்குவிப்பதற்காக ஆறு கோடி ரூபாய் அளிப்பதாக வாக்களித்துள்ளனர். இந்தப் பணம் எங்கள் அன்னா மருத்துவமனைக்கு வந்து விட்டால், வர்ம முறையை மேலும் பரப்ப உதவியாயிருக்கும். வெளிநாடுகளிலிருந்து கூட மாணவர்களையும் நோயாளிகளையும் கவர்ந்திழுக்க முடியும்.

## மிக நெருங்கிய சொந்தத்தில் திருமணம் செய்து கொள்ளலாமா?

இது தவிர்க்கப்பட வேண்டிய ஒன்று. அத்தகைய பெற்றோருக்குப் பிறக்கும் குழந்தைகளுக்குப் பரம்பரை வியாதியான, மையோபதி (Myopathy) என்ற நோய் வரலாம். அக் குழந்தைகளின் தசைகள் இறுக்கமடைந்து, கால் கைகள் மெலியக்கூடிய அபாயமும் ஏற்படலாம். இதற்கு வர்மம் தவிர, ஏனைய முறைகளில் சரியான சிகிச்சை கிடையாது.

ஒரு கன்னத்தில் அடித்தால் மறு கன்னத்தையும் காட்டு' என்று ஏசு சொன்னார். இது ஓர் உன்னதமான மதக் கோட்பாடு. ஒரு கன்னத்தில் அடித்ததாலுண்டான அதிர்ச்சியை மற்றொரு கன்னத்தில் அதே போல் அடிக்கும் போது நீங்கிவிடும் என்ற வர்மம் அல்லது 'அக்குபிரஷர்' தத்துவத்தை இது விளக்குகிறது.

மனிதனுடைய உடலமைப்பு சந்திரனுடைய ஆதிக்கத்தில் இயங்குகிறது. ஆஸ்த்துமா, இளைப்பு நோய் போன்றவை அமாவாசை அல்லது பௌர்ணமி வேளைகளில் அதிகப்படுவதை நாம் காணலாம். இது போலவே மனித உடலிலுள்ள வர்மத் தானங்களும் அமாவாசைக்குப் பின் இடது புறத்திலும், பௌர்ணமிக்குப் பிறகு வலது புறத்திலும் எழுச்சியுற்றிருக்கும்.

மூலிகைகளை விடச் சிறந்த மருந்து இல்லை. மஞ்சள் காமாலையைப் போக்கும் கீழ்க்காய் நெல்லியும், சளித்தொல்லையை நீக்கும் துளசியும் சிறந்த எடுத்துக்காட்டு. துளசி வளருமிடத்தில் பாம்பு கூட நடமாட அஞ்சும்.

பொதுவாக மக்களுக்கு ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன்.

ஒரு சாதாரண கஞ்சகை உடனே வெளிக் காவிடில் அது பாரிச வாயுவாக மாறக்கூடிய சூழ்நிலை கூட ஏற்படலாம். ஒவ்வொரு மருத்துவ மனையிலும் வர்மப் பகுதி ஒன்று திறந்து, நிறைய மக்கள் இந்த முறையின் பலனைப் பெற வேண்டும் என்பதே என் விருப்பம். அதிகப் பணச் செலவு இல்லாமல் அதே வேளையில் மிகவும் பயனுள்ளதாகவும் உள்ள இந்த முறை, கிராமங்களுக்கும் பரவ வேண்டும்.



வாழ்க்கை, அவனவன் வாழ்வதற்கு என்று மட்டும் கருதக் கூடாது; மற்றவர்கள் நலனுக்கும் என்று கருதவேண்டும்.

ஒருவன், தன்னிடம் பிறர் எப்படி நடந்து கொள்ள வேண்டுமென எதிர்பார்க்கிறானோ, அப்படி எல்லோரிடமும் தான் நடந்து கொள்ளுவதே ஒழுக்கமாகும்.

-தந்தை பெரியார்

# தொழில் நுட்பக் கல்வித்துறைப் பணியாளர்களுக்கு ஊதிய உயர்வு

தொழில் நுட்பக் கல்வி நிறுவனங்களில், பணியாற்றுவோர்க்கு ஊதிய விகிதங்கள் 1974-ஆம் ஆண்டு திருத்தி அமைக்கப்பட்டன. டோக்ரா குழுவும், அனைத்திந்திய தொழில் நுட்பக் கல்விக் குழுவும் 1-1-86 முதல் புதிய ஊதிய விகிதங்களை அமுல் படுத்த வேண்டுமென்று கருத்து தெரிவித்திருந்ததை மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள் ஏற்றுக் கொண்டு, புதிய சம்பள உயர்வுக்கான உத்தரவை 5.8.89 அன்று பிறப்பித்தார்கள்.

திருத்தி அமைத்து ஆணையிடப்பட்டுள்ள புதிய ஊதிய விகிதங்கள், அரசு பொறியியல் கல்லூரிகள் மற்றும் அரசு உதவி பெறும் பொறியியல் கல்லூரிகள், அண்ணா பல்கலைக்கழகம் ஆகியவற்றில் பணிபுரியும் பயிற்றுனர்கள், உடற்பயிற்சி ஆசிரியர்கள் மற்றும் நூலகர்கள் ஆகியோருக்கும், தொழில் நுட்பக் கல்வி இயக்ககம், சென்னை, கும்பகோணம், மாமல்லபுரம் ஆகிய இடங்களில் உள்ள கலை, கைவினை, கட்டடக் கலைக் கல்லூரிகள் ஆகியவற்றில் பணிபுரியும் பயிற்றுவிப்போர் ஆகிய அனைவருக்கும் பொருந்தும்.

கீழ்க்கண்டபடி ஊதிய விகிதங்கள் திருத்தி அமைக்கப்பட்டுள்ளன.

| வரிசை என் | பதவியின் பெயர் | தற்போதைய ஊதிய விகிதம் | புதிய ஊதிய விகிதம் |
|---|---|---|---|
| | | ரூ. | ரூ. |
| 1. | விரிவுரையாளர்கள் | 700-1,600 | 2,200-75-2,800-100-4000 |
| 2. | முதுநிலை விரிவுரையாளர்கள் | | 3,000-100-3,500-125-5,000 |
| 3. | தேர்வுநிலை விரிவுரையாளர்கள் | | 3,700-125-4,950-150-5,700 |
| 4. | உதவிப் பேராசிரியர்கள் | 1,200-1900 | 3,700-125-4,950-150-5,700 |
| 5. | பேராசிரியர்கள் | 1,500-2,500 | 4,500-150-5,700-200-7,300 |
| 6. | முதல்வர்கள் | 1,500-2,500 | 4,500-150-5,700-200-7,300 (சிறப்பு ஊதியம் ரூ.200 மாதம் தோறும்) |

இணை விரிவுரையாளர் என்ற பதவி அனைத்திந்திய தொழில் நுட்பக் கல்விக் கழகத்தின் பட்டியலில் இல்லை. எனவே, இணை விரிவுரையாளர்களுக்கு விரிவுரையாளர்களுக்குக் கொடுக்கப்படும் புதிய ஊதிய விகிதமான ரூ.2,[illegible]00-4,000 என்ற முறையில் அளிக்கப்படும்.

விளக்குனர்/இளநிலை ஆசிரியர்கள் (Demonstrators/Tutors) என்ற பதவிப் பெயர்களும் அனைத்திந்திய தொழில் நுட்பக் கழகத்தின் பட்டியலில் இல்லை. அவர்களது ஊதியம் ரூ.1[illegible]40-3,000 என்ற முறையில் அதிகப்படுத்தி அளிக்கப்படுகிறது.

உடற் பயிற்சி ஆசிரியர்கள் மற்றும் நூலகர்கள் ஆகியோருக்கு அனைத்திந்திய தொழில் நுட்பக் கல்விக் குழு, பல்கலைக் கழக மானியக் குழுவின் வழிகாட்டுதலின் படி நிர்ணயித்துள்ள கல்வித் தகுதியும் ஊதிய விகிதங்களும் பின்பற்றப்படும்.

கலை, கைவினைஞர் மற்றும் கட்டடக் கலை கல்லூரிகளில் பணிபுரிவோர்க்கு புதிய ஊதிய விகிதங்கள் :-



| வரிசை என் | பதவியின் பெயர் | தற்போதைய ஊதிய விகிதம் | புதிய ஊதிய விகிதம் |
|---|---|---|---|
| | | ரூ. | ரூ. |
| 1. | துறைத்தலைவர்கள் | 1,100-1,600 | 3,000-5,000 |
| 2. | துணைப் பேராசிரியர்கள் | 700-1,300 | 2,200-4,000 |

## அண்ணா பல்கலைக் கழகம்

அண்ணா பல்கலைக் கழகத்தில் பணிபுரிவோர்க்கு, அரசு பொறியியல் கல்லூரி ஆசிரியர்களுக்கு அனுமதிக்கப்பட்டுள்ள புதிய ஊதிய விகிதங்கள் பல்கலைக் கழகத்திற்குப் பொருந்தும் மாற்றங்களோடு திருத்தியமைக்கப்படுகின்றன.

## பாலிடெக்னிக்குகள்

| வரிசை என் | பதவியின் பெயர் | தற்போதைய விகிதம் | புதிய விகிதம் |
|---|---|---|---|
| | | ரூ. | ரூ. |
| 1. | முதல்வர் (மத்திய பாலிடெக்னிக்) | 1,500-2,500 | 4,500-5,700 |
| | மற்ற முதல்வர்கள் | 1,500-2,100 | 4,200-5,700 |
| 2. | துறைத் தலைவர்கள் | 1,200-1,900 | 3,700-5,700 |
| 3. | விரிவுரையாளர்கள் | 700-1,300 | 3,000-5,000 |
| 4. | இணை விரிவுரையாளர்கள் | 700-1,300 | 2,200-4,000 |
| 5. | பயிற்சி ஆசிரியர்கள் (இன்ஸ்ட்ரக்டர்ஸ்) | 500-900 | 1,740-3,000 |
| 6. | உடற் பயிற்சி ஆசிரியர் | 500-900 | 1,740-3,000 |
| 7. | உடற் பயிற்சி ஆசிரியர் | 700-1,600 | 2,200-4,000 |
| 8. | நூலகர்கள் | 500-900 | 1,750-3,000 |

புதிய ஊதிய விகிதங்கள் 1-1-86 முதல் நடைமுறைக்கு வரும். 1.6.88 முதல் பணப் பயன் அளிக்கப்படும். புதிய ஊதிய விகிதங்கள் அமுலுக்கு வருவதால் கிடைக்கும் நிலுவைத் தொகையைப் பல்கலைக் கழக மான்யக் குழு ஊதிய விகிதங்களைப் பெற்று வரும் கல்லூரி ஆசிரியர்களுக்கு, வழங்கப் பட்டுள்ள முறையைப் பின்பற்றிக் கொடுக்கப் படும்.

அண்ணா பல்கலைக் கழகம், அரசு பொறியியல் கல்லூரிகள், அரசு உதவி பெறும் பொறியியல் கல்லூரிகள் மற்றும் பாலிடெக்னிக்குகள் ஆகியவற்றில் பணியாற்றக் கூடிய அலுவலர்களுக்கு மேற்கண்டபடி புதிய ஊதிய விகிதங்கள் அமுலாக்கப் படுவதால் அரசுக்கு ஆண்டு ஒன்றுக்கு ஏழு கோடி ரூபாய் கூடுதலாகச் செலவாகும்.

நீ கேட்டது என்பதற்காகவே எதையும் நம்பிவிடாதே. தலைமுறை தலைமுறையாக வந்த பழக்கம் என்பதற்காக எதையும் நம்பி விடாதே. பலர் பேசுகிறார்கள், பலரிடையே வதந்தியாயிருக்கிறது என்பதற்காக மட்டும் எதையும் நம்பிவிடாதே. உன்னுடைய மதநூல்களில் கூறியிருக்கிறது என்பதற்காக மட்டும் எதையும் நம்பிவிடாதே. உனக்கு மூத்தவர்களும், உன் ஆசிரியர்களும் சொல்கிறார்கள் என்பதற்காக மட்டுமே ஒன்றை நம்பிவிடாதே. ஒரு சங்கதியை உற்றுக் கவனித்து ஆராய்ந்து பார்த்து உன் பகுத்தறிவுக்கு ஏற்றது என்றும், உலகில் உள்ள எல்லோருடைய நலனுக்கும் இன்பத்துக்கும் பொருந்தியது என்றும், உனக்குத் தோன்றுமானால் அதை ஏற்றுக்கொண்டு அதன்படி நட.

—புத்தர்

நகர்ப்புறத்திலும், கிராமப்புறத்திலும் வறுமையில் வாடும் ஏழை, எளிய பெண்கள் கர்ப்பவதியாகும் பொழுதும், குழந்தை பெற்ற பின்னரும் உழைக்க - ஊதியம் ஈட்ட இயலாமல் இருப்பதால், அவர்களின் குடும்பங்கள் ஏழ்மையில் தவிக்கும் நிலையில் உள்ளன. அதை நிவர்த்தி செய்ய, தமிழ்நாடு அரசு கருவுற்ற ஏழைத் தாய்மார்களுக்கு 8-வது மாதம் தொடங்கி, 4 மாதங்களுக்கு ரூ.50 வீதம் நிதி உதவி வழங்கி வருகிறது. இந்த அரிய திட்டத்திற்கு "டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி நினைவு மகப்பேறு உதவித் திட்டம்" என்ற பெயரை முதல்வர் கலைஞர் சூட்டியுள்ளார். மகளிர் நல மேம்பாட்டிற்காக அரும்பணியாற்றி ஓங்கு புகழ் எய்திய அந்த மாதரசியின் வாழ்க்கைக் குறிப்பு இங்கே ...

# டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி

நாட்டுப்பற்று மிக்கவரான டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி 30.7.1886-இல் புதுக்கோட்டையில் பிறந்தார்.

இந்திய விடுதலைக்கு முன்னால், அப்போது புதுக்கோட்டை தனி மாநிலமாக இருந்தது. தொண்டைமான் ஆட்சியின்கீழ், இந்தியா விடுதலை பெற்று, புதுக்கோட்டை இந்தியாவோடு இணைவதற்கு முன்பு இவர் நாராயணசாமி-சந்திரம்மாள் தம்பதியருக்குத் தலைச்சனாகப் பிறந்தார்.

புதுக்கோட்டை அரசினர் கல்லூரி முதல்வராகவும், கல்வித்துறை இயக்குநராகவும், அரசர் தொண்டைமானின் ஆலோசகராகவும் இருந்த நாராயணசாமி இசைக் கலையிலும் இணையற்றுத் திகழ்ந்தார்.

இளம் வயதிலேயே படிப்பதில் ஆர்வம் மிக உடையவராக இருந்தார் முத்துலட்சுமி. நான்காவது வயதில் திண்ணைப் பள்ளிக்கூடத்தில் சேர்க்கப்பட்ட இவருக்கு, ஓய்வு கிடைக்கும் போதெல்லாம் நாராயணசாமியும் பாடம் சொல்லி வரலானார்.

முத்துலட்சுமி வளர வளரக் கல்வியறிவும் அவரோடு வளர்ந்தது. தானே தன் மகளுக்குப் பெரும்பான்மை நேரத்தை ஒதுக்கிப் பாடம் சொல்லித்தரலானார் அன்புத் தந்தையார்.

மெட்ரிகுலேஷன் தேர்வு வந்தது. அந்தத் தேர்வில் முத்துலட்சுமியோடு சரியாக நூறு பேர் கலந்துகொண்டு எழுதினார்கள். அவர்களில் வெற்றி பெற்றவர்கள் பத்தே பேர்கள்தான். வெற்றிபெற்றவர்களில் முதன்மையானவர் முத்துலட்சுமி.

இதன் காரணமாக-அரசியார் பெண்கள் பள்ளியில் ஆசிரியை வேலை ஏற்க வருமாறு அழைக்கப்பட்டார், இவர். மேலும் படித்துப் பட்டம் பெறவேண்டும் என்கிற ஆவலால், அதை ஏற்றுத் தொடர முடியாதவரானார் முத்துலட்சுமி.

புதுக்கோட்டை கல்லூரியிலேயே தனிப் பெண்ணாகப் படித்து முடித்தார். இருபதாம் வயதில் சென்னைக்கு வந்து, மருத்துவக் கல்லூரியில் சேர்ந்தார். புதுக்கோட்டை அரசு, கல்வியில் இவருக்கிருந்த ஊக்கத்தைப் பாராட்டி ஆண்டொன்றுக்கு 180 வெண் பொற்காசுகள் உதவித்தொகையை வழங்கியது.

இந்த நேரத்தில்தான் டாக்டர் நஞ்சுண்டராவ் என்பார், முத்துலட்சுமிக்கு அறிமுகமானார். அடிக்கடி அரசியல் பிரமுகர்களையெல்லாம் தன் வீட்டுக்கழைத்து விருந்து படைக்கும் வழக்கமுடையவர் அவர். அதிலெல்லாம் முத்துலட்சுமியும் சென்று கலந்து கொள்வார்.

அங்கே இவருக்கு அறிமுகமானவர்களில் மகாகவி பார்தியார் குறிப்பிடத்தக்கவர். அப்போது அவர் 'இந்தியா' என்கிற பத்திரிகையை நடத்திக்கொண்டிருந்தார்.

இவ்வாறு நடந்த பிரபலஸ்தர்களின் சந்திப்புகளே முத்துலட்சுமியின் இளம் நெஞ்சில் தேசப்பற்றையும், பெண்ணுரிமைக்காகப் போராடும் பேரெழுச்சியையும் தோற்றுவித்தன.



எத்தனையோ மருத்துவமனைகள் பணியாற்ற அழைத்தன. எழும்பூரில் உள்ள பெண்கள்-குழந்தைகள் மருத்துவமனையிலேயே 'ஹவுஸ் சர்ஜனாக' ஓராண்டுக் காலம் பணியாற்றினார் டாக்டர் முத்துலட்சுமி. பின்னர், சென்னையிலேயே ஒரு 'கிளினிக்'கைத் துவக்கி நடத்தலானார்.

1912 ஏப்ரலில் இறுதியாண்டுப் படிப்பையும் வெற்றிகரமாக முடித்தார். 'மருத்துவ வல்லுநர்' பட்டத்தை முதன்முதலாகப் பெற்ற இந்தியப்பெண் என்கிற சிறப்பினை அடைந்தார். அது மட்டுமல்ல; எம்.பி. அண்டு. சி.எம். பட்டங்களும் இவருக்கு அளிக்கப்பட்டன.

தங்களுடைய மகளுக்குத் திருமணம் நடத்தி வைக்கத் துடித்தார்கள் பெற்றோர். அதன்படி சந்திராரெட்டி என்பாருக்கும், முத்துலட்சுமிக்கும் 1914 ஏப்ரலில் திருமணம் நடந்தேறியது. அதன்பின், டாக்டர் முத்துலட்சுமியாக மட்டுமே இருந்தவர், டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி ஆனார்.

டாக்டர் முத்துலட்சுமி ரெட்டிக்கு இரண்டு மக்கள். முதல் மகன் பெயர் ராம்மோகன். இரண்டாவது மகன் பெயர் கிருஷ்ணமூர்த்தி.

நாளடைவில் அவர்கள் சென்னைக்கே குடியேறி தொழில் தொடங்கினார்கள். டாக்டர் முத்துலட்சுமிரெட்டி, சென்னை மாநில முதல்வராக இருந்த பனகல் அரசரின் குடும்ப வைத்தியரானார். அவர் சிபாரிசின் பேரில், மருத்துவ ஆராய்ச்சியின் பொருட்டு லண்டனுக்குப் பயணமானார் இவர். பாரிசில் நடந்த பெண்கள் மாநாட்டில், இந்தியப் பெண்களுகத்தின் பிரதிநிதியாகச் சென்று பங்கேற்ற டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி, அங்கே அரியதோர் உரையாற்றிப் பெருமை பெற்றார். தாய்நாடு திரும்பிய இவர் நெஞ்சில், பெண்கள் சமுதாய சீர்திருத்தம் பற்றிய எண்ணம் மிக ஆழமாக வேர் விட்டது.

அப்போது தமிழகக் கோயில்களிலெல்லாம் 'தேவதாசி முறை' என்றொன்று இருந்தது. அப்போது நம் நாட்டில் பரவலாக நடந்துவந்த பால்ய மணம் செய்யும் முறையும் அம்மையாரைப் பெரிதும் வருத்தியது.





## இரண்டு ஆண்டுகளாக மூடப்பட்டிருந்த சற்குணா மில் திறப்பு!

தமிழ்நாட்டில் மூடப்பட்டுள்ள நெசவாலைகளையும், தொழிற் சாலைகளையும் பேச்சு வார்த்தையின் மூலம் தொடர்புடைய அனைத்து தரப்பினருடனும் கலந்து பேசித் திறப்பதற்கானத் தமிழக அரசு எல்லா வித நடவடிக்கைகளையும் மேற்கொண்டு வருகிறது. குறிப்பாக, கோவையில் 1987-ஆம் ஆண்டு நிர்வாகத்தினருக்கும், தொழிலாளர்களுக்கும் ஏற்பட்ட பிரச்சினை காரணமாக மூடப்பட்ட சற்குணா நெசவாலையைத் திறப்பதற்கான முயற்சிகளை மாண்புமிகு செய்தி-தொழிலாளர் நலத்துறை அமைச்சர் திரு. பொன். முத்துராமலிங்கம் அவர்கள் மேற்கொண்டு வந்தார்.

7-7-89 அன்று கோவைக்கு வருகை புரிந்த அமைச்சர் அவர்கள் மில் நிர்வாகத்தினருடனும், தொழிலாளர்களுடனும் இறுதிக் கட்டப் பேச்சு வார்த்தைகளை நேரில் நடத்தினார். முடிவில் இரு தரப்பினருக்கும் இடையே ஒருமித்த கருத்து ஏற்பட்டு சுமுகமான உடன்பாடு ஏற்பட்டது. இதன்படி சற்குணா மில் திறக்கப்பட்டதுடன், 1987-ஆம் ஆண்டு இந்த மில் தொழிலாளர்களுக்கு வழங்கப்படாத போனஸ் தொகையை அன்றே வழங்கி, தொழிற்சாலையின் பணியைத் துவக்கி வைத்தார். இதனால் 300-க்கும் மேற்பட்ட தொழிலாளர்கள் பயனடைந்து உள்ளனர்.

இந்நிகழ்ச்சியில் திரு. இரா. மோகன், எம்.எல்.ஏ., திரு. சி.டி. தண்டபாணி முன்னாள் எம்.பி, திரு. கா.ரா. சுப்பையன், முன்னாள் திரு. கே.எம். தண்டபாணி முன்னாள் எம்.எல்.சி., திரு. பி. என். ஜானகி ராம், பொங்கலூர் பழனிச்சாமி, பாரதிபுரம் திரு. கோபால் ஆகியோர் கலந்து கொண்டார்கள்.

தேவதாசி முறை, பால்ய மணக் கொடுமை ஆகிய இரண்டையும் ஒழித்திடக் கங்கணம் கட்டினார் இவர்.

1927-ஆம் ஆண்டில், தமிழகத்தில் சுற்றுப்பயணம் செய்யவந்த மகாத்மா காந்தியடிகளைச் சந்தித்து, தனது சமூக சீர்திருத்தப் புதுப்போர் பற்றி எடுத்துக்கூறினார். அதைக் கேட்ட காந்தியாரும், கஸ்தூரிபாய் அம்மையாரும் இவரது முயற்சியை மிகவும் பாராட்டினார்கள். அந்தக் கொள்கைக்கு, தாங்கள் சென்ற இடமெல்லாம் ஆதரவு திரட்டித் தந்தும் உதவினார்கள். தன்னுடைய 'யங் இந்தியா' ஏட்டில், டாக்டர் முத்துலட்சுமி ரெட்டியின் எழுச்சி பற்றிய கட்டுரைகளும் எழுதி வெளியிட்டார் காந்தியார்.

அம்மையாரின் இயக்கம் வெற்றி பெற நீதிக்கட்சித் தலைவர்களான பனகல் அரசர், ஈ.வெ. ராமசாமிப் பெரியார், எம். கிருஷ்ணன் நாயர், மூவலூர் இராமாமிர்தத் தம்மையார், டாக்டர் சி. நடேச முதலியார் ஆகியோருடைய ஒத்துழைப்பும் கிடைத்தது.

பிரிட்டிஷ் ஆட்சியின் ஒத்துழைப்பையும் விரும்பி வேண்டினார் இவர். நாளடைவில், தனது சீரிய தொண்டுக்காகவே, சட்டமன்ற மேலவை உறுப்பினர் பதவி பெற்றார். சட்ட மேலவைத் துணைத் தலைவராகவும் பொறுப்பேற்றார். இந்த வகையில் முதன் முதல் சட்ட மேலவையில் இடம் பெற்ற பெண் என்கிற பெருமையும் இவருக்குக் கிடைத்தது.

தேவதாசி முறை கூடாதெனச் சட்டம் இயற்றப்பட, அம்மையார் அவர்களின் எழுச்சியே மூல காரணமாயிற்று.

1926-இல், அனைத்துலகப் பெண்கள் மாநாட்டில் கலந்துகொள்ளும் பொருட்டு பாரிஸ் மாநகருக்குச் சென்றார் டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி.


அதே ஆண்டில், திருமதி. மார்கரெட் கசின்ஸ் என்ற அயர்லாந்து நாட்டுப் பெண்ணின் உதவியால் குழந்தைகள் காப்பகம் ஒன்றை நிறுவியும் முடித்தார்.

1930-ஆம் ஆண்டில் மே 8-ஆம் நாள், காந்தியடிகள் கைது செய்யப்பட்டதைக் கண்டிக்கும் வகையில் தன்னுடைய சட்ட மேலவைத் துணைத் தலைவர் பதவியை ராஜினாமா செய்தார் இவர். அந்த அரிய தியாகத்திற்காக, பின்னால் இவருக்குக் குடியரசுத் தலைவரால் பத்மபூஷன் பட்டம் வழங்கப் பட்டது.

குழந்தைகள் காப்பகத்தை நாளடைவில் அனாதரவான பெண்களுக்கு அபயமளிக்கும் இல்லமாக்கவும் எண்ணினார் அம்மையார். அந்த எண்ணத்தின் மலர்ச்சியாக 1940-இல் தோன்றியதுதான் அடையாறில் உள்ள 'அவ்வை இல்லம்'. 1949-இல் அடையாற்றில் புற்றுநோய் மருத்துவமனையைத் தோற்றுவித்த பெருமைக்கு உரியவர் இவர்.

மகளிர் மேம்பாட்டுக்காகப் பாடுபட்டு மங்காப் புகழ்பெற்ற டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி 1968 ஜூலை 22-ஆம் நாளன்று மறைந்தார்.

பி.எல். ராஜேந்திரன்



## திண்டுக்கல் காயிதே மில்லத் மாவட்டம்:

# அரசு அனுமதித்துள்ள அரிய பணிகள்

**தி**ண்டுக்கல் காயிதே மில்லத் மாவட்டத்தில் கிராமப்புறப் பகுதிகளிலும், நகர்ப் பகுதிகளிலும் புதிய ஆழ்குழாய்க் கிணறுகள் அமைக்கும் திட்டத்தின்கீழ் நடப்பு ஆண்டில் 385 ஆழ்குழாய்க் கிணறுகள் அமைத்திட அரசு அனுமதி வழங்கி, பணிகள் முடிவுறும் தருவாயில் உள்ளன. இதில் இதர செலவினத் திட்டத்தின்கீழ் கிராமப் பகுதிகளிலும், நகர்ப் பகுதிகளிலும் 225 புதிய ஆழ்குழாய்க்கிணறுகள் அமைக்க அரசு அனுமதித்து, அனைத்தும் முடிக்கப்பட்டுவிட்டன.

ஊராட்சி ஒன்றியங்கள், பேரூராட்சிகள், பழனி நகராட்சி ஆகியவற்றில் 200 கிணறுகள் ஆழப்படுத்துவதற்கு ரூ.8 இலட்சமும், அதுபோல் அனைத்து ஊராட்சி ஒன்றியங்கள், பழனி நகராட்சி ஆகியவற்றிற்கு 194 ஆழ்குழாய்க் கிணறுகள் தூர் எடுக்க ரூ.1.55 இலட்சமும் அனுமதிக்கப்பட்டு, பணிகள் முடிவடையும் தருவாயில் உள்ளன.

திண்டுக்கல் நகராட்சி, பழனி நகராட்சி, கொடைக்கானல் நகரியம் ஆகியவற்றிற்கு லாரிகள் மூலம் குடிதண்ணீர் விநியோகம் செய்ய ரூ.14 இலட்சம் அரசு அனுமதித்துப் பணிகள் நடைபெற்று வருகின்றன.

புதிய குடிநீர்க் கிணறுகள் அமைப்பதற்கு ரூ.5 இலட்சமும், இருக்கின்ற குடிநீர்த் திட்டத்திற்கு மராமத்துப் பணிகள் செய்வதற்கு ரூ.3 இலட்சமும் அரசு அனுமதித்துப் பணிகள் நடைபெற்று வருகின்றன. குடிநீர்க் குழாய்களை மேலும் நீட்டித்துத் தருவதற்கு 37 இடங்களில் ரூ.2 இலட்சம் அரசு அனுமதித்துள்ளது.


வனத்துறை மூலம் 142 தடுப்பு அணை கட்டும் பணிகளுக்காகவும், கிணறு ஆழப்படுத்தவும், கசிவு நீர்க் குட்டைகள் அமைக்கவும் ரூ.9.65 இலட்சமும், பொதுப் பணித் துறை மூலம் குளங்களைச் செப்பனிடவும், நீர்ப்பாசனக் கால்வாய்களை ஆழப்படுத்தும் பணி 12-க்கும் ரூ.7 இலட்சமும், 21 சிறு பாசனத் திட்டங்களுக்கு ரூ.5 இலட்சமும், நெடுஞ்சாலைத் துறை மூலம் கிராமச் சாலைகள் மேம்படுத்த ரூ.8 இலட்சமும் அரசு அனுமதித்து 21 பணிகள் நடைபெற்று வருகின்றன.

ஏற்கனவே ரூ.54.54 இலட்சம் செலவில் ஜவகர் வேலைவாய்ப்புத் திட்டத்தின்கீழ் வறட்சியால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் கிராமங்களில் உள்ள மக்களுக்கு வேலை வாய்ப்பு அளிக்கும் பொருட்டு 182 பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இதில் வேளாண்மைப் பொறியியல் துறை மூலம் 35 கசிவுநீர்க் குட்டைகளும், ஊராட்சி ஒன்றியங்களின் மூலம் புதிய குளங்கள் வெட்டுதல், குளம் தூரெடுத்தல், மதகுகள் கட்டுதல், புதிய வாய்க்கால்கள் அமைத்தல் ஆகியவற்றிற்கு அரசு அனுமதித்த தொகை செலவழிக்கப்பட்டு, பணிகள் நடைபெற்று வருகின்றன.

ஆதிதிராவிடர்களுக்கு இம்மாவட்டத்தின் அனைத்து ஊராட்சி ஒன்றியங்களிலும் 1,430 வீடுகள் கட்டுவதற்கு ரூ.148 இலட்சம் அரசு அனுமதித்து 116 வீடுகள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன.

மேற்கண்ட செய்திகளைத் திண்டுக்கல் காயிதே மில்லத் மாவட்ட ஆட்சித் தலைவர் திரு சக்திகாந்த தாஸ், இ.ஆ.ப., அவர்கள் அறிவித்திருக்கிறார்.

எம். அண்ணாமலை, பி.ஏ.
செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்,
திண்டுக்கல் காயிதேமில்லத் மாவட்டம்
திண்டுக்கல்



## ஒன்றரைக் கோடி ரூபாயில் கட்டப்பட்ட மேம்பாலத்தை மதுரையில் முதல்வர் கலைஞர் திறந்தார்

**ம**துரை அருப்புக்கோட்டை சாலை வில்லாபுரத்தையும் தெற்கு வாசலையும் இணைக்கும் ரயில்வே மேம்பாலத்திட்டத்திற்கு 1974-ஆம் ஆண்டில் மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள் ரூ. 34 இலட்சம் நிதி ஒதுக்கித் தொடங்கி வைத்தார். அதன்பின், பல்வேறு தடைகளால் அப்பணி நின்றுபோயிருந்தது. 14 ஆண்டுகளுக்குப் பிறகு மீண்டும் கலைஞர் அவர்கள் தமிழக முதல்வராகப் பொறுப்பேற்ற பிறகு, அந்த மேம்பாலப் பணி முழுவேகத்தில் முடுக்கி விடப்பட்டு ஒன்றரைக் கோடி ரூபாய் செலவில் கட்டி முடிக்கப்பட்டது. முதல்வர் கலைஞர் அந்தப் பாலத்தை மதுரையில் 11-8-89 அன்று திறந்து வைத்து உரையாற்றினார்..


அவ்விழாவிற்கு, மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் திரு. துரைமுருகன் தலைமை தாங்கினார். தலைமைப் பொறியாளர் திரு. கனகரத்தினம் வரவேற்புரையாற்றினார். ரயில்வே மண்டலப் பொறியாளர் திரு. ஏ.கே. சோமசுந்தரம் அறிக்கை படித்தார்.

விழாவில் மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவர் டாக்டர் தமிழ்க்குடிமகன், மாண்புமிகு அமைச்சர்கள் திரு. பொன். முத்துராமலிங்கம், திரு. ஆற்காடு வீராசாமி, சட்டமன்ற உறுப்பினர்கள் திரு. இராமச்சந்திரன், திரு. சோ. பால்ராஜ். மதுரை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. தேவராஜ் ஆகியோர் உரையாற்றினர்.

மாண்புமிகு முதல்வர் கலைஞர் தெற்கு வாசல் மேம்பாலத்தைத் திறந்து வைத்து உரையாற்றியபோது அந்தப் பாலத்திற்குப் பழம் பெரும் தேசத் தியாகி என்.எம்.ஆர். சுப்பராமன் அவர்களுடைய பெயரை இட்டு, "அடுத்த வாரமே 'என்.எம்.ஆர். சுப்பராமன் மேம்பாலம்' என்ற பெயர் இங்கே எழுதப் பட வேண்டுமென்கிற ஆணையையும் இதே மேடையில் நான் பிறப்பிக்கிறேன்'' என்று அறிவித்தார்.

பெருகி வரும் மக்கள் தொகையை ஒட்டி ஏற்படும் போக்குவரத்து நெரிசலைக் குறைத்திடவும், போக்குவரத்தில் நிகழும் விபத்துகளைத் தவிர்த்திடவும் சென்னையிலிருந்து கன்னியாகுமரி வரை பயணிகள் கப்பல் போக்குவரத்தைத் தொடங்குவது பற்றித் தமிழக அரசு பரிசீலித்து வருகிறது'' என்றும் அப்போது அறிவித்தார்.

நான்காம் அட்டை சொல்லும் செய்தி



# பசும்பொன் தேவர் திருமகன் மாவட்டத்தில் முதல்வர் கலைஞர்

மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள் கடந்த 11.8.89 அன்று பசும்பொன் தேவர் திருமகன் மாவட்டத்தில், மானாமதுரையில் நடைபெற்ற அரசு விழாவில் கலந்து கொண்டு, பல்வேறு திட்டப் பணிகளைத் துவக்கி வைத்தும், பல்வேறு கட்டடங்களைத் திறந்து வைத்தும், பல்வேறு பணிகளுக்குக் கால்கோள் நாட்டியும், நலிந்தோர் பலருக்கு அரசு நலத்திட்ட உதவிகள் வழங்கியும், விழாப் பேருரை ஆற்றினார்கள்.

மாண்புமிகு முதல்வர் தன் உரையில், ''இங்கு லட்சக்கணக்கில் குழுமி இருக்கும் மக்கள் வெள்ளத்துக்கு இடையே மகிழ்ச்சி வெள்ளத்தில் மிதந்து கொண்டு இருக்கிறேன்

இன்று இந்த பிரமாண்ட விழாவைத் தேவர் திருமகன் மாவட்ட ஆட்சித் தலைவரும், அவருக்கு உறுதுணையாக அரசுத் துறைகளின் அதிகாரிகளும் அரும்பணி ஆற்றி, ரூ. 10.5 கோடிக்கான திட்டங்கள், நலிந்தோருக்கு உதவிகள் என்ற நிலையில் வியப்பில் ஆழ்த்தியுள்ளனர்,'' என்றார்.

மானாமதுரை நவீன அரிசி ஆலை, நெல்முடிக்கரை துணை மின்நிலையம் மற்றும் மின்கோபுரப் பாதை, நாட்டாறு அணைக்கட்டு, 334 தாழ்த்தப்பட்டோருக்கான தொகுப்பு வீடுகள் உட்பட ரூ.545.86 இலட்சம் செலவில் உருவாக்கப்பட்டுள்ள திட்டங்களைத் துவக்கியும், பல்வேறு திட்ட கட்டடங்களைத் திறந்தும் வைத்தார் மாண்புமிகு முதல்வர் அவர்கள்.

### 1.21 இலட்சம் பேருக்கு ரூ.10.5 கோடி நலத்திட்ட உதவிகள்;

மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் இலவசத் திருமண நிதி உதவித் திட்டத்தின் கீழ் 105 படித்த ஏழைப் பெண்களுக்கு ரூ.5.25 இலட்சம், டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி மகப்பேறு இலவச நிதி உதவித் திட்டத்தின் கீழ் 200 கர்ப்பிணிப் பெண்கள் மற்றும் பாலூட்டும் தாய்மார்களுக்கு ரூ.40 ஆயிரம், ஊனமுற்றோர் பலருக்குச் சுய வேலைவாய்ப்புத் திட்டம், மூன்று சக்கரச் சைக்கிள் போன்ற பல்வேறு உதவிகள், ஏழை எளியோர் சுமார் 3,000 பேருக்கு ரூ.2.25 கோடி மதிப்பீட்டில் ஒருங்கிணைந்த ஊரகவளர்ச்சித் திட்டத்தின் கீழ் கடன்



மற்றும் மானிய உதவிகள், முதியோர் உதவித் தொகை வீட்டுமனைப்பட்டாக்கள், நிலப்பட்டாக்கள், இலவசத் தொழிற் கருவிகள், வேளாண் கருவிகள், சிறு தொழில் கடன்கள் இப்படி ரூ.380.58 இலட்சம் மதிப்பீட்டிலான பல்வேறு நலத்திட்ட உதவிகளை 1 இலட்சத்து 21 ஆயிரத்து 785 பேருக்கு இதே விழாவில் மாண்புமிகு முதல்வர் அவர்கள் வழங்கினார்.

மக்களுக்கான நலத்திட்ட உதவிகளை வழங்கி உரையாற்றுகையில், மாண்புமிகு முதல்வர் அவர்கள் சில அறிவிப்புகளைச் செய்தார். அதன் விவரம் வருமாறு:

''பசும்பொன் தேவர் திருமகன் மாவட்டத்தில் சிவகங்கையில் மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகம் அமைகின்ற இடத்திற்கு 'மருது பாண்டியர் நகர்' என்று பெயர் சூட்டப்படும். அந்த மருது பாண்டியர் நகரிலே கட்டப்படுகின்ற மாவட்ட ஆட்சித் தலைவர் கட்டடத்திற்குப் 'பன்னீர் செல்வம் மாளிகை' என்று பெயர் சூட்டப்படும்.

''இராமநாதபுரம் மாவட்டத்திலே, இராமநாதபுரம் தலைநகரிலே அமைகின்ற மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலக வளாகத்திற்குச் 'சேதுபதி நகர்' என்று பெயர் சூட்டப்படும். அங்கே எழுகின்ற மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகக் கட்டடத்திற்குச் 'சிங்காரவேலர் மாளிகை' என்று பெயர் சூட்டப்படும். மீனவர் சமுதாயத்திலே பிறந்து சிந்தனைச் சிற்பியாகத் திகழ்ந்தவர் சிங்காரவேலர்.

''காமராஜர் மாவட்டத்தின் தலைநகரான விருதுநகரிலே அமையவிருக்கின்ற மாவட்ட ஆட்சித் தலைவர் வளாகத்திற்கு முன்னாள் முதலமைச்சர் 'குமாரசாமி ராஜா நகரம்' என்று பெயர் சூட்டப்படும். அங்கே கட்டப்படும் மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகக் கட்டடத்திற்கு 'ஏ.வி.பி. ஆசைத் தம்பி மாளிகை' என்று பெயர் சூட்டப்படும்."

மானாமதுரை சட்டமன்ற உறுப்பினர் டாக்டர் பெ. துரைபாண்டி அவர்கள் மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களுக்கு வெள்ளாட்டுக்குட்டி ஒன்றினை மானாமதுரைத் தொகுதி மக்கள் சார்பில் பரிசாக வழங்கினார்

தமிழகம் முழுவதுக்குமான, ஐரோப்பியப் பொருளாதாரக் குழுவின் நிதி உதவியுடன் செயல்படும் தமிழகத்தின் கண்மாய்களை, ஏரிகளை நவீனப்படுத்தும் 2-ஆம் கட்டப் பணிகளையும் இவ்விழாவில் மாண்புமிகு முதல்வர் அவர்கள் துவக்கி வைத்தார்கள்.

இத்திட்டத்தின் மதிப்பீடு ரூ. 53.12 கோடி ஆகும். இத்திட்டத்தின் வாயிலாக செங்கை-அண்ணா, வடார்க்காடு, தென் ஆர்க்காடு, திருச்சி, புதுக்கோட்டை, திண்டுக்கல் காயிதேமில்லத், மதுரை, பசும்பொன்



தேவர் திருமகனார், காமராஜர், இராமநாதபுரம், திருநெல்வேலி கட்டபொம்மன், சிதம்பரனார் ஆகிய 12 மாவட்டங்களைச் சேர்ந்த 150 பெரிய ஏரிகள் மற்றும் 80 சிறிய முன்னாள் ஜமீன் ஏரிகள் ஆகிய ஏரிகள் நவீனப்படுத்தப்பட உள்ளன. இதன் வாயிலாக 24,412 ஹெக்டேர் பாசனப் பரப்பு பயனடையும். 44,700 விவசாயக் குடும்பங்களும் பயனடையும். 61,600 டன் (நெல்) கூடுதல் உணவு உற்பத்தி ஆகும். ரூ.1,230 இலட்சம் கூடுதல் பயன் ஆண்டொன்றுக்கு ஏற்படும். கூடுதல் விவசாய வேலைவாய்ப்பாக ஆண்டொன்றுக்கு 22.5 இலட்சம் மனித நாட்களும், திட்டகாலத்தில் 212 இலட்சம் மனித நாட்களும் உருவாக்கப்படும்.

ஐரோப்பியப் பொருளாதாரக்குழு வளர்ச்சிச் செயலர் திரு. அல்டோடெல்அரிசியா என்ற வெளிநாட்டாரும் இவ்விழாவில் கலந்து கொண்டு மாண்புமிகு முதல்வர் அவர்களைப் பாராட்டிப் பேசியது ஒரு சிறப்பம்சமாகும்.

மாண்புமிகு சட்டப்பேரவைத் தலைவர் டாக்டர் மு. தமிழ்க்குடிமகன் தலைமையில் நடைபெற்ற இவ்விழாவில் மாண்புமிகு உணவுத்துறை அமைச்சர் திரு. ஆற்காடு நா. வீராசாமி, மாண்புமிகு பொதுப்பணித்துறை மற்றும் நெடுஞ்சாலைத்துறை அமைச்சர் திரு. துரைமுருகன், ஐரோப்பியப் பொருளாதாரக்குழு வளர்ச்சிச் செயலர் திரு. அல்டோடெல்அரிசியா, இராமநாதபுரம் நாடாளுமன்றத் தொகுதி உறுப்பினர் டாக்டர் வி. இராஜேஸ்வரன், மானாமதுரைத் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் டாக்டர் பெ. துரைபாண்டி ஆகியோர் கலந்து கொண்டு வாழ்த்துரை வழங்கினார்கள். மாண்புமிகு செய்தி மற்றும் தொழிலாளர் நலத்துறை அமைச்சர் திரு. பொன். முத்துராமலிங்கம், நாடாளுமன்ற உறுப்பினர் திரு. வை. கோபால்சாமி, நாடாளுமன்ற உறுப்பினர் திரு. தா. கிருஷ்ணன், திருப்பத்தூர் சட்டமன்றத் தொகுதி உறுப்பினர் திரு. எஸ்.எஸ். தென்னரசு, சிவகங்கைத் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் திரு. பா. மனோகரன், திருவாடானைத் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் திரு. கே.ஆர். இராமசாமி மற்றும் ஏராளமான மக்கள் பிரதிநிதிகளும், அரசு அலுவலர்களும், இலட்சோபலட்சம் மக்களும் இவ்விழாவில் பங்கு கொண்டனர்.

பசும்பொன் தேவர் திருமகன் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. அ. இளங்கோவன், இ.ஆ.ப., விழாவிற்கு வருகை தந்த அனைவரையும் முன்னதாக வரவேற்றுப் பேசினார். மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையின் திட்ட அலுவலர் திரு. எஸ். தியாகராஜன் நன்றி நவில, விழா இனிதே முடிவுற்றது.

தொகுப்பு
—துரை. தாமரைச் செல்வம்
செய்தி-மக்கள் தொடர்பு அலுவலர்
பசும்பொன் தேவர் திருமகன் மாவட்டம்
சிவகங்கை.

## வ.உ.சி.யின் உறவினர்க்கு உடனடி வேலை

மாபெருந்தேசத்தலைவரும் தியாகியும் சுதந்திரப் போராட்ட வீரருமான வ. உ. சிதம்பரம்பிள்ளை அவர்களின் பேத்தி திருமதி ஏ.எஸ். சிதம்பரவடிவாம்பாள் ''தனது மருமகன் திரு. எம். இராமகிருஷ்ணன், பி.எஸ்.ஸி., பி.எட். படித்துவிட்டு, கடந்த 13 ஆண்டுகளாக வேலைவாய்ப்பகத்தில் பதிவு செய்தும் வேலை கிடைக்காமல் இருக்கின்றார்'' என்று மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கு விண்ணப்பம் செய்தார்.

மாண்புமிகு முதல்வர் அவர்கள், மறைந்த வ.உ. சிதம்பரம் பிள்ளை நாட்டுக்குப் புரிந்த தியாகங்களைக் கருத்திற் கொண்டு, அவரது பேத்தியின் கோரிக்கையை ஏற்று, விதிகளைத் தளர்த்தி, திரு. எம். இராமகிருஷ்ணனைத் தமிழ்நாடு பள்ளிக் கல்வித் துறையில், பள்ளி உதவியாசிரியர் பதவியில் நியமனம் செய்யுமாறு ஆணையிட்டுள்ளார்.



சென்னைக்கு வருகை தந்த மேதகு ரஷ்ய நாட்டுத் துணைக் குடியரசுத் தலைவர் திருமதி செவ்செங்கோவுக்கு மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள் நினைவுப் பரிசை வழங்கினார். மாண்புமிகு சட்டப்பேரவைத் தலைவர் டாக்டர் தமிழ்க் குடிமகன் அவர்கள் உடன் உள்ளார். (21.8.89)

# படமும்-செய்தியும்

சட்ட ஆலோசனைக் குழுக் கூட்டம் தலைமைச் செயலகத்தில் மாண்புமிகு சட்ட அமைச்சர் திரு. எஸ்.ஜே. சாதிக்பாட்சா அவர்கள் தலைமையில் நடைபெற்றது. (9.8.89)





புதுக்கோட்டை மாவட்டம் திருமயத்தில் தீரர் சத்தியமூர்த்தி திருவுருவச் சிலையை மாண்புமிகு மத்திய உள்துறை இணை அமைச்சர் திரு. ப. சிதம்பரம் அவர்கள் திறந்து வைத்தார். மாண்புமிகு செய்தி, தொழிலாளர் நலத்துறை அமைச்சர் திரு. பொன்.முத்துராமலிங்கம் அவர்கள் விழாவிற்குத் தலைமை வகித்தார். மாண்புமிகு கால் நடைப் பராமரிப்புத் துறை அமைச்சர் டாக்டர் க. சந்திரசேகரன் விழாவில் கலந்து கொண்டார். (21.8.89)



தமிழகத் தொழிலதிபர்களுடன் மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள் தலைமைச் செயலகத்தில் ஆலோசனை நடத்தினார். (4.8.89)

மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள் சென்னை அண்ணா பல்கலைக்கழக வளாகத்தில், கம்ப்யூட்டர் அறிவியல் மையத்திற்கான கட்டடத்தைத் திறந்து வைத்தார். மாண்புமிகு கல்வி அமைச்சர் பேராசிரியர் திரு. க. அன்பழகன் அவர்கள் விழாவிற்குத் தலைமை வகித்தார். (3.8.89)



# வளரும் வேளாண்மை

## பயிர்களில் தங்கும் எஞ்சிய நஞ்சு

என்னதான் தஞ்சாவூர் சம்பாவாக இருந்தாலும் பதமான விதைதான் என்று பாறையிலே தூவினால் விளையுமா? விளையாது. அதுபோலத்தான், சமுதாயத்துறையிலே ஒரு புரட்சி உண்டாகாமுன்னர் பொருளாதாரப் புரட்சி உருவாக முடியாது.

—பேரறிஞர் அண்ணா


பயிர்களில் தோன்றும் பல் வகையான பூச்சிகளைக் கட்டுப்படுத்த சக்தி மிகுந்த பல பூச்சிக் கொல்லிகளைத் தனியாகவோ, ஒன்றொடொன்று சேர்த்தோ, பரிந்துரை செய்யும் அளவுகளுக்கு மேலாகவும் பயன்படுத்தி வருகின்றோம். இவ்விதம் அளவுக்கு அதிகமாகப் பயன்படுத்தப்படும் பூச்சிக் கொல்லிகள் பயிர்களின் பாகங்களான இலை, காய், பழங்கள் மற்றும் வயலில் தமது நச்சுத் தன்மையை எஞ்சவைத்து விடுகின்றன. ஒரு உணவுப் பொருளில் காணப்படும் பூச்சி, நோய் இவற்றைக் கட்டுப்படுத்த பயன்படுத்தப்பட்ட மருந்தின் எஞ்சிய பகுதியோ அல்லது அவற்றின் மாறுதல் அடைந்த இரசாயனமோ பூச்சிக் கொல்லியின் எஞ்சிய நஞ்சு எனப்படும். இவ்விதம் பயிர்களில் மற்றும் உணவுப் பொருள்களில் உள்ள எஞ்சிய நஞ்சு மனித உடலில் பல இடர்ப்பாடுகளை ஏற்படுத்தும் வல்லமை பெற்றவை. சில சமயங்களில் புற்று நோய் கூட தோன்றலாம் என்று ஆராய்ச்சியாளர்கள் கண்டுபிடித்துள்ளனர்.

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகத்தில் மண் மற்றும் தாவரங்களில் ஏற்படும் எஞ்சிய மருந்தினைக் கண்டுபிடிக்கும் பணி நடைபெற்று வருகிறது. காய்கறிகள், தானியங்கள், பயறுவகைகள், எண்ணெய்வித்துக்கள், கிழங்குப்பயிர்கள், பழவகைகள், மிளகு, ஏலக்காய் போன்ற பணப் பயிர்களில் எஞ்சிய மருந்து ஆராய்ந்து கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

### எஞ்சிய மருந்து ஏற்படுத்தும் தீமைகள்:

எஞ்சிய மருந்து தங்கிய உணவுப் பொருட்களை நாம் அறியாமல் உணவில் சேர்த்துக் கொள்வதால் அந்நஞ்சு உடலில் சிறுகச் சிறுக சேருகிறது. மேலும் நம் உடலில் உள்ள கொழுப்புச் சத்தானது பி.எச்.சி., டி.டி.டீ., போன்ற மருந்துகளை உட்கிரகிக்கும் தன்மையுடையதால் அத்தகைய நஞ்சும் உடலில் கலக்கிறது. அண்மையில் பூச்சியியல் துறையில் செய்த ஆராய்ச்சிகளின் வாயிலாக மனித இனத்தின் தாய்ப்பாலில் கூட பி.எச்.சி. மருந்தின் எஞ்சிய நஞ்சு கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் பிறந்த குழந்தைகளுக்கும் இந்நஞ்சு தாய்ப்பால் மூலம் சென்று பல்வேறு விளைவுகளைத் தோற்றுவிக்கும்.

பூச்சி மருந்தின் எஞ்சிய நஞ்சானது பசு மற்றும் எருமைப்பாலிலும், கோழி முட்டையிலும்கூட உள்ளது என்று கண்டுபிடிக்கப் பட்டுள்ளது. பால், முட்டை போன்ற சத்துள்ள உணவுப் பொருட்களில் உள்ள கொழுப்புச் சத்தானது பூச்சி மருந்தின் நச்சுத் தன்மையை தம்முள் சேர்த்து வைத்திருப்பதே இதற்குக் காரணம்.



இவ்வாறு பயிர்களில் எஞ்சியுள்ள நச்சுத்தன்மை நம் உடலுக்குக் கேடு விளைவிக்காமல் இருக்க காய்கறி, பழவகைப் பயிர்களில் மருந்தடிப்பின் குறைந்தது 3 நாட்கள் முதல் 7 நாட்கள் வரை அறுவடை செய்யக் கூடாது. இது பூச்சி மருந்துகளின் இரசாயனத் தன்மைக்கேற்பத் தெளிக்கப்படும் பயிர் வகைகளுக்கு ஏற்ப அறுவடைக்குக் காத்திருக்க வேண்டிய நாட்கள் மாறுபடும்.

சாதாரணமாக வெண்டை, கத்தரி, தக்காளி போன்ற காய்கறிப் பயிர்களை வாரம் ஒருமுறையோ அல்லது இருமுறையோ அறுவடை செய்கிறோம். அதே சமயம் பூச்சித் தாக்குதலிலின்று பயிரைப் பாதுகாக்கத் தொடர்ந்து மருந்தடிக்கிறோம். மருந்தின் நச்சுத் தன்மையை அச்சமயத்தில் நாம் பெரிது படுத்துவதில்லை. கீழே அட்டவணையில் உபயோகப்படுத்தும் மருந்தின் பெயரும் அறுவடைக்குக் காத்திருக்க வேண்டிய நாட்களும் பயிர்வாரியாகக் கொடுக்கப்பட்டுள்ளது.

| மருந்தின் பெயர் | அறுவடைக்குக் காத்திருக்க வேண்டிய நாட்கள் | | |
|---|---|---|---|
| | வெண்டை | தக்காளி, | கத்தரி |
| என்டோசல்பான் | 3 | 3 | 3 |
| பாசலோன் | 5 | 3 | 2 |
| மிதைல்-பாரதியான் ... | 7 | 5 | 7 |
| பெனிட்ரோதியான் | 6 | 3 | 5 |
| கார்பரில் | 3 | 3 | 3 |



எனவே பூச்சி மருந்தடித்த பின் அறுவடை செய்யும் காலம் வரை தெளிக்கப்படும் பூச்சி மருந்தின் எஞ்சிய நஞ்சின் அளவு குறைவாக இருக்கும்படி பார்த்து அறுவடை செய்ய வேண்டும்.

கால்நடைகளுக்கு உணவாகக் கொடுக்கப்படும் பசுந்தீவனப் பயிர்களில் அபாயகரமான பூச்சி மருந்துகளைத் தெளிக்கக்கூடாது. கூடியவரை பூச்சி மருந்தடிக்காத தீவனங்களையே கால்நடைகளுக்கும். கோழிகளுக்கும் கொடுக்க வேண்டும். கால்நடை, கோழித் தீவனங்களை அதிக அளவில் சேமித்து வைக்கும் அறைகளிலும் அபாயமில்லாத பூச்சி மருந்துகளை உபயோகித்து சேமிப்பில் தோன்றும் பூச்சிகளை அழிக்க வேண்டும்.

மருந்தடித்த சாக்குப் பைகளில் தீவனங்களைச் சேமிப்பது கூடாது. பால்மாடுகளை வளர்க்கும் கொட்டகைகளில் எறும்பு, ஈக்கள் வராத வண்ணம் தடுக்க சில சமயங்களில் பி.எச்.சி., மருந்து தூள்களை அங்கங்கு தூவுதலும் உண்டு. இதனால மருந்தின் வீரியச்சத்து தீவனங்கள் மூலம் கால்நடைகளின் உடலில் சேர்ந்து கொள்கிறது. காய்கறிகள், பழவகைகள் போன்றவற்றை நன்றாகச் சுத்தம் செய்த பின்பே உண்ண வேண்டும். எனவே விவசாயிகள் மிகுந்த எச்சரிக்கையுடன் தமது பயிர்களில் எஞ்சிய நஞ்சு சேராதவாறு பார்த்துக் கொள்ள வேண்டும். கால்நடை வளர்ப்போரும் இதில் தனி கவனம் செலுத்துதல் வேண்டும். இதன் மூலம் பின்னால் விளையும் எதிர் விளைவுகளைத் தடுக்கலாம்.


வேளாண் தகவல் மையம்
தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகம்
கோவை-641 003

# பயிர் இடர்ப்பாடு சோதனைக் கூடம்

பயிர் விளைச்சலுக்கு அவசியமானவை நல்ல வித்துக்கள், சரியான அளவில் உரம், பாசன நீர் மற்றும் தேவையான பயிர்ப் பாதுகாப்பும் ஆகும். விவசாயிகள் இந்த நான்கையும் பயிர்களுக்குச் சரிவர அளித்து வந்த போதிலும் சில நேரங்களில் பயிர்கள் பல வகைகளில் பாதிக்கப்பட்டு மகசூல் வெகுவாகக் குறைந்து விடுகிறது. சில தருணங்களில் பயிர்கள் முழுமையாக அழிவுற்றுப் போகவும் வாய்ப்பு ஏற்படுகிறது. இதற்குக் காரணம் பயிர்கள் பல்வேறு 'விளையியல் இடர்ப்பாடுகளால்' பாதிக்கப்படுவதால்தான். அதாவது நல்ல நிலையில், பயிர்கள் உள்ளே, பல்வேறு உயிரியல் வளர்ச்சிப் பணிகள் சரிவர நடைபெற்று வருகின்றன. ஊட்டக் குறைவுகள், மற்றும் மாறுபட்ட சூழ்நிலைகள் தோன்றும்பொழுது இந்த உயிரியற் செயற்பாடுகளில் பல இடர்ப்பாடுகள் தோன்றுகின்றன. இவற்றை 'விளையியல் இடர்ப்பாடுகள்' என்றழைக்கின்றோம். இந்த 'விளையியல் இடர்ப்பாடுகள்' திடீரென்று தோன்றுகின்றன. இவை ஒரே சீராகத் தோன்றி, பயிரில் அதிக அளவிலோ அல்லது குறைந்த அளவிலோ பாதிப்பை ஏற்படுத்துகின்றன.

தற்பொழுது, பயிர்களுக்குப் பாதுகாப்பு எனப்படுவது பூச்சி, நோய் மற்றும் களை தடுப்பது என்ற மூன்றுதான் எனக் கருதப்படுகிறது. ஆனால், பயிர்களுக்கு வேறு பல வகைகளிலும் பாதிப்புகள் ஏற்பட வாய்ப்புகள் உள்ளன என்று தற்பொழுது தெரிய வருகின்றது. குறிப்பாக, சமீப காலத்தில் பலவகை உயர் விளைச்சல் இரகங்களை உபயோகித்து, திருந்திய முறையில் சாகுபடி செய்து வருகிறோம். இம்முறையில் நல்ல பலனைப்பெற பரிந்துரைக்கப்படும் அதிக உரம், அதிக பூச்சி மருந்து மற்றும் அதிக நோய் தடுப்பு மருந்துகளால் பல புதிய பிரச்னைகள் தோன்றியவண்ணம் இருக்கின்றன. மண்ணின் கார அமில நிலை, உபயோகப்படுத்தும் இரசாயன உரங்களின் தன்மைகள், பாசன நீரில் உள்ள உப்புகள், மற்றும் சுற்றுப்புறச் சூழ்நிலையில் ஏற்படும் திடீர் மாறுதல்களும் பயிரை மிகவும் பாதிக்கின்றன.

இந்தப் பாதிப்புகளைச் சரிவர ஆராய்ந்து, அதற்குரிய பரிந்துரைகளை விவசாயப் பெருமக்களுக்கு, 'பயிர் இடர்ப்பாடு சோதனைக் கூடம்' உடனுக்குடன் அளித்து வருகிறது.





வேலைகளை உடனடியாகச் செய்யா விட்டால் கூடப் பரவாயில்லை; ஆனால், ஒரு வேலையைச் செய்வதற்கு ஒரு தேதியைக் குறிப்பிட்டு விட்டால், அந்தத் தேதியில் அதைச் செய்து முடிக்கும் முயற்சியில் உயிரே போவதானாலும் பின் வாங்கிவிடக் கூடாது

-காந்தியடிகள்

# ஐந்தாம் வகுப்பு படித்தாலும் திருமண உதவிநிதி

ஆதிவாசி மற்றும் மலைவாழ் இனத்தைச் சேர்ந்த பெண்கள் ஐந்தாவது வகுப்புவரை படித்திருந்தாலும் அவர்களுக்குத் தமிழக அரசின் திருமண உதவித் திட்டத்தின் கீழ் ரூ. 5 ஆயிரம் வழங்கப்படும் என்று மாண்புமிகு முதல்வர் அவர்கள் அறிவித்துள்ளார்.

# பல்வேறு சிறுதொழில்களுக்கு ஊக்கச் சலுகைகள்

பிற்பட்ட வட்டங்களில் அமைக்கப்படும் சிறு தொழிற்சாலைகள் ஒவ்வொன்றுக்கும், உயர்ந்த அளவு ரூ. 15 இலட்சம் என்ற வரையறைக்குட்பட்டு, 15 சதவீத மூலதன முதலீட்டு உதவித்தொகை கிடைக்கச் செய்யப்படும்.

கணிசமான அளவிற்கு விரிவுபடுத்தும் மற்றும் பல்திறப்படுத்தும் தற்போதுள்ள தொழிற்சாலைகளுக்கும் சில நிபந்தனைகளுக்குட்பட்டு, இந்த உதவித் தொகை கிடைக்கும்.

தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையம் தொடர்பான முழு விவரங்கள், 'தமிழரசு' இதழில் 1-9-89 முதல் இடம் பெறுகின்றன. தேவையுள்ளவர்கள் 'தமிழரசு' இதழை வாங்கிப் பயன்பெறுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

-ஆசிரியர்
'தமிழரசு'

# விடுதலை வீரர்கள் ஓய்வூதியம் அதிகரிப்பு

விடுதலை வீரர்களின் கோரிக்கைகளைப் பரிசீலனை செய்து, மாண்புமிகு தமிழக முதல்வர் கலைஞர் அவர்கள் விடுதலை வீரர்கள் பெற்றுவரும் ஓய்வூதியத் தொகையை மாதம் ஒன்றுக்கு ரூ. 250/-லிருந்து ரூ. 350/- ஆக உயர்த்தியும், விடுதலை வீரர் இறந்தால் அவரது இறுதிச் சடங்கிற்கு ஆகும் செலவினங்களுக்காக ரூ. 1,000/- வழங்கப்படும் என்றும், விடுதலை வீரர்களின் குடும்பத்திற்கு வருவாய்ச் சான்றிதழ் வழங்கப்படும் போது, அவர்களுக்கு வழங்கப்படும் ஓய்வூதியத் தொகை கணக்கில் எடுத்துக் கொள்ளப்படமாட்டாது என்றும், 43 வது விடுதலை நாளான 15.8.89 அன்று, ஏற்கெனவே அறிவித்தார்.

அதற்கான அரசு ஆணைகள் 19.8.89 அன்று பிறப்பிக்கப்பட்டன.

மேலும், விடுதலை இயக்கத் தியாகிகள் மரணத்தின்போது அந்த ஊரில் உள்ள வட்டாட்சித் தலைவர் அந்தஸ்திற்குக் குறையாத அரசு அதிகாரி ஒருவர் சென்று, மறைந்த தியாகியின் உடலுக்கு மலர் வளையம் வைத்து மரியாதை செலுத்த வேண்டுமென்றும் அந்த ஆணையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த ஆணை, மொழி நலக் காவலர்களுக்கும், எல்லை மீட்பு வீரர்களுக்கும் பொருந்தும்.



# விடுதலை நாள் விழா!

தமிழ்நாடு அரசு சார்பில், விடுதலை நாள் விழா 15-8-89 அன்று, சென்னை இராயப்பேட்டை ஆதர்ஷ் வித்யாலயா மேல்நிலைப்பள்ளியில் நடந்தது.

பஞ்சாப் அசோசியேஷன் பொதுச் செயலாளர் திரு. பி. என். தாவன் அனைவரையும் வரவேற்றார்.

சென்னை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. ஜோர்சிங் சியம் இ.ஆ.ப. அவர்கள், தேசியக் கொடியை ஏற்றி வைத்துத் தலைமையுரையாற்றினார். அதிக மதிப் பெண்கள் பெற்ற மாணவியருக்குப் பரிசுகளை வழங்கினார்.

செய்தி-மக்கள் தொடர்புத்துறை துணை இயக்குநர் திரு. ஏ. பன்னீர் செல்வம், சுதந்திரப் போராட்டக் கால நிகழ்ச்சிகளை நினைவுகூர்ந்தார்.

செய்தி-மக்கள் தொடர்புத்துறைத் துணை இயக்குநர் திரு. இரா. நடேசன் நன்றி கூறினார்.

முடிவில், பள்ளி மாணவியரின் கவின்மிகு கலைநிகழ்ச்சிகள் நடந்தன.

-நமது செய்தியாளர்.

ஆசிரியரும் வெளியிடுபவரும் : தமிழ்நாடு அரசு செய்தி மக்கள் தொடர்பு இயக்குநர், சென்னை.
அரசினர் தோட்டம் தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.
முகவரி : தமிழரசு அலுவலகம், அரசினர் தோட்டம், சென்னை-600 002.

அதி நவீன பட்டு வகைகள்



உங்கள் உலகில் முக்கிய பங்கு பெறுவது வண்ணங்கள்... அவைகளின் அழகு ஜாலங்களை பொலிவும் நேர்த்தியும் மிக்க பட்டு வகைகளில் உங்களுக்குத் கோ-ஆப்டெக்ஸ் அளிக்கிறது.

கோ-ஆப்டெக்ஸ் பங்கு பெறட்டும் — உங்கள் இனிய நேரங்களில்!

100% உன்னதமான பட்டு சுத்தமான சரிகை

கோ-ஆப்டெக்ஸ்
தமிழ்நாடு கைத்தறி
இந்தியாவின் உயர் விற்பனை கைத்தறி வகைகள்.

• புடவைகள் — பருத்தி, பாலியெஸ்டர், பட்டு • ஷர்ட்டிங் • சூட்டிங் • ஃபர்னிஷிங் • பெட்ஷீட்கள் • டவல்கள் • வேட்டிகள் • லுங்கிகள், இணையிலா புதுமைகள், எண்ணிலா வகைகள்.

தமிழரசு

பதிவு எண். M. 8676
Licence No. TN/MS(C)/PP-23



பசும்பொன் தேவர் திருமகன் மாவட்டத்தைச் சேர்ந்த மானாமதுரையில், மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள் நலிந்தோர்க்கு அரசின் நலத் திட்ட உதவிகளை வழங்கினார். (11.8.89)






தமிழ்நாடு ஆவணக்காப்பகம்
22 செப்
சென்னை-600008




தமிழரசு
திருவள்ளுவர் ஆண்டு 2020
சுக்ல-ஆவணி-31
மலர்:20 16-9-1989 இதழ்:6

# இந்த இதழில்...

அண்ணாவின் ஆதரவும் பெரியாரின் பரிவும்
—முதல்வர் கலைஞர் ... 2

தமிழ்த்தென்றல் திரு.வி.க.
பிறந்த நாள் விழா ... 5

அண்ணா திருத்தசாங்கம்
—கவிஞர் வைரமுத்து ... 7

மானுடத்தின் எரிமலை
—கவிஞர் இளந்தேவன் ... 8

தமிழ்நாடு
டாக்டர் எம்.ஜி.ஆர். மருத்துவப்
பல்கலைக்கழகம் - தொடக்க விழா ... 9

அவருக்கு அவரேதான் நிகர்!
—மாண்புமிகு கல்வியமைச்சர்
பேராசிரியர் க. அன்பழகன் ... 11

எண்ண அலைகள்
— கி. வீரமணி ... 12

அய்யா - அண்ணா சில நினைவுகள்
—இராம. சுப்பையா ... 14

தீரர் சத்திய மூர்த்தி
திருவுருவச் சிலைத் திறப்பு விழா ... 17

தஞ்சாவூர் மாவட்டத்தில்
குடிமராமத்துப் பணிகள் ... 20

சாண எரிவாயுக் கலன் ஒரு சமய சஞ்சீவி ... 24

ஈரோட்டில் கொடுமணல்
அகழாய்வுக் கண்காட்சி ... 26

ஊசிமலைக் கிராமம் தத்து எடுக்கப்பட்டது ... 27

கோழிச் செல்வம் காப்போம் ... 28

மாணவர் பக்கம் ... 30

வெள்ளை மனங்கொண்ட அண்ணா
—புலவர் தமிழ்ப்பித்தன் ... 33

தீர்ப்பளியுங்கள்
—பேரறிஞர் அண்ணா சிறுகதை ... 34

அண்ணாவின் கடைசிக் கட்டுரை
—திருவாரூர் முத்துராமன் ... 39

சகலலோகச் சக்கரவர்த்தி
சம்புவராயர் —மாமூலன் ... 42

ராஜ கம்பீர ராஜ்யம்
-நடன. காசிநாதன். ... 45



★ நான் ஒரு பகுத்தறிவுவாதி என்று கருதிக் கொண்டிருக்கிறேன். பகுத்தறிவுக்கு ஒத்த எதுவும் எனக்கு விரோதம் அல்ல. பகுத்தறிவுக்கு ஒவ்வாத எதுவும் எனக்கு நட்பும் அல்ல. இதுதான் எனது நிலை.

★ என் தொண்டெல்லாம் நம் மக்கள் உலக மக்களைப் போல சரிசமமாக வாழ வேண்டும், அறிவிலே முன்னேற வேண்டும் என்பதற்குத் தான்.

-தந்தை பெரியார்.



★ முன்பு தரிசாகக் கிடந்த இடத்தை விளை நிலமாக்கிட வியர்வை சிந்துவோர், குறை அளவு இயங்கி வந்த இயந்திரத் தொழிற்சாலையை முழு அளவு இயங்கிடச் செய்யப் பாடுபடுவோர், மக்களின் வசதிப் பெருக்கத்துக்காக உற்பத்தி, விநியோகம் ஆகியவற்றில் ஈடுபட்டு, அதனை நேர்மையான முறையில் நடத்திடுவோர், இவர்களெல்லாம் என் நண்பர்கள், என்வணக்கத்துக்கு உரியவர்கள்.

★ திருவள்ளுவர் பிறந்த நாட்டுக்கு உரியவர்கள் நாம், அவர் வாழ்ந்த மண்ணில் வாழத் தக்கவர்கள் நாம் என்பதைப் பேச்சினால் அல்ல செயலினால் மெய்ப்பித்துக் காட்ட வேண்டும்.

-பேரறிஞர் அண்ணா

**தந்தை பெரியார்- பேரறிஞர் அண்ணா சிறப்பிதழ்**

**நா**ன் எழுதி நடித்த 'பழனி யப்பன்' நாடகத்தை நூறு ரூபாய்க்கு வாங்கிக் கொண்டவர் 'திராவிட நடிகர் கழகம்' என்ற பெயரால் ஒரு கலை மன்றத்தைத் துவக்கி, கழகப் பிரசார நாடகங்களை நடிப்பது என்ற தீர்மானத்துடன் என்னை அணுகினார். நானும் அதற்கு ஒப்புதல் அளித்து, முதல் முதலாக நாடகக் குழு விழுப்புரத்தில் முகாமிட்டது. என்னையும் அந்த மன்றத்தில் இணைந்து நடிக்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டார்கள். நான் எழுதும் நாடகத்தில் மட்டுமே நடிப்பது என்ற நிபந்தனையுடன் அதற்கு ஒப்புக் கொண்டேன்.

**'கருணா போய் வருகிறேன்'!**

ஒரு நாள் நாடகத்திற்குத் தலைமை வகிக்கப் பெரியார் வந்திருந்தார். இன்னொரு நாள் அண்ணா வந்திருந்தார். அவரிடத்திலேயே நாடக மன்ற உரிமையாளர் பத்து ரூபாய் கடன் கேட்டு வாங்கிய நிகழ்ச்சியையும், அண்ணா புன்னகையோடு அந்தப் பத்து ரூபாயைக் கொடுத்த நிகழ்ச்சியையும், நாடகம் முடிந்து ஊருக்குப் போகு முன், அண்ணா அவர்கள் என் முதுகில் தட்டி, "கருணா, போய் வருகிறேன்" என்று அன்பொழுகக் கூறியதையும் என்னால் மறக்கவே முடியாது.

**தி**ராவிடம் திராவிடர் என்ற உத்வேகத்தை நாட்டில் எழுப்புவதற்காக 'திராவிட நாடு' என்கிற கிழமை இதழை அண்ணா அவர்கள் காஞ்சிபுரத்தில் துவக்கினார்கள். அதனையொட்டித் திராவிடர்க் கழகம் என்ற பெயரால் ஒரு துணை மன்றம் போன்ற அமைப்பினை அண்ணா அவர்கள் காஞ்சிபுரத்தில் உருவாக்கினார். அந்தத் துணை அமைப்பு எதிர்காலத்தில் நாடு தழுவிய இயக்கமாக ஆகுமென்று அன்று யாரும் எதிர்பார்த்திட்டதில்லை.

நீதிக் கட்சியின் பொதுச் செயலாளராக அண்ணா அவர்கள் இருந்ததால் கட்சி வளர்ந்திடவும், புதிய வேகம் கொண்டிடவும், புதிய குறிக்கோள் பெற்றிடவும் வழிமுறை காண வேண்டுமென்று அண்ணா அவர்கள் துடித்தார்கள். நீதிக் கட்சியில் இருந்த பெரும் தலைவர்கள் மாட மாளிகை, மல்லிகை மஞ்சம், கூட கோபுரம், கொட்டு முழக்கு என்றெல்லாம் ஆடம்பரப் பிரியர்களாக இருந்தார்கள். குடிசைகளும், அங்கேயெழும் குரல்களும் அவர்கள் காதில் விழ வாய்ப்பில்லை. அத்தகையோர் பிடியிலிருந்த நீதிக் கட்சியை அண்ணா விடுவிக்க முயன்றார்.

1944-ஆம் ஆண்டில் தான் சேலத்தில் நீதிக் கட்சி மாநாடு நடைபெற்றது. அந்த மாநாட்டில் கட்சித் தலைவர் பொறுப்பிலிருந்து பெரியாரை இறக்கி விட நீதிக்கட்சிச் சீமான்களும், கோமான்களும் முயன்றார்கள். அப்படி நடைபெற்று விடாமல் பெரியாரின் தலைமையைக் காப்பாற்ற அண்ணா நாடெங்கும் சூறாவளிப் பயணம் செய்து, கட்சித் தொண்டர்களின் ஆதரவைப் பெருக்கினார்.

எதிர்ப்புகளை முறியடிக்கவும் நீதிக் கட்சியை ஏழைகளின் இல்லத்திற்குக் கொண்டுவர வேண்டுமென்ற தன்னுடைய எண்ணத்தை நிறைவேற்றிக் கொள்ளவும், இந்திய விடுதலையில் தனக்கிருந்த அழிக்க முடியாத பற்றினை வெளிப்படுத்திக் கொள்ளவும் அண்ணா அவர்கள் சேலம் மாநாட்டில் ஒரு தீர்மானத்தைக் கொண்டு வந்தார்கள். சரித்திரப்புகழ் படைத்த அந்தத் தீர்மானத்திற்கு 'அண்ணாதுரை தீர்மானம்' என்று பெயர்.

**அண்ணா ஏற்படுத்திய புதிய திருப்பம்**

நீதிக் கட்சி என்ற பெயரை மாற்றி திராவிடர் கழகம் என்று பெயரிடப்பட வேண்டுமென்றும், வெள்ளையர் ஆட்சியால் தரப்பட்ட 'சர்', 'ராவ் பகதூர்', 'திவான்பகதூர்' போன்ற பட்டங்கள் துறக்கப்படவேண்டுமென்றும், கௌரவ நீதிபதி மற்றும் நியமனப் பதவி கொண்டவர்கள் அவைகளை இராஜினாமாச் செய்யவேண்டுமென்றும், தங்களுடைய பெயருக்குப் பின்னால் உள்ள சாதிப் பெயரை விட்டொழிக்க வேண்டுமென்றும் அண்ணாவின் தீர்மானம் முழக்கமிட்டது.

35-மணி நேர விவாதத்திற்கு அந்தத் தீர்மானம் உள்ளாகியது. கட்சியின் ஆய்வுக் குழு அண்ணாவின் தீர்மானத்தை வன்மையாக எதிர்த்தது. பின்னர் பொது மாநாட்டினில் அண்ணாவின் தீர்மானத்தை ஆதரித்தும், எதிர்த்தும் கருத்துரைகள் வழங்கப்பட்டுப் பிறகு இறுதியில் அண்ணா விளக்கவுரை வழங்கினார். அதனைக் கட்சித் தோழர்களும், பொதுமக்களும் தங்கள் ஆர்வமிகுந்த கையொலிகளால் வரவேற்றவாறு இருந்தனர். அதனைக் கண்ட நீதிக் கட்சிப் பெரிய மனிதர்கள் ஒவ்வொருவராக மாநாட்டை விட்டு வெளியேறினார்கள். இறுதியில் அண்ணா தீர்மானம் இடி முழக்கமெனக் கையொலிகளுக்கிடையே நிறைவேறியது. பெரியார் தலைமையை அண்ணா காப்பாற்றியது மட்டுமல்ல, நீதிக் கட்சிக்கு ஒரு புதிய திருப்பத்தையும் தந்தார்.

# அண்ணாவின் ஆதரவும்



## முதல்வர் கலைஞர்

# பெரியாரின் பரிவும்

**பு**துவையில் கழக மாநாடு ஒன்றை நடத்தத் திட்டமிட்டு, அதற்கான ஏற்பாடுகளில் அனைவரும் முழுமூச்சாக ஈடுபட்டோம். இரவெல்லாம் நாடக வேலை, பகலில் மாநாட்டு வேலை!

மாநாடு, சீரும் சிறப்புமாக நடைபெற எல்லா ஏற்பாடுகளும் எங்கள் எண்ணம் போல் முடித்துவிட்டனர்.

பெரியார், அறிஞர் அண்ணா, அழகிரிசாமி மற்றும் கழகத் தலைவர்கள் மாநாட்டில் பங்கு கொண்டனர்.

மாநாடு காலை பத்து மணிக்குத் தொடங்கிற்று; மாநாட்டில் கலகம் விளைவிக்கத் திட்டமிட்டவர்களும் ஒன்று, இரண்டு, பத்து நூறாக, மாநாட்டு முகப்புக்கெதிரே கூடி எதிர்ப்பு முழக்கங்கள் செய்திடத் தொடங்கினர்.

"திராவிடத் தலைவர்களே! திரும்பிப் போங்கள்!" என்பதே அவர்களது கூச்சலாக இருந்தது.

"வா! 'என்றழைப்பதுதான் தமிழர் பண்பு! 'போ!' என்று கூறக் காரணம் யாதோ?" என்று தொடங்கி, அறிஞர் அண்ணா அவர்கள் அரியதோர் உரையாற்றினார்கள். அந்த உரையினைத் தொடர்ந்து கழகக் கொடியை ஏற்றி வைத்தார்கள். கொடி ஏற்றப்பட்ட அடுத்த வினாடியே கொடி மரத்தை வீழ்த்தி விட்டார்கள் எதிரிகள்!

அவ்வளவுதான், அமளி தொடங்கி விட்டது. பெரியாரையும் அண்ணாவையும், ஏனைய தலைவர்களையும் வண்டிகளிலும் ரிக்ஷாக்களிலும் ஏற்றிப் பாதுகாப்பாக அனுப்பி விட்டுப் பாரதிதாசனும், நானும், காஞ்சி கல்யாணசுந்தரம் ஆகியோரும் வீதியில் நடந்து வந்து கொண்டிருந்தோம்.

**அந்தச் சம்பவம் இனிக்கிறது!**

திடீரென ஒரு பெருங்கூட்டம் எங்கள் மூவரையும் சூழ்ந்து கொண்டது. நாங்கள் மூவரும் திசைக்கொருவராக ஆகி விட்டோம். பாரதிதாசனை யாரோ அழைத்துக் கொண்டு ஓடி ஒரு வீட்டில் ஒளித்து விட்டார்கள். அவரது காலணியொன்று தெருவிலே கிடந்தது. அதனைக் கருவியாகக் கொண்டு என்னைத் தாக்கினார்கள். பெரிய லாடம் அடிக்கப்பட்ட பூட்ஸ்!

அது எப்படியிருந்திருக்கும் என்று கூற வேண்டியதில்லை. அப்பொழுது வலித்தது. ஆனால் இப்பொழுது நினைத்தாலும் அந்தச் சம்பவம் இனிக்கிறது.

அந்த நீண்ட தெருவில் ஒரேயொரு வீட்டில் மாத்திரம் கதவு திறந்திருந்தது. வாயிற்புறத்தில் இரண்டொரு பெண்கள் நின்று கொண்டு இருந்தார்கள். நான் வீட்டிற்குள்ளே நுழைந்தேன். வீட்டிற்குள்ளே நுழைந்த என்னை அந்தப் பெண்கள் தடுக்கவில்லை. திண்ணையில் இருந்தவாறு எந்தவிதச் சலனமும் இன்றி இந்த நிகழ்ச்சியைப் பார்த்துக் கொண்டிருந்தார்கள்.

வீட்டிற்குள் சென்ற நான், தொடர்ந்து வந்த கூட்டத்தினர் என்னைப் பிடித்து விடாமலிருக்கக் கதவைச் சாத்தினேன். அதற்குள் கூட்டத்தினர் கதவைத் தள்ளிக் கொண்டு உள்ளே நுழைந்தனர். நான் கதவிடுக்கின் மறைவில் நின்று கொண்டு அந்த வீட்டை ஒருமுறை பார்த்தேன். தாழ்வாரத்திலும் கூடத்திலும் மதுப் புட்டிகள் இறைந்து கிடந்தன. காலி செய்யப்பட்ட புட்டிகளும், காலி செய்யப்படாத புட்டிகளும் ஏராளமாக இருந்தன. அந்த வீடு தான் கலகக்காரர்கள் சதித் திட்டம் தீட்டிய இடம் என்பதைப் பிறகு புரிந்து கொண்டேன். உள்ளே நுழைந்தவர்கள் கதவின் மறைவில் இருந்த என் தலைமயிரைப் பிடித்திழுத்துத் தெருப்புறத்தில் தள்ளினார்கள். 'க்யூ' வரிசையில் நிற்பது போல நின்று கொண்டிருந்த கலகக்காரர்கள் ஆளுக்கொரு அடி என்னை அடித்தார்கள். நான் மயக்கமுற்றேன். சுருண்டு விழுந்தேன். நான் இறந்துவிட்டதாகக் கருதி, சாக்கடை ஓரத்தில் தூக்கியெறிந்து விட்டுப் போய்விட்டார்கள்.



இந்த நிகழ்ச்சிக்குப் பிறகு இரண்டு மணிநேரம் கழித்துத்தான் நான் கண் விழித்துப் பார்த்தேன். எங்கேயோ வீட்டுத் தாழ்வாரத்தில் நான் படுக்க வைக்கப்பட்டிருந்தேன். முதிர்ந்த ஒரு தாயும் ஒரு சிறுமியும் ஓர் இளைஞனும் என் அருகே இருந்தார்கள். நான் கண் விழித்துப் பார்த்தபோது அந்தத் தாய் சொன்ன வார்த்தை என் நெஞ்சில் அப்படியே பதிந்து விட்டது.

''ஐயோ, யார் பெற்ற பிள்ளையோ! இப்படிச் சாகக் கிடக்கிறதே?'' என்பதுதான் அந்தத் தாயின் வாயிலிருந்து வந்த கனிவு மிக்க வாசகம்.

இதற்கிடையில் காலையில் கலைக்கப்பட்ட கழக மாநாடு மீண்டும் மாலையில் கூட்டப்பட்டு அழகிரிசாமி அந்த மாநாட்டில் கலந்து கொண்டு உரையாற்றினார். அப்போது அவர் சொன்ன வாசகம் தான், ''காலையில் சில கவலை தரத்தக்க நிகழ்ச்சிகள் நடந்ததாகக் கேள்விப்பட்டேன். நடந்தவைகள் நடந்தவைகளாக இருக்கட்டும். இனி நடப்பவைகள் நல்லவைகளாக இருக்கட்டும்'' என்பதாகும்.

**காயங்களுக்கு மருந்திட்ட பெரியார்**

என்னுடைய நிலைமை என்னவாயிற்று என்று தெரியாமல் தலைவர்கள் ஊரெல்லாம் ஆள் அனுப்பித் தேடியிருக்கிறார்கள். பெரியாரும், அண்ணாவும் என்னைக் காணாமல் துடித்துப் போயினர். விடியற்காலை நாலு மணிக்குத் தலைவர்கள் தங்கியிருக்கும் இடம் தெரிந்து அவர்களிடம் போய்ச் சேரப் புறப்பட்டேன். மீண்டும் என்னைத் தெருவில் கண்டால் கலகக்காரர்கள் உயிரைப் பறித்துவிடக் கூடுமென்று அஞ்சிய எனக்கு உதவி செய்த வீட்டார் என்னை மாறுவேடத்தில் போகுமாறு வலியுறுத்தினர். அவர்களே அதற்கான ஏற்பாடுகளையும் செய்து, முஸ்லீம் வேடத்தில் என்னை அனுப்பி வைக்கத் திட்டமிட்டனர். கைலி, நீண்ட ஜிப்பா, தலையில் குல்லாய் இவைகளுடன் ரிக்ஷா ஏறி, தலைவர்கள் இருக்குமிடம் சென்றேன். பெரியார் கண்ணுறங்காமல் என்னைப் பற்றிக் கவலைப்பட்டுக் கொண்டு உட்கார்ந்திருந்தார். என்னைக் கண்டதும் ஆரத் தழுவிக் கொண்டு, ''சுகமாக இருக்கிறாயா?'' என தழுதழுத்த குரலில் கேட்டார்.

அதற்குப் பிறகு அவரே என் காயங்களுக்கெல்லாம் மருந்திட்டார். ''என்னுடன் வா, போகலாம்'' என்று ஆணையிட்டார். நானும் அவருடன் புறப்படத் தயாரானேன்.

★ பட்டாளிகளுடைய கடமை சமுதாயத்திற்கு நன்மை செய்வதிலே இருக்கிறது.

அவர்களுடைய **கண்ணியம்** தங்களுடைய சக்தியைப் பாழ்படுத்திக் கொள்ளாததிலே இருக்கிறது.

அவர்களுடைய **கட்டுப்பாடு** தங்களுடைய ஒற்றுமையை உடைப்பதற்கு யார் எந்த முயற்சி எடுத்துக் கொண்டாலும், ஒரு துளியும் இடம் கொடுக்காத தன்மையிலே இருக்கிறது.

*பேரறிஞர் அண்ணா*



இந்தச் சம்பவத்திற்குப் பிறகுதான் பெரியாரின் ஈரோட்டுக் 'குடியரசு' அலுவலகத்தில் துணையாசிரியனாகப் பணிபுரியும் வாய்ப்பு எனக்குக் கிட்டியது.

''குடியரசு துணை ஆசிரியனாக இரு!'' என்று பெரியார் பணித்ததோடு மட்டுமல்லாமல், அந்த இதழில் என்னைக் கட்டுரைகள் எழுத அனுமதித்து, அதனைப் படித்து மகிழ்ந்தார். எனக்கு மாதம் நாற்பது ரூபாய் சம்பளம். அதில் பிற்பகலும் இரவும் பெரியார் வீட்டில் சாப்பிடுவதற்காக இருபது ரூபாய் பிடித்துக் கொள்வார்கள். காலைச் சிற்றுண்டி, மாலைச் சிற்றுண்டிக்கு மாதம் பத்து ரூபாய் ஆகிவிடும். இதரச் செலவுகள் ஐந்து ரூபாய், மீதம் ஐந்து ரூபாயை என்னை அண்டி வந்த அருமை மனைவிக்கு - பத்மாவிற்கு மாதந்தோறும் திருவாரூருக்கு மணியார்டர் செய்து வந்தேன்.

எப்படியோ பிள்ளை சம்பாதிக்கிறான் என்று என்னைப் பெற்ற தாய்க்கும் தந்தைக்கும் உற்ற சகோதரிகளுக்கும் பெருமகிழ்ச்சிதான்.

காலை எட்டு மணிக்கெல்லாம் பெரியார் வீட்டில் அவர் முன்னால் அமர்ந்து அன்று வருகிற தபால்களை அவர் பார்த்து அது பற்றிய விளக்கங்களை அறிவித்து அதனைச் செயல்படுத்துகிற வழிவகைகளை நாங்கள் தொடங்கிவிட வேண்டும். பிறகு அலுவலக வேலை. மாலையில் பெரியார் அலுவலகம் வருவார்.


'குடியரசு' இதழில் நான் எழுதிய அண்ணாமலைக்கு அரோகரா! என்ற கட்டுரையைப் பெரியார் பெரிதும் பாராட்டினார். திருவண்ணாமலை தீபத்தைப் பற்றிய கட்டுரையாகும் அது. அதற்குப் பிறகு பெரியாரைக் கவர்ந்த மற்றொரு கட்டுரை 'தீட்டாயிடுத்து!' என்ற துணைத் தலையங்கமாகும்.

ஒவ்வொரு நாளும் இரவு பெரியார் வீட்டில் உணவு முடிந்ததும், பெரியார் தன் வீட்டு மாடியில் காற்றோட்டமான பகுதியில் எங்களை உட்கார வைத்துக் கொண்டு, சமுதாயச் சீர்திருத்தங்கள். அரசியல் மாற்றங்கள் இவைகளைப் பற்றியெல்லாம் நீண்ட நேரம் விளக்கங்கள் அளிப்பார். எங்களுக்குத் தூக்கம் வருவதைத் தெரிந்து கொண்ட பிறகே அவர் தூங்கக் கிளம்புவார்.

ஓராண்டுக் காலம் 'குடியரசு' அலுவலகத்தில் பணியாற்றிப் பெரியாரிடம் கல்வி கற்கும் மாணவனாக இருந்தேன். அதற்குப் பிறகு கோவையிலிருந்து எனக்கொரு அழைப்பு வந்தது. திரைப்படத்திற்கு வசனம் எழுத வேண்டுமென்ற அழைப்புத்தான் அது. அழைப்பை அனுப்பியவர் ஏ.எஸ்.ஏ. சாமி அவர்களாவார். என்னுடைய நண்பர் முத்துக் கிருஷ்ணன் என்பாரின் துணையுடன் கோவை சென்று, திரு. சாமியிடம் விவரங்களை அறிந்தேன். கோவை ஜூபிடர் நிறுவனத்தின் சார்பில் எடுக்கப்பட்ட 'இராஜகுமாரி' என்ற படத்திற்கு நான் வசனம் எழுத வேண்டும் என்று கூறப்பட்டது. பெரியாரிடம் தெரிவித்தேன். அவரும் போய் வா! என்று விடை கொடுத்தார்.

**—'நெஞ்சுக்கு நீதி' என்னும் நூலிலிருந்து**





# தமிழ்த் தென்றல் திரு.வி.க. பிறந்தநாள் விழா

தமிழ்த்தென்றல் திரு.வி.க. அவர்களின் 107-வது பிறந்த நாள் விழா, தமிழ் வளர்ச்சித் துறை சார்பில் சென்னையில் உள்ள இராணி சீதை மன்றத்தில், 27.8.89 அன்று மிகச் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது.

மாண்புமிகு கல்வியமைச்சர் பேராசிரியர் க. அன்பழகன் அவர்கள் தலைமையில் நடைபெற்ற இவ்விழாவில் மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள் பேராசிரியர் டாக்டர் தமிழண்ணல் அவர்களுக்குத் தமிழ்த் தென்றல் திரு.வி.க. விருதினையும், ரூ.10,000 பணமுடிப்பையும் வழங்கிச் சிறப்புரை ஆற்றினார். மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவர் டாக்டர் தமிழ்க்குடிமகன் அவர்கள் வாழ்த்துரை வழங்கினார்.

இவ்விழாவின் துவக்கத்தில் தமிழ் வளர்ச்சி மற்றும் பண்பாட்டுத்துறைச் செயலாளர் டாக்டர் ஔவை நடராசன் வரவேற்புரையாற்றினார்.

**தலைமையுரை**

மாண்புமிகு கல்வியமைச்சர் பேராசிரியர் க. அன்பழகன் அவர்கள் தமது தலைமையுரையில்-

''தமிழாசிரியராக இருந்து, தொழிற்சங்கவாதியாக இருந்து, அரசியல்வாதியாக, சிறந்த எழுத்தாளராக-பேச்சாளராக வளர்ந்த தமிழ்ப்பெரியார் அவர். தந்தை பெரியார் அவர்கள் சென்னைக்கு வந்தால், திரு.வி.க. இல்லத்திலே தங்கும் ஒரு காலமும் இருந்தது. அறிஞர் அண்ணா அவர்களைப் பெரிதும் போற்றிப் புகழ்ந்தவர் திரு.வி.க. பெண்ணடிமை தீர மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் போராடிய நேரத்தில், திரு.வி.க.வும் அதற்காக அரும்பாடு பட்டார்'' என்று திரு.வி.க. அவர்களின் பெருமையைப் போற்றினார்.

விருதினைப் பெற்றுக்கொண்டு பேராசிரியர் டாக்டர். தமிழண்ணல் அவர்கள் ஏற்புரை வழங்கினார்.

**சிறப்புரை**

விருது வழங்கி விழாப் பேருரை நிகழ்த்திய மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள் சிறப்புரையாற்றும்போது குறிப்பிட்டதாவது:

''ஒரு காலத்தில் தமிழ்நாட்டு அரசியல் சரித்திரத்தில், மூன்று பெரும் அரசியல் தலைவர்கள் ஜாதியின் பெயராலேயே நாயக்கர், நாயுடு, முதலியார் என்று அழைக்கப்பட்டார்கள். நாயுடு என்று டாக்டர் வரதராஜுலு அவர்களையும், நாயக்கர் என்று தந்தை பெரியாரையும், முதலியார் என்று தமிழ்த் தென்றல் திரு.வி.க. அவர்களையும் குறிப்பிடுவதுண்டு. அந்த ஜாதிப் பெயர்களால் அன்றைக்குப் பிரபலமான தலைவர்கள், அவர்கள் ஆற்றிய தொண்டின் காரணமாக, அந்த ஜாதிகள் ஒழிந்து - பெரியார் என்றும் டாக்டர் வரதராஜுலு என்றும், தமிழ்த் தென்றல் திரு.வி.க. என்றும், இன்றைக்கு ஜாதி நீக்கப்பட்ட பெயர்களை முழங்குகின்ற அளவிற்கு வளர்ந்திருக்கின்றோம்.

''பெருமைவாய்ந்த தமிழ்த்தென்றல் திரு.வி.க அவர்களுடைய பெயரால் அமைந்துள்ள விருதை - எஞ்சி இருக்கின்ற சில விருதுகள், கடந்த காலத்திலே வழங்கப்படாமல் இருந்தவை வழங்கப்பட்டதைப் போல - இந்தப் பிறந்தநாள் விழாவில், இந்த விருதினை யாருக்கு வழங்கலாம் என்று நானும் பேரன்பிற்குரிய கல்வியமைச்சர் பேராசிரியர் அவர்களும் சிந்தித்த நேரத்தில், டாக்டர் தமிழண்ணல் எங்கள் நினைவுக்கு வந்தார்.

பசும்பொன் தேவர் திருமகன் மாவட்டத்தில் உள்ள நெற்குப்பை எனும் வளம் பொருந்திய சிற்றூரிலே பிறந்து, தமிழை மேலும் மேலும் வளமாக்குகின்ற பணியிலே ஈடுபட்டிருக்கின்ற தமிழண்ணல் அவர்கள் இங்கே எனக்கும் பேராசிரியருக்கும் ஒரு வேண்டுகோளை வைத்தார். பாலர் பள்ளி முதல் பல்கலைக்கழகம் வரை, இருமொழிக் கொள்கையை நடைமுறைக்குக் கொண்டுவர ஆவன செய்ய வேண்டும் என்றார்.

தமிழறிஞர்கள் கூறுவதை - தமிழை ஆள்பவர்கள் கூறுவதை - தமிழ்நாட்டை ஆள்கின்ற நான் வேண்டுகோளாக எடுத்துக்கொள்ளுவதில்லை; அன்புக் கட்டளையாக ஏற்றுக்கொண்டு, நானும் பேராசிரியரும் அதை எந்த அளவுக்கு நிறைவேற்ற முடியுமோ அந்த அளவிற்கு நிறைவேற்றத் தயாராக இருக்கிறோம்.

—விழா முடிவில், தமிழ் வளர்ச்சித் துறை இயக்குநர் (பொறுப்பு) திரு. கு. சிவஞானம் நன்றி கூறினார்.

**- நமது செய்தியாளர்**

# புதிதாகச் சூட்டப்பட்ட புகழ்ப் பெயர்கள்

பசும்பொன் முத்துராமலிங்கம் மாவட்டம் என்ற பெயர் மாற்றப்பட்டு - 'பசும்பொன் தேவர் திருமகன் மாவட்டம்' என்று பெயர் சூட்டப்பட்டது. (3.4.89)

சென்னைப் பெருநகர வளர்ச்சிக் குழுமக் கட்டடத்திற்குத் 'தாளமுத்து நடராசன் மாளிகை' என்று பெயரிடப்பட்டது. (14.4.89)

செங்கல்பட்டைத் தலைநகராகக் கொண்ட மாவட்டத்திற்குச் 'செங்கை அண்ணா மாவட்டம்' என்று பெயர் சூட்டப்பட்டது. (1.6.89)

மகளிர் கல்வி வளர்ச்சிக்கு ஊக்கம் தருகிற ஏற்பாடாக வறுமையில் உழலும் குடும்பங்களைச் சேர்ந்த பெண்கள், எட்டாம் வகுப்பும் அல்லது அதற்கு மேலும் படித்துத் தேறியிருந்தால், அவர்களின் திருமணச் செலவிற்காக ரூ.5000/- வழங்க திருமண உதவித் திட்டம் கொண்டு வரப்பட்டது. இத்திட்டத்திற்கு 'மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் நினைவு திருமண உதவித் திட்டம்' எனப் பெயரிடப்பட்டது. (3.6.1989)

தமிழகத்திலுள்ள எல்லா ஏழை, நடுத்தரக் குடும்பங்களைச் சேர்ந்த மகளிருக்கு இளங்கலைப் பட்டப்படிப்பு வரை கல்வி இலவசம் என அரசு அறிவித்தது. இந்த இலவசக் கல்வித் திட்டத்திற்கு 'ஈ.வெ.ரா. நாகம்மையார் நினைவு மகளிர் இலவசப் படிப்புத் திட்டம்' என்று பெயர் வைக்கப்பட்டது. (3.6.89)

திண்டுக்கல் காயிதே மில்லத் மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகக் கட்டடத்திற்கு சுதந்திரப் போராட்ட வீரர் 'சுப்பிரமணிய சிவா மாளிகை' எனப் பெயரிடப்பட்டது. (11.6.89)

திண்டுக்கல்லைத் தலைநகரமாகக் கொண்ட மாவட்டத்திற்குத் 'திண்டுக்கல் - காயிதே மில்லத் மாவட்டம்' என்று பெயர் சூட்டப்பட்டது. (11.6.89)

சென்னையில், கத்திப்பாரா சந்திப்பிலிருந்து அண்ணா நகர் வரையிலான சாலைக்குப் 'பண்டித ஜவஹர்லால் நேரு சாலை' என்று பெயர் சூட்டப்பட்டது. (23.6.89)

சென்னையில் - எத்திராஜ் மகளிர் கல்லூரி அமைந்துள்ள சாலைக்குப் பிரபல வழக்கறிஞரும் கல்வியாளருமான எத்திராஜ் அவர்கள் பெயரில் 'எத்திராஜ் சாலை' என்று பெயர் சூட்டப்பட்டது. (4.8.89)

பசும்பொன் தேவர் திருமகன் மாவட்டத்தில் சிவகங்கையில், மாவட்ட ஆட்சித்தலைவர் அலுவலகம் அமைகின்ற இடத்திற்கு 'மருது பாண்டியர் நகர்' என்றும், அங்கே கட்டப்படும் மாவட்ட ஆட்சித் தலைவர் கட்டடத்திற்கு 'பன்னீர் செல்வம் மாளிகை' என்றும் பெயர்கள் சூட்டப்பட்டன. (11.8.89)

இராமநாதபுரம் மாவட்டத்தில், இராமநாதபுரத்தில் மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகம் அமைகிற இடத்திற்கு 'சேதுபதி நகர்' என்றும், அங்கே உருவாகும் மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகக் கட்டடத்திற்குச் 'சிங்கார வேலர் மாளிகை' என்றும் பெயர்கள் சூட்டப்பட்டன. (11.8.89)

காமராசர் மாவட்டத்தின் தலைநகரான விருதுநகரிலே அமையவிருக்கும் மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகம் அமைகின்ற இடத்திற்கு முன்னாள் முதலமைச்சரான குமாரசாமி ராஜா பெயரில், ''குமாரசாமி ராஜா நகர்'' என்றும், அங்கே கட்டப்படும் மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகக் கட்டடத்திற்கு 'ஏ.வி.பி. ஆசைத்தம்பி மாளிகை' என்றும் பெயர்கள் சூட்டப்பட்டன.

கன்னியாகுமரியில் உள்ள நேசமணி போக்குவரத்துக் கழகப் பேருந்து நிலையத்திற்குக் 'கவிமணி தேசிக விநாயகம்' பெயர் சூட்டப்பட்டது. (17.8.89)

சென்னையில், ஸ்ரீ நாராயணகுரு மண்டபம் அமைந்திருக்கும் சாலைக்கு 'நாராயண குரு சாலை' என்று பெயர் சூட்டப்பட்டது. (3.9.89)

—தொகுப்பு: ராஜு



*அண்ணாவை அறிஞர் அண்ணா என்று சொல்லக் காரணம் அவரது அறிவின் திறம் தான். அவரது ஆட்சிக் காலத்தில் எந்தத் தமிழனுடைய உரிமையையும் அவர் புறக்கணிக்கவில்லை. அதனாலேயே தமிழர் சமுதாயத்தினுடைய அன்பை இதுவரை யாரும் பெற்றிராத அளவுக்கு அண்ணா பெற்றிருக்கிறார் என்பது மகிழ்ச்சிக்குரிய விஷயமாக இருக்கிறது! நாட்டில் எல்லாக் கட்சியாருடனும், எல்லா மக்களுடனும், மிக்க அன்புக்குரியவராகவும் நேசமாகவும் இருந்து வந்தார்.*

# அண்ணா திருத்தசாங்கம்

**கவியரசு வைரமுத்து**

(நாமம்)

மழலை மொழிக்கிளியே! மன்னவனின் தூய
அழகுப் பெயரை அறிவி-பழச்சாறாய்ச்
சொன்னாலும் தேனின் சுவையொழுகும் அப்பப்பா!
அண்ணா துரையென்றே ஆடு!

(நாடு)

அன்புப் பசுங்கிளியே! ஆடகப்பொன் மன்னவனின்
இன்பமிகு நாட்டை இயம்பிடு-மென்தும்பி
பூவாடத் தேன்வழியாப் பொன்மழைஎன் றஞ்சிவிடும்
சாவாத் தமிழகமே சாற்று!

(நகர்)

சீரெல்லாம் செப்பும் செழுங்கிளியே! மன்னவனின்
ஊரென்ன கொஞ்சம் உரைத்திடு-வேறென்ன!
மாஞ்சோலைப் புள்ளும் மலர்த்தமிழைப் பாடிவரும்
காஞ்சியே அண்ணனூர் காண்!

(ஆறு)

பாடுங் கிளியே! பழத்தமிழாய் நெஞ்சத்தில்
ஆடுந் தலைவனவன் ஆறென்ன?-பாடும்
பழகு தமிழ்படித்த பால்மழலை வேந்தன்
அழகுக் கவிமொழியே ஆறு!

(மலை)

சின்னஞ் சிறுகிளியே! சீதளப் பாட்டிசைத்த
மன்னவன் கொண்ட மலையென்ன?-பொன்னனைய
தாளாப் பெருமை தமிழ்போலச் சேர்ந்தவன்
மாளாப் புகழே மலை.

(ஊர்தி)

சீர்பாடும் கிள்ளாய்! செழுந்தமிழ் வேந்தனவன்
ஊர்தியின் பேரை உரைத்திடு-சீர்நல்கும்
பூந்தமிழைப் போற்றிப் புதுக்கவிகள் பாடிவரும்
தீந்தமிழ் நெஞ்சமவன் தேர்.

(படை)

சந்தக் கிளியே! சரித்திர நாயகனின்
சொந்தப் படையென்ன? சொல்லிவிடு-பந்தைப்போல
எம்பிப் பகைவர் இடுப்பொடிக்கும் மன்னவனின்
தம்பிப் படையதுவே தான்!

(முரசு)

முத்துக் கிளியே! முரசின் பெயர்சொன்னால்
சித்தங் களித்திடுவேன் செப்பிடு-வித்தகர்க்கு
நாவால் ஒலியெழுப்பி நாட்டில் படைதிரட்டும்
மூவாத் தமிழே முரசு.

(தார்)

இன்கிளியே! எங்கள் இதயத்தில் பண்ணிசைக்கும்
தண்டமிழ் வேந்தனவன் தாரென்ன?-தென்புலவர்
பாட்டு மலர்தொடுத்த பைந்தமிழாம் மாலையினைச்
சூட்டுவ ராமென்றே சொல்!

(கொடி)

பாட்டு மொழிக்கிளியே! பார்புகழும் வேந்தனவன்
நாட்டுங் கொடியை நவின்றிடு-நாட்டினில்
சுற்றும் பகையைச் சுழன்றாடி ஏற்றிடுவான்
வெற்றிக் கொடிதான் விளம்பு!





# மானுடத்தின் எரிமலை



மானுடத்தின் எரிமலையே! மருட்டும் சாதி
மயக்கத்தைப் போக்கவந்த மருந்தே! எங்கள்
கூனிவிட்ட முதுகினிலே எலும்பைத் தட்டிக்
கோணல்களை நிமிர்த்திவிட்ட கொள்கைக் கோவே!
தேனிடத்தில் மனம்வைத்த ஈக்க ளைப்போல்
திராவிடத்தின் இளைஞர்களை ஆக்கும் தீரா!
கானகத்துத் தமிழ்ச்சிங்கம் நீதான்! உன்றன்
கர்ஜனையைக் கேட்டவரும் சிங்கம் ஆவார்!

அறப்போர்க்குக் கிளம்பியவர் உனக்கு முன்னால்
ஆயிரம்பேர் இருந்தார்கள்! இன்பம் தன்னைத்
துறப்போராய் அவரில்லாக் கார ணத்தால்
தொடரவில்லை போர்ப்பயணம்! தொய்ந்து போனார்!
மறப்போர்க்குக் கிளம்பியவர் உனக்கு முன்னே
மாநிலத்தில் கோடிப்பேர்! பொதுந லத்தை
மறப்போராய் அவரிருந்த தாலே அந்த
மறப்போரை நினைப்போரை எங்கும் காணோம்!

ஓரிரவா ஒருபகலா அறப்போர்! அந்த
உறக்கமற்ற இரவுகளே சாட்சி சொல்லும்!
ஆருனக்குத் துணைவருவார் ஐயா! அந்த
அரும்புரட்சிப் பயணத்தில் துணிந்து சென்றாய்!
காரிருளே வாழ்க்கையென்று தமிழச் சாதி
கருதிவிட்ட வேளையிலே, எங்கிருந்தோ
ஓர்இளைய கதிரவனாய் உதய மானாய்;
ஒளியென்றால் என்னவென்று நாங்கள் கண்டோம்!


சுமாராக ஆறுபத்து வருடம் வாழ்க்கைச்
சுகத்தையெல்லாம் நினைப்பதற்கு நேர மின்றி
அமாவாசை இருளினிலே கிடந்த நாட்டின்
அறியாமை விலகுதற்குப் போர்தொ டுத்தாய்!
இமாலயமே உனைஎதிர்த்த போதும் உச்சி
ஏறி, அதை மிதிக்காமல் விட்ட தில்லை!
சமாதான நடவடிக்கை என்ப துன்றன்
சரித்திரத்தில் கிடையாது! சமரே உண்டு!

வாழைமட்டை தீப்பற்றி எரியும் வண்ணம்
வார்த்தைகளை நீயெறிந்தாய்! அதனால் அன்றோ
கோழைகளும் நரம்புமுறுக் கேறி இன்று
கொடுமைகளின் குரல்வளையை நெறிக்கின் றார்கள்!
ஊழைமட்டும் நம்புங்கள் என்று கத்தும்
உபதேச மனிதர்களின் இருண்ட நெஞ்சத்
தாழைமட்டும் நீதிறக்கா விட்டால் நாட்டில்
தமிழ்ச்சாதி சூனியத்தில் மறைந்தி ருக்கும்!

ஏடெல்லாம் போர்ப்பரணி! எழுது கின்ற
எழுத்தெல்லாம் தீப்பூக்கள்! இளைஞர் உன்ன
வீடெல்லாம் பாசறைகள்! வெப்பம் பொங்கும்.
விழியெல்லாம் வேற்படைகள்! பரந்த இந்த
நாடெல்லாம் போர்க்களமே என்று மாற்றி
நடத்துகிறாய் அறப்போரை! நமனும் அஞ்சும்
ஈடில்லா ஈரோட்டுச் சுடரே! என்றும்
இறப்பில்லாத் தத்துவமே! வாழ்க! வாழ்க!






# தமிழ்நாடு டாக்டர் எம்.ஜி.ஆர் மருத்துவப் பல்கலைக் கழகம்

## மேதகு இந்தியக் குடியரசுத் தலைவர் தொடங்கி வைத்தார்.

டாக்டர் எம். ஜி. ஆர் மருத்துவப் பல்கலைக் கழகத் தொடக்க விழா 31-8-89 அன்று சென்னைப் பல்கலைக் கழக நூற்றாண்டு விழாக் கட்டட அரங்கில் நடைபெற்றது. மேதகு இந்தியக் குடியரசுத் தலைவர் திரு. ஆர். வெங்கட்ராமன் அவர்கள் தமிழ்நாடு டாக்டர் எம்.ஜி.ஆர். மருத்துவப் பல்கலைக் கழகத்தைத் தொடங்கி வைத்து விழாப் பேருரை ஆற்றினார்.

மேதகு தமிழக ஆளுநர் மற்றும் பல்கலைக் கழக வேந்தர் டாக்டர் பி.சி. அலெக்சாண்டர் அவர்கள் விழாவிற்குத் தலைமை வகித்தார்.

மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள் டாக்டர் எம்.ஜி.ஆர் மருத்துவப் பல்கலைக் கழகக் கட்டடங்களுக்கான அடிக்கல் நாட்டிச் சிறப்புரை ஆற்றினார். மாண்புமிகு நல்வாழ்வுத்துறை அமைச்சர் மற்றும் பல்கலைக் கழக இணை வேந்தர் டாக்டர் பொன்முடி அவர்கள் விழாவிற்கு வந்திருந்தோரை வரவேற்றுப் பேசினார்.

**மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள் சிறப்புரை ஆற்றும்போது குறிப்பிட்டதாவது:-**

**"முகநக நட்பது நட்பன்று நெஞ்சத்
தகநக நட்பது நட்பு"**

என்ற நட்பின் இலக்கணத்துடன் இவ்விழா தொடங்குகிறது என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

"இந்தியாவின் வரலாற்றிலே 1857-ஆம் ஆண்டு மிகவும் முக்கியமானதாகும். அந்த ஆண்டில்தான் முதல் சுதந்திரப் போராட்டம் (Indian Mutiny) என்னும் கிளர்ச்சியின் மூலம் நாடெங்கிலும் பரவலாக நமது மக்கள் அந்நியர் ஆட்சிக்குத் தூளுரை விடுத்தனர். அதே ஆண்டில்தான் சென்னைப் பல்கலைக் கழகமும் நிறுவப்பட்டது. கடந்த 130 ஆண்டுகளுக்கு மேலான காலகட்டத்தில் மேல்நிலைக் கல்வி வசதிகளில் தமிழ்நாட்டில் பெருமளவுக்கு வளர்ச்சி கண்டுள்ளோம்".

"சென்னைப் பல்கலைக்கழகம் நிறுவப்பட்டபோது பழைய மெட்ராஸ் மாகாணம் என்று சொல்லப்பட்ட பிரதேசங்களுக்கு எல்லாம்-அதாவது தமிழ்நாடு மட்டுமல்லாமல் தற்போதைய ஆந்திரம், ஒரிஸ்ஸா, கேரளம் மற்றும் கர்நாடகம் ஆகிய பக்கத்து மாகாணங்களின் பகுதிகளையும் உள்ளிட்ட மிகப் பெரியதொரு மாகாணத்திற்கு ஒரே ஒரு பல்கலைக் கழகம்தான் இருந்தது. கடந்த காலத்தில் கல்லூரிகளின் எண்ணிக்கை பெருகியதன் அடிப்படையில் இப்போது தமிழ்நாட்டில் மட்டும் சென்னை, அண்ணாமலை, மதுரை காமராசர், பாரதிதாசன், பாரதியார் ஆகிய ஐந்து பல்கலைக் கழகங்களில் பல்வேறு துறைகளில் பட்டப் படிப்பு வசதிகள் இருக்கின்றன.".

"அதே நேரத்தில் ஒவ்வொரு துறையிலும் அறிவு வளர்ச்சி குறிப்பாக, அறிவியல் துறையில் அறிவின் வளர்ச்சி மிகவும் விரைவாக வளர்ந்துள்ளதைக் காண்கிறோம். இந்தப் பின்னணியில்தான் செயல்முறை அறிவியல் துறைகளுக்குத் தனித்தனிப் பல்கலைக் கழகங்களைப் படிப்படியாகத் தமிழ்நாட்டில் நிறுவியுள்ளோம்.

முதலாவதாக, கோவையில் தமிழ்நாடு விவசாயப் பல்கலைக் கழகம் ஏற்படுத்தப்பட்டது. அடுத்து, சென்னையில் அண்ணா தொழில்நுட்பப் பல்கலைக் கழகம் ஏற்படுத்தினோம். இன்று டாக்டர் எம்.ஜி.ஆர். மருத்துவப் பல்கலைக்கழகம் தொடங்கப்படுகிறது. பேரறிஞர் அண்ணா பிறந்த நாளான செப்டம்பர் 15 அன்று நாம் தொடங்கவிருக்கும் கால்நடை விஞ்ஞானப் பல்கலைக் கழகமும் அதே நோக்கத்தின் அடிப்படையில்தான் அமையும்.

**இரண்டாம் அட்டை சொல்லும் கட்டுரை**

**சென்னையில்
மருத்துவ வல்லுநர்கள்:**

"அமெரிக்காவில் பாஸ்டன் நகரம் மருத்துவ வசதிகளுக்குப் பெயர் பெற்றது. அதே மாதிரியாக இன்று இந்தியாவில் சென்னை நகரமும் பெருமளவிற்குப் பெயர் பெற்றுள்ளது என்றால் மிகையாகாது. பல ஆண்டுகளாகவே சென்னையில் பல்வேறு மருத்துவத் துறைகளில் தலைசிறந்த வல்லுநர்கள் இருந்திருக்கிறார்கள். கடந்த சில ஆண்டுகளில் பரிசோதனைக்கும் மருத்துவத்திற்கும் பலவித நவீன வசதிகளும் பெருகியுள்ளன. இதன் காரணமாக, தமிழ்நாட்டிலிருந்து மட்டுமின்றி, இந்தியாவின் மற்ற மாநிலங்களில் இருந்தும், பிற நாடுகளில் இருந்தும்கூட சென்னைக்கு நோயாளிகள் மருத்துவத்திற்கு வருகின்றார்கள். இவ்வாறு தனியார் துறைகளில் இருக்கும் வல்லுநர்களிடமும் டாக்டர் எம்.ஜி.ஆர். மருத்துவப் பல்கலைக் கழகம் தொடர்புகொண்டு அவர்களின் அறிவையும், ஆற்றலையும் பயன்படுத்திக்கொண்டு மருத்துவக் கல்வியை வளர்த்திட தமிழ்நாட்டில் நல்ல வாய்ப்புள்ளது.

"தமிழ்நாட்டில் டாக்டர் எம்.ஜி.ஆர். மருத்துவப் பல்கலைக் கழகமும், தன்னாட்சி நிறுவனமான 'தாமரை'யும் தோளோடு தோளாக ஒத்துழைத்து தமிழ்நாட்டில் மருத்துவக் கல்வியையும், மருத்துவ ஆராய்ச்சியையும் கனிசமாக மேம்படுத்த செயல்படுவார்கள் என்று நம்புகிறேன்" என்று குறிப்பிட்டார். உரையின் இறுதியில்

"இன்னாசெய் தாரை யொறுத்த லவர்நாண
நன்னயம் செய்து விடல்"

என்னும் குறளோடு எனது உரையை முடித்துக் கொள்கிறேன்." என்றார்.

**மேதகு ஆளுநர் அவர்கள்
தலைமையுரை ஆற்றும்போது:-**

"மேலை நாடுகளில் 400 பேருக்கு ஒரு மருத்துவர் வீதம் மருத்துவர்கள் இருக்கிறார்கள். இந்தியாவில் 5,000 பேருக்கு ஒரு மருத்துவர் என்ற வீதத்தில்தான் இருக்கிறார்கள்.

"மேலும், படித்து மருத்துவர் ஆகிறவர்களும் கிராமப்புறங்களில் பணியாற்ற முன்வருவதில்லை. தமிழ்நாட்டில் 80 சதவீத மருத்துவர்கள் நகரங்களிலேயே வேலை பார்க்க விரும்புகிறார்கள். நகரங்களில் 620 பேருக்கு ஒரு மருத்துவர் என்ற வீதத்திலும் கிராமப்புறங்களில் 5,000 பேருக்கு ஒரு மருத்துவர் என்ற வீதத்திலும் மருத்துவர்கள் இருக்கிறார்கள். மருத்துவர்கள் மேலும் மேலும் படித்துவிட்டு வந்தாலும், நகரப் பகுதிகளிலேயே வேலை பார்ப்பார்கள்.

"கிராமப்புறங்களிலோ, பாமர மக்கள் நோய் வந்தால், மருத்துவ மனைக்குச் செல்லவேண்டும் என்ற ஆரம்ப அறிவுகூட இல்லாமல் இருக்கிறார்கள். அவர்களுக்குக் கல்வி அறிவு புகட்டி, மருத்துவ வசதிகளை அவர்களும் பெறும்படி செய்யவேண்டும். மருத்துவர்கள் சேவையோடு சுகாதார உதவியாளர்களுக்குப் பயிற்சி அளித்து நோய் வராமல் தடுப்பதற்கான பணிகளில் சுகாதார உதவியாளர்களை ஈடுபடுத்துவதிலும் கவனம் செலுத்த வேண்டும்" என்று குறிப்பிட்டார்.

டாக்டர் எம்.ஜி.ஆர். பல்கலைக் கழகத்தினைத் தொடங்கி வைத்துப் பேசிய மேதகு குடியரசுத் தலைவர் திரு. ஆர். வெங்கட்ராமன் அவர்கள் குறிப்பிட்டதாவது-

"இந்தியாவிலேயே இரண்டாவது மருத்துவப் பல்கலைக் கழகமாக டாக்டர் எம்.ஜி.ஆர். மருத்துவப் பல்கலைக் கழகம் அமைகிறது. மருத்துவப் பயிற்சி மற்றும் ஆராய்ச்சிகளுக்கு இது பெரிதும் பயன்படப் போகிறது.

"தமிழ்நாடு மருத்துவத் துறையில் நீண்ட பாரம்பரியத்தைக் கொண்டது. 1835-ஆம் ஆண்டிலேயே சென்னை மருத்துவக் கல்லூரி தொடங்கப்பட்டது. 1000-க்கும் மேற்பட்ட மாணவர்கள் கல்வி பெறக்கூடிய 8 மருத்துவக் கல்லூரிகள் இந்த எம்.ஜி.ஆர். மருத்துவப் பல்கலைக் கழகத்துடன் இணைக்கப்பட்டு இருப்பதாக நான் அறிகிறேன். மருத்துவக் கல்வியில் [illegible] புதிய அமைப்புகளை ஏற்படுத்திக் கொள்ள இது ஒரு நல்ல வாய்ப்பினை ஏற்படுத்தும். மக்களுக்குப் பயன்படக் கூடிய மருத்துவத் தேவைகள் சம்பந்தப்பட்ட ஆராய்ச்சிகளை மேற்கொள்ள இந்தப் பல்கலைக் கழகம் பெரிதும் உதவும் என்று நம்புகிறேன்.

**மக்களுக்குச் சேவை செய்யும்
பல்கலைக் கழகம்:**

"மருத்துவப் பல்கலைக் கழகங்கள் மருத்துவப் பட்டதாரிகளையும் வல்லுநர்களையும் உருவாக்கக்கூடியவை மட்டுமல்ல, மக்களுக்குச் சேவை செய்யும் மனப்பான்மை கொண்டவர்களையும் உருவாக்குபவை. ஒவ்வொரு ஆண்டும் 13,000 மருத்துவப் பட்டதாரிகள் உருவாக்கப்படுகின்றனர், அதே சமயத்தில் தேவைக்குக் குறைவாக 8,000 செவிலியர்களைத்தான் நம்மால் உருவாக்க முடிகிறது என்பது வருந்தத்தக்கது. இந்த மருத்துவப் பல்கலைக் கழகம் நாட்டுபுற மக்களுக்குச் செலவற்ற மருத்துவ வசதி அளிப்பதில் மிகுந்த கவனம் எடுத்துக் கொள்ள வேண்டும்".

விழா முடிவில் எம்.ஜி.ஆர். மருத்துவப் பல்கலைக் கழகத் துணைவேந்தர் டாக்டர் லலிதா காமேஸ்வரன் அவர்கள் நன்றி கூறினார்.

—நமது செய்தியாளர்



இரண்டாம் அட்டைப் [illegible] இந்து நாளிதழ், சென்னை-2





# அவருக்கு அவரேதான் நிகர்!

**—மாண்புமிகு கல்வி அமைச்சர்
பேராசிரியர் க. அன்பழகன்**

எளிமையான தோற்றம்; விரைவான நடை; புன் முறுவல் பூத்த முகம். சிறிது குள்ளமான உருவம், என்ற வர்ணனைக்குரியவர் ஒருவர் இன்று தமிழ்நாட்டு மக்களின் உள்ளங்களிலெல்லாம் இடம் பெற்று விட்டார். அவர்தான் அறிஞர் அண்ணா.

அவரது கட்சியினருக்கோ-தளபதி; கூட்டுத் தோழர்களுக்கோ-அண்ணன்; தலைவருக்கோ-அன்பன்; மாற்றுக் கட்சியினருக்கோ-அறிவுச் சுடர்; இலக்கியத்திற்கோ-புத்தொளி.

அவர் இரவிலே விடியற்காலை வரையில் கண் விழித்திருப்பதையும், காலை எட்டு மணி வரையில் உறங்குவதையும், பிற்பகலிலே கண்ணயர்வதையும் காண நேரும் பலரும், இவர் ஏன் இயற்கைக்கு விரோதமாக இரவிலே விழித்துப் பகலிலே உறங்க வேண்டும் என்று எண்ணுவது இயற்கை. மேலும், வெளியூர்களுக்குப் பேச அழைத்து அவர் வரவில்லையென்றே கூறினாலும், வர இயலாமற் போனாலும், உடனே 'சோம்பேறி' என்ற பட்டமளிக்கத் தவறுவதில்லை தோழர்கள். அவரது 'உழைப்பின்' திறத்தை உணராததாலேயே, பலர் இவ்வித முடிவுக்கு வந்து விடுகிறார்கள்.

சிந்தனையாளர்களுக்கு இரவிலே நெடுநேரம் வரையில் உறக்கம் வருவதில்லை. நம் நாடு வெப்ப நாடாகையால், பகலிலே அறிவு வேலை எதுவாயினும் இரவிலே செய்வதைவிடச் சிறிது கடினமேயாகும். இன்னும் பலப்பல நண்பர்களும், பொதுமக்கள் தொடர்பும் கொண்ட ஒருவரது வாழ்க்கையில் பகல் நேரம் பலரால் பங்கிட்டுக் கொள்ளப்படுவதும், இரவு மட்டுமே தனித்துத் தமது பணியைச் செய்வதற்கு ஏற்றதாக அமைவதும் அனைவரும் அறிந்தது.

எண்ணங்களிலேயே மிதந்து கொண்டிருக்கும் அண்ணா, அன்றாட நடைமுறை நிகழ்ச்சிகளிலே அதிக நினைவு செலுத்துவதில்லை. நாள்தோறும் குளிப்பதோ, வேளைப்படி உண்பதோ கூட அவரால் முடிவதில்லை.

அவரது அகன்ற நெற்றியும், கூர்ந்த நாசியும், பரந்த கண்களும், அவரைக் காணும்போதே அவரது அறிவுத் திறனை நன்கு புலனாக்குகின்றன. அவர் உரையாடத் தொடங்கினாலோ, ஒவ்வொரு சொல்லும் முத்து உதிர்த்ததென ஒளி விட்டுச் சிறக்கும். பிறருக்குப் புலப்படாமல், குற்றமுள்ள நெஞ்சை மட்டும் குத்திக் காட்டும் வகையிலே, ஒவ்வொரு சொல்லும் இரு பொருள் ஏந்தி நிற்கும். அவரது பேச்சு, எப்படித் தடைபடாது முன்பின் முரணின்றி, உணர்ச்சி வெள்ளமாகக் கொட்டுகிறதோ, அப்படியேதான் அவரது எழுத்தும் தெளிவு பெற்று, வலிவு கொண்டு திகழ்கிறது என்பதோடு, ஒருமுறை எழுதியதை மறுமுறை மாற்றவோ திருத்தவோ தேவையில்லாத அளவுக்கு, அவரது சிந்தனை ஆற்றல் சிறப்படைந்துள்ளது. அப்படி, பல கட்டுரைகள் ஒரே இரவிலேயே மலரும்.

கட்டாய இந்தி நுழைக்கப்படுவதை எதிர்த்து நடத்திய போரில், ஆயிரக்கணக்கான மக்களுக்கு உணர்ச்சியூட்டிப் பலப்பல இளைஞர்களைச் சிறை புகச் செய்து, தானும் சிறைப்பட்டு, இந்தி எதிர்ப்பு இயக்கம் வெற்றி பெறக் காரணமானார்.

பெரியாரின் பணியைப் புரிந்து கொள்ள மறுத்தவர்களையும், ஒப்புக் கொள்ளச் செய்த பெருமை அவருக்கே உரியதாம்.

அவர் எதையும் ஆழ்ந்து சிந்தித்தே ஏற்றுக் கொள்வார். சரியென்றுபட்டுவிட்டதை மக்களை ஏற்றுக் கொள்ளச் செய்யவும் இறுதி வரையிலே முயல்வார்.

அவருக்கு உதாரணமாக ஒருவரைக் குறிப்பிட எண்ணினேன். பேச்சுக்குச் சிசரோவும், எட்மண்ட் பர்க்கும் வந்தனர்; உரையாடலுக்கோ, சார்லஸ் லாம்பும், பெர்னாட்ஷாவும், பெரியார் இராமசாமியும் புறப்பட்டனர்; கதைக்கோ, வெல்ஸூம், மாப்பஸானும் தோன்றினர். சீர்திருத்தத்திற்கோ ரூசோவும், இங்கர்சாலும் வந்தனர்; நாடகத்திற்கோ ஷோபாக்கிளிஸூம், ஷேக்ஸ்பியரும் காட்சியளித்தனர்.

இவ்வெல்லாத் துறையிலும் திறம் படைத்த அறிஞர் அண்ணா அவர்களுடன் யாரை ஒப்பிடுவது என்பதுதான் எனக்குத் தெரியவில்லை.

உதாரணம் ஏன்? அவருக்கு அவரேதான் நிகர்!

(1948-இல் வெளிவந்த 'அறிஞர் அண்ணாதுரை' என்ற நூலிலிருந்து—)

# அய்யா - அண்ணா

## சில நினைவுகள்

— இராம. சுப்பையா



எனக்குக் கல்யாணம் நடக்கிறப்போ, பெரியார் சுயமரியாதைக் கழகம் ஆரம்பிச்சி ரெண்டு, மூணு வருஷம் இருக்கும். அவருக்கு நாடு பூரா எதிர்ப்பு இருந்த நேரம். எந்த ஊர்லே அவரு கூட்டத்துக்குப் போனாலும், கல்லெறி, சோடாபாட்டில் வீச்சு இப்பிடித்தான். அப்போ, சொ. முருகப்பா, அவரைக் காரைக்குடிக்குக் கூப்பிட்டு ஒரு கூட்டம் போட்டாரு. என்னதான் பேசறார் கேக்கலாம்னு கூட்டத்துக்கு வந்திருந்த எல்லாருக்கும் ஆர்வம். நானும் ரொம்ப ஆர்வமா நின்னுக்கிட்டிருந்தேன். அன்னிக்கு அவரு பேசின விஷயங்கள் எல்லாம் என்மனசில பதிஞ்சு போயி, யோசிக்க வச்சிச்சு. உடனடியா சுயமரியாதைக் கழகத்தில் உறுப்பினராகச் சேந்துட்டேன். அன்னியிலேயிருந்துதான், என்னோட தீவிர அரசியல் ஆரம்பமாச்சு!

### "அசலை மறக்காம அனுப்பிடனும்"

"பகுத்தறிவு நூற்பதிப்புக் கழகம்"னு பெரியார் ஒரு பதிப்பகம் வச்சிருந்தார். எல்லாம் கட்சிப் புத்தகங்கள்; ஒரு நேரத்தில், அந்தப் பதிப்பகத்தைக் கலைக்க வேண்டி வந்திடுச்சு. அதுக்கு முன்னாடி, அந்தப் பதிப்புக் கழகம் சார்பா வெளியான புத்தகங்கள் எல்லாத்தையும் எப்பிடியும் வித்திடனும்னு ஐயா முடிவு பண்ணினார்.

என்னையும், புதுக்கோட்டை இராம. சின்னையாவையும் கூப்பிட்டு, அந்தப் பொறுப்பை ஒப்படைத்தார். எப்படி விக்கனும்கிற ஐடியாவையும் அவரே குடுத்தாரு.

அப்போவெல்லாம் ரயில்வேயிலே ஒரு வசதி உண்டு. 12.50 ரூபாய்க்கு ஒரு டிக்கட் எடுத்துக்கிட்டா, 15 நாட்களுக்கு, தமிழ்நாட்டுக்குள்ளே எங்கே வேணும்னாலும், நம்ம இஷ்டப்படி போகலாம். எது வரைக்கும் அந்த டிக்கெட் செல்லும்கிறதுக்கு, டிக்கெட்டுக்குப் பின்னாலேயே, ஒரு 'மேப்'பும் இருக்கும் 'Go as you please' டிக்கெட்னு அதைச் சொல்லுவோம். அதுலே ஆளுக்கொரு டிக்கெட் எடுத்துக்கிட்டு, புத்தகக் கட்டுகளையும் தூக்கிக்கிட்டு, ஊர் ஊராப் போய் விக்கனும்கிறதுதான் திட்டம். இந்தத் திட்டம் எங்க இரண்டு பேருக்குமே பிடிச்சிருந்தது.

ரெண்டு பேரும் ஆளுக்கொரு டிக்கெட்டை வாங்கிட்டுப் பயணமாகும் போது, ஐயா சொன்னது இன்னும் அப்பிடியே ஞாபகமிருக்கு. "இந்தாங்கப்பா! புத்தகங்களை வித்திட்டு, அசலை மறக்காம அனுப்பிடனும்"னு சொன்னார். அதாவது புத்தகத்தோட விலையில அசல் எவ்வளவுன்னு சொல்லிடுவார். அந்த அசலை அனுப்பிவிட்டு, மீதமுள்ள தொகையை நாங்க செலவுக்கு வச்சுக்கலாம்.

அசல் திரும்பிப் போனாத்தானே, மறுபடியும் மறுபடியும் புத்தகம் வெளியிட முடியும்? ஆக, யாருக்கும் நஷ்டம் வரக்கூடாது; புத்தகமும் எல்லா ஊர்லே இருக்கிற மக்களுக்கும் போய்ச் சேரனும்.



அந்தப் பதினைந்து நாள்லே, நாங்க இரண்டு பேரும் போகாத ஊரு கிடையாது. பட்டி தொட்டியெல்லாம் போய்ப் புத்தகங்களை விற்பனை செய்தோம். `அப்பப்போ ஐயா சொன்ன மாதிரியே அசல் தொகையை அவருக்கு அனுப்பிடுவோம். இப்பிடியே தமிழ்நாடு பூரா சுத்தி, புத்தகங்களை வித்தபோது, எனக்கும் திரு. சின்னையாவுக்கும் எற்பட்ட சுவையான அனுபவங்களை என்னிக்கும் மறக்க முடியாது.



### அண்ணாவோட குறும்பும் புத்திசாலித்தனமும்

1940-மத்தியிலே, சேலத்தில நடந்த மாநாட்டிலே, "திராவிடர் கழக'த்தைப் பெரியார் தோற்றுவிச்சாரு. அதையொட்டி, 1945-இல, காரைக்குடியில "திராவிடர் கழக மாநாடு" கூட்டினோம். பழைய தென் இந்திய நல உரிமைச் சங்கம், சுயமரியாதை இயக்கம் எல்லாம் மாறி, புதிய பேர்லே, புதுத்தெம்போட திராவிடர் இயக்கம் மக்களிடம் வந்தது. காரைக்குடி மாநாட்டுக்கு வரக்கூடாதுன்னும், மாநாட்டையே நடத்தக்கூடாதுன்னும், மீறி நடத்தினா இரத்தக்களறி வரும்னும், பெரியாருக்கு தந்தி வந்தது. இந்த மாதிரித் தந்தி போக்குவரத்தெல்லாம், பெரியாருக்குப் புது உற்சாகத்தைக் கொடுத்திடும். வராதேன்னு எவனாவது பயமுறுத்தினா, அதை வரவேற்புப் பத்திரமா நினைக்கிறவர் அவர்.

மாநாட்டுக்கு முன்னாடியே இன்னொரு கூட்டம் போடச் சொல்லி ஐயா கிட்டேயிருந்து தகவல் வந்தது. திருச்சி மாநில மாநாட்டுலே, எடுத்த முடிவுப்படி, மாவட்டந்தோறும் நடத்துறதா இருந்த மாநாட்டுக்கு முன்னாடியே கூட்டம் போடச் சொன்னவுடனே, ஏதோ விஷயம் இருக்குன்னு தெரிஞ்சு போச்சு.

கூட்டத்திலே கலந்துகொள்ள, பெரியார், அண்ணா ரெண்டு பேரும் வந்தாங்க.

அண்ணாவோட, அதுக்குக் கொஞ்சம் முன்னாடிதான் எனக்குத் தொடர்பு வந்தது. அவரோட அற்புதமான பேச்சு யாரையும் ஈர்க்கும். அவரைக் காரைக்குடிக்குக் கூப்பிட்டு, கூட்டம் போட்டதும், அதுவும் பெரியார் பேசற கூட்டமாவே அமைஞ்சதும் எனக்கு மகிழ்ச்சியா இருந்தது. அரசியலுக்கு வந்ததுக்கப்புறம், காரைக்குடியில் அண்ணா பேசின முதல் கூட்டம் அதுதான்னு நெனக்கிறேன். அந்தக் கூட்டத்தை ஏற்பாடு செஞ்சிருந்த முறையையும், அங்கே நான் ஓடியாடி வேலை செய்த விதத்தையும் பார்த்த அண்ணா என்கிட்டே ரொம்பப் பிரியமாயிட்டார்.

அன்னிக்கு நடந்த கூட்டத்திலே, அண்ணா, பெரியாருக்கு முன்னாடி, திருவொற்றியூர் சண்முகம் பேசிக்கிட்டிருக்கிறப்போ, அங்கங்கே சில பேர் கலகத்தை ஆரம்பிச்சாங்க. கலகம் செய்யக் கூடும்கிற சந்தேகத்தில், நாங்க தயாராகவே இருந்தோம். கூட்டத்திலே எங்கேயாவது சத்தம் வந்தால், சத்தம் வரஇடத்துக்கு, நானும் தோழர்களும் போய் நின்னுக்குவோம். சத்தம் அடங்கிடும்.

ஐயா பேச ஆரம்பிச்சதும், ஒரு ஆள் ஐயாகிட்டவந்து, ஒரு காகிதத்தைக் கொடுத்திட்டு, வேகமாகக் கீழே இறங்கிப் போயிட்டான்.

அப்போவெல்லாம், ஐயா பேசற கூட்டங்கள்லே, கேள்வி பதில் நிகழ்ச்சி கண்டிப்பா இருக்கும். எந்தக் கஷ்டமான கேள்விக்கும், அப்பவே ஐயா அருமையா பதில் சொல்லுவார். அந்தக் கேள்வி-பதில்களை யாராவது தொகுத்திருந்தா, இன்னிக்கு அதை ஒரு அருமையான புத்தகமாக வெளியிடலாம். அவ்வளவு சுவையா இருக்கும்.

அன்னிக்குக் காரைக்குடிக் கூட்டத்திலேயும், அதுமாதிரி கேள்வியைத்தான், ஐயாகிட்டே கொடுக்கிறாங்கன்னு நெனச்சுகிட்டு, நாங்க எல்லாம் பேசாம இருந்திட்டோம். வழக்கமா, ஐயா முதல்லே 'மைக்'லே அந்தக் கேள்வியைப் படிச்சிட்டு, அப்புறம் தன்னோட பதிலைச் சொல்வார். ஆனா அன்னிக்கு, அந்தக் தாளைப் படிச்சிட்டு, ஒன்னும் சொல்லாம, பக்கத்திலேயிருந்த அண்ணாகிட்ட அதைக் கொடுத்திட்டார். அண்ணா படிச்சுப் பார்த்ததும் லேசா—சிரிச்சுக்கிட்டே, மைக்குக்கு வந்து, பொது மக்களைப் பாத்து, "இங்கே யாரோ, ஒரு தாள்லே தன்னோட பேரை மட்டும் எழுதிட்டு, கேள்விலை எழுத மறந்துட்டாரு. ஆகையினாலே அந்தத் தாளை நம்ம இராம. சுப்பையாவிடம் கொடுக்கிறேன். அவர் உங்களிடம் அதைக் கொண்டு வருவார். அது யாரோட பேரோ, அவுங்க மேடைக்கு வந்து, மீண்டும் தங்கள் கேள்வியைக் கொடுக்கலாம்னு சொல்லிட்டு, அதை எங்கிட்ட தந்தார். அந்தத் தாள்லே, "நான் ஒரு முட்டாள்"னு எழுதியிருந்தது.

இதைக் கேள்வின்னு நெனச்சுகிட்டுப் பெரியார் மைக்லே படிப்பார்ங்கிற நோக்கத்திலே, யார் அதைக் கொண்டு வந்து குடுத்தானோ, அவனே அன்னிக்கு மிகப் பெரிய முட்டாளாயிட்டான்.

அண்ணாவோட குறும்பும், புத்திசாலித்தனமும் ஐயாவையே ஆச்சரியப்பட வச்சிடுச்சு!

### திருக்குறள் மாநாடு

சென்னையிலே திருக்குறள் மாநாடு ஒன்னு கூட்டினாங்க. திரு. வி.க. கலந்துகொண்ட மாநாடு அது. மாநாட்டுக்கு வந்திருந்த கூட்டத்தைப் பார்த்துட்டு, 'அரசியல் மாநாடு கூட இல்லை; திருக்குறள் மாநாட்டுக்கா இவ்வளவு பெரிய கூட்டம்னு' திரு. வி.க.வே அசந்து போயிட்டார்.

★ மற்றவர்களிடம் பழகும் விதத்தையும், ஒழுக்கத்தையும் சிறுவயதிலேயே நன்றாக ஒருவன் கற்றுக் கொண்டானானால், அவனே வாழ்க்கையில் பெரிய மனிதன் ஆவான்.

—தந்தை பெரியார்.

★ நமக்குள்ள பொறுப்புகளை உணராமல், கடமைகளை நிறைவேற்றாமல், உரிமைகளைப்பற்றி மட்டும் உரத்த குரலில் வலியுறுத்திக் கொண்டிருந்தால், அந்த நிலை நம்மைப் பிணக்கிலும், ஏமாற்றத்திலும்தான் கொண்டுபோய் விடும்.

-பேரறிஞர் அண்ணா

கூட்டத்தில் பேசும்போது திரு. வி.க., ''திருக்குறள் மாநாடு என்று ஒன்று கூட்டி, நுழைவுக் கட்டணமும் ஏற்படுத்தி, வாயில் காப்போனையும் நிறுத்திவைத்த பிறகும், இத்தனை ஆயிரம் ஆயிரம் மக்கள் கூடியிருக்கிறார்களென்றால், எனது கெழுதகை நண்பர் பெரியாரும், அறிஞர் அண்ணாவும் கூட்டியதாலல்லவா? என்னே வியப்பு! நாட்டிலே பெரியாருக்கும் அண்ணாவுக்கும் எவ்வளவு பெரிய பேராற்றலாய் மக்கள் அமைந்து கிடக்கிறார்கள்'' என்று ஆச்சரியப்பட்டுப் பேசினார்.

### மரியாதையையும் பாசத்தையும் விட்டுட்டுப் பிரிஞ்சுபோக

அனைவரும் ஆச்சரியப்படுகிற அளவுக்கு, பெரிய சக்தியாய் விளங்கிய பெரியாரும், அண்ணாவும், பிரிய வேண்டிய கட்டாயம் வந்தது.

அப்போ, இயக்கத்திலிருந்த என்னை மாதிரி ஆயிரக்கணக்கான தொண்டர்களுக்கு, ஓரே கலக்கமாகவும், குழப்பமாகவும் இருந்தது. நானெல்லாம், ஐயாவை விட்டு வெளியே வரமாட்டேன்னுதான் எல்லோரும் நெனைச்சாங்க. எனக்கும், ஐயாவைப் பிரியறது சாதாரண விஷயமா இல்லை. அவர் கொடுத்த தைரியமும், அவர் கொடுத்த அரசியல் சிந்தனைகளும் தானே என்னை மனுசனாக்கியவைகள்! ஆகையினாலே, ஐயா மேலே எனக்கிருந்த மரியாதையையும், பாசத்தையும் விட்டுட்டுப் பிரிஞ்சு போக, நான் என் மனசை ரொம்பத் தேத்திக்கிட வேண்டியிருந்தது.

அண்ணா சொன்ன விஷயங்கள் நியாயமாகப்பட்டதாலே, கடைசியா, எல்லாத்தையும் மறந்திட்டு, அண்ணா கூட, கட்சியை விட்டு வெளியேறிட்டேன்.

### தாம்பாளம் தானாவா விழுந்தது

சிவகெங்கைத் தோழர்கள் ஒரு முறை, ''சிவகெங்கை இராமச்சந்திரனார் பூங்காவை அண்ணாதான் திறந்து வைக்கணும்னு பிடிவாதமாகச் சொலவிட்டாங்க. நானும், அண்ணா கிட்டே பலமுறை தேதி வாங்க முயற்சி செய்தேன். அவருக்கிருந்த வேலைகள்லே, அவராலே தேதி குடுக்க முடியலை.

ஒருமுறை சோழவந்தானுக்கு அண்ணா தேதி குடுத்திருக்கார்னு தெரிஞ்சுக்கிட்டு, அண்ணாவுக்கு 'டிரங்



இராம. சுப்பையா

கால்' போட்டுப் பேசினேன். ''சோழவந்தானுக்கு வரும்போதே, சிவகெங்கைக்கும் வந்திட்டுப் போகணும்ன்னு கேட்டுக்கிட்டேன். 'சிவகெங்கை, சோழவந்தானுக்குப் பக்கமா''ன்னு கேட்டார். 'ஆமா, குறுக்கு வழியிலே வந்தா, ரொம்பப் பக்கந்தான்'ன்னு ஒரு பொய்யைச் சொலவிட்டேன். அண்ணாவும் சம்மதிச்சுட்டாரு. 'சோழவந்தானுக்கு அடுத்தநாள் சிவகெங்கை'ன்னு சொலவிட்டார். எனக்கும், நண்பர்களுக்கும் அளவு கடந்த மகிழ்ச்சி. 'ஆனா, இப்பிடி ஒரு பொய் சொலவிட்டிங்களே''ன்னு நண்பர்கள் பயந்தாங்க. உண்மை தெரிஞ்சாலும் அண்ணா இதுக்கெல்லாம் கோபிக்க மாட்டாருன்னு சொன்னேன்.

சோழவந்தான் கூட்டத்தன்னிக்கு அண்ணாவைக் கூட்டிட்டுவர, நான் சோழவந்தானுக்கே போயிட்டேன். இரவு சோழவந்தான் கூட்டத்தை முடிச்சிட்டு, நண்பர்களோடு நெடுநேரம் பேசிட்டு, நடு இராத்திரிக்குப் பிறகுதான் அண்ணா தூங்கப் போனார். அண்ணா, காலையில நேரங்கழிச்சுத்தான் எழுந்திருப்பார். அடுத்த நாளும் அதே மாதிரிதான். காலை பத்து மணிக்கு மேலே ஆயிடுச்சு. அண்ணா தூங்கிக்கிட்டே இருக்கார். சிவகெங்கை பக்கம் தானேன்னு நெனச்சு அவர் தூங்கலாம். ஆனா, எவ்வளவு தூரம் போகணும்னு எனக்குத்தானே தெரியும்!

இதற்கிடையிலே, திருப்புவனம் தோழர்கள் வேறு, அவுங்க ஊர்லே கொடியேத்த, அண்ணாவைக் கூட்டிட்டுப் போகணும்னு காத்திருக்காங்க. எனக்கு என்ன செய்யிறதுன்னே புரியலே.

அண்ணா தூங்கிக்கிட்டிருக்கிற அறைக்குப் போனேன். மணி பதினொன்று, அண்ணா இன்னும் எழுந்திருக்கலை. மேஜையிலே இருந்த தாம்பாளத்தைக் கையிலெடுத்து, கை தவறிக் கீழே விழுகிற மாதிரி 'திமர்'ன்னு கீழே போட்டேன். அண்ணா சிரிச்சுகிட்டே 'முழுச்சுக்கிட்டுத்தான் இருக்கேன்! எப்போ சிவகெங்கைக்குப் புறப்படணும்'னு கேட்டார்.

பிறகு, திருப்புவனம் போய்க் கொடியேத்திட்டு, சிவகெங்கைக்குப் போய்க்கிட்டேயிருக்கும்போதுதான், நான் சொன்ன பொய் அண்ணாவுக்குத் தெரிஞ்சது. ''எப்பிடியோ, என்கிட்டே தேதி வாங்கிட்டீங்க, இனிமே என்ன செய்ய முடியும்?''-சொல்லிச் சிரிச்சார். அப்புறம் அவருக்கே உள்ள புன்சிரிப்போட, ''ஆமா, அறையில அந்தத் தாம்பாளம் தானாவா விழுந்தது?''ன்னு கேட்டார்.

### நெடுநேரம் எழுதுவார்

தலைமைக் கழக அலுவலகத்தில் பணியாற்றும் போதுதான், அண்ணா எப்பிடி எழுதுவார், எப்போது படிப்பார், எந்த நேரத்தில் எப்பிடிச் சிந்தித்து முடிவெடுப்பார் என்பது மாதிரிப் பல விஷயங்களைப் பக்கத்திலிருந்து பார்க்கிற சந்தர்ப்பம் கிடைச்சது.

அண்ணா எப்போதும் இரவில் தான் எழுதுவார். நெடுநேரம் எழுதுவார். சில நேரங்கள்லே விடிய விடியக் கூட எழுதுவார். கூட்டங்கள்லே பேசி முடிச்சிட்டு, வேற கட்சி விஷயங்களையெல்லாம் முடிச்சிட்டு, இரவு கட்சி அலுவலகத்துக்கு வருவார். அவர் வந்து சேருவதற்கு முன்னாடியே, நாங்க வெள்ளைத்தாள்களை யெல்லாம் ஒழுங்கா அடுக்கி, ஒன்னு, ரெண்டுன்னு வரிசையா நம்பர் போட்டு வச்சிடுவோம். வந்து எழுத உட்கார்ந்தார்னா, எழுதிக்கிட்டே இருப்பார். எழுதுகிறதுக்குச் சளைக்க மாட்டார். ரொம்ப வேகமாகவும் எழுதுவார். எழுதி, எழுதி, ஒவ்வொரு பேப்பரையும் விரலாலே கீழே தள்ளிவிடுவார். ''எழுதித் தள்ளுவது''ன்னு வழக்கிலே சொல்லுவோமே அது அவருக்குத்தான் பொருந்தும். அடுத்த நாள் காலையிலே, மெல்ல நாங்க உள்ளே வருவோம். அண்ணா அசந்து தூங்கிக்கிட்டிருப்பார். அறை பூரா பேப்பர்கள் பறந்துபோய்க் கிடக்கும். எல்லாத் தாள்களையும் எடுத்து நம்பர்ப்படி வரிசையா அடுக்கிடுவோம்.

(''நானும் என் திராவிட இயக்க நினைவுகளும்'' என்னும் நூலிலிருந்து)



# திருமயத்தில் தீரர் சத்தியமூர்த்தி
## திருவுருவச்சிலை திறப்பு விழா

''நெருப்பாக மூண்டெழுந்த அந்நாள் ஆதிக்கத்தை அன்பு நீருற்றி அணைத்திட்ட பெருமான் காந்தி அண்ணல்-அவர்வழி நின்று தாயக விடுதலைக்குத் தன்னலம் துறந்து களம் புகுந்த-தமிழ்நாட்டு தானைத் தலைவர் பெருமக்கள் அணியணியாய் திரண்டெழுந்து ஆட்சிதனைத் தங்கள் வீரமூச்சால் ஊதிக் கலைத்த செந்தமிழ் மறவர் குடிப்பெருமக்கள்! அவரெல்லாம் சிந்திய வியர்வை வெள்ளம்...பெய்திட்ட குருதிமழை...பொழிந்த கண்ணீர்-சுதந்திரப் போருக்கு உரமாகும்''

-என்று இந்திய விடுதலை வெள்ளிவிழா ஆண்டில் மாண்புமிகு தமிழக முதல்வர் கலைஞர் அவர்கள் குறிப்பிட்டார்கள்.

எதிர்காலத் தலைமுறை சுதந்திர இனிமையைச் சுவைக்கவேண்டும் என்பதற்காகப் பாடுபட்ட அத்தகைய தன்னலமற்ற தியாகிகள் வரிசையில் தீரர் சத்தியமூர்த்தியும் ஒருவராவார்.

'நெஞ்சில் பதிந்திருக்க வேண்டியவர்களில் நிரந்தர தியாக வரலாற்றின் நினைவுச் சுவடுகள் அழிந்துவிடாமல் காப்பாற்றிட எண்ணிடும் தமிழக அரசு தனது சொல்லாற்றலினாலும்-செயல் திறனாலும்-சிந்தனை வளத்தாலும்-விடுதலைப் போராட்ட இயக்கத்திற்கு வலிவு சேர்த்த தீரர் சத்தியமூர்த்தி அவர்களின் திருஉருவச் சிலையை அவர் பிறந்த மண்ணில் திறந்திட நடவடிக்கை எடுத்தது.

தீரர் சத்தியமூர்த்தியின் சிலை திறப்பு விழா கடந்த 21-8-89 அன்று புதுக்கோட்டை மாவட்டம் திருமயத்தில் மாண்புமிகு செய்தி-தொழிலாளர் நலத்துறை அமைச்சர் திரு. பொன். முத்துராமலிங்கம் அவர்கள் தலைமையில் சீரோடும் சிறப்போடும் நடைபெற்றது. புதுக்கோட்டை-மதுரை சாலையில் திருமயம் வட்டாட்சியர் அலுவலகத்திற்கு எதிர்புறத்தில் கம்பீரமாக அமைந்துள்ள தீரர் சத்தியமூர்த்தியின் திருஉருவச் சிலையை மாண்புமிகு மத்திய உள்துறை இணை அமைச்சர் திரு ப. சிதம்பரம் அவர்கள் திறந்து வைத்தார்.

விழாவில் தீரர் சத்தியமூர்த்தி அவர்களின் வாழ்க்கை வரலாற்றையும் செயற்கரிய பணியையும் சித்திரிக்கும் புகைப்படக் கண்காட்சி துவக்கி வைக்கப்பட்டது. அடித்தள மக்களின் நலனில் அக்கறைகொண்டு ஆயிரமாயிரம் திட்டங்களை நிறைவேற்றிடும் தமிழக அரசின் சாதனைகளை விளக்கிடும் புகைப்படங்களும் இக்கண்காட்சியில் இடம் பெற்றிருந்தன.

விழா தொடக்கத்தில் வரவேற்புரையாற்றிய செய்தி மக்கள் தொடர்புத்துறை இயக்குநர் திரு. கி. இராஜமாணிக்கம் ''அறிவாற்றலும் புலமையும் மிக்க தீரர் சத்தியமூர்த்தி, அரசியல் துறையில் மட்டுமன்றி இலக்கியத் துறையிலும் சிறந்து விளங்கினார். ஆங்கிலத்திலும் தமிழிலும் மிகச்சிறந்த பேச்சாளராகத் திகழ்ந்த அவர் தனது செயல் திறனாலும்-சீரிய தொண்டாலும்-வரலாற்றில் சிறப்பான இடத்தைப் பெற்றிருக்கிறார்'' என்று குறிப்பிட்டார்.

விழா தொடக்க உரையாற்றிய மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. ம. குற்றாலிங்கம், ''தீரர் சத்தியமூர்த்தி புதுக்கோட்டை மாவட்டத்திற்குப் பெருமை சேர்த்த பெருமக்களில் ஒருவராவார். தனது தன்னலமற்ற தொண்டின் மூலமாக மறைந்தும் மக்கள் நெஞ்சில் நிலைபெற்று வாழ்கிறார்'' என்று குறிப்பிட்டார்.

திருமயம் ஊராட்சிமன்றத் தலைவர் திரு. சத்தியமூர்த்தி, சட்டமன்ற உறுப்பினர்கள்

புதுக்கோட்டை மாவட்டம் திருமயத்தில் தீரர் சத்தியமூர்த்தி திருவுருவச் சிலையை மாண்புமிகு மத்திய உள்துறை இணை அமைச்சர் திரு. ப. சிதம்பரம் அவர்கள் திறந்து வைத்தார். மாண்புமிகு செய்தி-தொழிலாளர் நலத்துறை அமைச்சர் திரு. பொன். முத்துராமலிங்கம் அவர்கள் தலைமை வகித்தார். மாண்புமிகு கால்நடைப் பராமரிப்புத் துறை அமைச்சர் டாக்டர் க. சந்திரசேகரன், செய்தித் துறை இயக்குநர் திரு. கி. இராஜமாணிக்கம், மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. ம. குற்றாலிங்கம் ஆகியோர் உடன் உள்ளார்கள்.





தீரர் சத்தியமூர்த்தி) சிலை திறப்பு விழாவில் மாண்புமிகு செய்தி-தொழிலாளர் நலத்துறை அமைச்சர் திரு. பொன். முத்துராமலிங்கம் அவர்கள் இலவச காதொலிக் கருவிகள் வழங்கினார். மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் டாக்டர் க. சந்திரசேகரன், அவர்கள் உடன் உள்ளார்.

திரு. அ. பெரியண்ணன், திரு ஆலவயல் சுப்பையா, நாடாளுமன்ற உறுப்பினர் திரு. நா. சுந்தர்ராஜ் ஆகியோர் உரையாற்றிய பின்னர், தீரர் சத்தியமூர்த்தி சிலையைத் திறந்து வைத்து மத்திய உள்துறை இணை அமைச்சர் திரு. ப. சிதம்பரம் சிறப்புரையாற்றினார். அவர் பேசும்போது குறிப்பிட்டதாவது:

''ஒரு தேசபக்தருக்கு-ஒரு சுதந்திரப் போராட்ட வீரருக்கு- ஒரு சிறந்த ஜனநாயகவாதிக்கு-இந்த மண்ணுக்குப் பெருமை தேடித்தந்த தலைவருக்கு அமைக்கப்பட்ட சிலையைத் திறந்து வைப்பதற்காக மகிழ்ச்சியடைகிறேன்.

அவர் பிறந்த இடமான திருமயத்தில் அவரது சிலையைத் தமிழக அரசு அமைத்து, அதைத் திறந்து வைக்க என்னை அழைத்தமைக்காகத் தமிழக முதல்வருக்கும்-செய்தித்துறை அமைச்சருக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

சுதந்திரப் போராட்ட வீரர்களை ஊக்கப்படுத்துவதிலும்-அவர்களுக்கு உதவி செய்வதிலும் மத்திய அரசுடன் மாநில அரசு போட்டி போடுவது பாராட்டத்தக்கது.

மகாத்மா காந்தி போன்ற விடுதலைப் போராட்ட வீரர்கள் ஆற்றிய தொண்டையும், செய்த தியாகத்தையும் மக்களுக்கு எடுத்துக் கூறுவதில் மத்திய அரசுடன் மாநில அரசு போட்டியிட வேண்டும். அந்தப் போட்டியில் மத்திய அரசை மாநில அரசு முந்திச் செல்லவேண்டும் என்று வாழ்த்துகின்றேன்.

சத்தியமூர்த்தி அவர்கள் தமிழ், ஆங்கிலம் என்ற இருமொழிகளிலும் புலமை பெற்றிருந்ததால்தான், இந்திய அரங்கில் ஏற்றமிகு தகுதியைப் பெற்றார்.

தமிழர்கள் இந்திய அரங்கில் உயர, தமிழ், ஆங்கிலம் ஆகிய இருமொழிப் புலமை அவசியமாகும் என்று வலியுறுத்த விழைகின்றேன்.

தமிழக அரசு ஆங்கிலக் கல்விக்கு முக்கியத்துவம் கொடுக்க வேண்டும். கற்றுக் கொடுப்பவர்களுக்கும் பயிற்சியளிக்க வேண்டும்.

தமிழர்கள் இருமொழிப் புலமை பெற்றால்தான் இந்திய அரங்கில் சரியாசனம் போட்டு அமர முடியும்.''

அதன்பின் மாண்புமிகு கால்நடைப் பராமரிப்பு மற்றும் மீன்வளத்துறை அமைச்சர் டாக்டர் க. சந்திரசேகரன் உரையாற்றுகையில்:

''1974-ஆம் ஆண்டு புதுக்கோட்டை மாவட்டத்தைத் தொடக்கி வைத்த தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள் இம்மாவட்டத்திற்குப் பெருமை சேர்த்த பெருமக்களில் ஒருவரான தீரர் சத்தியமூர்த்தியின் சிலையை அவர் பிறந்த மண்ணில் திறக்க ஆணையிட்டு அதன் அடிப்படையில் இச்சிலை இங்கு திறந்து வைக்கப்படுகிறது.

தமிழக அரசு அடித்தள மக்களின் நலனுக் காகப் பல்வேறு வளர்ச்சித் திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறது. பிற்படுத்தப்பட்ட-மிகவும் பிற்படுத்தப்பட்ட-சீர்மரபினர் மற்றும் ஆதிதிராவிட மக்களின் வாழ்வில் மறுமலர்ச்சியைத் தோற்றுவிக்கும் வகையில் அரசு பணிகளை ஆற்றிவருகிறது.'' என்று குறிப்பிட்டார்.

விழா இறுதியில் நலத்திட்ட உதவிகள் வழங்கி, தலைமைப் பேருரையாற்றிய மாண்புமிகு செய்தி-தொழிலாளர் நலத்துறை அமைச்சர் திரு. பொன். முத்துராமலிங்கம் அவர்கள் தமது உரையில் தெரிவித்ததாவது:-

''தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள் தலைமையில் அமைந்த இந்த அரசு தியாகிகளைக் கட்சி வேறுபாடு கருதாமல் பாராட்டி-போற்றி வருகின்றது.

நாட்டுக்காக உழைத்தவர்களை நினைவு கூர்ந்திட, பல அழியாச் சின்னங்களை உருவாக்கி வருகிறது.

''வ.உ.சி.யின் நூற்றாண்டு விழாவையும்-அண்ணல் காந்தியடிகளின் நூற்றாண்டு விழாவையும் முன்பு டாக்டர் கலைஞர் அவர்களின் அரசு சிறப்பாகக் கொண்டாடியது. அண்ணல் காந்தியடிகள், வ.உ.சி. ஆகியோரின் பெயரால் பல நல்ல பணிகளை அரசு ஆற்றியுள்ளது. ''வ.உ.சி. செக்கிழுத்தார் என்று வரலாற்று ஏடுகளில் படித்திருக்கின்றோம். அதை சென்னை மக்களின் பார்வைக்கு காட்சிப் பொருளாகக்கொண்டு வந்து வைத்த பெருமை தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்களையே சாரும்.

நேரு அவர்களின் நூற்றாண்டு விழாவையொட்டி சென்னையில் ஒரு நெடுஞ்சாலைக்கு அவருடைய பெயரைச்சூட்ட நமது முதல்வர் ஆணை பிறப்பித்துள்ளார். காமராஜர் நினைவாலயத்தை அழகுபடுத்தவும், காமராஜர் அவர்களின் உதவியாளராகப் பணியாற்றியவருக்கு உதவிகள் வழங்கவும் மாண்புமிகு தமிழக முதல்வர் அனுமதியளித்துள்ளார்.

வெள்ளை ஏகாதிபத்தியத்தை எதிர்த்துப் போரிட்டு வீரஞ்செறிந்த வரலாறுபடைத்த வீரபாண்டிய கட்டபொம்மனுக்குப் பாஞ்சாலங்குறிச்சியில் நினைவுக் கோட்டை எழுப்பிய பெருமை தமிழக முதல்வர் அவர்களையே சாரும். காலத்தாலும் கடல் சீற்றத்தாலும் புதையுண்டுபோன பூம்புகாரில் எழுநிலை மாடம் எழுப்பி-பழம்பெருமை போற்றும் நினைவுச் சின்னம்உருவாக்கியதும் நமது முதல்வர்தான்.

திண்டுக்கல் காயிதேமில்லத் மாவட்டத்தில் உருவாக்கப்பட்டுள்ள அலுவலக வளாகத்திற்கு விடுதலைப் போராட்ட வீரர் சுப்பிரமணிய சிவாவின் பெயரைச் சூட்டி அவருக்குப் பெருமை சேர்த்திருக்கிறார் நமது முதல்வர்.

அண்மையில் மதுரையில் வில்லாபுரம் மேம்பாலத்தைத் திறந்து வைத்த நமது முதல்வர் அவர்கள் அந்தப் பாலத்திற்கு அந்தப் பகுதியின் மிகச்சிறந்த தேசியவாதியாகிய என்.எம்.ஆர். சுப்பராமன் அவர்களின் பெயரைச் சூட்டினார்கள்.

விடுதலைப் போராட்ட வீரர்களுக்கு வழங்கப்படும் ஓய்வூதியத்தை ரூ. 250-இல் இருந்து ரூ. 350-ஆக உயர்த்தி அரசு ஆணை பிறப்பித்துள்ளது.

விடுதலைப் போராட்ட வீரர்கள்-தியாகிகள் மறைந்தால் அவர்களை அரசு மரியாதையுடன் அடக்கம் செய்யவும்-வட்டாட்சியர் அந்தஸ்தில் உள்ள அதிகாரிகள் அரசின் சார்பில் மரியாதை செலுத்தவும்-இறுதிச் சடங்கிற்காக ரூ. 1,000 வழங்கவும் தமிழக அரசு ஆணைபிறப்பித்துள்ளது.

இங்கே பேசிய நாடாளுமன்ற உறுப்பினர் பஞ்சாயத்து ராஜ் மற்றும் நகர்பாலிகா பற்றிப் பேசினார். அவை மாநிலத்தின் உரிமையைப் பறிக்கும் வகையில் அமைந்த நடவடிக்கையாகும். இந்த முயற்சி கூட்டாட்சித் தத்துவத்திற்கு எதிரானது. அரசியல் சட்டத்தின் நோக்கங்களுக்கும்- எண்ணங்களுக்கும் புறம்பானதாகும்.

இந்தியாவைப் பொறுத்த வரையிலும் மாநிலங்கள் அதிகாரம் பெற்ற ஒரு கூட்டாட்சி அமைப்பாக இயங்கவேண்டும் என்பது அரசியல் சட்டத்தை வகுத்த மேதைகளின் விருப்பமாகும்.

நாடாளுமன்றப்பெரும்பான்மை பலத்தை வைத்து மாநிலங்களின் அதிகாரங்களை சிதறடிப்பது நல்லதல்ல-மாநிலங்களின் உரிமைகளைப் பறிக்கும் இந்த முயற்சியை எதிர்காலத் தலைமுறை பாராட்டாது-என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

இங்கே பேசிய மத்திய உள்துறை இணை அமைச்சர் திரு. ப. சிதம்பரம் அவர்கள் தெளிவாக ஒரு கருத்தைக் குறிப்பிட்டார்கள். இருமொழிக் கொள்கையின் அவசியத்தை வலியுறுத்தி அவர் தெரிவித்த கருத்து பாராட்டத்தக்கதாகும்.

பேரறிஞர் அண்ணா அவர்கள் இருமொழிக் கொள்கைதான் இந்தியாவிற்கு ஏற்புடைய கொள்கை என்பதைத் தீர்க்கமாகச் சிந்தித்துத் தெரிவித்தார். பேரறிஞர் அண்ணா தெரிவித்த கருத்தை வலியுறுத்தும் வகையில் மாண்புமிகு மத்திய உள்துறை இணை அமைச்சர் திரு. ப. சிதம்பரம் தெரிவித்ததை நான் பாராட்டுகிறேன்.

இந்திய அரசியல் அரங்கத்தில் தமிழன் உயர இருமொழிக் கொள்கை இன்றியமையாததாகும். ஒரு காலத்தில் பேரறிஞர் அவர்கள் இருமொழிக் கொள்கையை வலியுறுத்தித் தீர்மானம் நிறைவேற்றிய நேரத்தில் எக்களை பேசியவர்கள் உண்டு. இது ஏற்புடையதன்று என்று எதிர்வாதம் புரிந்தவர்களுண்டு. பேரறிஞர் அண்ணா அவர்கள் அன்று முன்மொழிந்த இருமொழிக் கொள்

★ சுதந்திரம் பெறுவதுகூட எளிது. அதைப் பாதுகாப்பது அதைவிடக் கடினம். பாதுகாப்பது எளிது. சுதந்திரத்தால் ஏற்படும் பலன் எல்லாருக்கும் சேரச் செய்வது கடினம்.

★ வாழ்க்கைக் களத்தில் இறங்குவதற்கு முன்பு பயிற்சியும், பக்குவமும், அடிப்படைக் கொள்கைகளில் தெளிவும் பெறவேண்டிய பருவம் மாணவப் பருவம்.

—பேரறிஞர் அண்ணா

கையை வழிமொழிவதைப் போன்று அமைச்சர் திரு. சிதம்பரம் அவர்கள் இங்கே பேசியிருக்கின்றார்கள். அவருக்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்.

தமிழக அரசு அடித்தளத்தில் வாழும் ஏழை எளிய மக்களின் நல்வாழ்விற்காகப் பல்வேறு நல்வாழ்வுத் திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறது. 8-வது வரை படித்த ஏழைப் பெண்களுக்குத் திருமண நிதி உதவியாக ரூ. 5,000 வழங்கும் மூவலூர் மூதாட்டி இராமாமிர்தம் அம்மையார் நினைவு திருமண உதவித்திட்டம் ஒரு மகத்தான சமுதாய நலத்திட்டமாகும்.

மணவாழ்க்கை என்பது எட்டாத கனியோ என ஏக்கப் பெருமூச்சு விட்ட பெண்களின் திருமண வாழ்க்கைக்கு வழி கோலிய மாண்புமிகு தமிழக முதல்வர்- ஒரு மாபெரும் சமுதாய விஞ்ஞானியாவார்.

அரசின் திட்டங்கள் மூலம் விளைகின்ற பயன் குறுக்கீடு இல்லாமல்-இடைத் தரகர் இல்லாமல் சாதாரண மக்களைச் சென்றடைய வேண்டும் என்பதில் இந்த அரசு கண்ணும் கருத்துமாக உள்ளது. இந்த அரசில் குறைபாடுகள் இருந்தால் அதனை எடுத்துக் கூறுகின்ற நியாயமான விமர்சனங்களை நாங்கள் வரவேற்கின்றோம்

எல்லாத் தரப்பு மக்களின் நலனிலும் அக்கறைகொண்டு காரியங்கள் ஆற்றிவரும் தமிழக அரசுக்கு ஒத்துழைப்பு வழங்குமாறு வேண்டுகிறேன்''.

இவ்வாறு மாண்புமிகு செய்தி-தொழிலாளர் நலத்துறை அமைச்சர் திரு. பொன். முத்துராமலிங்கம் தமது தலைமையுரையில் குறிப்பிட்டார்.

விழாவில் மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் திருமண நிதி உதவித் திட்டத்தின் கீழ் 13 பெண்களுக்கு தலா ரூ. 5,000 வீதம் மொத்தம் ரூ. 65,000 மாண்புமிகு செய்தி-தொழிலாளர் நலத்துறை அமைச்சர் திரு. பொன். முத்துராமலிங்கம் வழங்கினார்.

சுயவேலைவாய்ப்புத் திட்டத்தின் கீழ் நலிவுற்ற பெண்களுக்கு மான்யம் வழங்கும் திட்டத்தின் கீழ் 10 பெண்களுக்கு தலா ரூ.330 வீதம் ரூ.3,300 வழங்கப்பட்டது.

விதவைகளின் குழந்தைகளுக்கு இலவச நோட்டுகள் வழங்கும் திட்டத்தின் கீழ் 6 பேருக்கு இலவச நோட்டுப் புத்தகங்கள் வழங்கப்பட்டன.

10 பேருக்கு இலவச காதொலிக் கருவிகளையும், குடிசை ஈட்டுறுதித் திட்டத்தின் கீழ் 11 பேருக்கு தலா ரூ. 1,100 வீதம் மொத்தம் ரூ. 12,100 நிவாரணத் தொகையும் வழங்கப்பட்டது.

ஓட்டுநர்களை உரிமையாளர்களாக்கும் தமிழக முதல்வர் அவர்கள் சிறப்புத் திட்டத்தின் கீழ் மின்சார மோட்டார் பொருத்தப்பட்ட சைக்கிள் ரிக்ஷா, ஆட்டோ ரிக்ஷா, டூரிஸ்ட் கார் ஆகியவை வாங்குவதற்கு மான்யத்துடன் கூடிய கடன் உதவித் தொகை ரூ. 3,06,200 அளவிற்கு மாண்புமிகு செய்தி-தொழிலாளர் நலத்துறை அமைச்சர் திரு. பொன். முத்துராமலிங்கம், மாண்புமிகு கால்நடைப் பராமரிப்புத்துறை அமைச்சர் டாக்டர் க. சந்திரசேகரன் ஆகியோர் வழங்கினார்கள்.

இந்த விழாவில் 150 பேருக்கு வீட்டு மனைப் பட்டாக்களும், 50 பேருக்கு ஓய்வூதியம் பெறுவதற்கான ஆணையும் வழங்கப்பட்டன.

ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தின் கீழ் 20 பேருக்கு உதவிகளும் உடைமைகளும் வழங்கப்பட்டன.

ஜீவன்தாரா திட்டத்தின் கீழ் பாசனக் கிணறுகள் அமைத்த ஆதிதிராவிடர் விவசாயிகள் 5 பேருக்கு மின்சார மோட்டார்கள் வாங்க வேளாண்மைப் பெருக்குத் திட்டத்தின்கீழ் தலா ரூ. 7,500 வீதம் ரூ. 37,500 வழங்கப்பட்டது. இதில் அரசு மான்யம் ரூ. 12,500 ஆகும்.

சிறப்பு உணவு உற்பத்தித் திட்டத்தின் கீழ் 12 பேருக்கு நெல் மினி கிடங்குகளும், 6 பேருக்கு சிங்கல்பேட் மினி கிட்களும் வழங்கப்பட்டன.

மக்களின் நெஞ்சில் நிலையாகிவிட்ட விடுதலைப் போராட்ட வீரர்களில் ஒருவரான தீரர் சத்தியமூர்த்திக்கு தமிழக அரசு சிலை திறந்த நிகழ்ச்சி ஏற்படுத்திய எழுச்சி, என்றும் நிலைத்திருக்கும் என்பதில் ஐயம் இல்லை.

-இரெ. மகாலிங்கம்,
உதவி மக்கள் தொடர்பு அலுவலர்
(செய்தி),
புதுக்கோட்டை



# தஞ்சாவூர் மாவட்டத்தில் குடிமராமத்துப் பணிகள்

தஞ்சாவூர் மாவட்டத்தில் ஜவகர் வேலை வாய்ப்புத் திட்டத்திற்காகத் தமிழக அரசு ரூ.14 கோடி ஒதுக்கீடு செய்துள்ளது. இதில், 4,846 ஆதி திராவிடக் குடும்பங்களுக்குக் கான்கிரிட் வீடுகள் கட்டித் தரப் படுகின்றன. சுமார் 250 கிராமங்களில் இப் பணிகள் நடைபெற்று வருகின்றன. மேலும், இதுபோன்ற கான்கிரிட் வீடுகள் ஆதி திராவிடர்களுக்குத் தமிழகத்தில் மட்டும்தான் கட்டித் தரப்படுகின்றன.

மேலும், 529 குளங்கள் ஆழப்படுத்தும் பணிகளும், 1,648 வாய்க்கால்கள் தூர் எடுக்கும் பணிகளும், ஒரு கோடியே 10 இலட்சம் ரூபாய் செலவில் தஞ்சாவூர் மாவட்ட வளர்ச்சி முகமையின் மூலம் செய்யப்பட்டு வருகிறது. ஜவகர் வேலை வாய்ப்புத் திட்டத்தின் மூலம் கிராமப் பஞ்சாயத்துகளுக்கு மக்கள் தொகைக்கு ஏற்ப அரசு நிதி ஒதுக்கீடு செய்கின்றது. இந்நிதி ஒதுக்கீட்டிற்கு ஏற்ப கிராம மக்கள் வேலைகளைத் தீர்மானித்துப் பணிகள் செய்யப் பட்டு வருகின்றன. தஞ்சாவூர் மாவட்டத்தில் முதன் முறையாக 100 போரடித் தளம் அமைக்கும் பணிகள் எடுக்கப்பட்டுள்ளன.

தஞ்சாவூர் மாவட்டத்தில் நடப்பு நிதி யாண்டில் 270 ஜீவன்தாரா கிணறுகள் அமைக்கப்படும். கல்லணையில் ரூ.2 இலட்சம் செலவில் ஒரு கிராமிய அங்காடி கட்டப்பட உள்ளது.

குச்சிப்பாளையம் பஞ்சாயத்திற்கு ரூ.45 ஆயிரம் பணிகளுக்காக நிதி ஒதுக்கீடு செய்துள்ளது. அங்குள்ள குளம் 6 அடிக்கு ஆழப்படுத்தப்பட்டுள்ளது. தூலமங்கலம் வெங்கடாகுளம் ரூ.12,200 மதிப்பீட்டில் ஆழப்படுத்தப்பட்டுள்ளது. தூலமங்கலம் வாய்க்கால் ரூ.4,900 செலவீட்டில் தூர் எடுக்கப்பட்டு உள்ளது. அதேபோன்று பசுபதிகோவில் பிரதான வாய்க்கால் ரூ.3,990 செலவில் பணிகள் முடிக்கப்பட்டு உள்ளன. அடுத்து சரபோஜிராஜபுரம் வாய்க்கால் ரூ.2,990 செலவில் முடிக்கப் பட்டுள்ளது. இதே ஒன்றியத்தைச் சார்ந்த சேந்தனூர் பாசனக் கண்மாய் 5.4 கி.மீ. நிலத்திற்குத் தூர் எடுக்கும் பணிகள் செய்து முடிக்கப்பட்டுள்ளன.

கும்பகோணம் கோட்டத்தில் ரூ.2 கோடியே 15 இலட்சம் அளவிற்கு மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை மூலம் பணிகள் செய்யப்பட்டு வருகின்றது. இதில் ஆதி திராவிடர்களுக்கு 840 வீடுகளும், 150 குளங்கள் ஆழப்படுத்தும் பணிகளும், 318 வாய்க்கால்கள் தூர் எடுக்கும் பணிகளும் முடியும் தருவாயில் உள்ளன.

கும்பகோணம் ஊராட்சி ஒன்றியத்தில் ஜவகர் வேலை வாய்ப்புத் திட்டத்தில் 305 பணிகள் எடுக்கப்பட்டுள்ளன. இதற்கான அரசு நிதி ஒதுக்கீடு ரூ.42 இலட்சத்து 76 ஆயிரமாகும். இதில் ஒதுக்கீடு செய்யப்பட்ட குளங்கள் ஆழப்படுத்துதல் மற்றும் வாய்க்கால் தூர் எடுக்கும் பணிகள் அனைத்தும் ரூ.2 இலட்சத்து 95 ஆயிரம் செலவில் செய்து முடிக்கப்பட்டுள்ளன.

கும்பகோணம் ஊராட்சி ஒன்றியத்தைச் சார்ந்த சோழன்மாளிகை கிராமத்தில் ரூ.12 ஆயிரம் செலவில் நடைபெற்றுள்ள குளம் ஆழப்படுத்தும் பணி ரூ.6 ஆயிரம் செலவில் செய்து முடிக்கப்பட்டுள்ளது. வாய்க்கால் தூர் எடுக்கும் பணி - அன்னைல அக்ரகாரம் கிராமத்தில் சுமார் ரூ.6 ஆயிரம் செலவில்





மாத்தி வாய்க்கால் தூர் எடுக்கும் பணி - வாளப்பாடி கிராமத்தில் ரூ.12 ஆயிரம் செலவில் மேலகுளம் தூர் எடுக்கும் பணி நடைபெற்று வருகிறது.

குத்தாலம் ஊராட்சி ஒன்றியத்தில் ரூ.45 இலட்சம் செலவில் ஜவகர் வேலை வாய்ப்புத் திட்டப் பணிகள் செய்யப்படுகின்றன. இந்த ஊராட்சி ஒன்றியத்தில் 55 பாசன வாய்க்கால்கள் தூர் எடுக்கும் பணிகளும் - 24 குளங்கள் ஆழப்படுத்தும் பணியும் செய்து முடிக்கப்பட்டுவிட்டன. குத்தாலம் சட்டமன்றத் தொகுதியில் நடைபெற்றுள்ள ஊராட்சிப் பணிகள் மிகவும் சிறப்பாகவும், பொதுமக்களுக்கு மிகவும் அத்தியாவசியமான தேவைகள்பூர்த்தி செய்யும் வகையிலும் பணிகள் எடுக்கப்பட்டு நடைபெற்று! வருகின்றன.

குத்தாலம் ஊராட்சி ஒன்றியத்தைச் சார்ந்த ஆலங்குடி குளம் ஆழப்படுத்தும் பணி - கடலங்குடி பெரிய வாய்க்கால் தூர் எடுக்கும் பணி - வில்லியநல்லூர் ஆழப் படுத்தும் பணி நடைபெற்று வருகின்றன.

கும்பகோணத்திற்கு அருகேயுள்ள சேங்கனூர் எ-19 பாசன வாய்க்கால் முன்னாகத் தூர்ந்து போயும், நெய்வேலி காட்டாமணிக்கால் அடைப்பட்டுப்போயும்இருந்தது. இதுபோன்ற பாசன வாய்க்கால் தூர் எடுக்கும் பணிகள் விவசாயப் பொறியியல் துறை மூலம் தஞ்சாவூர் மாவட்டத்தில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. தஞ்சாவூர் மாவட்டம் மயிலாடுதுறை கோட்டத்தின் மூலம் 30 பணிகள், ரூ.6 இலட்சத்து 89 ஆயிரம் செலவில் முடிக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் சுமார் 260 கிலோ மீட்டர் நிளத்திற்குப் பாசன வாய்க்கால் தூர் வாரப்பட்டுள்ளது. மீதமுள்ள பணிகள் ஆகஸ்டு முதல் வாரத்தில் முடிக்கப்பட்டு விடும் என்று தெரிகிறது.

பின்னர் பூம்புகார் செல்லும் வழியில் உள்ள கீழையூருக்கு அடுத்து எருமல் கிராமத்தில் கடந்த மழை வெள்ளக் காலங்களில் சரியான முறையில் வடிகால் வசதி இல்லாததால் 3 ஆயிரத்திலிருந்து 4 ஆயிரம் ஏக்கர் நெல் பயிர்கள் வெள்ளத்தினால் முழுப் பாதிப்பு அடைந்து வந்துள்ளன இதனைச் சீர் செய்யும் வகையில் சுமார் ரூ.3 இலட்சம் செலவில் புதிதாக இரண்டு வடிகால் சைபன்களும், அய்யாவையனார் பகுதியில் கட்டப்பட்டு வருகின்றது. அய்யாவையனார் சைபனின் வடிகால் பரப்பினை ஆழப்படுத்தும் பணியும் செய்யப்பட்டு உள்ளது. தூர் எடுக்கப்பட்ட மண்மேடு பகுதிகளில் மண் அரிப்பு ஏற்படாமல் இருக்க குறுக்குத்தட்டை என்ற நாணல் போன்ற புல் வகை பயிரிடப்படும்.

அண்மையில், இந்தப் பணிகளையெல்லாம் பார்வையிட்ட தஞ்சாவூர் செய்தியாளர்கள், மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. எஸ். மச்சேந்திரநாதன், இ.ஆ.ப., அவர்களை மயிலாடுதுறை முகாமின்போது சந்தித்து உரையாடினார்கள். மாவட்டத்தில் நடைபெற்று வருகின்ற மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையின் மூலம் செயல்படுத்தப் படுகின்ற குளங்கள் ஆழப்படுத்துதல், வாய்க்கால் தூர் எடுக்கும் பணி போன்ற குடிமராமத்துப் பணிகள் சிறப்பாகச் செயல் படுத்தப்பட்டுள்ளதாகத் தங்களது பாராட்டுதல்களைத் தமிழக அரசுக்கும், மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களுக்கும் தெரிவித்தார்கள். குளம் ஆழப்படுத்தும்பொழுது மத்தியப் பகுதியில் படிப்படியாகச் சதுர செவ்வக வாக்கில் மண் அகற்றும் பணி மேற்கொள்ளப்பட்டுள்ளதால் முறைகேடுகள் ஏதும் நடக்காத வகையில் பணிகள் கண்காணிக்கப்படுவது குறித்து நிருபர்கள் பாராட்டுதல்களைத்தெரிவித்தார்கள்.

இம்முறை பிற மாவட்டங்களிலும் பின்பற்றப்பட்டால் குடிமராமத்துப் பணிகள் மக்களின் எதிர்பார்ப்பிற்கேற்பச் செயல் படுத்தலாம் என்கின்ற கருத்தினையும் மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.எஸ். மச்சேந்திரநாதன், இ.ஆ.ப., அவர்களிடம் தஞ்சைச் செய்தியாளர்கள் தெரிவித்தார்கள். மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட அலுவலர் திரு. கே. ஞானதேசிகன், இ.ஆ.ப. அவர்களும் அப்போது உடனிருந்தார்.

—கோ.தி. மோகன்
செய்தி-மக்கள் தொடர்பு அலுவலர்
தஞ்சாவூர் மாவட்டம்

## இளம் கலைஞர்களுக்கு ஊக்கம்

இளம் கலைஞர்களுக்கு ஊக்கம் அளிக்கும் திட்டத்தின்கீழ் வாய்ப்பாட்டு, பரதநாட்டியம், கதாகாலட்சேபம், இசைக் கருவிகளில் வீணை, நாதசுரம், புல்லாங்குழல், ஜலதரங்கம், கோட்டு வாத்தியம், கிளாரினெட் மற்றும் மேலைநாட்டு இசைக் கருவிகளான மாண்டலின், கிதார், சாக்ஸ்போன் ஆகிய இசைக் கருவிகளில் கர்நாடக இசைப் பாணியில் கலை நிகழ்ச்சிகள் நடத்தும் கலைஞர்களும், பக்கவாத்தியங்களான வயலின், மிருதங்கம், கஞ்சிரா, கடம்,- முகர்சிங், கொன்னக்கோல் ஆகிய இசைக் கருவிக் கலைஞர்களும் இத்திட்டத்தில் பங்குபெறலாம்.

இசைத் துறையில் பங்குபெறும் கலைஞர்கள் விண்ணப்பத் தேதியில் 16 வயது நிரம்பியவராகவும் 30 வயதுக்கு உட்பட்டவராகவும் இருக்க வேண்டும். பரத நாட்டியத் துறையில் பங்குபெறும் கலைஞர்கள் விண்ணப் பத் தேதியில் 15 வயது நிரம்பியவராகவும் 30 வயதுக்கு உட்பட்டவராகவும் இருக்க வேண்டும்.

தகுதிவாய்ந்த கலைஞர்களை மன்றம் நேர்முகத் தேர்வு மூலம் தேர்ந்தெடுக்கும். தேர்ந்தெடுக்கப்படும் கலைஞர்கள் ஒவ்வொருவருக்கும் நான்கு நிகழ்ச்சிகள் வழங்கப்படும்.

திட்ட விதிமுறைகளையும், விண்ணப்ப படிவங்களையும் பின்வரும் முகவரிக்கு எழுதிப் பெற்றுக் கொள்ளலாம்:- "செயலாளர், தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றம், 'தென்றல்', கிரீன்வேஸ் சாலை, சென்னை-600028". பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள் மன்றத்திற்கு வந்து சேர வேண்டிய கடைசி தேதி 30.9.1989.

# விதை தூவும் வானூர்தி



திண்டுக்கல் காயிதேமில்லத் மாவட்டத்திலுள்ள பழனி மலை மேற்குத் தொடர்ச்சி மலையில் வானூர்தி மூலம் வன வளத்தைப் பெருக்க வித்தை தூவப்பட்டது.

வானூர்தி மூலம் விதை தூவும் நிகழ்ச்சியின் தொடக்கவிழா 14.7.'89 அன்று ஒட்டன்சத்திரத்தில் முதன்மை வனத் துறைத்தலைவர் திரு ஜான்ஜோசப், இ.வ.ப., அவர்கள் முன்னிலையில் சுற்றுப்புறச் சூழல் மற்றும் வனத் துறை ஆணையர் மற்றும் செயலர் திரு சுந்தரேசன், இ.ஆ.ப., அவர்களின் தலைமையில் நடைபெற்றது.

மாவட்ட வருவாய் அலுவலர் திரு. எஸ். இராமலிங்கம், ஒட்டன்சத்திரம் ஊராட்சி ஒன்றியத் தலைவர் திரு தண்டபாணி மற்றும் ஒட்டன்சத்திரம் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் திரு பி. காளியப்பன் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினார்கள்.

திருச்சி மண்டல வனப் பாதுகாவலர் திரு கி. விசுவநாதன், இ.வ.ப., அவர்கள் அனைவரையும் வரவேற்றுப் பேசினார். விழா முடிவில், திண்டுக்கல் காயிதேமில்லத் மாவட்ட வன அலுவலர் திரு குணசேகரன் நன்றி கூறினார்.

ஒட்டன்சத்திரம் சட்டமன்ற உறுப்பினர் திரு பி. காளியப்பன் பேசுகையில் கூறியதாவது: "வன வளம் பெருகினால் மழை வளம் பெருகும். மலைகளை அழித்ததன் காரணமாக கடந்த பத்துப் பதினைந்து ஆண்டுக்காலம் மழையின்றிப் போய்விட்டது. வனத்தை அழிப்பவர்கள் மீது கடுமையான தண்டனை விதிக்கப்பட வேண்டும். பலத்த தண்டனைகளின் மூலம்தான் நாம் காடுகளையும், வனங்களையும் பாதுகாக்க முடியும்".

வனத்துறை ஆணையர் மற்றும் செயலர் திரு டி. சுந்தரேசன் செய்தியாளர்களிடம் பேசுகையில் தெரிவித்ததாவது:

"அதிக அளவில் வனப் பகுதிகளை வளப்படுத்துவதற்கும், முன் பருவகாலம் முடியுமுன் விரைவாக விதைகளை விதைப்பதற்காக வானூர்தி மூலம் விதை தூவும் முறை நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது. கடந்த ஆண்டு வட ஆர்க்காடு மாவட்டம் பள்ளிகொண்டான்பாளையம் பகுதியில் ஆயிரம் எக்டேர் வனப் பகுதிகளில் வானூர்தி மூலம் விதைகள் தூவப்பட்டன. பருவ மழை தவறியதால் கடந்தாண்டு தூவப்பட்ட விதைகள் சரிவரப் பயன் தரவில்லை.

"தமிழக முதல்வர் அவர்கள் வன வளத்தைப் பெருக்க மிகவும் ஆர்வமாக உள்ள காரணத்தால், இந்த ஆண்டும் வானூர்தி மூலம்-பருவமழை ஆரம்பித்துள்ள இக்கால கட்டத்தில் விதைகள் தூவப்பட்டுள்ளன.

"வானூர்தி மூலம் விதைகள் தூவுவதற்காகத் தமிழகத்திற்காக ரூ.120 கோடி அளவில் திட்டம் தயார் செய்து மைய அரசிற்கு அனுப்பப்பட்டது. மைய அரசிற்குத் திட்டங்களைத் தயார் செய்து அனுப்புவதன்மூலம் வெளிநாட்டின் உதவி கிடைக்க வழிவகை செய்யப்படுகிறது.

"தமிழகத்தில் உள்ள 25 ஆயிரம் எக்டேர் பரப்பில் ஆண்டிற்கு 5 ஆயிரம் எக்டேர் வீதம் 5 ஆண்டுகட்கு வானூர்தி மூலம் விதை தெளிக்கத் திட்டம் தயார் செய்து மைய அரசிற்கு அனுப்பப்பட்டது.

"பருவ மழை தமிழகத்தில் துவங்க ஆரம்பித்துள்ளபடியால் மைய அரசிடம் அனுமதியை விரைவாகப் பெற முயற்சி செய்தோம். கடந்த வாரம் அனுமதி கிடைத்தது.

"இப்பருவ மழைக் காலங்களில் வட ஆர்க்காடு மாவட்டம் குடியாத்தம் பகுதியில் 5 ஆயிரம் எக்டேர் வனப் பகுதியிலும், பழனி மலை மேற்குத் தொடர்ச்சி மலைப் பகுதியில் 2 ஆயிரத்து 500 எக்டேர் வனப் பகுதியிலும் விதைகள் தூவ திட்டமிட்டுச் செயல்படுத்தி வருகிறோம்.

"வேம்பு, சீதா, வெல்வேன், இளந்தை, மூங்கில், பரம்பை போன்ற 18 வகையான விதைகளைத் தூவுவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. 7 ஆயிரத்து 500 எக்டேர் பரப்பில் விதைகள் தூவுவதற்கு ரூ.55 இலட்சம் தேவைப்படுகிறது. வாயுதூத் விமானம் மூலம் ஒரு எக்டேர் நிலப்பரப்பில் விதைகள் தூவுவதற்கு விமானச் செலவு ரூ.55 ஆகும்.

"விமானம் மூலம் விதைகள் தூவுவதற்கு முன், வனப் பகுதிகளில் சீராகக் கிளறிவிடப்பட்டுள்ளது. விதைகள் நன்கு பராமரிக்கப்பட்டு, பெவிகால் தடவி விடப்பட்டுள்ளது. விமானத்திலிருந்து விரைவாகத் தரையை வந்தடையும் வண்ணம் விதைகள் தயார் செய்யப்பட்டுள்ளன. விதைகளில் சிறிய அளவு ஈரக்கசிவு இருந்தாலே முளைக்க ஆரம்பித்துவிடும். கோயம்புத்தூர் வனத்துறை ஆய்வுப் பண்ணையில் விதைகள் பெறப்பட்டுள்ளது. விமானம் மூலம் ஒரு எக்டேரில் 10 கிலோ விதைகளை-அதாவது 60 ஆயிரம் விதைகளைத் தூவுவதற்குத் திட்டமிட்டுச் செயல்பட்டு வருகிறோம்.

"கடந்த ஆண்டு வானூர்தி மூலம் தெளித்த விதைகள் பயன்தராததால் இவ்வாண்டும் அப்பகுதிகளில் விதைகள் தூவப்பட உள்ளன. இந்தியாவில் ஆந்திரா, மத்தியப் பிரதேசம் போன்ற பகுதிகளிலும் இம்முறையைச் செயல்படுத்தி வன வளத்தைப் பெருக்கி வருகின்றனர்.

தமிழகத்தில் உள்ள 22 இலட்சம் எக்டேர் வனப் பகுதியில் 6 இலட்சம் எக்டேர் வனப் பகுதிகளில் பசுமையே இல்லை. இப்பகுதிகளை வளப்படுத்த பெரு முயற்சி எடுத்து வருகிறோம். மொத்த நிலப்பரப்பில் 3-இல் ஒரு பங்கு காடுகளாக இருக்க வேண்டும், என்பது தேசியக் கொள்கை மற்றும் வனக் கொள்கையாகும். ஆனால் தமிழ்நாட்டில் 17 சதவீதம் தான் காடுகள் இருக்கின்றன. தற்போது காடுகளின் எண்ணிக்கை ஒரு சதவீதம் உயர்ந்துள்ளது" இவ்வாறு அவர் கூறினார்.

வானூர்தி மூலம் விதைகளைத் தூவும் நிகழ்ச்சிக்கு கன்னிவாடி வனச் சரகத்தின் சார்பில், வனச் சரகர் வெள்ளைச்சாமி ஏற்பாடுகளைச் செய்திருந்தார்.

கே.பி. நல்லதம்பி
உதவி மக்கள் தொடர்பு அலுவலர்
திண்டுக்கல் காயிதேமில்லத் மாவட்டம்



# தொழில்வளம் பெருக்கும் முயற்சி...

## தொடர்கிறது.....

தி.மு. கழக ஆட்சியில் தொழில் வளத்தில் இந்தியாவில் தமிழகம் 3-வது இடத்தில் இருந்தது. இடைக்காலத்தில் 10-வது இடத்திற்குச் சென்று விட்டது. மறுபடியும் 3-வது இடத்திற்குக் கொண்டு வர நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

கடலூர் சிப்காட் தொழில் வளாகம் இரசாயனம் மற்றும் மருந்து தயாரிக்கும் தொழில்களுக்கெனத் திட்டமிட்டு ரூபாய் மூன்று கோடிக்கு மேல் செலவிடப்பட்டு அமைக்கப்பட்டுள்ளது.

520 ஏக்கர் பரப்பளவில் அமைக்கப்பட்டுள்ள இந்த வளாகம் சென்னை-இராமேஸ்வரம் இரயில் பாதையில், சிதம்பரம் மற்றும் நெய்வேலிக்கு அருகில் அமைந்துள்ளது.

இவ்வளாகத்தை நிறுவ ரூ. 365 இலட்சம் செலவு செய்யத் திட்டம் தீட்டப்பட்டுள்ளது. சாலை வசதி, தண்ணீர் வசதி, அடிப்படை வசதிக் கட்டடங்கள், கழிவுநீர்த்திட்டம் ஆகிய பணிகள் செய்து முடிக்கப்பட்டுள்ளன.


இங்கு நிலம் பெற்றுள்ள 28 தொழில் நிறுவனங்களும் கூட்டாக, சுமார் 100 கோடி ரூபாய் முதலீடு செய்ய திட்டமிட்டுள்ளார்கள். இந்த நிறுவனங்கள் சுமார் 2,500 நபர்களுக்கு நேரடி வேலையும் அதன் இருமடங்கு அளவுக்குச் சார்புள்ள வேலையும் அளிக்க வாய்ப்புகள் உள்ளன. தற்போது உற்பத்தியைத் துவக்கியுள்ள 12 தொழிற்சாலைகள் ரூ. 34 கோடி முதலீடு செய்துள்ளன. இதனால் 1,500 நபர்கள் நேரடி வேலைவாய்ப்புப் பெற்றுள்ளனர்.

இந்த வளாகத்தின் சிறப்புகளும் வழங்கப்படும் சலுகைகளும்:

- உற்பத்தி துவக்கிய ஐந்து ஆண்டுகளுக்கு மின் சார வெட்டு இல்லை.
- ரூபாய் 20 இலட்சம் உச்சவரம்புக்குட்பட்டு 15 சதம் அரசு மூலதன மானியம்.
- ரூபாய் 3 கோடி உச்சவரம்புக்குட்பட்டு விற்பனை வரி கடன் திட்டம்.
- இந்த வளாகத்திலுள்ள தொழில் பிரிவுகள் இது வரை முதலீடு செய்துள்ளது ரூபாய் 100 கோடி.
- இதுவரை வேலைவாய்ப்புப் பெற்றோர் ஆயிரத்து ஐநூறு நபர்கள்.
- 'கீழ்க்கண்ட அடிப்படை வசதிகளும் திட்டமிடப் பட்டுள்ளன:

  துணை மின் நிலையம், தொலைபேசி, டெலக்ஸ் தொடர்பகங்கள், அஞ்சல் நிலையம், தீயணைப்பு, முதலுதவி நிலையங்கள், உணவு விடுதி மற்றும் வீட்டு வசதி.

## பயன் பெற்றோர் பகர்வன:



# சாண எரிவாயுக் கலன் ஒரு சமய சஞ்சீவி!

தஞ்சாவூர் மாவட்டம், பொனவாசல் கிராமத்தில் உள்ளவர்களில் பெரும் பாலோரர் விவசாயத் தொழிலில் ஈடுபட்டு உள்ளவர்கள். இந்தக் கிராமத்தின் மக்கட் தொகை 1,851. இதுவரை இந்தக் கிராமத் தில் 47 சாண எரிவாயுக்கலன்கள் நிறுவப் பெற்று நல்ல முறையில் இயங்கிவருகிறது. சாண எரிவாயுத் திட்டத்தின் நன்மைகள் பற்றி இந்தக் கிராமத்தில் களப்பணி யாளர்கள் மூலம் விளம்பரம் செய்ததில், மக்கள் தாங்களாகவே முன்வந்து கலன்கள் அமைக்க ஆர்வமுடனிருக்கின்றனர். இந்தக் கிராமத்தில் ஏறத்தாழ 750 கால்நடைகள் உள்ளன.

இந்தக் கிராமத்திற்குத் திருவையாறு பாரத வங்கி மற்றும் இந்தியன் ஓவர்சீஸ் வங்கி, தஞ்சாவூர் வங்கி கடன் வழங்கி யுள்ளன. மேற்படி வங்கியில் கடன் வாங்கிய வர்கள் தவறாது காலத்தே தொகையைத் திரும்பக் கட்டுகிறார்கள். கலன் அமைக்கும் செலவில் அரசு மானியம் போக மீதமுள்ள தொகை, சம்பந்தப்பட்ட வங்கியில் வழங்கப் படுகிறது.

கடனுதவி பெற்று, சாண எரி வாயுக் கலன் அமைத்தவர்களில், பொனவாசல் கிழக்குப் பகுதியைச் சேர்ந்த திருமதி தங்கமணி அம்மாள் அவர்களும் ஒருவர்.

இவர் 3 சி.எம். சாண எரிவாயுக் கலன் அமைத்துள்ளார். இவரிடம் 4 கால்நடைகள் உள்ளன. குடும்பத்தில் 5 நபர்கள் உள் ளனர். அன்றாடச் சமையல் வேலைக்குப் போதுமான அளவு எரிவாயு கிடைப்பதாக வும், கலன் அமைத்ததிலிருந்து எந்த வித மான பிரச்சினையும் இல்லாமல் நன்கு பரா மரிக்கப்பட்டு வருகிறது. கலன் அமைத் ததினால் தங்களுக்கு ஏற்பட்ட நன்மைகள் பற்றி அவர் கூறினார்.


''சமையல் செய்ய அதிக நேரம் காத் திருக்க வேண்டியதில்லை. பாத்திரங்கள் கரி பிடிப்பது கிடையாது; புகையில்லாததனால், கண்களுக்குப் பாதிப்பில்லை; கழிவுச் சாணம் நல்ல எருவாகப் பயன்படுகிறது''.

இதே ஊரைச் சேர்ந்த திரு ஆனந்தம் குடும்பத்தினர் 6 சி.எம். சாண எரிவாயுக் கலன் அமைத்துள்ளனர். வங்கிக் கடன் ரூ.8,950ம், அரசு மானியம் ரூ.2,610ம் பெற்றுள்ளார்.

இவர் குடும்பத்தில் 7 நபர்கள் உள் ளனர். 6 கால்நடைகள் உள்ளன. கலன் அமைத்த நாளிலிருந்து எந்தக் குறைவுகளு மில்லாமல் நன்கு இயங்கி வருகின்றது என்பதனைப் பெருமையுடன் தெரிவித்துக் கொள்கிறார்.

எரி பொருட்கள் விலைவாசி ஏறி உள்ள இந்த நாளில், சாண எரிவாயு பயன்படுத்து வதனால் தான் பொருளாதாரச் சேமிப்பு அடைந்துள்ளதாகவும், சமையல் சீக்கிரமாகத் தயாராகி விடுவதாகவும், பாத்திரங்கள் கரி படிவதில்லையெனவும் தெரிவிக்கிறார் இவர்.

திரு. ஆர். மதிவாணன் குடும்பத்தினர் தனது வீட்டில் 8 சி.எம். சாண எரிவாயுக் கலன் அமைத்துள்ளனர். இவர் குடும்பத்தில் 8 நபர்கள் உள்ளனர். இவரிடம் 10 கால்நடைகள் உள்ளன. சாண எரிவாயுக் கலன் அமைக்கப்பெற்றதனால் தானடைந்த நன்மைகளை, ஊரில் உள்ள மற்ற நபர்களுக் கும் விளக்கி, அதிகப்படியான நபர்களைக் கலன் அமைக்க ஊர்நல அலுவலரிடம் அழைத்து வந்துள்ளார்.





சாண எரிவாயுத் திட்டத்தினால் ஏற் பட்ட நன்மை பற்றிக் கூறுகையில், சாண எரிவாயுக் கலத்திலிருந்து வெளியேறிய சாணத்தை வயலுக்கு உரமாகப் பயன் படுத்தியதில் நல்ல மகசூல் கிடைப்பதாக வும்-வயலில் களைகள் முளைப்பதில்லை என்றும் பெருமையுடன் தெரிவிக்கின்றார்.

திரு டி.புருஷோத்தமன் குடும்பத்தினருக் குத் திருவையாறு பாரத வங்கி கடன் உதவி செய்துள்ளது. இவருடைய குடும்பத்தில் 6 நபர்கள் உள்ளனர். 7 கால்நடைகள் உள்ளன.

இவர் சாண எரிவாயுத் திட்டத்தினால் அடைந்த நன்மைகளைப் பற்றி கூறுகையில், சாண எரிவாயுக் கலன் ஆபத்தில்லாதது. சமையல் செய்வதற்கு நேரம் அதிகம் எடுத் துக்கொள்வது கிடையாது. பாத்திரங்கள் கரி அடைவதில்லை. எந்த நேரத்திலும் சாண எரிவாயு கிடைக்கிறது. புகையில்லாததினால் வீடு சுத்தமாக உள்ளது. வெள்ளை அடிக்க வேண்டிய செலவு மிச்சமாகிறது'' என்றார்.



## சாண எரிவாயு அடுப்பு


- ★ மாட்டு சாணத்திலிருந்து உண்டாகும் எரி வாயுவின் சக்தியால் எரியும் அடுப்ப புகை அற்றது. செலவற்ற சமையல். வயலுக்கு நல்ல உரம் கிடைக்கும். தினமும் நான்கு வாளி சாணக் கரைசல்தான் வேண்டும். இரண்டு மாடுகள் இருந்தாலே போதுமானது.
- ★ இதை உற்பத்தி செய்யும் கலனை அமைப்பது மிகவும் எளிது. முதல் பணம் எதுவும் தேவை இல்லை. செலவில் பாதியை அரசு மானியமாக வழங்குகிறது. மீதியை கடனாக வங்கித் தருகிறது.
- ★ சாண எரிவாயுக் கலன்கள் அமைத்து பயன் பெறுவர்.

## சாண எரிவாயுக் கலன்: தமிழகத்திற்குப் பரிசு

தமிழகத்தில் 1989-90-ஆம் ஆண்டு 12,400 சாண எரிவாயுக் கலன்களை நிறுவுவதற்கு இலக்கு நிர்ணயிக்கப்பட்டு உள்ளது. இதற்காக ரூ.322.40 இலட்சம் மானியத் தொகையாக செலவிடப்படும். அதனையொட்டி, சாண எரிவாயுக் கலன் களை அமைக்கும் திட்டம் முனைப்புடன் தமிழ்நாடு முழுவதும் நிறைவேற்றப்பட்டு வருகிறது.

மாநிலத்தில் 1981-82-ஆம் ஆண்டு முதல் சாண எரிவாயுத் திட்டம் தமிழ்நாடு அரசு ஊரக வளர்ச்சித் துறை மூலம் தீவிர மாகச் செயல்படுத்தப்பட்டு வருகின்றது. 1988-89-ஆம் ஆண்டு வரை 89,502 குடும்பங்களில் சாண எரிவாயுக் கலன்கள் அமைக்கப்பட்டுள்ளன.

தேசிய அளவில் இத்திட்டத்தைச்சிறப்புற நிறைவேற்றியதற்காக 1984-85-ஆம் ஆண்டில் இரண்டாவது பரிசையும், அதற்கு அடுத்த 1985-86 மற்றும் 1986-87-ஆம் ஆண்டுகளில் முதல் பரிசுகளையும், தமிழ் நாடு அரசு மைய அரசிடமிருந்து பெற்றது.



# ஈரோட்டில் கொடுமணல் அகழாய்வுக் கண்காட்சி

கொடுமணல் என்ற சிற்றூர் பெரியார் மாவட்டம் பெருந்துறை வட்டத்தில், நொய்யல் ஆற்றின் வடகரையில், ஈரோட்டிலிருந்து தென்மேற்கே 40.கி.மீ. தொலைவிலும், சென்னிமலையிலிருந்து 15.கி.மீ. தொலைவிலும் அமைந்துள்ளது. இவ்வூர், சங்க காலத்தில் கொடுமணம் என்னும் பெயரில் அரிய கற்களைக் கொண்டு செய்யப்பட்ட நகைகளுக்குப் பெயர் பெற்றிருந்தது. "கொடுமணம் பட்டவினை மாண் அருங்கலம்" என்று நாலாவது பதிற்றுப்பத்து வருணிக்கிறது.

இவ்வூரில் உள்ள பழைய நத்தப்பகுதியிலும், ஈமக்காட்டிலும், தஞ்சைத் தமிழ்ப் பல்கலைக்கழகக் கல்வெட்டுத்துறை, தமிழ்நாடு அரசு மற்றும் பல்கலைக்கழக நல்கைக் குழு ஆகியவற்றின் நிதியுதவியோடு அகழாய்வை மேற்கொண்டது. இப்பகுதிகளில் கிடைத்துள்ள அரும் பொருட்கள் இப்பகுதியில் கி.மு. 3ஆம் நூற்றாண்டு முதல் கி.பி. 2ஆம் நூற்றாண்டு வரை சிறப்புற்றிருந்த நாகரிக மேம்பாட்டை விளக்கி நிற்கின்றன.

பெரியார் மாவட்டத்திலுள்ள ஆர்வமுள்ள மாணவர்களும் ஆய்வர்களும் பொதுமக்களும் அகழாய்வுப் பணியைக் கண்டு களிக்க ஈரோடு அரசு அருங்காட்சியகமும் பெரியார் மாவட்ட இன்டாக் அமைப்பும் ஒரு அகழாய்வுக் களப்பணி காணல் பயணம் மேற்கொண்டது. அகழாய்வுப் பணிகளில் கலந்து கொண்டோர்க்கு விளக்கிக் கூறப்பட்டது.

அதனைத் தொடர்ந்து, பெரியார் மாவட்ட மாணவர்களும், பொதுமக்களும் கொடுமணல் அகழாய்வில் கிடைத்த தொல்பொருட்களைக் காணத் தமிழ்ப் பல்கலைக் கழகத்துடன் இணைந்து ஈரோடு அரசு அருங்காட்சியகம், ஈரோடு நகராட்சி முன்னாள் நகர் மன்றக் கூடத்தில் "கொடுமணல் அகழாய்வுக் கண்காட்சி" ஒன்றினை ஜூன் 15 முதல் ஜூன் 17 வரை ஒழுங்கு செய்திருந்தது. தமிழ்ப் பல்கலைக் கழகத் துணை வேந்தர் முனைவர் ச. அகத்தியலிங்கம், பெரியார் மாவட்ட ஆட்சியர் திரு. வி.கே. சுப்புராஜ், இ.ஆ.ப. அவர்கள் தலைமையில் தொடக்கி வைத்தார். மூன்று நாட்களிலும் ஆறாயிரத்திற்கு மேற்பட்டோர் இந்தக் கண்காட்சியைக் 'கண்டு களித்தனர்.

வே. ஜெயராஜ்,
காப்பாட்சியர்,
அரசு அருங்காட்சியகம்,
ஈரோடு-638 001

**கண்காட்சியின் முக்கியக் கூறுகள்:**

பெரியார், கோவை ஆகிய மாவட்டங்களில் பெருங்கற்படைச் சின்னங்கள் அமைந்துள்ள இடங்கள், அகழாய்வு செய்யப்பட்ட ஈமக்காட்டுப் பகுதியில் உள்ள பெருங்கற்படைச் சின்னங்களின் புகைப்படங்கள், கல்லறைகள், அகழாய்வுக் காட்சிகள், எலும்புக்கூடுகள், சில சிறந்த அகழாய்வுப் பொருட்கள் ஆகியவற்றின் புகைப்படங்கள் பெரிய அளவில் அமைக்கப் பெற்றிருந்தன. கொடுமணல், இரும்புக்குப் பெயர் பெற்ற தொழிற்கூடமாய் இருந்ததை விளக்க அங்கு கிடைத்த இரும்புத்தாதுகள், இரும்புக் கசடுகள், இரும்பு உலைகள், இரும்புப் பொருட்கள் காட்சியில் வைக்கப்பட்டிருந்தன.

தென்னிந்தியாவில் முதன்முதலில் கொடுமணலில் கிடைத்த குதிரை அங்கவடிக் காட்சியில் இடம் பெற்றிருந்தது. பலவகைப் பளிங்கு, கார்னீலியன் ஆகிய அரிய கல்வகைகளைக் கொண்டு மிகுந்த அளவில் மணிகளும், மோதிரம் போன்ற நகைகளும் உருவாக்கும் தொழில் இங்கு நடைபெற்றதற்குச் சான்றாகப் பல நிலைகளில் அறுக்கப்பட்ட கல் சில்லுகளும், துளையிட்டதும், துளையிடாததுமான மணிகளும், மெருகூட்டப்பட்ட பச்சைக்கல், நீலம், வைடூரியம், ஜாஸ்பர், அகேட், கார்னட் ஆகிய மணிகளும் கண்காட்சிக்கு மெருகூட்டின.

கிடைத்துள்ள தங்கம், செம்பு அல்லது வெண்கலப் பொருட்கள் சிலவே ஆயினும், சிவப்பு, ஊதாக்கல் பதிக்கப்பட்ட வெண்கலப் புலியின் உருவம், வாணலி போன்ற செப்பு வடிகட்டி, கரண்டி, செப்பு அலங்காரப் பூக்கள், கிண்ணம், தங்கச்சுருள், வெள்ளிச் சுருள், தங்கமணிகள் மிகச்சிறந்தவை. செப்பு நாணயங்கள் காட்சியில் வைக்கப்பட்டிருந்தன.

கருப்பு-சிவப்பு மட்பாத்திரங்கள் பல வகைகளில் காட்சியில் இடம் பெற்றிருந்தன. பிராமி எழுத்துக்களும், குறியீடுகளும் அதிக அளவில் பொறிக்கப்பட்ட மட்கல ஓடுகள் மிக அதிகமாகக் கிடைத்த இடம் கொடுமணலே. எழுத்துக்களும் குறியீடுகளும் பொறிக்கப்பட்ட ஓடுகள் சங்க இலக்கியங்களில் வரும் "ஆதன்", "அந்தை" போன்ற பெயர்களைத் தாங்கி இருந்தன.

நெசவுத் தொழிலில் பயன்படுத்திய தக்ளி, எலும்பினால் செய்யப்பட்ட துணிகள் ஆகியவைகளும் காட்சியில் வைக்கப்பட்டிருந்தன.

இரண்டாயிரம் ஆண்டுகளாகியும் மக்கிப் போகாமல் இருந்த எலும்புக்கூடுகள் காட்சியில் புகைப்படமாகவும் பொருட்களாகவும் இடம் பெற்றன.

இவ்விதம் தமிழகத்தின் பழம் வரலாற்றினைத் தெளிவாக்கும் கொடுமணல் அகழாய்வுப் பொருட்கள் பெரியார் மாவட்ட மக்களின் மனதில் நீங்காத நினைவை உருவாக்கியுள்ளன. இக்கண்காட்சி ஒரு சிறந்த வழிகாட்டியாக அமைந்தது அனைவராலும் பாராட்டப்பட்டது.



பெரியார் மாவட்டத்தில்:

# ஊசிமலைக் கிராமம் தத்து எடுக்கப்பட்டது

"ஊசி மலை" எனும் அழகிய சிறிய கிராமம் பெரியார் மாவட்டம் பவானி வேளாண் கோட்டம், அந்தியூர்த்தொகுதியில் உள்ள பர்கூர் மலைப்பகுதியில் அமைந்து உள்ளது. இம்மலைப் பகுதி கடல் மட்டத்திலிருந்து 925 மீட்டர் உயரத்தில் உள்ளது. இம்மலைப் பகுதியில் 33 குக்கிராமங்கள் உள்ளன. 8,537 ஏக்கரில் ஆண்டுதோறும் விவசாயம் இப்பகுதியில் செய்யப்பட்டு வருகிறது. அதில் மானாவாரி ராகி முக்கிய சாகுபடிப் பயிராக சுமார் 8,000 ஏக்கரில் பயிரிடப்படுகிறது. நெல் சுமார் 150 ஏக்கரிலும், நிலக்கடலை 75 ஏக்கரிலும், கம்பு, சோளம், தினை வகைகள், மஞ்சள் ஆகியன மீதமுள்ள சிறிய நிலப்பரப்பிலும் சாகுபடி செய்யப்பட்டு வருகிறது.

இப்பகுதியில் உள்ள மலைவாழ் மக்கள் ஆண்டுதோறும் ஆனி-ஆடிப் பட்டத்தில் மழையை நம்பி ராகி விதையை விதைப்பார்கள். "விளைந்தால் ஆச்சு...போனால் போச்சு" என்று மெத்தனமாக இருக்க வேண்டிய சூழ்நிலை அவர்களுக்கு. பழைய சாகுபடி முறைகளையே கையாண்டு வந்த இவர்கள் நல்ல விதை மற்றும் உரம் வாங்க வேண்டுமென்றால் சுமார் 30 கிலோமீட்டர் தூரத்தில் உள்ள அந்தியூர் வந்தாக வேண்டும்.

மலைவாழ் விவசாயிகளுக்கு உள்ள பிரச்சனைகளைக் களைய "மலைப் பகுதி மானாவாரி வேளாண்மை மேம்பாட்டுத் திட்டம்" என்ற பெயரில் ஒரு திட்டம் துவக்கப்பட்டது. சம்பந்தப்பட்ட பகுதியில் வேளாண் துறையில் பணியாற்றும் அனைத்து அலுவலர்களையும் மற்றும் பெரியார் மாவட்டத்தில் விற்பனையில் ஈடுபட்டு வரும் அனைத்து உர நிறுவனப் பிரதிநிதிகளையும் கலந்தாலோசித்து, செயல் வடிவமும் நிர்ணயம் செய்யப்பட்டது.

பர்கூரில் உள்ள ஊசி மலையை முதலில் தத்து எடுத்து, அதனை மேம்படுத்த ஆவன செய்ய வேளாண்மைத் துறை மழை வரும் நாளுக்காகக் காத்திருந்தது. பருவ மழையும் வந்தது. 23-7-89 தேதியன்று கனத்த மழை பெய்தபோதும், பலத்த காற்று வீசிய போதும் இத்திட்டம் எவ்விதத் தடையும் தடங்கலுமின்றி மாண்புமிகு சமூக நலத்துறை மற்றும் ஊரகத் தொழில் துறை அமைச்சர் திருமதி. சுப்புலட்சுமி ஜெகதீசன் அவர்களால் துவக்கி வைக்கப்பட்டது. மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. வி. கே. சுப்புராஜ், இ.ஆ.ப., அவர்கள் இத்திட்டத்தின் துவக்க விழாவிற்குத் தலைமை தாங்கினார். சத்திய மங்கலம் சட்டமன்ற உறுப்பினர் திரு. டி.கே. சுப்பிரமணியன், அந்தியூர்த் தொகுதி. சட்டமன்ற உறுப்பினர் திரு. வே. பெரியசாமி, அந்தியூர் ஊராட்சித் தலைவர் திரு. எம். குருசாமிக் கவுண்டர், பர்கூர் ஊராட்சித் தலைவர் திரு. ஏ.பி. பாலசுப்பிரமணியன் ஆகிய மக்கள் பிரதிநிதிகள் இவ்விழாவில் கலந்துகொண்டனர்.



இப்பகுதியைச் சேர்ந்த 131 மலைவாழ் குடும்பங்கள் ஊசி மலையில் தேர்வு செய்யப்பட்டன. இவர்கள் சாகுபடி செய்யும் பரப்பு சுமார் 175 ஏக்கர் நிலமும் சர்வே செய்யப்பட்டது. இந்தப் பரப்பில் உள்ள நிலங்களில் மண் மாதிரிகள் எடுக்கப்பட்டு, இலவசமாக ஆய்வு செய்யப்பட்டுப் பரிந்துரைகள் வழங்கப்பட்டன. ஆனி - ஆடிப் பட்டத்தில் விதைக்க சரியான உயர் விளைச்சல் ரகமாக இண்டாப்-5 எனும் ராகி ரகம் தேர்வு செய்யப்பட்டது.

1.25 டன் எடையுள்ள ராகி விதைகள் ஈரோட்டிலிருந்து இப்பகுதிக்கு எடுத்துச் செல்லப்பட்டு இருப்பு வைக்கப்பட்டது. ஸ்பிக், இஃப்கோ, பாக்ட், டாக், ராஷ்டிரியா கெமிக்கல்ஸ், மைசூர் கெமிக்கல்ஸ், பி.பி.சி.எல்., ஸ்டேன்ஸ், சாவாலஸ், ஈ.ஐ.டீ. பாரி, நெய்வேலி உர நிறுவனம், இந்தியன் பொட்டாஷ் ஆகிய 12 உர நிறுவனங்கள் சுமார் 13 டன் இரசாயன உரங்களை இலவசமாக வழங்கியது. தழைச்சத்தைக் குறைந்த செலவில் பயிருக்கு வழங்கும் உயிர் உரமான "அசோஸ்பைரில்லம்" நுண்ணுயிர்ப் பொட்டலங்கள் 700 எண்கள் உடனடியாக ஊசிமலைக்குக் கொண்டு செல்லப்பட்டது. இருப்பு வைக்கப்பட்ட 1.25 டன் ராகி விதைகள், 13 டன் இரசாயன உரங்கள், 700 நுண்ணுயிர்ப் பொட்டலங்கள் அனைத்தும் மலைவாழ் விவசாயிகளுக்குத் துவக்க விழாவன்று (23.7.89) அவர்களுடைய சாகுபடிப் பரப்புக்குத் தக்கவாறு இலவசமாகப் பகிர்ந்தளிக்கப்பட்டது. மாண்புமிகு சமூக நலத்துறை மற்றும் ஊரகத் தொழில் துறை அமைச்சர் அவர்கள், ரூபாய் நாற்பதாயிரம் மதிப்புள்ள இவற்றை மலைவாழ் மக்களுக்கு வழங்கினார்கள். விழாவிற்கு வந்திருந்த பல விவசாயிகளுக்குச் சூரியகாந்தி, சோயா மொச்சை, காய்கறி விதைகள், பழ மரக் கன்றுகள், தென்னங்கன்றுகள் இலவசமாக வழங்கப்பட்டன.

அன்றைய தினம் மலைவாழ் மக்களின் முகத்தில் ஏற்பட்ட மகிழ்ச்சியும் உற்சாகமும் அளவிட முடியாதது. விவசாயிகளுக்கு அரசு வழங்கும் மானிய உதவிகள் பற்றிய சிறப்புக் கண்காட்சியையும், படக்காட்சியையும் இம்மக்கள் பார்த்துப் பயனடைந்தனர்.

இத்திட்டத்தின் மூலம் தற்போது இப்பகுதியில் மானாவாரி ராகியில் கிடைத்து வரும் சராசரி மகசூலான ஏக்கருக்கு 200 கிலோவை நான்கு மடங்கு அதாவது 800 கிலோவாக உயர்த்த முடியும். வீரிய விதை மற்றும் உர உபயோகத்தின் அவசியத்தையும், பயனையும் மலைவாழ் மக்களும் இத்திட்டத்தின்மூலம் கண்கூடாகக் காண்பார்கள். மலைவாழ் மக்களின் வருமானமும் கணிசமாக உயரும். இத்திட்டம், வருகிற ஆண்டுகளில் மேலும் பல மலைப்பகுதி கிராமங்களுக்கு விரிவுபடுத்தப்படவுள்ளது.

—மு.நா. கிருஷ்ணசாமி
உதவி மக்கள் தொடர்பு அலுவலர்,
பெரியார் மாவட்டம்

# கோழிச் செல்வம் காப்போம்

சமீப காலத்தில் கோழி வளர்ப்புத் தொழில் நம்நாட்டில் மிகவும் முக்கியத்துவம் பெற்று, நடைமுறையில் வெகு வேகமாக வளர்ச்சி பெற்று வருகிறது.

பெரும்பாலான பண்ணைகளில் கோழிகளுக்கு வரும் நோய்களைச் சாதாரணமாகக் கருதி, சரியாகக் கவனிப்பதில்லை. இவ்வாறு செய்வதனால் வெகு சீக்கிரத்தில் நோய் தீவிரமடைந்து அனைத்துக் கோழிகளுக்கும் நோய் பரவுவதோடு, பிற பண்ணைகளுக்கும் எளிதில் நோய் பரவ வாய்ப்பு உண்டு.

ஒவ்வொரு சாதாரணப் பணியிலும் கண்காணிப்புடனும், சிரத்தையுடனும் இருந்தால் கோழிப் பண்ணையில் நோய் பரவுவதை விரைவில் தடுத்து நிறுத்தலாம். அவ்வப்போது தடுப்பூசி போடுதல், தேவையான சமயத்தில் மருந்து கலந்து வைத்தல், முறையான விஞ்ஞான பராமரிப்பு விளக்கங்களைக் கடைப்பிடித்தல் போன்றவை நோய் வருமுன் காப்பதற்கு வழிவகை செய்பவை ஆகும்.

### கோழிகளைத் தாக்கும் நோய்களுக்கான நேரடியான காரணங்கள்

1. வைரஸ், பாக்டீரியா, மஞ்சக்காளான், ஒட்டுண்ணிகள் முதலிய நோய்க் கிருமிகள் மூலம் நோய் பரவுகின்றது.

2. தவறான பராமரிப்பு முறைகள், தீவனப் பொருட்கள், உணவுச் சத்து பற்றாக் குறை, நச்சுப் பொருட்களின் சேர்க்கை போன்ற பண்ணைப் பராமரிப்புக் குறைகளும் நோய் வர நேரடிக் காரணங்களாகும்.

### மறைமுகமான காரணங்கள்

குறைந்த காற்றோட்ட வசதி, மிகுந்த வெப்பம், அதிகக் குளிர், குறைந்த இடத்தில் அதிக எண்ணிக்கையில் கோழிகளை வளர்த்தல், தீனித் தொட்டி மற்றும் குடிதண்ணீர்த் தொட்டி ஆகியவற்றைக் குறைந்த எண்ணிக்கையில் வைத்தல், குறைந்த அளவு தீனி மற்றும் குடிதண்ணீர் அளித்தல் போன்றவை நோய் பரவுவதற்கான மறைமுகமான காரணங்களாகும்.

### கோழிப் பண்ணையில் நோய் பரவும் விதம்

நோய்வாய்ப்பட்ட கோழிகளை வெளியிலிருந்து பண்ணையில் கொண்டு வந்து விடுதல்.

நோய்வாய்ப்பட்டு இறந்த கோழிகளை முறையான வகையில் அப்புறப்படுத்தாமல் அசிரத்தையுடன் இருத்தல்.

நோயுற்ற கோழிகளைத் தொட்டுப் பணி செய்த வேலையாட்கள், நோய் கண்ட கோழிப் பண்ணையிலிருந்து வரும் மனிதர்கள், பல கோழிப் பண்ணைகளுக்குச் சென்று வரும் ஆட்கள், விற்பனையாளர்கள், ஊர்தி ஓட்டுநர்கள், பருந்து, காகம் போன்ற வனப்பறவைகள் மூலம் எளிதில் நோய் பரவ வாய்ப்பாகும்.



### நோயுற்ற கோழிகளுக்குப் பயன்படுத்திய உபகரணங்கள்

அசுத்தமான நீர்.

அசுத்தமான தீனி மற்றும் தீனிக் கோணிகள்.

நோயுற்ற கோழிகளின் எச்சம், ஆழ்கூளம், நோய்க் கிருமிகள் அதிகமுள்ள மண், உரம் போன்றவை வெகு விரைவில் நோய் பரப்ப வகை செய்வனவாகும்.

பெருச்சாளிகள், பூச்சிகள் போன்றவை நோய் பரப்பும் காரணங்களாகும்.

நோய்க் கிருமிகள் கலந்த அசுத்தமான காற்று வெகு தூர இடைவெளியில் இருந்தாலும் மிக எளிதில் நோயைப் பரப்புவதாகும்.

நோய் கண்ட கோழிப் பண்ணையிலிருந்து வரும் கோழி முட்டை மற்றும் கோழி இறைச்சி போன்ற பண்ணைப் பொருட்கள் நோய் பரப்ப வகை செய்வனவாகும்.

### நோய் பரப்புதலைத் தவிர்க்கும் முறைகள்

(அ) கோழிகளை ஓரிடத்திலிருந்து பிறிதொரு இடத்திற்குக் (பிற பண்ணைகளிலிருந்து புதிய பண்ணைகளுக்கு) கொண்டு போகாமல் தவிர்க்க வேண்டும்.

(ஆ) அநாவசியமாக வெளியாட்களைக் கோழிப் பண்ணைக்குள் அனுமதிக்கலாகாது. (குறிப்பாக, கோழி வியாபாரிகள், விற்பனையாளர்கள், ஊர்தி ஓட்டுநர்கள் மற்றும் பிற பணியாளர்கள்) அவசியம் அவர்கள் பண்ணைக்கு உள்ளே வர வேண்டி இருந்தால், தகுந்த முறையில் கை, கால்களைக் கழுவிச் சுத்தம் செய்து கொண்டு கிருமி நாசினி கலந்த நீரில் நனைத்து, பொறுப்பான சுகாதார முறையைக் கடைப்பிடித்து பண்ணையினுள் அனுமதிக்க வேண்டும்.

(இ) கோழிப் பண்ணையின் நுழைவாயிலில் சுண்ணாம்புத் தூளைத் தூவியோ அல்லது பார்மலின் போன்ற கிருமி நாசியினைக் கலந்து வைத்தோ இருக்க வேண்டும்.

கோழிப் பண்ணையினுள் நுழையும் போது கால்களைக் கிருமி நாசினி கொண்டு சுத்தம் செய்து விட்டு வரவேண்டும். ஊர்திகள், வண்டிகள் நுழையும் போதும் கிருமிநாசினி கொண்டு இந்த முறையில் சுத்தம் செய்தல் சிறந்தது.

(ஈ) கோழிக்குஞ்சுகள் மற்றும் கோழிகளைக் கூடுமான வரையில் நம்பகமான, பெயர் பெற்ற, நோயற்ற பண்ணையிலிருந்து வாங்கி வளர்க்க வேண்டும்.

(உ) கோழிகளுக்குச் சுத்தமான தீனியை, அனைத்துச் சத்துக்களும் தேவையான அளவு நன்கு கலந்து புதிய கோணிகளில் பெற வேண்டும்.

(ஊ) கோழி வீட்டினுள் வெளியில் இருந்து எலி மற்றும் பிற வனப் பறவைகள் போகாத வண்ணம் கம்பி வலையால் நன்கு பாதுகாப்பாக அமைக்க வேண்டும்.

(எ) கோழிகளுக்குத் தேவையான ஒளி, வெப்பம் அவற்றின் வயதுக்கேற்பவும் வகைகளுக்கு ஏற்பவும் அளிக்க வேண்டும்.

(ஏ) கோழிகளுக்குத் தேவையான இட வசதி, தண்ணீர்த் தொட்டி, தீவனத் தொட்டியின் அளவு, எண்ணிக்கை போன்ற அனைத்து உபகரணங்களையும் முறையாகக் கோழிகளின் எண்ணிக்கைக்கு ஏற்றவாறு உபயோகப்படுத்த வேண்டும். சிறந்த பராமரிப்பு முறைகளைக் கடைப்பிடிக்க வேண்டும்.

(ஐ) கோழிகளை அகற்றியவுடன் வீட்டினை நன்கு சுத்தம் செய்ய வேண்டும். கிருமிநாசினி கொண்டு நன்கு தெளிக்க வேண்டும். தரை மற்றும் சுவருக்குச் சுண்ணாம்பு அடித்துச் சுத்தமாக வைக்க வேண்டும்.

(ஒ) கோழிகளுக்குச் சுத்தமான குடி தண்ணீரை எப்போதும் தண்ணீர்த் தொட்டியில் இருக்குமாறு செய்ய வேண்டும்.

(ஓ) தடுப்பூசிகள் மற்றும் தடுப்பு மருந்துகள் போன்றவற்றை அவ்வப்போது முறையாகத் தகுந்த அளவில் கால்நடை மருத்துவரின் ஆலோசனையின்படி பயன்படுத்த வேண்டும்.

நோயுற்ற கோழிகள் இறந்தால், உடனே அவற்றை எரித்து விட வேண்டும் அல்லது குழிகளில் சுகாதார முறையால் சுண்ணாம்புத் தூள் தூவிப் புதைக்க வேண்டும்.

நோயுற்ற கோழிகளைத் தனிமைப் படுத்தி நோய்க்கான காரணமறிந்து சரியான மருந்தளித்தல் வேண்டும். சாதாரணமாக எண்ணிக் கொண்டு அசிரத்தையாக விட்டு விட்டால் நோய் மேலும் வெகு சீக்கிரம் பரவித் தொல்லை விளைவிக்கும்.

மேற்கூறிய முறையில் கோழிப் பண்ணையில் நோய் பரவும் விதத்தை அறிந்து, அவற்றினைத் தடுக்கும் நடவடிக்கைகளை எடுத்து நோயின் பாதிப்பிலிருந்து கோழிச் செல்வத்தைக் காத்து, கோழிப் பண்ணையைத் திறம்பட நடத்திப் பயன் பெறலாம்.

-(டாக்டர்.இரா. ஆஷாரஜினி,
டாக்டர்.ந. இராமமூர்த்தி,
டாக்டர்.க. இராஜகோபாலன்,
டாக்டர்.இரா. குமாரராஜ்

(கோழியின அறிவியல் துறை,
சென்னை கால்நடை
மருத்துவக் கல்லூரி, சென்னை)

## கணேச தரிசனம்

விநாயக சதுர்த்தி வருவதை ஒட்டி 'கணேச தரிசனம்' காண அழைத்தது பூம்புகார்!

போய்ப் பார்க்கிறோம்.


அரச மரத்தடியில் அழகாய் வீற்றிருக்கும் பிள்ளையாரையே பார்த்துப் பழக்கப்பட்டுப் போன நமக்குத்தான், எத்தனை வகையான கணேச விக்கிரகங்கள் இங்கே காட்சியளிக்கின்றன!

தமிழ்நாட்டுக் கைவினைஞர்களின் கைவண்ணத்தால் உருவான இந்த விக்கிரகங்கள் கலையெழில் மிக்கவை.

கல், மண், துணி, காகிதம், உலோகம், வெள்ளெருக்கு ஆகியவற்றால் செய்யப்பட்ட விநாயகர் சிலைகள் தஞ்சை மாவட்டம் சுவாமிமலை, சென்னைக் கொசப்பேட்டை, வட பழனி, மகாபலிபுரம் ஆகிய இடங்களிலிருந்து தயாராகி வருகின்றன.

சென்னை அண்ணாசாலையில் உள்ள பூம்புகார் விற்பனை நிலையத்தில் காட்சிக்கும், விற்பனைக்கும் வைக்கப்பட்டுள்ள விநாயகர் சிலைகளின் விலை எவ்வளவு தெரியுமா? குறைந்த விலை ரூ. 20. அதிக விலை ரூ. 75,000.

இந்த ஆண்டு, இக்கண்காட்சியை யொட்டி சிறப்புத் தயாரிப்பாக 'கணேச தீபம்' என்கிற கணேசர் உருவம் பொறித்த விளக்கை அறிமுகப்படுத்தியிருக்கிறது பூம்புகார். இது காமாட்சி



விளக்கைப் போன்றது. பித்தளையால் செய்யப்பட்ட இந்தத் தீப விளக்கு, சரவிளக்காகவும் கிடைக்கிறது. இது துலக்குவதற்குச் சுலபமாகக் கழற்றி மீண்டும் பொருத்திக் கொள்ளும் வசதியுடையது. இதன் விலை ரூ. 46-லிருந்து ரூ. 1200 வரை. இந்த அழகிய விளக்கு மதுரை மற்றும் நாச்சியார் கோவிலிலிருந்து தயாராகிறது''.

ஆகஸ்டு 21 முதல் 15 நாட்களுக்கு நடைபெற்றது இந்தக் கண்காட்சி.

''கடந்த ஆண்டு இந்தக் கண்காட்சி மூலமாக ரூ. 3 இலட்சம் சிலைகள் விற்பனையாகியுள்ளன. இந்த ஆண்டு ரூ. 3.75 இலட்சம் விற்பனையாகுமென எதிர்பார்க்கப்படுகிறது. பொதுவாக பூம்புகார் கடந்த ஆண்டு ரூ. 5 இலட்சத்துக்குக் கலைப் பொருள்களை ஏற்றுமதி செய்தது. இவ்வாண்டு, ரூ. 10 இலட்சம் விற்பனையாகுமென எதிர் பார்க்கப்படுகிறது'' என்கிறார் பூம்புகார் நிலைய மண்டல மேலாளர் திரு. என். ஆர். இராமலிங்கம்.

கண்காட்சி முடிந்தாலும், கணேசர் சிலைகளை எப்போதும் இங்கே வந்து பெற்றுக் கொள்ளலாம்.

-பி.வி. ஜி.

## மாணவர் பக்கம்



## சிறுதொழில் ஒன்றைச் செய்திடுவோம்!

அ. சுப்பையன்

சிறுதொழில் ஒன்றைச் செய்திடுவோம்!
சிறப்புற வாழ்வை அமைத்திடுவோம்!
வருமா னத்தைப் பெருக்கிடவே
வழிகள் நாமும் கண்டிடுவோம்!

நல்ல தொழிலாய்த் தேர்ந்தெடுத்து
நாடி நாமும் செய்திட்டால்
எல்லா மனிதரும் விரும்பிடுவர்;
ஏற்றம் பெற்றே உயர்த்திடுவர்.

எந்தத் தொழிலும் செய்யாமல்
இருப்பது பெரிய பாவமன்றோ?
குந்தித் தின்றால் கோபுரமும்
குறையும் என்பது உண்மையன்றோ?

சிந்தனை செய்யும் தொழிலதனை
நினைவோம் என்றும் கனவிலுமே!
சிந்தனை செய்வோம்; செயல்படுவோம்!
சீரும் சிறப்பும் பெற்றிடுவோம்!

## விளையும் பயிர்:

சென்னை சாந்தோம் மான்போர்டு பள்ளியில் 5-ஆம் வகுப்புப் பயிலும் மாணவன் எஸ்.கே. முகமது ரபி.

ஒன்பது வயதான இம்மாணவன், நீச்சல் போட்டிகளில் பல பரிசுகளைப் பெற்று உள்ளான்.

அண்மையில் பெங்களூரில் தேசிய அளவில் நடந்த நீச்சல் போட்டியில் தங்கம், வெள்ளி, இரண்டு வெண்கலம் ஆகிய நான்கு பரிசுகளைப் பெற்று அனைவராலும் பாராட்டப்பட்டான்.

தமிழ்நாடு மாநில விளையாட்டு வளர்ச்சிக் கழகத்தின் நீச்சல் பயிற்றுநர் திரு. டி. சந்திரசேகர் இத்துறையில் இவனுக்குத் தக்க பயிற்சி அளித்து வருகிறார்.



## பொது அறிவுச் சுடர்

1. இரண்டாவது உலகப் போரில் பங்கு பெறாத நாடு எது?
2. தமிழில் தோன்றிய முதல் மாத இதழ் எது? தோன்றிய ஆண்டைக் குறிப்பிடு.
3. உலகிலேயே மிகப் பெரிய தீவு எது?
4. இந்தியாவிற்கு வருகை புரிந்த முதல் அமெரிக்க ஜனாதிபதி யார்?
5. அமெரிக்க நாட்டின் முதல் ஜனாதிபதி யார்?
6. இந்தியாவின் முதல் விண்வெளி வீரர் யார்?
7. உலகிலேயே மிகப் பெரிய பறவை எது?
8. நீந்தத் தெரியாத நான்கு கால் பிராணி எது?
9. திரவங்களின் ஒப்படர்த்தி காணப்பயன்படும் கருவியின் பெயர் என்ன?
10. கடலின் ஆழத்தைக் கண்டறியப்பயன்படும் கருவியின் பெயர் என்ன?
11. இப்பொழுது உலகெங்கும் பயன்படுத்தப்படும் காலண்டரின் பெயர் என்ன பெயர்?
12. முன்பு பாபிலோனிய என்று அழைக்கப்பட்ட பிரதேசத்தில் இன்று இருக்கும் நாடு எது?
13. நடு இரவு சூரியன் என்றழைக்கப்படும் நாடு எது?
14. 'லீரா' என்பது எந்த நாட்டு நாணயம்?
15. தமிழில் தோன்றி அழிந்து போன முதல் இலக்கண நூல் எது?

-கிருஷ்ண முத்துராமலிங்கம்

### விடைகள்:

1. கனடா;2. தமிழ்மாகசின், ஆண்டு-1831;3. கிரீன்லாந்து;4. ஐசன்ஹோவர்; 5. ஜார்ஜ் வாஷிங்டன்;6. ராகேஷ் சர்மா; 7. நெருப்புக் கோழி;8. ஒட்டகம்;9. ஹைட்ரோ மீட்டர்;10. ஃபாத்தோ மீட்டர்;11. கிரிகோரியன் காலண்டர்;12. இராக்;13. நார்வே;14. இத்தாலி;15. குமரவேல் இயற்றிய 'குமரம்'

## குழந்தைப் பாடல்கள் எப்படி இருக்க வேண்டும்?



குழந்தைப் பாடல்களில் தெளிவு, எளிமை இருக்க வேண்டும். எல்லாவற்றுக்கும் மேலாக அழகுணர்ச்சியும் இருத்தல் வேண்டும்.

குழந்தைகள் எப்படி, சின்னச் சின்னக் கற்பனைகள் செய்யுமோ, அதைப்போலக் கவிஞன் நினைத்து எழுத வேண்டும்.

குழந்தை மழையில் நனைய ஆசைப்படுகிறது. பெரியவர்கள் அதைத் தடுக்கிறார்கள். ஆனால் பூ மழையில் நனைகிறது. குழந்தை அதைப் பார்க்கிறது. மழையில் நனைவது ஒரு சுகம். அதைப் பாடலாக-குழந்தை செய்வது போல அமைக்க வேண்டும்.

குழந்தைப் பாடல்களில் எளிய சொற்கள் இடம் பெற வேண்டும். குழந்தைகளின் வாயில் நுழைவதற்கேற்பச் சொற்கள் சிதையாமல் பார்த்துக் கொள்ள வேண்டும். அதுமட்டுமல்ல, இன்றைய குழந்தைகளுக்கு ஏற்பவும் சொல்ல வேண்டும். காலத்துக்கு ஏற்ப குழந்தைகளின் மனநிலை மாறுபடுவதை நாம் பார்க்க வேண்டும்.

நல்ல கருத்துக்களைக் குழந்தைகளுக்குச் சொல்ல வேண்டும். ஆனால், அது பாடப் புத்தகம் போல் ஆகிவிடக் கூடாது.

உபதேசப் பாடல்கள், நேரடியாக உபதேசம் செய்வதுபோல் இல்லாமல், குழந்தை தானாகவே புரிந்து கொள்வதுபோல அமைக்க வேண்டும். அதாவது, இன்னொரு குழந்தை சொல்வது போல் அதைப் பக்குவமாகச் சொல்ல வேண்டும். பாங்காகவும் சொல்ல வேண்டும்.

எல்லாவற்றுக்கும் மேலாக குழந்தை எழுத்தாளருக்குக் குழந்தை உள்ளம் வேண்டும். அதுதான் முக்கியம். குழந்தைக் கவிஞர் அழ. வள்ளியப்பா அவர்கள் தம் வாழ்நாள் முழுவதும் குழந்தை இலக்கியத்துக்காகவே வாழ்ந்தார். அவர் வழியைக் குழந்தை எழுத்தாளர்கள் பின்பற்ற வேண்டும்.

-குழந்தை எழுத்தாளர் சங்கம் நடத்திய கூட்டத்தில் சாகித்திய அகாடமியின் முன்னாள் துணைச் செயலாளரும், குழந்தை எழுத்தாளருமான திரு. தம்பி சீனிவாசன் அவர்கள் ஆற்றிய உரையிலிருந்து.

## முதன்மை வகித்த இந்தியப் பெண்கள்




| | | |
|---|---|---|
| முதல் பெண் பிரதமர் | : | இந்திரா காந்தி (1967-1984) |
| முதல் பெண் முதலமைச்சர் | : | சுஜாதா கிருபாளினி (உத்திரப் பிரதேசம்) |
| முதல் பெண் கவர்னர் | : | சரோஜினிநாயுடு (உத்திரப் பிரதேசம்) |
| முதல் பெண் மத்திய மந்திரி (கேபினெட்) | : | ராஜ் குமாரி அமிர்த கவுர்(சுகாதார மந்திரி 1957) |
| முதல் பெண் கமிஷனர் | : | ஈஷா பசந்தி கஷாஷி (ஐ. ஏ. எஸ்.) உத்திரப்பிரதேசம்-1966. |
| முதல் பெண் மேயர் | : | அருணா ஆசப் அலி, ஏப்ரல் 1958 டில்லி முனிசிபல். |
| முதல் பெண் ஐ.ஏ.எஸ். | : | அன்னா ராஜம் ஜார்ஜ், கேரளா-1950. |
| முதல் பெண் தூதர் | : | விஜயலட்சுமி பண்டிட், ரஷ்யா (1947 — 1949.) |
| முதல் பெண் ஐ. எப். எஸ். | : | சி.பி. முத்தம்மா 1970 — 1975 ஹங்கேரி நாட்டில் தூதுவராகப் பதவி வகித்தார். |
| முதல் பெண் ஐ. பி. எஸ். | : | திருமதி. கிரான்பேடி, புது டெல்லியில் பதவி வகித்தார். |
| முதல் பெண் ஐ.நா. சபைத் தலைவர் | : | விஜயலட்சுமி பண்டிட், 1953. |
| தேர்தலில் நின்ற முதல் பெண் | : | கமலா தேவி சட்டோபாத்யா 1926-இல் நின்றார். குறைந்த வாக்கு வித்தியாசத்தில் வெற்றி வாய்ப்பை இழந்தார். |
| முதல் பெண் டாக்டர் | : | ஆனந்தபாய் ஜோசி 1865 1887. அமெரிக்காவில் பட்டம் பெற்று குறைந்த வயதிலேயே இறந்தார். |
| முதல் பெண் இஞ்சினீயர் | : | ஏ. லலிதா 1937 (சிவில்) |
| முதல் பெண் வக்கீல் | : | ரெஜினா குப்தா, 1922. |
| முதல் பெண் துணை வேந்தர் | : | ஹான்சா மேத்தா, பரோடா பல்கலைக் கழகம் |
| முதல் பெண் முதல்வர் | : | குமுதினி தாஸ். 1930. |
| முதல் பெண் பைலட் | : | கேப்டன் துர்கா பானர்ஜி. |



ஆதாரம்:
Gandhi's Indian Records

-தகவல்: இராய. பரமசிவம்
II பி. ஏ., (வரலாறு)
அரசினர் கலைக் கல்லூரி,
நந்தனம்,
சென்னை-35



# நூல்நயம்

### மகாகவி பாரதி-சில சிந்தனைகள்

ஆசிரியர்: நா. கிருஷ்ணபாரதி இ.ஆ.ப.,
வெளியீடு: ஸ்ரீபுவனேஸ்வரி பதிப்பகம்,
2,மாடல் ஹவுஸ் லேன்,
சி.ஐ.டி. நகர்,
சென்னை-600035.

விலை ரு. 10/- பக். 128.

பாரதியாரின் கருத்துகளைப் பல்வேறு கோணங்களில் கண்டு ஆய்ந்து தெளிந்து எழுதப்பட்ட பதின்மூன்று கட்டுரைகளைக் கொண்ட சிறந்த நூல் இது.

பாரதியாரின் கல்விக் கண்ணோட்டம், விஞ்ஞானச் சிந்தனைகள், சுற்றுப்புறச்சூழல் கண்ணோட்டம் என்பன காலத்திற்கேற்ற பயனுள்ள புதிய தலைப்புகள். பள்ளிகள் அமையவேண்டிய முறை, செயல்பட வேண்டிய முறை பற்றிய பாரதியாரின் கருத்துகள் தெளிவுபடுத்தப்பட்டுள்ளன. கிராமப்புறக் கல்வி வளர்ச்சியில் அவருக்கிருந்த ஆர்வம் விளக்கப்படுகின்றது. இன்றைய பல பிரச்சினைகளுக்குத் தீர்வையும் அது சுட்டிக்காட்டுகிறது.

மாணவரும் இளைஞரும் அறிவியல் துறையில் ஈடுபட்டு, உலக அரங்கிலே பீடு நடைபோட வேண்டும், கல்வி என்பது வாழ்க்கைக்குப் பயன்படும் வகையில் அமையவேண்டும் என்றெல்லாம் விரும்பிய பாரதியின் சிந்தனைகள் போற்றப்படுகின்றன. அனைவரும் படித்துப் போற்ற வேண்டிய நூல்.

-சிவஅரசி முத்துக்காளத்தி

### உயில்பற்றிய சட்டங்கள்

ஆக்கியோர்: மணிமேகலைப் பிரசுர
ஆசிரியர் குழு
வெளியீடு: மணிமேகலைப் பிரசுரம்,
தணிகாசலம் சாலை, தியாகராய நகர்,
சென்னை-600 017.

விலை:ரூ.13.50 பக்கம்:140

உயில் என்று சொல்லப்படும் விருப்ப ஆவணம் குறித்துப் பல்வேறு தகவல்கள் இந்நூலில் தெரிவிக்கப்பட்டுள்ளன.

உயில் எழுதும் முறை, பின்னர் உயிலை நீக்கும் விதம், சிறப்புரிமை பெற்ற உயில், உயிலின் அவசியம் , பொய் உயில், இணை உயில் உயில் எழுதத் தகுதியுள்ளவர்கள், கொடைக்கும் உயில் வழி உரிமைக்கும் உள்ள வேறுபாடு, இப்படிப் பல்வேறு செய்திகள் தக்க வகையில் விளக்கப்பட்டிருக்கின்றன இந்நூலில்.

உயிலின் மாதிரிகள் இந்நூலில் தரப்பட்டிருப்பது பாராட்டுக்குரியது.

எவரும் புரிந்துகொள்ளக்கூடிய எளிய நடையில் எழுதப்பட்டிருப்பது சிறப்புக்குரியதாகும்.

—எஸ்.எஸ். சுந்தரம்.

### போலீஸ் சட்டங்கள்

ஆசிரியர்: டாக்டர் சோ.சேஷாசலம்
வெளியீடு: குமரன் பதிப்பகம்
2, முத்துக் கிருஷ்ணன் தெரு
தியாகராய நகர்,
சென்னை-600017

விலை:ரூ. 6. பக்கம்:71

அரசு அமைப்புகளின் சட்டதிட்டங்கள் பற்றி பல்வேறு நூல்கள் வெளிவந்துள்ளன. காவல்துறையின் சட்டதிட்டங்கள் குறித்து சராசரி மனிதனும் அறிந்து கொள்ளும் வகையில் எளிய தமிழில் தெளிவான முறையில் இந்நூல் வெளியிடப்பட்டுள்ளது.

குற்றங்களுக்கான தண்டனைகள், நீதிமன்றத்தின் கடமை, காவல்துறையின் பணி, காவல்துறை மற்றும் நீதிமன்றங்களில் பயன்படுத்தப்படும் சட்ட சம்பந்தமான வார்த்தைகள் ஆகியவற்றுக்கான விளக்கங்கள் தரப்பட்டுள்ளன.

-வி. இராவணன்.

### முன்னேற முன்னூறு:

ஆசிரியர்: கவிஞர் டாக்டர் இராசதேவன்
வெளியீடு: சாந்தினி பதிப்பகம்,
2 கண்ணப்பர் சாலை,
அசோக் நகர்,
சென்னை-600 083

விலை:ரூ.15 பக்கம்:102

'வாழ்க்கை வாழ்வதற்கே' முதல் 'வாழ்க்கையில் முன்னேற முத்தான பத்து யோசனைகள்' வரை 12 கட்டுரைகளின் தொகுப்பு நூல் இது.

நூலாசிரியர் காவல்துறை உயர்அதிகாரி. காக்கிச்சட்டைக்குள்ளும் கனிவான எண்ணங்கள் உதயமாகலாம் என்பதை எடுத்துக் காட்டுவது போல அமைந்துள்ளது நூல். ஒவ்வொருவரும் வாழ்வில் வெற்றிபெறத் தக்க வழிவகைகள் இந்நூலில் அணிவகுக்கின்றன. நல்வாழ்வுக்கான வெளிச்சக் கருத்துக்கள் ஒளிசிந்துகின்றன.

இளைஞர் முதல் முதியோர் வரை, இதனைப் படித்துப் பயன்பெறலாம்.

—'சோழராஜா'

### இந்து சமயப் பெரியார்கள்

ஆசிரியர்: புலவர் அண்ணாமலை
வெளியீடு: பம்மி பதிப்பகம்
32, வெங்கட்டரங்கம்
பிள்ளைத் தெரு
சென்னை-5

விலை:ரூ.9 பக்கம்:92

முன்னோர்களின் வாழ்க்கை வரலாறுகள், நம் வாழ்க்கையைப் பண்படுத்த உதவுபவை. குறிப்பாக இளஞ்சிறார்களுக்கு வழிகாட்டியாக விளங்குபவை. அந்த வகையில், இந்நூலில் ஆதிசங்கரர், மாணிக்கவாசகர், ஆண்டாள், பெரியாழ்வார், திருமங்கையாழ்வார் ஆகியோரின் வரலாற்றை ஆசிரியர் நயம்பட எழுதியுள்ளார். மாணவர்கள் படித்துப்பயன்பெற வேண்டிய நூல்.

—பி.வி. கிரி

### 'வேப்பிலை'

ஆசிரியர்: எஸ். குலசேகரன்
வெளியீடு: அமிழ்தம் பதிப்பகம்
15, முத்துப்பிள்ளை தெரு,
வ.உ.சி. நகர்
வேலூர் (வ.ஆ) 632 001.

விலை:ரூ.12.50 பக்கம்:124

சிறு நாடகங்களின் தொகுப்பு இந்நூல். இந்நாடகங்கள்யாவும் வானொலியில் ஒலி பரப்பப்பட்டவை.

சற்று வித்தியாசமாய் வறுமைக்கோட்டுக்குக் கீழே உள்ளவர்களையும், எளியவர்களையும் விவரிக்கின்றன இந்நாடகங்கள்.

செருப்புத் தைப்பவர்கள், கழிப்பறை சுத்தம் செய்வோர், வீடு வீடாக விற்பனைக்கு ஏறி இறங்கும் விற்பனையாளர்கள் என்று பல பாத்திரங்களின் குறிக்கோள்கள், ஆசாபாசங்கள், அவர்களுக்கே அமையும் சூழ்நிலைகள் என்று பல சம்பவங்களை இந்நாடகங்களில் பிணைத்திருக்கிறார் ஆசிரியர்.


கதையை நாடகங்கள் மூலம் சொல்லத் தேவையான பாத்திரங்கள், உரையாடல்கள், சம்பவங்கள் ஆகியவை மிகையின்றி அளவோடு கையாளப்பட்டிருக்கும் சிறப்பு பாராட்டுக்குரியது.

—என். குமாரசாமி.



# வெள்ளை மனம் கொண்ட அண்ணா

புலவர் தமிழ்ப்பித்தன்



சங்கீதப் பேச்சொலியால் சத்தியச் சொல்தந்து
சமத்துவ விருந்து படைத்து
சந்தித்த செயலெல்லாம் சிந்தித்து முடிவாக்கி
சதிகாரர் தீச்செயல் வென்று

மங்காத பேரன்பு மாசற்ற தோர்நண்பு
மறவாத தாய்மொழித் தொண்டு
வளமாரத் தொடுத்து உளமாரக் கொடுத்து
வாழ்நாளில் வாய்மையொடு நின்று

கங்காத ரன்கந்தன் கடல்வண்ணன் எனநீண்ட
கடவுளர்தம் பட்டியல் கண்டு
கனிவான ஒருதேவன் இனிதாக உண்டென்று
கருத்தாழம் நெஞ்சிற் கொண்டு

வெங்காரச் சொல்வெடியை மாற்றார்கள் வெடித்தாலும்
விருப்பாக அவர்பால் பழகும்
வெள்ளைமனத் துரையே!எமைக் கொள்ளையிடும் திருவே
வெள்ளம்நிகர் காஞ்சி அண்ணனே!

'தம்பி' எனத் தயவாய்த் தாய்த்தமிழால் அழைத்து
தகவுடனே நாள்தோறும் உரைசெய்து
தணியாத கடமை அணியாக அணிந்து
தாயினும் சாலப் பரிந்து

'நம்பீ! உனை நம்புகிறேன் நல்லவனே' என்றுரைத்து
நாகரிகப் பாடம் உணர்த்தி
நலமெல்லாம் சேர்ந்துவர பலமெல்லாம் மிகுந்துவர
நன்மைதரும் பாதை அமைத்து

வம்பிதென ஒதுங்கும் மாந்தர்க்கு நம்நாட்டு
வரலாற்றுச் சேதி படித்து
வலுவான இனமென்று மாற்றாரும் ஒப்பிவர
வகையாக வெற்றி படைத்து.

வெம்பிஉயிர் விட்டொழியும் வேதனைக் காரருக்கு
விரிவாக விளக்கம் செய்யும்
வெள்ளைமனத் துரையேஎமைக் கொள்ளையிடும் திருவே
வெள்ளம்நிகர் காஞ்சி அண்ணனே!

# தீர்ப்பளியுங்கள்!

என் நண்பர், மாஜிஸ்ட்ரேட் மருதவாணம் பிள்ளை, கோர்ட்டிலே மட்டுந்தான் கோபமாகக் காணப்படுவார், அதைக்கூட அவர் கோபமென்று ஒப்புக்கொள்வதில்லை. நீதியின் உருவம்! என்று கூறுவார். "என்னமோ மருது! நீதி இப்படி மிரட்டும் உருவிலே இருப்பது எனக்குப் பிடிப்பதில்லை" என்று நான் கூறுவதுண்டு— கோர்ட்டு நேரத்தில் அல்ல.

அன்று மாலை, மருதவாணம் பிள்ளை, என்னைக் கண்டதும், "வா, வா! உன்னைத்தான் தேடிக் கொண்டிருந்தேன். நாளைக்கு ஒரு வழக்கிலே தீர்ப்பளிக்க வேண்டும். உன்னிடம் அதைக்கூறி, உன் தீர்ப்பு என்ன என்று தெரிந்து கொள்ள ஆசைப்படுகிறேன்" என்று கூறினார்.

"இதுதானா எனக்கு வேலை! உனக்குத்தான் சர்க்காரிலே சம்பளம் தருகிறார்கள். சட்டத்தைப் பரிபாலனம் செய்ய, எனக்கேன் அந்த வேலை?" என்று நான் கேலியாகக் கூறினேன்.



"உனக்கே மாஜிஸ்ட்ரேட் வேலை கிடைத்து விடுகிறது என்று வைத்துக் கொள்ளேன்" என்றார் மருதவாணம், மாலை வேளையிலே அவருக்கு இயல்பாகவே மலரும் மகிழ்ச்சியுடன்.

"எனக்கு அந்த வேலை கிடைத்தால்தானே!" என்று நான் கொஞ்சம் கம்பீரமாகக் கூறினேன். மருதவாணர், மாஜிஸ்ட்ரேட் குரலிலே ஆரம்பித்தார்:

"பெயர் மகாலிங்கம், வயது முப்பது. தொழில் நிலையாக ஒன்றுமில்லை; குற்றச்சாட்டு, பித்தளைச் சங்கிலியைத் தங்கச் சங்கிலி என்று ஏமாற்றி விற்றான்- இதுதான் வழக்கு. இதிலே தீர்ப்புக் கூற வேண்டும்."

"சரி! மகாலிங்கத்தின் வாக்கு மூலம் என்ன?" என்று கேட்டேன், ஒரு அதிகாரி போலவே.

"அதிலே சிக்கல் ஒன்றும் இல்லை. அவன் ஒப்புக் கொள்ளுகிறான்" என்றார் மருதவாணம்.

"இவ்வளவுதானா? இதிலே யோசனைக்கு என்ன இடமிருக்கிறது? குற்றவாளி, குற்றத்தை ஒப்புக்கொள்ளுகிறான். உடனே சட்டப்புத்தகத்திலே, அந்தக் குற்றத்திற்காகச் செக்ஷன் என்ன, அதற்கான தண்டனை என்ன என்று பார்க்க வேண்டியதுதானே! இதற்கு என்னைப் பரீட்சிக்க என்ன இருக்கிறது?" என்று நான் கூறினேன்.

"தங்கச் சங்கிலி என்று முலாம் பூசியதை விற்றிருக்கிறான். ஒப்புக் கொண்டுமிருக்கிறான், சாட்சியங்களும், அதேபோல அப்பு அழுக்கு இல்லை என்றாலும் இது சிக்கலான பிரச்னை" என்றார் மருதவாணர்.

"வேடிக்கையாகவன்றோ நீர் பேசுகிறீர்" என்று நான் கொஞ்சம் மரியாதையாகவே சொன்னேன், நண்பரின் முகத்திலே, கோர்ட்டுக் களை தட்டுவது கண்டு; கொஞ்ச நேரம் மௌனமாகவே இருந்தார் மருதவாணர். கவலையுடன் காணப்பட்டார். எனக்கு ஏதாவது பேசி வைப்போம் என்ற எண்ணம் உண்டாயிற்று.



"மகாலிங்கம் என்ற ஆள்-தெரிந்தவனா?" என்றேன் நான். உடனே மருதவாணரின் உடல் குலுங்கிற்று. முள் தைத்தவர் அலறுவதுபோன்ற குரலிலே, "தெரிந்தவனானால் என்ன, தெரியாவிட்டால் என்ன? நீதியின் கண்களுக்குச் சிநேகிதன், பந்து. இவைகள் உண்டா? பைத்தியக்காரா?! எனக்கு எப்போதும் அம்மாதிரி எண்ணம் வருவதே கிடையாது. யாருக்கும் வரக்கூடாது. நீதியின் சக்கரம் சாமான்யமானதல்ல" என்று கூறினார். இதேது. இன்று இரவு நெடுநேரம் வரையிலே இவருடைய உபதேசத்தைக் கேட்கவேண்டும் போலிருக்கிறதே" என்று நான் சற்று பயந்தேன்.

"மகாலிங்கம் கள்ளன், அயோக்கியன், குடிய்ன் இவற்றிற்கு ருஜூ அடிக்கடி நிறம் மாறும், தெரியுமா?" என்று கேட்டார்.

"ஆமாம் என்று நான் இருந்தேன். என்ன ஆமாம்! எதற்கும் ஆமாம்சாமி போடுகிறாய். ஊரைக் கொளுத்துவது தவறுதானே?" என்று வேறோர் கேள்வியைக் கேட்டார். திடுக்கிட்டு, "நிச்சயமாகத் தவறுதான்" என்றேன். "தவறுதான்"! ஆனால் இலங்கா தகனம் புண்ய காரியமாகப் பாவிக்கப்படவில்லையா?" என்றார் நண்பர். இதேது வம்பு வளர்ந்தபடி இருக்கிறதே என்று அஞ்சி, "அது வேறு விஷயம்! அரக்கனுடைய ஊரை அனுமார் கொளுத்தினார், அது ..." என்று முடிக்கவே அவசியமில்லாத வாசகத்தை வீசினேன். "அது கடவுள் விஷயம், அது தானே உன் வாதம்" என்று என் வர்ரேன்னு சொல்லி போனேன். 308 கான்ஸ்டெபிள் மூலைக் கடைப்பக்கம் இருந்தான், கூப்பிட்டு வந்து காட்டினேன், லாக்கப் ஆனான் நம்பள், ராம்ஜீ தயவிலே ஆபத்திலே மாட்டாமே தப்பினான்."

இது மற்றொரு சாட்சி, சதாசிவம் வாக்குமூலம்:

"தங்க முலாம் பூசிய சங்கிலியை விற்றுத் தந்தால் எனக்குப் பாதி பாகம் தருவதாக மகாலிங்கம் என்னைக் கூப்பிட்டான். சங்கிலியையும் காட்டினான். நாம் இம்மாதிரி திருட்டுக் காரியத்துக்கு உடந்தையாக இருக்க முடியாதென்று சொல்லிவிட்டேன்.

308 நம்பர் கான்ஸ்டெபிள், "சேட் வந்தழைத்ததும், நான்

## பேறிஞர் அண்ணா

இருக்கிறது" என்று தனக்குத் தானே கூறிக் கொள்பவர்போலப் பேசினார் என் நண்பர்."

"சரி! ருஜூ இருக்கும்போது, கள்ளனை, அயோக்யனைத் தண்டிக்க வேண்டியதுதானே, இதிலே தயவு தாட்சணியம் என்னமோ இல்லை. கூடாது. இன்னம் யோசனை ஏன்?" என்று நான் மாஜிஸ்ட்ரேட்டானேன், மாஜிஸ்ட்ரேட் மருதவாணம் பிள்ளையோ ஒரு விசித்திர வக்கீலானார்.

"மகாலிங்கம் கள்ளன், அயோக்யன், குடியன் என்பதற்கு எப்படி ஆதாரம் இருக்கிறதோ, அதே போலவே அவன் சாது, யோக்யன், ஏமாந்தவன் என்பதற்கும் ருஜூ இருக்கிறது" என்றார்.

உண்மையிலேயே இது சிக்கலான பிரச்னைதான், என் நண்பர் கவலைப்படுவதற்குக் காரணம் இருக்கிறது என்பதைத் தெரிந்து கொண்டேன்.

வேடிக்கையாக இருக்கிறதே சொல்வது! யோக்யன், அயோக்யன், என்று ஒரே ஆளை எப்படி கூறுவது? அமாவாசை,பௌர்ணமி தினத்தில் எனக்கூறுவதுபோன்று இருக்கிறதே!" என்று நான் உவமையை உதவிக்கு இழுத்தேன்.

மருதவாணர் அதிலும் சளைக்கவில்லை. "பச்சை ஓணான், நண்பர் என் வாசகத்தை முடித்துவிட்டு, மேலே பேசலானார்; "மகாலிங்கம் யோக்யன்தான், அயோக்கியனுந்தான்! ஏமாற்றினான் என்பதும் உண்மை, ஏமாந்தான் என்பதும் உண்மைதான்!" என்றார்.

"எனக்கு விளங்கவில்லையே! கோர்ட்டிலே வந்த சாட்சிகள், அவன் யோக்யன், சாது, ஏமாந்தவன் என்றா சொன்னார்கள்?" என்று கேட்டேன். அதுதானே கிடையாது! கோர்ட்டிலே அவ்வித சாட்சியே கிடையாது" என்று கூறிவிட்டு, உள்ளே சென்றார். சில கடிதங்களுடன் வந்து சேர்ந்தார், ஒன்றை எடுத்தார்.

"இதோ பார். இது குலாப்சந்த் சௌகார் சாட்சியம். "கொஞ்சம் இருட்டு. நம்பள் கடையிலேயும் விளக்குச் சரியா இல்லை. எண்ணெய் ரேஷன் காலம். சங்கிலி கொடுத்தான். எத்தனை சவரன்? இது நம்பள் கேட்டது. எடை போட்டு பார் சேட்! அவன் சொன்னான். நம்பள்கி சந்தேகம். என்னா? சங்கிலி கொண்டாந்தவுன் எடை சொல்லாமே ஏன் இருக்கான்னு யோசிச்சான், நம்பள் சந்தேகம் வந்தாச்சா, உடனே போலீசுக்கு ஆள்விடுவான். பத்து வருஷமா நம்பள் வியாபாரம் இப்படித்தான், சாயா சாப்பிட்டு கடைக்குப் போனேன். என்னைப் பார்த்த உடனே இவன் முகத்திலே பயம் வந்துவிட்டது. ஏதடா சங்கிலி என்று கேட்டேன். பதில் சொல்லாமல் மரம் போலிருந்தான். இதற்குள் சேட், உரைத்துப் பார்த்து, "அரரே! இது பொன் இல்லை, பித்தளை என்று சொன்னார். உடனே இவனை லாக்கப் செய்தேன்" இப்படியே சாட்சியங்கள் உள்ளன-என்று மருதவாணர் கூறிவிட்டு, ஆயாசத்தோடு இருந்தார். இவ்வளவு வெள்ளையாக வழக்கு இருக்க, இவர் ஏன் வேதனைப்படுகிறார் என்பது விளங்கவில்லை எனக்கு.

"சரியானபடி சிக்கிக்கொண்டிருக்கிறான். இனி என்ன இருக்கிறது, நான் கூற" என்று சொன்னேன்.

"எனக்கோ கடுமையான ஜுரம்! வைத்தியர்கூட மிரண்டுவிட்டார். 'மார்புச்சளி அதிகமாக இருக்கிறது. சுவாசம் வருவதுகூடச் சிரமமாக இருக்கிறது என்று கூறினார். என் மனைவி என்ன செய்வாள்? அவள் மேலே, ஒரு நகையும் கிடையாது. இருந்தது ஒரு வளையல், அது போனமாதம் தீர்ந்துவிட்டது. வீட்டிலே பாத்திரங்கள்கூடக் கிடையாது, இந்த நிலையிலே, 'பத்து ரூபாயாகும் ஊசி போட என்று டாக்டர் கூறி

விட்டார். கையிலே பணம் வந்தாக வேண்டும் என்றார். நிர்க்கதியாக விடப்பட்ட நான், பிராண அவஸ்தையிலே இருப்பதை எடுத்துச் சொல்லி, நான் வண்டியோட்டும் முதலாளியிடம் போய் அழுதாள் என் மனைவி. பத்து நாளாகப் படுத்த படுக்கையாக இருக்கிறானே, பாதிப் பிராணன் போய் விட்டதே என்று ஈவு இரக்கம் கொஞ்சமும் இன்றி, அந்தக் கொலைக்காரப் பாதகன், ஒரு பைசாகூடத் தரமுடியாது. அவன் ஏற்கனவே ஆறு ரூபாய் பாக்கி என்று கூறிவிட்டான். மாங்கலியப் பிச்சை தர வேண்டும் என்று என் மனைவி கேட்டாளாம். அதற்குக் கோயில் சுற்று என்று சொல்லித் துரத்தி விட்டானாம்! மாடாக உழைத்தேன் உனக்கு உயிர் போகிறது என்றால் பத்து ரூபாய்தர மறுத்து விட்டான். இப்படிப்பட்ட கன்னெஞ்சர்கள் வாழ்கிறார்கள். கஷ்டாளிகள் கால்வயிற்றுக்குக் கால முழுவதும் உழைக்கிறார்கள். சரி, சாகவேண்டியதுதான், என்று எண்ணி ஏங்கினேன். நான் மாண்டுபோனால் மங்காவின் கதி என்னாவாகும்? என் ரங்கன், நாலு வயதுப் பையன், அவன் தெருவிலே அலைவான். இந்த லட்சணத்திலே அவள் எட்டாம் மாதம்! இந்த உலகிலே- என்னைக் காப்பாற்ற- மரணத்திலிருந்து என்னைத் தப்பவைக்க யாரும் இல்லை. மங்கா அழுதபடியே இருந்தாள். அந்த நேரத்திலே, புண்யமூர்த்தி மகாலிங்கம் வந்தான். அவன் பூர்ணாயுசுடன் நோய் நொடியின்றி வாழவேண்டும். என் நிலைமையைக் கண்டதும், கோவெனக் கதறினான். வரதா! உனக்கு இவ்வளவு அதிகமாக ஜுரம் என்று எனக்குத் தெரியாமல் போச்சே என்று விசனித்தான். "அக்கா! அழாதே, ஆண்டவன் நல்வழி காட்டுவார்" என்று என் மனைவிக்குத் தேறுதல் கூறினான். அவனுடைய அன்பு எனக்கு ஆயிரம் டாக்டர்களின் உதவியைவிட மேலானதாக இருந்த உயிருக்கு ஊசலாடிக்கொண்டு, ஊரிலே ஒருவர் உதவியின்றி வேலை செய்துவந்த இடத்திலே கைவிடப்பட்ட இந்த தர்மக்கட்டையிடம் தயைகாட்டி, ஆறுதல் கூறினான். அவனுடைய தர்ம சிந்தனையைப் பார்த்தபோது கை தூக்கிக் கும்பிட்டேன். அதுவரையிலே அடக்கி வைத்திருந்த ஆத்திரத்தைக் கொட்டினாள், என் மனைவி.



★ ஒரு மூட்டை தூக்குவதில் பாரத்தினால் வேதனைப்பட்டிருப்பேனே தவிர, மூட்டை தூக்குவது அவமானம் என்று ஒரு போதும் வேதனைப்பட்டதில்லை.

"ஆண்டவன் எனக்கு என்ன வழியப்பா காட்டப் போதிறார்? ஆண்டவன் இருக்கிறானா? எங்கே இருக்கிறான்! இதோ என் புருஷர் வதைகிறார். கண்ணைத் திறக்கிறேன்! கலம் கண்ணீர் விடுகிறேன்! தெய்வம் என்ன செய்கிறது? தெருவிலே ஏழைகளை அலையவைக்கிறது. தெய்வமாம் தெய்வம்! திக்கற்றவர்களுக்குத் தெய்வம் துணை என்பது பாட்டிகதை" என்று அழுதுகொண்டே கூறினாள்.

"அழாதே அக்கா? ஆண்டவன் இருந்துதான், என்னை இங்கே அனுப்பி வைத்தார்" என்று சொன்னான் அந்தச் சார்ந்த மூர்த்தி. "ஆமாம் உன்னைப் போல ஈரமுள்ள நெஞ்சு கொண்டவர்கள் வந்துதான் ஆண்டவனின் மானத்தைக் காப்பாற்ற வேண்டியிருக்கிறது" எ்ன்று அவள் பதறிப் பேசினாள். பத்து ரூபாய் கேட்கிறார் டாக்டர் என்பதைக் கூறினாள். பத்து ரூபாய் என்றதும் பாவம், மகாலிங்கம் பயந்து போனான். அவனிடம் ஏது அவ்வளவு பணம்? அவன் என்னைப் போல் ஒரு ஏழை. எனக்காவது ஒரு குழந்தை. அவனுக்கு நாலு. எனக்கு ஒரு இடம் இருந்தது வேலை செய்ய, அவனுக்கோ ஒரு வேலையும் நிலையாக இருப்பதில்லை. நோயாளி மனைவி, வயதான தாய், வருமானம் கட்டை. இந்த லட்சணத்திலே பத்து ரூபாய் தர முடியுமா அவனுக்கு? "அப்பா நீ பக்கத்திலே இருந்தாலே போதும். பத்து ஆயிரம் கொடுத்த மாதிரிதான். என் பிராணன் போகிற சமயத்திலே, உன்னைப் போன்ற ஒரு உத்தமச் சினேகிதன் பக்கத்திலே இருந்தால், அதுவே என் மரண வேதனையைக் குறைக்கும் என்று நான் ஈனக் குரலிலே கூறினேன். எழுந்தான். "இதோ வருகிறேன்?" என்றான். வெளியே போனான். வேதனையைக் காணச் சகியாமல் வெளியே போனான் என்று நான் நினைத்தேன். அரை மணி நேரத்திற்கெல்லாம், டாக்டருடன் வந்தான். ஊசி போட்டார். என்னைப் பணம் கேட்கவில்லை. அதிலிருந்து ஜுரம் படிப்படியாகக் குறையத் தொடங்கிற்று. நான் எழுந்து நடமாடும் சக்தி பெறுகிறவரையிலே, ரொட்டியும் அவன் தான் வாங்கித் தந்தான். 'ஏது மகாலிங்கம் பணம்?' என்று எத்தனையோ தடவை கேட்டேன். பதிலே சொல்லவில்லை அந்த தர்மசீலன், தயாளமூர்த்தி, புண்யாத்மா, அவதார புருஷன், என் உயிரைக் காப்பாற்றினான். ஏழை, ஏழைக்கு உதவி. ஏழையே, ஏழைக்கு உயிர் கொடுக்கும் தெய்வம். மகாலிங்கம் சாதாரண பிறப்பல்ல, அவன் தெய்வப் பிறப்பு."

இது. வண்டிக்கார வரதன் வாக்குமூலம்-கோர்ட்டில் சொன்னதல்ல. என்னிடம் நேரில் சொன்னான். காலில் விழுந்து, "எப்படியாவது அந்தக் காருண்யவானைக் காப்பாற்றவேண்டும்" கெஞ்சிக் கேட்டான், உண்மையிலேயே ஒரு டாக்டருக்கு, ஒரு உயிர் போனுமே, நம்மாலான உதவி செய்வோம் என்ற எண்ணம் தோன்றவில்லை. நம்மிடம் நாய்போலக் கிடந்தானே, உயிருக்கு ஆபத்தாக இருக்கிறதாமே, ஒரு பத்து ரூபாய் கடன் தருவோம் என்ற எண்ணம், ஒரு பணக்காரனுக்குத் தோன்றவில்லை. பராரி மகாலிங்கத்தின் மனதிலே, அவ்வளவு அன்பு ததும்பி இருந்தது. ஒரு உயிர் துடிப்பதைக் கண்டு அவன் துடித்தான், ஒரு குடும்பத்தின் கண்ணீரைக் கண்டு கலங்கினான். மகாலிங்கம் யோக்யன், தர்மவான், குணசீலன், அந்த வரதன் சொன்னது போல அவன் தெய்வப் பிறப்பு-என்று இந்த வாக்குமூலம் ஒன்றைக் கொண்டே சொல்லிவிடலாம்" ,என்று கூறிவிட்டுப் பெருமூச்செறிந்தார் மாஜிஸ்ட்ரேட். நான் ஆச்சரியத்தால் என்னையே மறந்தேன். மகாலிங்கம் எவ்வளவு பெரிய கர்மயோகி! அவன் மனதிலே எவ்வளவு கருணை! அவனுடைய செயல் எவ்வளவு சிலாக்கியமானது! என்று புகழ்ந்தேன்.

"ஆனால் மறந்துவிடாதே. மகாலிங்கம் செய்திருக்கும் குற்றத்தை" என்று மாஜிஸ்ரேட் கவனப்படுத்தினார். 'ஆம்! அவன் தண்டிக்கப்பட வேண்டியவன்' என்பதை நினைத்ததும், என் உடல் குலுங்கிற்று. இப்படிப்பட்டவனுக்குத் தண்டனை!! அவன் காட்டிய சினேகவாஞ்சை, மனிதாபிமானம், ஆபத்தில் உதவுதல், இவைகளுக்குப் பரிசு கிடையாதா? இவைகளைக் கவனிப்பவர் இல்லையா? இல்லை! ஏன்! அவன் திருடன்! தியாக புருஷன் திருடனான்ான்! பௌர்ணமியிலே அமாவாசை இருக்க முடியுமா என்று நான் கேட்டேன் பைத்தியக்காரத்தனமாக! இதோ இருக்கிறதே!! கருணையைப் பொழிந்த மகாலிங்கம், களவுமாடியிருக்கிறான்!!

"இன்னொரு வாக்குமூலம் கேள்: 'தர்மதுரையே! மகாலிங்கம், மகாயோக்கியனுங்க. பெரிய குடும்பம், பிழைப்புக்காக, யார் காலால் இட்ட வேலையையும் தலையால் செய்பவனுங்க என் மகன். அவன் சின்ன வயசிலிருந்தே யோக்யனுங்க, கஷ்ட ஜீவனம், அந்தக் கஷ்ட ஜீவனத்திலேயும், பசி என்று சொல்லி யாராவது வந்துட்டா போதுங்க, தன் வயிற்றுக்குப் போதாவிட்டாலும் பரவாயில்லை என்று சொல்லி, அவர்களுக்குச் சோறு போடுவானுங்க. கெட்ட நினைப்பே கிடையாதுங்க. அவனை நீங்க காப்பாற்றாம போனா, நாலு குழந்தையோடு அவன் பெண்ஜாதி நடுத்தெருவிலே நிற்கும். நானும் அப்படித்தான், வயசு அறுபதுக்கு மேலே ஆகுதுங்க" என்று கூறி என் காலில் விழுந்து அழுதாள் மகாலிங்கத்தின் தாய். அவள் வாக்குமூலத்திலிருந்து மகாலிங்கம் சாது, யோக்யன், அன்பு காட்டுபவன் என்று ஏற்படுகிறது. ஆனால் வழக்கோ விளக்கமாக இருக்கிறது. அவன் கள்ளன், அவனே குற்றத்தை ஒப்புக்கொண்டுமிருக்கிறான். இப்படிப்பட்ட யோக்யன் ஏன் அயோக்யனானான்!" என்று மருதவாணர் கேட்டார். "எனக்குத் தலை சுழலுகிறது இதைக் கேட்க" என்று நான் சொன்னேன். உண்மையாகவே எனக்கு அப்படித்தான் இருந்தது.

"நம்ம வீட்டுத் தோட்டக்காரன் இருக்கிறானே துரைசாமி. அவன் சொன்னதே இதைவிட அதிகம். மகாலிங்கம் எப்போதும் ஏழைகளுக்கு உதவி செய்வானாம். யாராவது வீதியிலே, தூக்கமுடியாமல் பாரமான மூட்டையை வைத்துக்கொண்டு கஷ்டப்பட்டால் அவன்தான், உதவிக்கு வருவானாம். போக்கிரி எவனாவது யாரிடமாவது வம்புக்குப் போனால் இவன் போய்ச் சமாதானம் செய்வானாம்! அனாதைகள் இருந்தால், வீடுவீடாகப் பிடிசோறு எடுத்து, அவர்களுக்கு உணவளிப்பானாம். ஒரு தடவை, நம்ப தோட்டத்திலே தேங்காய் திருடிவிட்டானாம் எவனோ. மகாலிங்கந்தான் திருடினான் என்று நினைத்துக் கொண்டு, துரைசாமி, மகாலிங்கத்தைச் சண்டைக்கு இழுத்துப் பலமாக அடித்து விட்டானாம், மகாலிங்கம் அவ்வளவு அடியும் பட்டுக்கொண்டு, சத்தியமாக நான் திருடவில்லை என்று சொன்னானாம். கடைசியில் திருடன் வேறு ஒருவன் என்று தெரிந்ததாம். நம்ம துரைசாமிக்கு மனந்தாளாமல், மகாலிங்கத்திடம் போய் மன்னிப்புக் கேட்டானாம். "இது என்ன பிரமாதம்! என்னமோ விஷக்கடி வேளை" என்று மகாலிங்கம் பொறுமையாகப் பேசினானாம். அப்படிப்பட்ட பொறுமைசாலியை நான் கண்டதே கிடையாதுங்க.ரொம்ப யோக்யன், எப்போதாவது அதிகக் கஷ்டமான வேலை செய்தால் குடிப்பான். ஆனால் குடித்துவிட்டுக் கூத்தாடுகிறவனுமல்ல. 'என் கையிலே பணம் ஏராளமாக இருந்தால் ஏழைகளுக்கெல்லாம் உபகாரம் செய்வேன். நான் இல்லாதவன். என்ன செய்வது' என்று ஏக்கப்படுவானாம் மகாலிங்கம்" என்று கூறினார் மாஜிஸ்ட்ரேட், துரைசாமி சொன்னான் என்று.

"ஐயோ பாவம்! இப்படிப்பட்டவனுக்கு ஏன் கெட்ட எண்ணம் பிறந்தது" என்று நான் பரிதாபத்துடன் கேட்டேன்.

"அதை ஏன் கேட்கிறாய்! அதைச்சொன்னால் நீ மூர்ச்சையாகிவிடுவாய். எங்கெங்கு விசாரம் இருந்ததோ அங்கெல்லாம் மகாலிங்கம் முன்னாலே நின்று உதவி செய்தான். நோயாளிகளுக்கு மருந்து வாங்கித் தருவான். ஏழையின் வீடு இடிந்தால், இவன் கூலி இல்லாமல், வெறும் கூழுக்கே வேலை செய்வான். குழந்தை ஏதாவது தவறி வந்துவிட்டது என்றால், வீடு கண்டுபிடித்துக்கொண்டு போய்ச் சேர்க்கிற வரையிலே, வேறு வேலையைக் கவனிக்கமாட்டான். இப்படி மற்றவர்களுக்கு உதவி செய்வதிலேயே கண்ணுங் கருத்துமாக இருந்ததால் அவனுக்குக் கிடைக்கும் வேலையும் நிலைப்பதில்லை. பரோபகாரி வருகிறார். இவருக்கு வேலை வெட்டி, எதற்கு? என்று கண்டித்து அனுப்பி விடுவார்கள். குடும்பமோ பெரிது. அதை நடத்திக்கொண்டு போவதே சிரமம். தன் சக்தியையும் உணராமல் உதவி செய்யும் சுபாவம். அதற்கு வேறு செலவு. இந்த நிலையிலே, நடந்திருக்கிறது இவன் வாழ்க்கை. இச்சமயத்திலே, இவன் அதிர்ஷ்டச் சீட்டுக் கட்டியிருந்தான். அதிலே நூறு ரூபாய் கிடைத்தது. ஆனந்தமடைந்தான். கடன் தீரும், குடும்பத்துக்குச் சௌகரியமாகும். மற்றவர்களுக்கு உதவி செய்யவும் முடியும் என்று மகிழ்ந்தான். அழுக்கு உடையும், தலைவிரி கோலத்துடனும் தள்ளாடி நடந்துகொண்டு, யாரோ ஒருவன், மகாலிங்கத்துடன் வந்து சேர்ந்தான் சனியன்போல. அவனுடைய நிலைமையைக் கண்டதும், மகாலிங்கத்தின் மனம் பாகாய் உருகி விட்டது. "ஐயோ! சாப்பிட்டு எத்தனை நாளாயிற்றோ? பார்க்கவே பரிதாபமாக இருக்கிறதே" என்று சொல்லித் தன் வீட்டுக்கு அழைத்துக்கொண்டு போயிருக்கிறான். அவன் தண்டச் சோற்றைத் தாராளமாகத் தின்றுவிட்டு, "ஐயா! நான் பர்மாவிலிருந்து கால்நடையாக வந்தவன், ரங்கூனில் பெரிய வியாபாரி. போராத வேளையால் இந்தக் கோலம் வந்தது" என்று தன் கதையைக் கூறலானான். பர்மாவிலிருந்து பயங்கரமான ஆபத்துக்குள்ளாகிப் பல மக்கள் வதைப்பட்டதை மகாலிங்கம் ஏற்கனவே கேள்விப்பட்டவன். பத்து நாள் அன்னாகாரம்இல்லாமல் அவதிப்பட்டவர்கள்-பாம்பு கடித்து இறந்தவர்கள்-பாம்புக்குப் பலியானவர்கள்- காட்டு ஜாதியரால் கொலையுண்டவர்கள்-என்று பல சோகச் சேதிகளைக் கேட்டிருந்தான். ஆகவே, பர்மாவிலிருந்து வந்தேன் என்று சொன்ன உடனே மகாலிங்கத்துக்குக் கண்ணிலே நீர் ததும்பிற்று.



வந்தவன், "என் குடும்பம் அடியோடு நாசமாகிவிட்டதப்பா!" என்றான். மகாலிங்கம் அழுதுவிட்டான். "எப்படியோ நான் வந்து சேர்ந்தேன். திக்கு இல்லை



# அடக்கத்தின் திருவுரு

எளிய குடும்பத்தில் பிறந்து, நல்ல மாணவராக, ஆற்றல்மிகு பேச்சாளராக, சிறந்த எழுத்தாளராக, உள்ளம் கவர்ந்த பத்திரிகை ஆசிரியராக, நல்ல நூலாசிரியராக, நாடக ஆசிரியராக, நாடக நடிகராக, பண்பட்ட அரசியல்வாதியாக, நிகரற்ற பகுத்தறிவாளராக, உத்தமத் தலைவராக, ஒப்பற்ற வழிகாட்டியாக, நாடு போற்றிய முதல் அமைச்சராக, பல்துறை ஆற்றல் நிரம்பப் பெற்ற அறிவுலக மேதையாக ஓங்குபுகழ் எய்தியவர் பேரறிஞர் அண்ணா அவர்கள்.

இவர், தமிழால் தமிழனைத் தட்டி எழுப்பிய அறிவுச்சுடர்; ஏழை எளிய மக்களிடையே தம் பேச்சாற்றலால் அறிவுப்புரட்சியை உருவாக்கிய சாமான்யர்களின் தலைவர்;

ஆடம்பரத்தை அறவே வெறுத்தவர்; எளிமையின் திருவுரு; புகழ்ச்சிச் சொற்களைக் கேட்டு, அதிகமாக மகிழ்ச்சி அடைந்திடவும் மாட்டார்; வசைச் சொற்களைக் கேட்டு, பொங்கி எழவும் மாட்டார்; இரண்டிற்கும் பதில் புன்னகைதான்! எளிமையும், கனிவும் அவருக்குப் பிறவிக்குணம்; அவர் வளர்த்துக் கொண்ட சகிப்புத்தன்மை அனைவருக்கும் வழி காட்டவல்லது. தவறு செய்பவர்களிடமும், தம்மை எதிர்ப்போரிடமும் அனுதாபம் காட்டினார். 'மன்னிப்போம், மறப்போம்' என்றார். 'பிறரைத் தாக்கி வளராதே, பிறர் தாக்குவதைத் தாங்கி வளர்'' என்ற பாதையைத் தொண்டர்களுக்கு வகுத்துத் தந்தார்.

தமிழகத்தின் தனித்தன்மையையும் சமூக சீர்திருத்தக் கொள்கைகளையும், வலியுறுத்தி வந்த நீதிக் கட்சியில் சேர்ந்தார்; 1925-ஆம் ஆண்டில், காங்கிரசிலிருந்து வெளியேறி சுயமரியாதை இயக்கம் கண்டு, சமுதாய மறுமலர்ச்சிக்கும் 'தமிழர் நலனுக்கும் பாடுபட்ட பகுத்தறிவுத் தந்தை பெரியாரைத் தனது ஒரே தலைவராக ஏற்றுக் கொண்டார். பட்டம், பதவி, பணம், கல்விச்சிறப்பு இவைகள் மட்டுமே நிலவி இருந்த நீதிக்கட்சியினை, வரலாற்றுத் தொலைநோக்குடன் மாற்றி-திராவிடர் கழகமாக, பாமரரும் நாடி வந்து போற்றிய மக்கள் இயக்கமாக மலரச் செய்தார்.

நாடகமாடிகள் என்று 4

ஏச்சுக்கும் பேச்சுக்கும் ஆளாகியிருந்த நேரத்தில், சந்திரமோகன் அல்லது சிவாஜி கண்ட இந்து சாம்ராஜ்யம், நீதிதேவன் மயக்கம், சந்திரோதயம், ஓர் இரவு, காதல் ஜோதி, வேலைக்காரி போன்ற பல அரசியல் சமூக, சீர்திருத்த நாடகங்களை எழுதி, தமிழ்ச் சமுதாயத்தில் விழிப்புணர்ச்சியையும் மறுமலர்ச்சியையும் உருவாக்கினார். நாடகங்களை எழுதியதுமட்டுமல்ல. சில நாடகங்களில் நடிக்கவும் செய்தார்.

நாடகங்கள் எழுதியதோடு, திரைப் படங்களுக்குக் கதைவசனம் எழுதி, சுயமரியாதைக் கொள்கைகளை, சீர்திருத்தக் கருத்துக்களை மக்களின் இடையே அண்ணா பரப்பினார்.

15-9-1909 அன்று காஞ்சிபுரத்தில் எளிய குடும்பத்தில் பிறந்து, ஏழை எளிய நடுத்தர மக்களிடையே அறிவுப் புரட்சியை உருவாக்கி, மக்கள் நிலை உயர, நினைப்பு உயர, அயராது பாடுபட்டு, தேனருவிப் பேச்சால் எழுத்தாற்றலால், இனிய பண்பால், இலட்சக்கணக்கான மக்களின் இதயங்களில் குடி கொண்ட ஒப்பற்ற தலைவர் பேரறிஞர் அண்ணா, 3-2-1969 அன்று உடலால் நம்மை விட்டுப் பிரிந்தார், ஒளியாக நம் நெஞ்சில் நிறைந்திருக்கிறார்.

— வ. இராசமனோகரன்.

திசை தெரியவில்லை, நீ கிடைத்தாய் பழனியாண்டவர் போல'' என்று சொல்லிக் கும்பிட்டான். ''ஐயோ! பெரியவங்க நீங்க இந்தப் பஞ்சைப் பயலைக் கும்பிடாதிங்க. நான், என்ன பிரமாதமான உதவி செய்துட்டேன் உங்களுக்கு'' என்று மகாலிங்கம் கூறினான். அப்போதுதான், வந்தவன், மெதுவாக மடியிலிருந்து, சங்கிலியை எடுத்தான். ''அப்பா, இது மூணு சவரன், இதை விற்க வேண்டும். விற்றால் நான், ஊர் சேர்ந்து ஏதாவது கடை வைத்துக் கொண்டு பிழைப்பேன். இந்த ஊருக்கோ நான் புதியவன். கடை வீதிக்கு நகையை எடுத்துக் கொண்டு போனால், சுலபத்திலே வாங்க மாட்டார்கள். அதிலும் நான் இருக்கிற அலங்கோலத்தைக் கண்டால் இது திருட்டுச்சொத்தோ என்று கூடச் சந்தேகப்படுவார்கள். இன்றைய விலையிலே இருநூறு ரூபா தாளும். எனக்கு ஒரு நூறு ரூபாய் கொடு போதும். சங்கிலியை நீ எடுத்துக் கொள் என்று கெஞ்சினான்.

மகாலிங்கம் மறுக்கவில்லை. அதிர்ஷ்டச் சீட்டுப் பணத்தை அப்படியே அந்தப் பர்மா அகதிக்குக் கொடுத்தனுப்பி விட்டான். அந்தச் சங்கிலியைத் தான் பிறகு மார்வாடி கடையிலே விற்க வந்தான், பிடிபட்டான். இது, மகாலிங்கத்தின் மனைவி, தன் நாலு மக்களோடு என் காலில் விழுந்து சொன்ன வாக்குமூலம்'' என்றார். நான் சந்தோஷத்தால் துள்ளிக் குதித்து, இந்த வாக்குமூலத்தைக் கொண்டே, ''மகாலிங்கத்தை விடுவித்து விடலாமே'' என்று சொன்னேன். மருதவாணர் சிரித்துக் கொண்டே எப்படி தீர்ப்பளிக்க முடியும்? சட்டம் இடந்தராதே மேலும் பர்மா அகதியாக நடித்தவன் யார் என்று தெரியவில்லை. அதுமட்டுமல்ல முலாம் பூசுவதற்கான சாமான்கள் மகாலிங்கத்தின் வீட்டிலேயிருந்து போலீசார் கண்டு பிடித்து எடுத்திருக்கிறார்கள்'' என்று கூறினேன். ''இருக்கலாம்! ருஜு வேண்டாமா! மகாலிங்கம் நிரந்தரமான தொழிலற்றவன்.

அவன் முலாம் பூசிய நகையை விற்க முயற்சித்தான். அதை அவனே ஒப்புக்கொள்கிறான். அவன் வீட்டிலே முலாம் போடும் கருவி கிடைத்தது. தண்டனைக்கு ஏற்றபடி ருஜுக்கள் உள்ளனவே நான் என்ன செய்வது?'' என்று கேட்டார்.

''சிக்கலான பிரச்னைதான்!'' என்று மட்டுமே என்னால் சொல்ல முடிந்தது. நானா தீர்ப்பளிக்க வேண்டியவன்! என் தீர்ப்பு நெடு நாட்களுக்கு முன்பே பதிவாகி விட்டது. ஒரு வழக்குக்கு மட்டுமல்ல. பொதுவாகவே, அதாவது ஏழைகள் செய்யும் குற்றங்களுக்குக் காரணம் அவர்களின் ஏழ்மை; ஆகவே தண்டிக்கப்பட வேண்டியது, ஆட்களல்ல, பொருளாதார பேத அமைப்பு முறை. இது என் தீர்ப்பு. ஆனால் மாஜிஸ்ட்ரேட் மருதவாணம் பிள்ளை, சட்டப்படி, இந்த மகாலிங்கம் வழக்கிலே என்ன தீர்ப்பு அளிப்பது என்று கேட்கிறார்! சொல்லுங்கள் பார்ப்போம்!! ('[illegible]' நூலிலிருந்து)



# அண்ணாவின் கடைசிக் கட்டுரை

— திருவாரூர் முத்துராமன்



1965-ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் கடைசி வாரம்.

ஒரு திரைப்படத் தயாரிப்பு நிறுவனத்தில் தயாரிப்பு நிர்வாகியாகப் பணியாற்றிக் கொண்டிருந்தேன் நான். பேரறிஞர் அண்ணா அவர்களின் இளமைநாள் தொட்டு அவருடன் தொடர்பு கொண்டிருந்த நண்பர் சுந்தரேசன் அங்கு ஒரு மாலை நேரத்தில் வந்தார்.

''அண்ணா அழைக்கிறார், வருகிறீர்களா?'' கேள்வியை அவர் சாதாரணமாகத்தான் கேட்டார். ஆனால் எனக்கு அது மின் அதிர்வுபோல ஒரு அதிர்ச்சியை-ஒரு படபடப்பை ஏற்படுத்தியது. 'என்னையா? அண்ணாவா அழைக்கிறார்?' பூமி எது, வானம் எது என்றே எனக்குப் புரியாத அளவுக்குத் தடுமாற்றம்!

''உங்களைப்பற்றித் தாமரை கூறினார்; நான் அண்ணாவிடம் எல்லாம் சொல்லி விட்டேன்; ஒன்றும் சிரமம் இல்லை; 'புரூப்' மட்டும் தான் பார்க்க வேண்டும்; இப்போதே புறப்பட வேண்டும்'' என்றார் சுந்தரேசன். தாமரை என்ற புனைபெயருக்குச் சொந்தக்காரரான ஓவியர் வைத்திலிங்கம் என்னைக்கூடக் கேட்காமல் இந்த ஏற்பாட்டைச் செய்திருக்கிறார்!

நேராக நுங்கம்பாக்கம் இல்லத்துக்குச் செல்கிறோம்; அண்ணா மாடியிலிருந்து தொலைவில் அனுப்புகிறார். 'காஞ்சிபுரத்துக்கு அழைத்துப்போ' என்று! அண்ணாவைப் பார்க்கவில்லை. காஞ்சிபுரத்துக்கு இரவு எட்டு மணி அளவில் போய்ச் சேர்ந்தோம்.

'காஞ்சி'-அலுவலகத்தில், ஆசிரியர் இருக்கையில் பச்சையப்பன் கல்லூரியில் பேராசிரியராக இருந்த மா.கி. தசரதன் அவர்கள் அமர்ந்து அந்தக் கிழமைக்கான 'காஞ்சி' இதழின் புரூப்களைப் பார்த்துக் கொண்டிருக்கிறார். அவருக்கு நான் அறிமுகம் செய்து வைக்கப்படுகிறேன். புரூப்கள் கைமாறுகின்றன.

நாட்கள் நகரத் தொடங்கின. பிழை திருத்தும் பொறுப்போடு, அவ்வப்போது இடங்களை நிரப்புவதற்காகச் சிறுசிறு துணுக்குகள்-கட்டுரைகளையும் எழுதவேண்டிய கட்டாயம் எனக்கு ஏற்பட்டது.

இரண்டு மாதங்களுக்குப் பிறகு ஒருநாள் நள்ளிரவில், அன்றைய பிரதமராக இருந்த லால்பகதூர் சாஸ்திரிக்கு, வெள்ளை மாளிகை, அமெரிக்காவுக்கு வருமாறு விடுத்திருந்த அழைப்பு குறித்தும், நிபந்தனைகள் குறித்தும் விமர்சனக் கட்டுரையொன்று எழுதிக்கொண்டிருக்கிறேன். அன்று மாலை டெல்லியிலிருந்து சென்னை திரும்பி இருந்த அண்ணா அவர்கள், காஞ்சிபுரத்துக்கு வந்த அந்த நள்ளிரவில் அலுவலகத்துக்குள் நுழைகிறார். நான் அமர்ந்து எழுதிக் கொண்டிருக்கிறேன். 'முத்துராமன், எதைப்பற்றி எழுதுகிறாய்?' கரகரப்பான அந்தக் குரல் கேட்டு நிமிர்ந்து பார்த்துப் படப்படப்புடன் எழுந்து நிற்கிறேன். ''சாஸ்திரி அமெரிக்கா செல்லப் போவது குறித்தும், அமெரிக்க நிபந்தனை குறித்தும், செனட்டர் பௌல்சின் விளக்கம் குறித்தும் விமர்சனக் கட்டுரை எழுதுகிறேன்'' என்றேன். 'எழுதி, எனக்கு அனுப்பிவை' என்று கூறி விட்டுத் திரும்பிவிட்டார்.

சுமார் முப்பது பக்கங்கள் கொண்ட கைப்பிரதியை மறுநாள் இளங்கோவன் அவர்கள் மூலம் அண்ணா அவர்களுக்கு அனுப்பினேன். அன்றிரவே அது திரும்பி வந்தது. சுமார் எட்டுப் பக்கங்களில் குறுக்காகக் கோடுகள் இழுத்து, வேண்டாம் என்பதற்கு அடையாளமாக அடித்துவிட்டிருந்தார். மறுநாள் கட்டுரையை அச்சகத்துக்கு அனுப்பிவிட்டு, அண்ணாவைச் சந்திக்க வீட்டுக்குச் சென்றேன். பேத்தி கண்மணியுடன் கொஞ்சிக் கொண்டிருந்தார், என்னைக் கண்டதும், ''முத்துராமன், இப்போதைக்கு நாம் சீனாவைத் தொடவேண்டாம்; அதனால் தான் சீனாவைப் பற்றிக் குறிப்பிடப் பட்டிருந்த பகுதிகளை அடித்து விட்டேன்; என்ன தலைப்பு போடப் போகிறாய்?'' என்றார். நான் யோசித்துக் கொண்டிருக்கும்போதே ''இந்தியா சிந்திக்குமா?'' என்று போடு! என்கிறார். வணக்கம் செலுத்திவிட்டுத் திரும்பிவிட்டேன்.

1969-ஆம் ஆண்டு ஜனவரித் திங்கள் 4-ஆம் நாள் மாலை.

அந்த ஆண்டு 'காஞ்சி' இதழின் பொங்கல் மலருக்காகப் பேரறிஞர் அண்ணா அவர்களிடம் கட்டுரை கேட்பதற்காகச் சென்றேன்.

1968, ஆகஸ்டில் வரவேண்டிய 'காஞ்சி' இதழின் 'ஆண்டுமலர்,'

அண்ணா அவர்கள் அறுவைச் சிகிச்சைக்காக அமெரிக்கா சென்றதாலும், திரும்பிய பின்னரும் அவரைப் பலவீனம் தொடர்ந்து கொண்டே இருந்ததாலும், அண்ணா அவர்களின் எழுத்தோவியம் இடம்பெறாமல், ஆண்டு மலர் வெளிவரக் கூடாது என்ற நோக்கத்தாலும் அந்த மலர் நிறுத்தப் பட்டுவிட்டது.

எனவே, பொங்கல் மலரில் அண்ணாவின் பொன்னோவியம் கட்டாயம் இடம்பெறச் செய்ய வேண்டும் என்ற இளங்கோவன் அவர்களின் அன்புக் கட்டளையால் நான் சென்னை சென்று இருக்கிறேன். நள்ளிரவு 12 மணி அளவில்தான் அண்ணா அவர்களைப் பார்க்க முடிந்தது. மலர் பற்றி நினைவுறுத்தினேன். ஒரு அலட்சிய சிரிப்பு! 'இந்த நிலையில் என்னை எழுதச் சொல்கிறாயா?' என்று கேட்பது போன்ற ஒரு பார்வை! கட்டிலின்மீது சாய்ந்து கொண்டு நெஞ்சைத் தடவி விட்டுக் கொண்டிருந்த காட்சியைச் சில நிமிடங்கள் வரையில் மௌனமாக நின்று கவனித்துக் கொண்டிருந்தேன். 'நாளைக்குப் பார்க்கலாம்' என்று இரத்தினச் சுருக்கமான பதில் கிடைக்கிறது.

அன்று மாலை நான் அண்ணாவின் அறையில், அவரைப் பார்த்தபோது, சிட்டிபாபு எம்.பியும், செயலாளராக இருந்த சொக்கலிங்கமும் அமர்ந்து உரையாடிக் கொண்டிருந்தார்கள். அப்போது அண்ணாவின் முக பாவங்கள் மூலம் நோய் உபாதை அதிகமாக அவரை வாட்டுகிறது என்பதைப் புரிந்துகொள்ள முடிந்தாலும், பொங்கல் மலர்-அண்ணாவின் கட்டுரை இவைபற்றிய சுயநலம் காரணமாகத்தான் இரவு 12 மணி அளவில் கட்டுரை பற்றி நினைவுறுத்தினேன்.

'நாளைக்குப் பார்க்கலாம்' - பதில் கிடைத்துவிட்டது எனக்கு. என் பேராசைக்குச் சிறகு முளைத்து விண்வெளியில் வட்டமிடத் தொடங்கியது. அந்தச் சந்தர்ப்பத்தில் அண்ணா அவர்கள் கட்டுரை எழுதினால், சிகிச்சையின் பொருட்டு அவர் அமெரிக்கா சென்று வந்த அனுபவங்களை எழுத்தாக்கி விடுவார் என்ற ஒரு நம்பிக்கை எனக்கும், இளங்கோவன் அவர்களுக்கும்!

மறுநாள் பிற்பகல் 4 மணி அளவுக்கு மீண்டும் அண்ணாவைப் பார்க்கிறேன். "இன்னைக்கு இராத்திரி எழுதறேன்; மற்றதெல்லாம் முடிஞ்சு போச்சுதா?... யார் யார் எழுதி இருக்காங்க?"

மலர் பற்றிய நிலைமைகளையும், யார் யார் எது எது குறித்து எழுதி



# எங்கள் அண்ணா இமயமலையே!

— பி.வி. கிரி

தென்னக வானில்
தோன்றிய துருவம்
மண்ணக வாழ்வில்
மங்கா உருவம்

கன்னித் தமிழைக்
கண்ணாய்க் கொண்டு
தன்னை ஈந்த
தமிழர் செல்வம்

ஏட்டில் தமிழை
எழிலாய் வளர்த்து
நாட்டில் அறிவை
நல்கிய திலகம்

மேடைப் பேச்சில்
மழையாய்ப் பொழிந்த
சோடை இல்லாச்
சுந்தர மேகம்

கடமை மூச்சாய்க்
கொண்டே வாழ்ந்து
மடமை போக்கிய
மக்கள் தலைவன்

எங்கள் அண்ணா
இதய தெய்வம்
எங்கள் அண்ணா
இமய மலையே!

இருக்கிறார்கள் என்ற விவரங்களையும் விளக்கிக் கூறுகிறேன்.

'காலையிலே முடிச்சுக் கொடுத்திடறேன்' என்று கூறிவிட்டுச் சாய்வு நாற்காலியில் சாய்ந்தபடி கண்களை மூடிக்கொண்டார்கள்.

இரவு இரண்டு மணி இருக்கும். அருகில் பெஞ்ச் ஒன்றில் படுத்திருந்த நான், எழுந்து மெல்ல அண்ணாவின் அறைக்குள் பார்வையை விரட்டுகிறேன். அண்ணா எழுதிக் கொண்டிருக்கிறார்! எனக்குத் தூக்கம் வந்துவிட்டது. காலையில் நான் எழுந்த போது, 'காலை 4 மணிக்குத்தான் கட்டுரையை முடித்துவிட்டு அண்ணா படுத்தார்,' என்று அண்ணியார் இராணி அம்மையார் குறிப்பிட்டார்கள். அது 1969 ஜனவரி 6-ஆம் நாள்.

மறுநாள் 10 மணி அளவில் அண்ணா அவர்களை மறுபடியும் சந்திக்கிறேன். அவரது அறை முகப்பில் ஒரு சாய்வு நாற்காலியில் அவர் அமர்ந்திருக்கிறார். மருத்துவக் குழுவினர் வந்து அண்ணா அவர்களின் உடல் நிலையை ஆய்வு செய்கிறார்கள். விதவிதமான மாத்திரைகளையும், மருந்துக் கலவைகளையும் கொடுத்துக் கொண்டு இருந்தனர், நோய் உபாதை அதிகமாகிவிட்டிருந்ததற்கு அவை அடையாளங்கள்! 'இரவு நீங்கள் கண் விழித்திருக்கக்கூடாது' என்கிறார் ஒரு மருத்துவர்! அந்தச் சமயத்தில் அண்ணாவின் பார்வையில் நான் பட்டுவிட்டேன்.

உடனே . அவர்களே, தடுமாறிக் கொண்டே அறைக்குள் சென்று கட்டுரையை எடுத்துவந்தார்கள். "தமிழர் திருநாள்" என்று தலைப்பு எழுதிக்கோ!" என்று சொல்லியவாறு என்னிடம் தந்தார்கள்.

"தமிழர் திருநாள்" உடன் பேரறிஞர் பெருந்தகையின் தமிழ்க் கட்டுரை நின்று விட்டது! அதுவே அவரது கடைசிக் கட்டுரை!

எழுதி எழுதித் தமிழ் நிலத்தைத் தட்டி எழுப்பிய கை, "தமிழர், திருநாள்" உடன் ஓய்ந்துவிட்டது! தமிழ்க் கட்டுரை எழுதுவதற்காக அவர் பேனாவைப் பின்னர் திறக்கவே இல்லை!




## தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையம்

பொருள்:- கூட்டுறவுத்துறையில் கூட்டுறவுச் சங்கங்களின் தற்காலிக இளநிலை ஆய்வாளர்களை அப்பணியில் நிரந்தரம் செய்வதற்கான சிறப்பு தகுதித்தேர்வு.

* * *

18.7.1989 அன்றைய நாளிதழில் வெளியிடப்பட்ட தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணைய விளம்பர எண் 37-இல் கூட்டுறவுத்துறையில் பணியாற்றும் கூட்டுறவுச் சங்கங்களின் தற்காலிக இளநிலை ஆய்வாளர்களை அப்பணியில் நிரந்தரம் செய்வதற்காகச் சிறப்பு தகுதித் தேர்வுக்கு அனுமதிக்க விண்ணப்பங்கள் வரவேற்கப்பட்டன. தேர்வுக்கான மையம், தேதி மற்றும் பிற விவரங்கள் கீழ்வருமாறு:-

| | | |
|---|---|---|
| தேர்வுத்தேதி | : | 1989-ஆம் ஆண்டு<br>அக்டோபர் மாதம் 15-ஆம் நாள்<br>ஞாயிற்றுக்கிழமை. |
| தேர்வு விவரங்கள் | : | மேல்நிலைக் கல்வித் தகுதியில் ஆங்கிலத்தாள்<br>மூன்று மணி நேரம்<br>முற்பகல் 10.00 மணி முதல்<br>பிற்பகல் 1.00 மணி வரை<br><br>பொது அறிவுத்தாள் - பகுதி 1<br>(கொள்குறி வரைதல்) (Objective type)<br><br>பொது அறிவுத்தாள் - பகுதி 2<br>(விவரிப்பு வகை) (Descriptive type)<br><br>இரண்டு மணி நேரம்<br>பிற்பகல் 2 மணி முதல் 4 மணி வரை |
| தேர்வு மையம் | : | சென்னையில் மட்டும். |

விண்ணப்பதாரர்களுக்கான அனுமதிக் குறிப்பாணை (நுழைவுச்சீட்டு) தேர்வுத்தேதிக்கு 10 நாட்களுக்கு முன்னதாக அனுப்பி வைக்கப்படும். எனினும், 8.10.1989-க்குள் அனுமதிக் குறிப்பாணையைப் பெறத் தவறியவர்கள், சமீபத்தில் எடுக்கப்பட்ட அவர்களது நிழற்படத்தின் நகல் ஒன்றுடன் தேர்வுக் கட்டுப்பாடு அலுவலர், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம், சென்னை-2 என்ற முகவரிக்கு எழுதி அனுமதிக் குறிப்பாணையைப் பெற்றுக்கொள்ளலாம்.

DIPR 1806/MS/89/RS.

# சகலலோகச் சக்கரவர்த்தி



தமிழ்நாட்டின் வரலாற்றில் ஒன்பதாம் நூற்றாண்டின் பிற்பகுதியில்தான் தொண்டை மண்டலம் சோழர்களின் ஆளுகைக்கு உட்பட்டது.

பிற்காலச் சோழர்களுள் முதல்வராகிய விஜயாலயனது புதல்வன் முதலாம் ஆதித்தனால் தொண்டை மண்டலம் வென்று கொள்ளப்பட்டதால், தொண்டை மண்டலம் சயங்கொண்ட சோழ மண்டலம் எனும் புதியதோர் பெயரைப் பெற்றது. பல்லவர்கள் குறுநில மன்னர்கள் ஆயினர். சோழ மன்னனுக்குத் திறை செலுத்திவந்த பல்லவர்குலச் சிற்றரசர்களும், தலைவர்களும் சயங்கொண்ட சோழ மண்டலத்தில் வாழ்ந்து வந்தனர். அவர்களுள் பலர் சோழ மன்னர்களின் அமைச்சர்களாகவும் படைத் தலைவர்களாகவும் நிலவியதோடு சில உண்ணாடுகளையும் தனியூர்களையும் ஆட்சி புரியும் உரிமையும் பெற்றிருந்தனர்.

காவல் பணியில் ஈடுபட்டு, அதற்குரிய ஊதியமாய்ப் 'படிக்காவல்' என்ற வரியைச் சோழ அரசனால் ஒப்பளிப்பு அளிக்கப்பட்ட பகுதிகளில் வரியீட்டி வந்தார்கள். நாளடைவில் தனியுரிமை பெற்றவர்களாக வ்ளர்ந்தனர். இவர்களே சோழப் பேரரசில் பதவிகள் ஏற்றனர். நாளடைவில் குறுநில மன்னர்களாக உருவெடுத்தனர்.

சோழ மன்னர்களின் ஆட்சிக் காலத்தில் தொண்டைநாட்டுக் கோட்டங்களுள் ஒன்றான பல்குன்றம் கோட்டத்தில் சம்புவராயர் என்ற குறுநில மன்னர் நாடு காவல் புரிந்து வந்தனர். பல்குன்றக் கோட்டம் பாலாற்றுக்கும் தென் பெண்ணையாற்றுக்கும் இடையில் பவளமலையை மேல் எல்லையாகக் கொண்டிருந்தது. பவளமலை இப்போது 'சவ்வாது மலை' என்ற பெயருடன் வடஆர்க்காடுமாவட்டத்தில் உள்ளது. பல்குன்றக் கோட்டத்துச் சம்புவராயருக்குப் படைவீடு தலைநகராக விளங்கிற்று. அவரது ஆட்சி கிழக்கே திருக்கழுக்குன்றத்தையும் விழுப்புரத்துக்கு வடகிழக்கிலுள்ள திருவரசிலியையும் தன்னகத்தே கொண்டிருந்தது.

வடார்க்காட்டில் போரூரிலிருந்த வேலூருக்குச் செல்லும் பெருவழியில் சந்தைவாசல் என்னும் அழகிய ஊர் உள்ளது. அதற்கு மேற்கில் கிழக்கொழிய ஏனை மூன்று பக்கங்களிலும் உயர்ந்த மலைகளால் சூழப்பட்ட இடைநிலத்தில் படைவீடு காட்டாறு ஒன்றின் கரையில் இருக்கிறது. அந்த ஆறு ஆரணியாறு என்னும் படைவீட்டாறு என்று வழங்கப்படுகின்றது. சிறு காடு படர்ந்து பசுந்தழை போர்த்து நிற்கும் குன்றுகளின் அடியில் மணல் பரந்த ஆற்றங்கரையில் நின்று திகழும் இவ்வூர் படைவீடு என்று பெயர் தாங்கியிருப்பது மிகவும் பொருத்தமாகும். ஒரு காலத்தில் செல்வம் சிறந்த திருநகரமாய் விளங்கியதைக் காட்டும் சின்னங்கள் பல இன்றும் உள்ளன.

கி.பி. பன்னிரண்டாம் நூற்றாண்டு முதல் பதினான்காம் நூற்றாண்டின் இறுதிவரை சம்புவராயர்களின் ஆட்சி மிக்க புகழ் படைத்து விளங்கிற்று. சம்புவராய மன்னர்களுள் செங்கேணி மீண்டான் அத்திமல்லன் சம்புவராயன் என்பவனே மிகப்பழமையானவன்.

ஏறத்தாழ மூன்று நூற்றாண்டுகளுக்குமேல் சம்புவராய மன்னர்கள் கீர்த்தி மிகுந்தவர்களாக இருந்தனர்.

**மாமூலன்**

சம்புவராயர் எனும் அரச மரபினர் கி.பி. பதினான்காம், பதினைந்தாம் நூற்றாண்டில் சுய ஆட்சி பெற்று வடார்க்காடு மாவட்டத்திலுள்ள விரிஞ்சிபுரத்தைத் தலைநகரமாகக் கொண்டும் போரூருக்கு அருகிலுள்ள படைவீட்டில் கோட்டை அமைத்துக் கொண்டும், தற்போதுள்ள வட ஆர்க்காடு மாவட்டம், தென் ஆர்க்காடு மாவட்டம், செங்கல்பட்டு மாவட்டம், சித்தூர் மாவட்டம் ஆகிய மாவட்டங்களை உள்ளடக்கிய ஆட்சிப் பரப்பை ஆட்சி செய்து வந்திருக்கின்றனர். கி.பி. 12-ஆம் நூற்றாண்டிலேயே சம்புவராயர் பற்றிய செய்திகள் கல்வெட்டுகள் வாயிலாகக் கிடைக்கின்றன. அப்போது இவர்கள் அரசு அதிகாரிகளாகவோ அல்லது ஒரு சிறு பகுதியை ஆட்சி செய்த குறுநில மன்னர்களாகவோ இருந்தனர். தன்னாட்சி பெற்ற அரசாட்சி செய்திருக்கின்றார்கள் என்பது கல்வெட்டுக்கள் கூறும் செய்தியாகும்.

சம்புவராயர் குறுநில மன்னர்களாக இருந்தும் முதலில் சோழர்களுக்கும் பின்னர் பாண்டியர்களுக்கும் துணையாக இருந்து போர்க் காலங்களில் உதவி புரிந்தும் வந்துள்ளனர். பின்னர், சோழர்களின் ஆதிக்கம் தாழத்தொடங்கியபோதும், சோழர்களின் ஆட்சியை நிலைநிறுத்த போர் முகத்தில் அணி வகுத்துச் சென்றதோடு, சிறந்த தவ வலிமை கொண்ட முனிவர்களைக் கொண்டு வேள்வி செய்தும் சோழப் பேரரசை நிலைநிறுத்தியதோடு, காப்பாற்றியும் இருக்கிறார்கள் என்ற செய்திகள் கல்வெட்டுகள் மூலம் தெரிய வருகின்றன. பின்னர் சோழர் ஆட்சி நிலை குலைந்து பாண்டியர் ஆட்சி தலைதூக்கியபோது பிற குறுநில மன்னர்களோடு இவர்களும் பாண்டியர் ஆட்சிக்கு உதவி செய்ய முற்பட்டிருக்கின்றனர். அதற்குப் பிறகு தமிழகத்தின் வட பகுதியில் தங்களுக்கென ஒரு சிறு பகுதியை வகுத்துக் கொண்டு தாங்களே சுய ஆட்சி செய்ய முயன்றிருக்கின்றனர்.

# சம்புவராயர்

**சோழர் காலத்தில் சம்புவராயர்கள்:-**

சோழப் பெருமன்னன் விக்கிரம சோழனின் (கி.பி. 1116-1135) 16-ஆம் ஆட்சியாண்டு முதல்' முதலில் செங்கேணி நாலாயிரவன் அம்மையப்பன் என்னும் இராசேந்திர சோழ சம்புவராயன் குறிப்பிடப்படுகின்றான். இவர் 2-ஆம் குலோத்துங்கனின் (கி.பி. 1133 முதல் 1150 வரை) 5-ஆம் ஆட்சியாண்டுக் கல்வெட்டிலும் குறிக்கப்படுகின்றான். பிறகு இரண்டாம் இராஜராஜ சோழனின் 4-ஆம் ஆட்சி ஆண்டுக் கல்வெட்டில் செங்கேணி அம்மையப்பன் அத்திமல்லன் என்னும் இராஜேந்திர சோழ சம்புவராயன் காணப்படுகின்றான். இக்கல்வெட்டு வந்தவாசிக்கு அருகிலுள்ள மடம் என்ற ஊரிலிருந்து படியெடுக்கப்பட்டிருக்கிறது. இரண்டாம் இராஜராஜன் 18-ஆம் ஆட்சி ஆண்டு வரை இராஜேந்திர சோழ சம்புவராயன் குறிக்கப்படுகிறான்.

இரண்டாம் இராஜராஜனின் 7-ஆம் ஆட்சியாண்டில் அம்மையப்பன் பாண்டி நாடு கொண்டான் என்னும் கண்டர் சூரியன் சம்புவராயன் என்ற மன்னன் காணப்படுகின்றான். இம்மன்னன் காலத்தில், செங்கேணி அம்மையப்பன் பல்லவராயன், செங்கேணி அத்தி மன்னன் செங்கேணி அம்மையப்பன் எதிரியன் சோழ சம்புவராயன் போன்ற சம்புவராய மன்னர்களும் குறிக்கப்படுகின்றனர்.

மூன்றாம் குலோத்துங்க சோழன் காலத்தில் செங்கேணி வீர சோழன் அத்திமல்லன் என்னும் குலோத்துங்க சோழ சம்புவராயன் என்பவனும், இராஜ நாராயண சம்புவராயன் என்பவனும், செங்கேணி அம்மையப்பன் வன்னியநாயன் என்பவனும் குறிக்கப்படுகின்றனர்.

மூன்றாம் குலோத்துங்கச் சோழனுக்கு அடுத்து வந்த மூன்றாம் இராஜராஜ சோழன் காலத்திலும் சம்புவராய அழகிய சீயன் என்பவனும் குறிக்கப்படுகின்றான். இவர்களுக்குப் பிறகு சம்புவராயர் தனி ஆட்சி செய்யத் தொடங்கிய வென்று மண்கொண்ட சம்புவராயன் என்பவனும், இராஜ நாராயண சம்புவராயன் என்பவனும் ஆட்சி செய்திருக்கின்றனர். வென்று மண் கொண்ட சம்புவராயன் கி.பி. 1321 முதல் 1339 வரையிலும், இராஜ நாராயண சம்புவராயன் கி.பி. 1339 முதல் 1363 வரையிலும் ஆட்சி புரிந்தனர்.

**சம்புவராயர் வீழ்ச்சி:**

விஜய நகரப் பேரரசனின் முதலாம் புக்கனின் மகனான குமார கம்பணன் கி.பி. 14-ஆம் நூற்றாண்டில் தமிழகத்தின் மீது படையெடுத்து மதுரை வரை சென்று வெற்றி பெற்றதைக் காவிய வடிவில் அவனது பட்டத்து அரசியான கங்காதேவி, 'மதுரா விஜயம்' என்னும் தமது நூலில் குறிப்பிட்டுள்ளார். அந்நூலில் குமார கம்பணன். சம்புவராயரோடு எதிர்த்துப் போராடிய நிகழ்ச்சிகளையும் சித்திரித்துள்ளார். வட ஆர்க்காடு மாவட்டம் வந்தவாசிக்கு அருகிலுள்ள மடம் என்ற ஊரில் காணப்படும் கல்வெட்டில் குமார கம்பணன் இரண்டாம் வென்று மண்கொண்ட சம்புவராயனைத் தோற்கடித்து அவனது ஆட்சியைக் கைப்பற்றியதைத் தெரிவிக்கிறது.

> “நிர்வாக வசதிகளை முன்னிட்டு தமிழகத்தில் பெரிய மர்வட்டங்கள் பிரிக்கப்பட்டு புது மாவட்டங்கள் உருவாக்கப்பட்டு வருகின்றன. அந்த வரிசையில் தற்போது வடஆர்க்காடு மாவட்டம், திருவண்ணாமலை-சம்புவராயர் மாவட்டம் என்றும், வேலூர்-அம்பேத்கார் மாவட்டம் என்றும் இரு மாவட்டங்களாக மலர உள்ளது.
>
> சம்புவராயர்கள் குறித்தும், தமிழக வரலாற்றில் அவர்கள் பெற்றிருந்த சிறப்பு குறித்தும் கட்டுரைகள் விளக்குகின்றன.”


**சம்பவராய மன்னர்களும் அவர்களது பட்டப்பெயர்களும்:**

சம்புவராயர்கள் தமிழகத்தில் வட பகுதியை ஆட்சி செய்தபோது முகலாயப் பேரரசின் பிரிதிநிதியான மாலிக்காபூர் தமிழகத்தின் மீது படையெடுத்து வந்தார். அவரை ஏகாம்பர நாதர் சம்புவராயர் தோற்கடித்துச் சகல லோகச் சக்ரவர்த்தி என்ற பட்டத்தைத் தரித்துக் கொண்டார். இவருக்குப் 'பொன்னின் பெருமாள்' என்ற பட்டப் பெயரும் வழங்கப்பட்டுள்ளது. அவனது இராஜ்யத்தின் பல இடங்களில் முகமதிய படையெடுப்பில் தொல்லைக்கு ஆளான மக்களுக்குப் பாதுகாப்பு அளித்துப் புகலிடம் ஏற்படுத்தி இருக்கிறான். அவனது அருமை மைந்தன் இராஜநாராயண சம்புவராயன் என்பவன் ஆவான். அவன் 24 ஆண்டுகள் ஆட்சி செய்திருக்கிறான். அவனது கல்வெட்டுக்கள் வட ஆர்க்காடு, தென் ஆர்க்காடு செங்கல்பட்டு மாவட்டங்களில் சுமார் 200-க்கு மேற்பட்டு காணப்படுகின்றன.

இராஜ நாராயணனுக்கு 'இராஜ கம்பீரன்' என்னும் பட்டப் பெயரும் உண்டு. அதன் காரணமாக அவனது ஆட்சிப் பகுதிக்கு இராஜ கம்பீர இராஜ்யம் என்ற பெயர் வழங்கப் படலாயிற்று. இவருக்கு மேலும் 'மல்லிநாதன்', 'உதார குணராமன்', 'பொன்னின் தம்பிரான்', 'சர்வஞ்ஞன்' போன்ற பெயர்கள் இருந்தன என்பது கல்வெட்டின் மூலம் தெரியவருகிறது. இவரது காலத்தில் பல ஊர்களுக்கும் நகரங்களுக்கும் அவரது பெயர் அமைக்கப்பட்டு இருந்ததை 'இராஜ நாராயணன்பேட்டை' என்று வழங்கப்பட்டிருப்பதாகவும், சதரஸ் என்ற ஊருக்கு 'இராஜ நாராயணன்' 'பட்டணம்' என்ற பெயர் கல்வெட்டில் காணப்படுவதாலும் அறியலாம். இவன் தனது தந்தையான வென்று மண்கொண்ட சம்புவராயனின் சாம்பலைத் தம் அலுவலர் மூலம் காசிக்குக் கொண்டு சென்று கங்கையில் கரைத்தமை தெரியவருகிறது.

**கல்வெட்டுக்கள் காட்டிடும் காட்சிகள்:**

சம்புவராயர் ஆட்சிக் காலத்தில் பல நல்ல பணிகள் தமிழகத்தில் நிகழ்ந்து இருந்ததையும் கல்வெட்டின் மூலம் அறிய முடிகிறது. இராஜ நாராயணன் 5-ஆம் ஆட்சி ஆண்டில் தற்போது சென்னையில் ஒரு பகுதியாக இருக்கும் திருவொற்றியூர் சிவன் ஆலயத்தில் இஷபத்னியார்களுக்கும் தேவரடியார்களுக்கும் ஏற்பட்ட வழக்கு



தீர்த்து வைக்கப்பட்டது என்பது திருவொற்றியூர் கோயிலிலுள்ள கல்வெட்டு மூலம் அறிய முடிகிறது. மேலும் செங்கல்பட்டு மாவட்டம் பொன்னேரி வட்டம் திருப்புலிவனம் என்ற இடத்தில் காணப்படும் கல்வெட்டில் நீர்ப் பங்கீடு பற்றி சில ஊர்களுக்கு இடையே ஏற்பட்ட பிணக்கு தீர்க்கப்பட்டு ஓர் உடன்பாடு ஏற்பட்டது குறிப்பிடப்பட்டிருக்கிறது. இவன் காலத்தில் பல கோயில்களில் திருப்பணிகள் நடைபெற்றன.

சம்புவராயர்கள் சமயப்பொறை உடையவர்களாகத் திகழ்ந்திருக்கிறார்கள். வட ஆர்க்காடு மாவட்டம் போளூர் வட்டம் திருமலையில் சமணத் தீர்த்தங்காரரின் உருவம் ஒன்று இராஜ நாராயணனின் 12 ஆம் ஆட்சியாண்டில் செய்து அமைக்கப்பட்டுள்ளது.

வீரசம்பன் குளிகை என்ற காசு இவன் காலத்திலும், இவனது தந்தை வென்று மண்கொண்ட சம்புவராயர் காலத்திலும் வழங்கி வந்திருக்கிறது. இக்காசு 'வாசிபடா வீரசம்பன் குளிகை' என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. மூன்றாம் குலோத்துங்கன் காலத்தில் செங்கேணி அம்மையப்பன் வள்ளிநாராயணன் என்பவனால், கோயிலுக்கு நிலக்கொடை அளிக்கப்பட்டது தெரிவிக்கிறது. மேலும், தென் ஆர்க்காடு மாவட்டத்திலுள்ள திருவக்கரை பெருமாள் கோயிலில் மூன்றாம் குலோத்துங்கன் காலத்தில் கண்டர் சூரியன் திருமண்டபம், திருக்கோபுரம் ஆகியவைகளைப் பாண்டிய நாடு கொண்டான் சம்புவராய மன்னன் என்பவனால் எடுப்பிக்கப்பட்டிருப்பது தெரியவருகிறது.

சம்புவராய மன்னர்களைப் பற்றி ஏகாம்பரநாதர் உலாவில் சில செய்திகள் கிடைக்கின்றன. ஏகாம்பர நாதருக்கு அப்போது காஞ்சிபுரத்தை ஆண்டு வந்த மல்லிநாத சம்புவராயன் என்ற மன்னன் மணி மகுடமும், தேர், உலா மண்டபம் ஆகியவையும் செய்து அமைத்ததை ஏகாம்பர நாதர் உலா குறிக்கிறது.

**ராஜகம்பீரன் மலை!**

மேலும் சம்புவராய மன்னர்கள் கட்டி வாழ்ந்த கோட்டையில் அடிப் பகுதிகளும், கோட்டைச் சுவர்ப் பகுதிகளும் வடார்க்காடு மாவட்டத்தில் உள்ள படைவீட்டின் மேற்குப் பகுதியில் 'கோட்டை மேடு' என்ற பகுதியில் காணப்படுகின்றன. இக்கோட்டை மேடு சுமார் 20 ஏக்கர் நிலப்பரப்பில் இடம் பெற்றுள்ளது. இக்கோட்டையில் சுவர்ப் பகுதி நன்கு தெரிகிறது. இச்சுவர் செங்கல் கட்டடத்தை உள்ளடக்கி கருங்கல் கொண்டு இரு பக்கங்களிலும் பாவப் பெற்றதாகத் தெரிகிறது. தற்போது இக்கோட்டையின் மேட்டுப் பகுதி அனைத்தும் தனிப்பட்டோர்களின் வேளாண்மைப் பகுதியாக மாற்றப்பட்டு வேளாண்மை செய்யப்பட்டு வருகிறது. வேளாண்மை செய்வதற்காக இக்கோட்டையில் சுவரை அழித்து வருகின்றனர். நாளடைவில் இக்கோட்டை அடிச்சுவடு தெரியாமலேயே போகக்கூடுமென்று தெரிகிறது. கோட்டை மேட்டில் உள்ள பகுதிகளைச் சீர் செய்கின்றபோது பெருமளவில் செங்கற்கள் எடுக்கப்படுகின்றன. மேலும் உரல் கற்கள் மற்றும் சந்தனம் அரைக்கும் கற்கள், போன்ற பல பொருள்கள் நிலத்தைச் சீர்செய்கையில் கண்டெடுக்கப்பட்டு உள்ளன. இக்கோட்டைக்கு சுமார் இரண்டு கல் தொலைவில் மேற்குப் பகுதியில் ஒரு மலை உள்ளது. இது 'இராஜ கம்பீரன் மலை' என்று இன்றும் அழைக்கப்படுகிறது.

இரட்டைப்புலவர்களால் பாடப் பெற்ற கலம்பகம் கொண்ட ஏகாம்பரச் சம்புவராயன் காஞ்சியைத் தலைநகராகக் கொண்டு, அதனைச் சூழ்ந்த பகுதிகளை அரசாண்டவன்.

காஞ்சியில் எழுந்தருளியுள்ள மாமூலனார் (ஏகாம்பர நாதர்) திருக்கோயிலுக்கு அரிய பெரிய திருப்பணிகள் ஆற்றிய இம்மன்னன் சம்புவராயர்களின் வழித்தோன்றல்களில் ஒருவன்.



# ராஜகம்பீரராஜ்யம்

நடன. காசிநாதன், தமிழ்நாடு அரசு தொல்பொருள் ஆய்வுத்துறை இயக்குநர்.

**கி.பி.** 13-ஆம் நூற்றாண்டின் இறுதியில் பாண்டியர் செல்வாக்கு முற்றிலும் குறைந்தபோது தமிழகத்தில் பல சிற்றரசர்கள் சிறு சிறு பகுதிகளைத் தம் கீழ்க் கொண்டு தன்னாட்சி செய்ய முற்பட்டனர். இவர்களுள் ஒரு பிரிவினர் சம்புவராயர் எனப்படுவர். இவர்கள் தொண்டை நாட்டின் வட பகுதியில் தங்களுடைய தன்னாட்சியை நிறுவி கி.பி. 14-ஆம் நூற்றாண்டில் செல்வாக்கோடு ஆட்சி செய்துள்ளனர். இவர்களுடைய தலைநகரமாகப் படைவீடு என்ற பகுதியும் அதையுள்ளடக்கிய ராஜ்யமும் விளங்கியது. இந்த ராஜ்யம் 'ராஜ கம்பீர ராஜ்யம்' என்று வழங்கப்பட்டுள்ளது. வேலூரிலிருந்து 25 கி.மீ. தொலைவில் தெற்கிலும், ஆரணியிலிருந்து 8 கி.மீ. தொலைவில் மேற்கிலும், ஆர்க்காட்டிலிருந்து 30 கி.மீ. தொலைவில் தென் மேற்கிலுமாக அமைந்துள்ள படைவீடு இன்றும் தனது பழம் பெருமையைப் பறை சாற்றிக் கொண்டிருக்கிறது.

தற்போது ஒரு சிறு ஊராட்சி அளவுக்கு இவ்வூர் சிறுத்துக் காணப் பட்டாலும், இவ்வூரில் நடு நாயகமாக விளங்கும் ரேணுகாம்பாள் அம்மன் ஆலயமும், இவ்வூரின் மேற்கே அமைந்துள்ள ராம ஆலயமும், அவ்வாலயத்திற்கு மேற்கே அமைந்துள்ள மேடும், அதற்கும் மேற்கே இரண்டு கி.மீ. தொலைவிலுள்ள ராஜ கம்பீரன் மலையும் படைவீட்டின் பழம் பெருமையைப் படம்பிடித்துக் காட்டுவதாக அமைந்துள்ளன.

ரேணுகாம்பாள் அம்மன் ஆலயம் புதிதாகக் கட்டப்பட்டிருக்கிறது. இதற்குப் பக்கத்திலேயே பழைய ஆலயம் ஒன்று தெற்குத் திசை நோக்கிக் காணப்படுகிறது. இவ்வாலயம் அம்மையப்பேஸ்வரர் கோயில் என்று கல்வெட்டில் குறிக்கப்படுகிறது. இக்கோயிலிலிருந்து மூன்று கல்வெட்டுகள் படி எடுக்கப்பட்டிருக்கின்றன. ஒரு கல்வெட்டு சக ஆண்டு 1180 அதாவது கிபி. 1258-இல் எழுதப்பட்டிருக்கிறது. அம்மையப்பேஸ்வரருக்கு ராஜ கம்பீர சம்புவராயர் தேவதானமாக நிலக் கொடை வழங்கியது எழுதப்பட்டிருக்கிறது. மற்றொரு கல்வெட்டில் விஜய நகர மன்னர் வீர தேவராய மகாராயர் காலத்தில் சக ஆண்டு 1356 அதாவது கி.பி. 1434-இல் அம்மையப்ப நாயனாருக்கு மாதவயாவனார் தர்ம சாதனம் எழுதிக் கொடுத்ததைக் குறிப்பிடுகிறது. மூன்றாம் கல்வெட்டு (இதே மன்னன் காலத்தியது) கி.பி. 1435-இல் எழுதப் பட்டிருக்கிறது. இதுவும் அம்மையப்ப நாயனாருக்கு, கலவைப் பற்று உலகளந்த வேல் சூரிய தேவன் தர்ம சாதனம் செய்து தந்ததைக் குறிப்பிடுவதாகக் காணப்படுகிறது.

படைவீடில் சோமநாதர் ஆலயம் என்னும் ஓர் ஆலயம் உள்ளது. அவ்வாலயத்தில் இருந்தும் ஒரு கல்வெட்டு படி எடுக்கப்பட்டிருக்கிறது. இக்கல்வெட்டு சக ஆண்டு 1371-இல் அதாவது கி.பி. 1449-இல் பொறிக்கப்பட்டுள்ளது. இது தேவமகாராயர் காலத்தியது. இக்கல்வெட்டில் 'தொண்டை மண்டலத்துப் படை வீடு ராஜ்யத்து நடுவர் வலங்கையும், இடங்கையும் மகாஜனமும் ராஜ கம்பீரம் மலைக்கடைந்த முருக மங்கலப் பற்று மருதாசா படைவீடு உடையார் சோம நாதஸ்வர நயினார் கோயிலில் நிறைவற கூடி' இருந்ததைக் குறிப்பிடுவதாக உள்ளது. இக்கல்வெட்டின் பிற்பகுதி சிதைந்து காணப்படுகிறது.

இவ்வூரின் மேற்கே உள்ள இராமர் ஆலயம் கிழக்குப் பக்கம் ஒரு கோபுரத்தைக் கொண்டு விளங்குகிறது. இவ்வாலயத்தின் கருவறையில் இராமர் யோக நிலையில் பத்மாசனத்தில் அமர்ந்து 'சின்' முத்திரையுடன் காணப்படுகிறார். இடப்பக்கம் சீதை, அமர்ந்த நிலையிலும், வலப்பக்கம் இலக்குமணன் நின்ற நிலையிலும் காணப் படுகின்றனர். எதிர்ப்பக்கம் ஆஞ்சநேயர், சுவடியை இரு கைகளில் ஏந்தியவராய் அமர்ந்த நிலையில் காணப் படுகிறார். உண்ணாழியின் முன்பாக உள்ள அர்த்த மண்டபத்தின் வடக்குப் பக்கத்தில் தாயார் சன்னதி உள்ளது. அச்சன்னதிக்கு முன்பாக தரைக்குக் கீழே ஒரு அறை காணப்படுகிறது. அது தற்பொழுது கற்கள் இட்டு மூடப் பட்டுள்ளது. இவ்வறையில் இருந்து பதினொரு செப்புத் திருமேனிகள் கண்டெடுக்கப்பட்டதாகக் கோயில் நிர்வாகத்தினர் கூறுகின்றனர். இந்தச் செப்புத் திருமேனிகள் தற்பொழுது ரேணுகாபரமேஸ்வரி ஆலயத்தில் பாதுகாப்பில் வைக்கப்பட்டுள்ளன. இவை திருமால், பூதேவி, ஸ்ரீதேவி, மற்றுமொரு திருமால், காளியமர்த்தனர், ஹனுமான், இலட்சுமி நரசிம்மர் ஆகிய செப்புத் திருமேனிகள் ஆகும். முதல் திருமால், பூதேவி, ஹனுமான், காளியமர்த்தனர், இலட்சுமி நரசிம்மர் ஆகியவை கி.பி. 13-ஆம் நூற்றாண்டையும் பிற, கி.பி. 15-16-ஆம் நூற்றாண்டையும் சேர்ந்தவை.

இவ்வாலயத்திற்கு மேற்கே ஒரு கி.மீ தொலைவில் உள்ள கோட்டை மேட்டுப் பகுதியில் கோட்டை மேட்டு தலையாரி கோயில் என்ற ஒரு கோயிலும், வேணுகோபால் கோயிலும் உள்ளன. கோட்டைத் தலையாரி கோயில் என்று அழைக்கப்படும் இடத்தில் ஐயனார் என்று ஊகிக்கப்படும் சிலை சுமார் 5 அடி உயரத்தில்- நின்ற நிலையில் வலக்கையில் நீண்ட கதையையும், தலையில் ஜடா பாரத்தையும் கொண்டதாகக் காணப் படுகிறது. இச்சிற்பத்திற்கு அருகில் சுமார் இரண்டு அடி உயரத்தில் பெருமாள் சிற்பம் நின்ற நிலையிலும் காணப்படுகிறது. இச்சிற்பத்தில் மூன்று கரங்கள் உடைந்துள்ளன. இடது கீழ்க்கரம் ஊருஹஸ்தமாக உள்ளது. வேணுகோபால் ஆலயம் என்று அழைக்கப்படும் இடத்தில் வேணு கோபால் கால்களைச் சதுர வடிவில் வைத்து, மேல் இரு கரங்களும் புல்லாங்குழல் பிடித்து ஊதுகின்ற நிலையிலும் வலது கீழ்க்கரத்தில் சக்கரத்தையும் இடது கீழ்க்கரத்தில் சங்கையும் தாங்கியவராய்க் காட்சியளிக்கிறார். அருகில் காணப்படும் ருக்மணி இரு கரங்களுடன், இடக்கரத்தில் தாமரை மலர் ஏந்திய வண்ணம் காணப்படுகிறார். இவர்களுக்குப் பக்கத்தில்

# சம்புவராயர் எனும் பட்டம் ...

**பண்டைத் தமிழ் மன்னர்கள் தம்மிடம் பணியாற்றிய அமைச்சர்கள், உயர் அலுவலர்களுள் தக்கோருக்குப் பட்டம் அளித்துச் சிறப்பித்தலை வழக்கமாகக் கொண்டிருந்தனர். இந்த வழக்கத்தைச் சோழவேந்தர்கள் பின்பற்றினர். சோழ மன்னர்கள், தமது அமைச்சர்கள், உயர் அலுவலர்கள் தம் ஆட்சிக்கு உட்பட்டுத் துணை நிற்கும் குறுநில மன்னர்கள் ஆகியோரில் ஆற்றல்மிக்கவர்களாக - அரிய பணி செய்தவர்களாக இருந்தால் அவர்களுக்குச் சிறப்புப் பட்டங்கள் வழங்கினார்கள்.**

**அந்தப் பட்டங்களில் சிலதாம், மாராயன், பல்லவராயன், காளங்கராயன், தொண்டைமான், காடவராயன், சம்புவராயன் முதலியன. இப்பட்டங்களோடு அரசனின் இயற்பெயர், சிறப்புப் பெயர் அல்லது அரசனின் முன்னோரின் பெயர் ஆகியவற்றில் ஒன்றைச் சேர்த்து வழங்குவது வழக்கமாக இருந்தது. இந்த முறையில்தான் சம்புவராயர் பெயர்கள் வழக்கில் வந்தன.**

**சம்புவராயர் என்ற சொல்லை சம்பு + அரையர் என்று பிரிக்கலாம். சம்பு என்பது சம்பு குலத்தையோ, சிவபெருமானையோ குறிப்பிடுவதாக அமையும். அரையர் என்பது தலைவர் என்ற பொருளைத் தருவதாகும்.**

இரண்டு அடி உயரத்தில் உள்ள சிறு சிற்பம் சதாசிவர் என்று கருதப்படுகிறது. நான்கு தலைகள் காணப்படுகின்றன. வலது மேற்கரத்தில் மான் ஏந்தியுள்ளார்.

கோட்டைத் தலையாரி கோயில் சிற்பத்திற்கு வடக்குப் பக்கத்தில் செங்கல் குவியல் காணப்படுகிறது. அக்குவியல் அதற்குப் பக்கத்திலிருந்த ஒரு கட்டடத்தை அழித்துக் குவிக்கப்பட்டதாக அந்நிலத்தின் சொந்தக்காரரிடம் விசாரித்ததில் தெரியவந்தது. இது போன்று பல கட்டடங்கள் இன்னமும் மண்ணுக்குள் புதைந்திருக்கும் போலத் தெரிகிறது. இவ்விடத்தில் அகழாய்வு செய்து பார்த்தால் மேலும் பல கட்டடங்கள் கண்டுபிடிக்கப்படலாம். ஆனால், இப்பகுதி அனைத்தும் தற்போது தனிப்பட்டோரின் பட்டாவாக ஆக்கப்பெற்று வேளாண்மை செய்யப்படுகிறது.

இத்தகைய சிறப்பான ஒரு கோட்டையை அமைத்து இங்கு ஆட்சி செய்த மன்னர்கள் வென்று மண்கொண்ட சம்புவராயர், அவனது அருமை மைந்தன் இராஜநாராயண சம்புவராயர் ஆகியோரும் அவர்களது முன்னோர்களும் ஆவார்கள். வென்று மண் கொண்ட சம்புவராயர் கி.பி. 1322-இல் இருந்து 1339 வரை ஆட்சி செய்து இருக்கிறார். இவருக்கு அடுத்து இவரது மைந்தன் இராஜநாராயண சம்புவராயர் சுமார் இருபத்தைந்து ஆண்டுக் காலம் ஆட்சி செய்துள்ளார். இவனது ஆட்சிக் காலம் 1337-லிருந்து தொடங்கி கி.பி. 1362-இல் முடிவுற்றதாகும். இவனுடைய ஆட்சிப் பகுதி தற்காலத்திய வடஆர்க்காடு, தென் ஆர்க்காடு, செங்கல்பட்டு ஆகிய பகுதிகளை உள்ளடக்கியதாகத் தெரிகிறது. இவன் காலத்திய



**திண்டுக்கல் பஸ் நிலையம் அருகில் 'அன்னை நியூஸ் மார்ட்' என்ற பெயரில் நூல்கள் விற்பனை செய்து வருகிறார் திரு. வி. செல்வராசன் 'தமிழரசு' இதழ் ஆரம்பித்த நாள்முதல் இவருடைய தந்தை திண்டுக்கல் நகரில் மட்டும் 1,800 பிரதிகள் விற்பனை செய்துள்ளார். தற்சமயம் இவர் திண்டுக்கல்லில் 500 பிரதிகள் விற்பனை செய்து வருகின்றார். 'தமிழரசு' பிரதிகளை 1.1.90-ஆம் தேதிக்குள் 5 ஆயிரம் பிரதிகள் விற்பனை செய்யப் பெரும் முயற்சி எடுத்து வருகின்றார்.**

கல்வெட்டுகள் மேற்காணும் எல்லா பகுதிகளிலும் பரவலாகக் காணப்படுகின்றன. இம்மன்னன் காலத்தில் பல அறப்பணிகளும், சமுதாயப் பணிகளும் நடைபெற்று இருக்கின்றன என்பது கல்வெட்டுகள் மூலம் புலனாகிறது.

இவனது மகன் இரண்டாம் வென்று மண்கொண்ட சம்புவராயர் கிபி. 14-ஆம் நூற்றாண்டின் இறுதிப் பகுதியில் விஜய நகர வேந்தன் குமார கம்பணனால் தோற்கடிக்கப்பட்டு, இவர் தளது மலையான ராஜ கம்பீர மலையும், கோட்டையும் அரண்மனையும் கைப்பற்றப்பட்டன. இச்செய்திகள் அனைத்தும் வட ஆர்க் காடு மாவட்டம் வந்தவாசி வட்டம், மடம் என்னும் ஊரில் உள்ள தடாக புரீசுவரர் ஆலயக் கோபுரத்தில் • எழுதப்பட்டிருக்கும் இரண்டு கல்வெட்டுகளில் கூறப்படுகின்றன. முதல் கல்வெட்டில் வீர கம்பனமுடைய படைத்தளபதி கண்டர்கள், மாராய நாயக்கர், சம்புவராயர் அரசனுடைய பல அரண் களை அழித்து சமீப அரசனையும் கைக்கொண்டு மற்றுமுள்ள குறும்பர்களையும் வெற்றி பெற்றதாகக் கூறப்படுகிறது. இரண்டாம் கல்வெட்டு, "ஸ்ரீவீர மிக்க உடையார் குமாரர் ஸ்ரீ மதுகம்பன உடையார் மகா பிரதானம் சோமயதலையாக்கர் குமாரர் ஸ்ரீமதுகண்டர் கூறி மாராய நாயக்கர் வென்று மண் கொண்ட சம்புவராயரையும் ஜெயித்துக் கைப்பிடியாகப் பிடித்து ராஜ கம்பீரன் மலையும் கொண்டதுக்கு" பரிசாக, அண்டப்பள்ளி என்ற ஊரை அளித்ததைத் தெரிவிக்கிறது. இவ்விரு கல்வெட்டுகளும் கி.பி. 1363-இல் பொறிக்கப்பட்டுள்ளன. அதுமட்டுமல்லாமல், குமாரகம்பனனின் பட்டத்தரசி கங்காதேவியால் எழுதப்பெற்ற 'மதுரை விஜயம்' என்ற நூல் குமாரகம்பனன் சம்புவராய மக்களைத் தோற்கடித்த செய்தியை விளக்கிக் கூறுகிறது. மேலும், திக்கனசோமயாஜியால் எழுதப்பெற்ற 'நிர்வசனோத்ர ராமாயணம்' என்ற தெலுங்குக் காவியமும் சோழனான இரண்டாம் மன்மசத்தியின் தந்தை சம்புவராயர் போன்ற மண்டலீகர்களை வென்ற வீரச் செயலைப் புகழ்ந்து பாடுகிறது. ஆதலால் மேற்குறிப்பிட்டுள்ள சம்புவராயர், விஜய நகரப் பெருமன்னன் குமார கம்பனனால் தோற்கடிக்கப்பெற்று, தம்முடைய அரசை இழந்தான் என்பது திட்டவட்டமாகத் தெரிய வருகிறது. அவ்வாறு சம்புவராயனைத் தோற்கடித்த குமாரகம்பனன் தமிழகத்தின் தென்பகுதிக்குச் சென்று மதுரையில் ஆட்சி செய்து வந்த சுல்தான் மன்னனை வென்று தமிழ்நாட்டை மீண்டதாக மதுரா விஜயம் என்னும் நூல் விளக்குகிறது.

ஆதலால், சுமார் 40 ஆண்டுக் காலம் படைவீடு பகுதி 'ராஜகம்பீர ராஜ்யம்' என்று அழைக்கப்பெற்று ஒரு சிறந்த ஆட்சி மையமாக விளங்கி வந்தது. [illegible]தை நாம் இலக்கியங்கள் வாயிலாகவும், கல்வெட்டுகள் வாயிலாகவும் மற்றும் படைவீட்டுக் கோட்டைமேட்டில் காணப்படும் வரலாற்றுத் தடயங்கள் மூலமாகவும் அறிய முடிகிறது. அந்தக் கம்பீரத் தன்மை இழந்து தற்போது வெறும் மண்மேடாகக் காட்சி அளிப்பது வரலாற்றாய்வாளர்களின் நெஞ்சை நெருடுவதாக உள்ளது.





**தியாகச்சுடர் சிதம்பரனாரின் பிறந்த நாளை ஒட்டி, சென்னை துறைமுகம் அருகேயுள்ள அன்னாரின் சிலைக்கு மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் திரு. கண்ணப்பன் அவர்கள் மாலை அணிவித்தார். துறைமுகப் பொறுப்புக் கழகத் தலைவர் திரு. ஏ. பால்ராஜ், தமிழக அரசுச் செய்தி-மக்கள் தொடர்புத் துறை இயக்குநர் திரு. கி. இராஜமாணிக்கம் ஆகியோர் உடன் உள்ளனர்.(5.9.1989)**

## சம்புவராயர் வரலாற்றுச் செய்திகள்




**தமிழ்நாடு தொல்பொருள் ஆய்வுத்துறை இயக்குநர் - திரு நடனம் காசிநாதன் சம்புவராயர்கள் பற்றி டாக்டர் பட்டத்திற்கு ஆராய்ச்சி செய்து கொண்டிருக்கிறார்.**

**முன்னாள் சட்டப்பேரவைத் தலைவர் புலவர் கோவிந்தன் அவர்கள் சம்புவராயர் பற்றிய செய்திகளைத் தொகுத்துள்ளார்கள்.**



**★ சேவை என்பது மற்றவர்கள் நன்மை அடைவதைப் பார்த்து, மகிழ்ச்சியும், திருப்தியும் அடைவதற்காகவே செய்யப்படும் காரியம்.**

**★ நல்ல குடும்பம் என்பது, வரவுக்கு மிஞ்சி செலவு செய்யாமல் இருப்பதாகும். தமது வாழ்க்கைச் செலவை வரவுக்கு உட்பட்டே அமைத்துக் கொள்ள வேண்டும். இப்படிப்பட்ட குடும்பம்தான் கண்ணியமான குடும்பம்.**

**★ யார் எந்தக் கருத்தைச் சொன்னாலும், அதனை அப்படியே ஏற்றுக் கொள்வது என்றால், மனிதன் வளர்ச்சி அடைய மாட்டான்.**

**—தந்தை பெரியார்.**

# வெண்பாப் போட்டி

## 3. அண்ணாவே சொன்னார் அறிந்து

'அண்ணாவே சொன்னார் அறிந்து' என்னும் ஈற்றடிக்கு வந்திருந்த ஏராளமான வெண்பாக்களில் பரிசுபெற்ற வெண்பாவும், வெளியிடுதற்குத் தகுதிபடைத்த வெண்பாக்களும் இந்த இதழில் இடம் பெறுகின்றன.

"தம்பி இருந்த தவச்சிறைக் கூடம்யான்
நம்பி வணங்கிவரும் நற்றலமாம்-இம்மண்ணில்
முன்வரைத்தேன் அத்தியாயம்! முற்றாய்
அவன் வரைவான்"
அண்ணாவே சொன்னார் அறிந்து!

-பல்லவன், திருக்கழுக்குன்றம்.

"மாற்றாரைப் போற்றி மதித்தொழுகல், வீகின்ற
வேற்றார் பழிச்சொல்லை வென்றெழுதல்-போற்றுமுயர்
வண்ணப் பொதுவாழ்வு வாய்ந்தார் கடமை"யென்(று)
அண்ணாவே சொன்னார் அறிந்து.

-புலவர் குறளன்பன், திருச்சி.

"சாதிச் சனியனைச் சங்கமெனும் தொட்டிலிட்டு
நாதமிசைத் திங்கே நனிவளர்ப்பர்-தீதன்றோ?
மண்ணில் குலமொன்றே மாத்தமிழர் நாமென்றே!"
அண்ணாவே சொன்னார் அறிந்து.

-மைதிலி ராகவன், திருக்கழுக்குன்றம்

அன்னை மொழிப்பற்றும்; ஆய கலைப்பற்றும்;
தென்னர் இனப்பற்றும்; தேவையாம்- என்றந்த
என்ன மெழுந்து எழுச்சியுரம் நாம்பெற
அண்ணாவே சொன்னார் அறிந்து.

-து. கோமதி, சேலம்

"என்னிலாக் காக்கைகள் இந்நாட்டில் வாழ்ந்தாலும்
வண்ணமயில் ஒன்றைநாம் வாழ்த்துதல்போல்-
வண்டமிழை
எண்ணுவீர் நாட்டோரே!" என்றந்தான் மேலவையில்
அண்ணாவே சொன்னார் அறிந்து!.

-கவிஞர் ஆரோக்கியசாமி, மட்டப்பாறை.

வாழ்ந்த வரலாற்றை வையத்தில் தானிழந்தே
தாழ்ந்த நிலையுற்ற தம்வாழ்வை-ஆழ்ந்தறிந்தே
எண்ணாத மக்கள் எழுச்சி யுறும்வழியை
அண்ணாவே சொன்னார் அறிந்து.

-கவியரசர் இளங்கம்பன், பழனி.

கம்பன் கருப்பொருளைக் கச்சிதமாய்த்
தொட்டெடுத்தால்
வம்பு வருமென்றே வாய்திறவார்- கும்பிட்டார்!
ஒன்பது டோசாக ஒண்பொருளைப் பாரென
அண்ணாவே சொன்னார் அறிந்து.

-ம.ஆ. துரைசாமி, சேலம்-7.

மத்தியில் கூட்டாட்சி மாநிலத்தில் தன்னாட்சி
உத்தியை அஞ்சாமல் ஓதியவர் - முத்தமிழே
மண்ணுலகில் மூத்த மொழியெனும் தத்துவத்தை
அண்ணாவே சொன்னார் அறிந்து.

-கவிஞர் செல்லப்பாண்டியன், போடிநாயக்கனூர்.

"பாரதி மாக்கவியும் பாவேந்தாம் தீக்கவியும்
பாரதிரப் பூத்திட்ட பாப்பூக்கள்- நேரெதிரே
நின்றிங்கு நம்நாட்டில் நீள்புரட்சி செய்யு" மென
அண்ணாவே சொன்னார் அறிந்து."

-வே. அருணாதேவி, வடமாதிமங்கலம்.

"கத்தியைத் தீட்டாதே! கற்பவை கற்றறிந்து
புத்தியைத் தீட்டு! புகழ்தேடு- நித்தமும்,
என்னும் வினைமுடிப்பாய்" என்றன்றே, பேரறிஞர்
அண்ணாவே சொன்னார் அறிந்து.

-ப.அ. இகமாயில், மேலப்பாளையம்.

"மூடத் தனங்கள் முழுதும் தொலைந்திட்டால்
நாடிவரும் நல்லாற்றல் நாட்டிற்குள்- தேடிவரும்
நன்மைகள்; தேர்ந்திடுவீர்; நற்காலம் வாய்க்கு"மென
அண்ணாவே சொன்னார் அறிந்து.

-கோ. இராமலிங்கம், சத்தியவாடி

"கடைவிழி காட்டுகின்ற காரிகையும், கானில்
இடைவழி நிற்கின்ற நண்பனும்- கேடொன்றே
எண்ணுவோனும் நஞ்சுநிறை நாக"மென நம்மறிஞர்
அண்ணாவே சொன்னார் அறிந்து.

-ஏ.ஆர். சுப்பிரமணியன், அனுப்பபட்டி.

"குற்றாலம் சென்று குழாயடியில் போய்க்குளிக்கும்
சிற்றறிவை வேண்டற்க செந்தமிழா- குற்றமிலாப்
பண்டைத் தமிழர்போல் பண்பில் சிறந்தி" டென
அண்ணாவே சொன்னார் அறிந்து.

-புலவர்.க. முத்துக்கருப்பன், சங்கரன்கோவில்.

"கட்டி முடித்த கலைக்கோ புரம்தேரு
கட்டுதற்குக் கொட்டியகல் நா"னென்றே- தேட்டமுடன்
சென்னை நகரினிலே செய்த உரைநடுவில்
அண்ணாவே சொன்னார் அறிந்து.

-ஞா. முத்துகிருஷ்ணன் சேர்வை, மெய்த்தலைவன்பட்டி.

"கூழைத் தினம்குடித்துக் கும்பி கழுவுகின்ற
ஏழை உயரவகை எண்ணிடுக- ஏழையர்
எண்ணக் களிப்பில் இறைவனையே கண்டிடலாம்"
அண்ணாவே சொன்னார் அறிந்து.

—கு. பிச்சை முத்து, எரசினம் பாளையம்.

(மீதி அடுத்த இதழில் வெளிவரும்)

**பரிசு பெற்ற வெண்பா எழுதியவர்**

கவிஞர் பல்லவன்,
29, திருவள்ளுவர் நகர்,
திருக்கழுக்குன்றம் - 603 109
செங்கை - அண்ணா மாவட்டம்

ஆசிரியரும் வெளியிடுபவரும் : தமிழ்நாடு அரசு செய்தி மக்கள் தொடர்பு இயக்குநர், சென்னை
அரசினர் தோட்டம் தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.
முகவரி : தமிழரசு அலுவலகம், அரசினர் தோட்டம், சென்னை

/ அதி / நவீன / பாலியெஸ்டர் / வகைகள் /



ங்கள் மனதைக் கவர்ந்தவை மலர்கள்.
அவைகளின் அற்புத வண்ண ஜாலங்களை
உங்களுக்கு கோ-ஆப்டெக்ஸ் அளிக்கிறது,
மிக நவீனமாக அழ தமிழ் நம்
பாலியெஸ்டர் புடவை வகைகளில்!

கோ-ஆப்டெக்ஸ் பங்கு பெறட்டும் —
உங்கள் இனிய நேரங்களில்!

கோ-ஆப்டெக்ஸ்
தமிழ்நாடு கைத்தறி
இந்தியாவின் உயர் விற்பனை கைத்தறி வகைகள்.

• புடவைகள் — பருத்தி, பாலியெஸ்டர், பட்டு • ஷர்ட்டிங் • சூட்டிங் • ஃபர்னிஷிங்
• பெட்ஷீட்கள் • டவல்கள் • வேட்டிகள் • லுங்கிகள், இணையிலா புதுமைகள். எண்ணிலா வகைகள்.

DIPR/1766/MS88/HTA

